T.2643

தேனருவிப் பதிப்பக வெளியீடு : 4

# மருதநில மங்கை

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.,

வெளியீடு :
தேனருவிப் பதிப்பகம்,
தியாகராயநகரம், சென்னை-17.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

முதற் பதிப்பு: நவம்பர், 1956.

[முழு உரிமையும் பதிப்பகத்தாருக்கே]

விலை ரூபாய் மூன்று

அச்சிட்டது:
மன்றம் அச்சகம், 26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

# பதிப்புரை

சங்கப் புலவருள் ஒருவர் இளநாகனார். தண்டமிழ் மலிந்த செந்தமிழ்மதுரைக்கண்ணே தோன்றிய செந்தமிழ்ப் புலமை மிக்கவர் இவர். இலக்கிய இலக்கணங்களிலும் வல்லுநராக விளங்கினார்.

நாகன் என்ற பெயர்கொண்ட புலவர்கள் பலர் அந்நாளில் தமிழகத்தே இருந்திருக்கின்றனர். இளநாகன் என்ற பெயருடனும் வேறு சில புலவர்களும் இருந்தனர். அதனால், இவர் மருதன் இளநாகனார் என்று அழைக்கப்படுவாராயினர்.

அன்றியும், நாகர் என்பார் அந்நாளைய தமிழருள் ஒரு பகுதியினராக விளங்கியவர் என்று, ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றனர். அதுகொண்டு இவரும் நாகர் மரபின்கண் வந்த ஒருவரே என உரைப்பாரும் உளர். பழந்தமிழ் நிலமாக விளங்கிய ஈழநாட்டின்கண் நாகர்கள் என்பார் சிறந்த வாழ்வுடையாராக அரசியற்றி வந்தனர் என்றும், உழவும் தொழிலும் வாணிபமும் அவர்நாளிற் சிறந்திருந்தன என்றும் யாழ்ப்பாண வரலாறுகள் கூறுகின்றன.

இனி, இவர் பெயருள் மருதன் என்பது இவர் தந்தையார் பெயரைக் குறிப்பதென்றுஞ் சில கூறுவர். அன்று! மருதம் பாடிய புலவராதலின் சிறப்புடைய அந்நூலின் பெயர் இவர்க்கு அடைமொழியாயிற்று என்பார் வேறு சிலர். இவர் வரலாறுபற்றிய செய்திகள் எங்ஙனமிருப்பினும் செந்தமிழ்வல்ல நாவலருள் ஒருவர் இவர் என்பதும், மதுரை நகரின்கண்ணே வாழ்ந்து தமிழ்நலம் பேணியவர், என்பதும் உண்மையாகும்.

இனி, இறையனார் களவியல் உரையின் முதற் சூத்திர உரையிலிருந்து, அக்களவியலுக்கு உரை வகுத்

தாருள் இவரும் ஒருவர் என்பது பெறப்படுகின்றது. நக்கீரனார் உரைநயம் சிறந்து விளங்கினமையாலோ, அன்றி வேறு எக்காரணத்தாலோ, இவர் வகுத்த உரை இன்று நமக்குக் கிடையாதாயிற்று.

மருதக்கலி இவரால் பாடப் பெற்றதாகும். இவர் பாடியுள்ள பல பாடல்கள் எட்டுத்தொகை நூற்களுள் காணப்படுகின்றன. அவை, நற்றிணையுள் 12 செய்யுட்களும், குறுந்தொகையுள் 2-ம், புறநானூற்றில் 3-ம், அகநானூற்றில் 23-ம் ஆகும். இவர் பாடல்களிலிருந்து இவர் அகத்திணை புறத்திணைக் கருத்துக்களை அழகுறப் புனைந்து பாடும் பேராற்றல் மிக்கவர் என்பது தெரிகின்றது.

சிறார்களுக்குப் பழைய நாளில் ஐம்படைத்தாலியணியும் வழக்கம் உளதாயிருந்தது என, இவர் கூறியுள்ள பாடல்கள் சான்று பகர்கின்றன. மேலும் அந்நாள் மதுரைக்கண் உள்ளிவிழா என ஒரு விழா நடைபெற்றதென்றும், அவ்விழாவின்கண் கொங்கர் இடுப்பில் மணிகள் கட்டிக்கொண்டு தெருவினில் ஆடுவது வழக்கம் என்றும் இவர் கூறியுள்ளார். மதுரைத் தெருக்கள் தூய்மையாயிருந்தனவாம். அந்நாளில் நாடோறும் அலகு கைக்கொண்டு தூற்றித் தெருக்கள் துப்புரவு செய்யப்படுமாம். இத்தகையவாக அந்நாள் நாகரிகச் செவ்வியுணரவுதவும் பல செய்திகளும் இவர் பாடல்களுள் மிளிர்கின்றன.

இவராற் பாடப்பெற்ற அரசர்கள் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், நாஞ்சில் வள்ளுவன் முதலானோர். இதனால் இவர்கள் காலத்திலே வாழ்ந்தவர் மருதனிளநாகனார் என்பதும் இவர்களால் ஆதரிக்கப்பெற்றவர் இவர் என்பதும் வெளியாகின்றது.

நெய்தற்கலி பாடிய புலவர் நல்லந்துவனுரைப்பற்றி இவர் குறிப்பிடும்போது 'தண்பரங்குன்றத் தந்துவன் பாடிய' என்று கூறிச் சிறப்பிக்கின்ருர். இதனுல், புலமைக் காய்ச்சல் இவரிடம் இல்லை என்றும் பெறப் படுகின்றது.

இத்தகைய செந்நாப் புலவர் தீந்தமிழ் நலன் சொற் ருெறும் திகழத் தந்துள்ள நற்றமிழ் நூல் மருதக்கலி யாகும்.

இம் மருதக்கலியின் இன்சுவையை அனைவரும் எளிதில் உணர்ந்து பயன்பெற வேண்டுமென விரும்பி ளுேம்.

நச்சினர்க்கினியரின் நயமிகு உரை சிறப்புடையது எனினும், செந்தமிழ் வல்ல புலவர்களே கற்றின்புறும் செழுமையும் திட்பமும் நிறைந்தது. எனவே, தமிழகத் துப் பிறரும் இதன் இனிய சுவையினை மாந்தி இன்புறத் தக்கதோர் எளிய விளக்கம் ஒன்று வகுத்தல் இன்றி யமையாதாயிற்று.

இதன் விற்பனைப் பொறுப்பை, மேற்கொண்டுள்ள பாரி நிலையத்தார்க்கும், நன்கு அச்சியற்றிய 'மன்றம்' அச்சகத்தார்க்கும் எம் நன்றி உரியது.

செந்தமிழ்நூல் பல ஆக்கிய புலவர் **கா. கோவிந்தனுர்** அவர்கள் தம் நுண்மாண் நுழைபுலச் செவ்வியால் இதனை நன்கு அமைத்துள்ளார்கள். பாடலின் கருத் துக்களை அனைவருக்கும் புரியுமாறு எளிமையும் இனி மையும் செந்தமிழ்ச் சொற்களில் இழைத்துப் பழைய நூலின் நயம் ஏதும் குறையாமல் விளக்கித் தந்துள் ளனர். அவர்க்கு எம் நன்றி; தமிழகம் ஏற்றுப் பயன் எய்துமாக.

பதிப்பாசிரியன்,
**தேனருவிப் பதிப்பகம்**

# மருதம் - விளக்கம்

அகப்பொருள் துறையில் மருதத்திணைக்கு உரியது என ஆண்டின் அறுவகைப் பருவங்களையுமே ஆன்றோர் கூறுவர். எனினும், அவற்றுள்ளும் கார்காலமும், இளவேனில் முதுவேனிற் காலங்களும் சிறப்புடையனவாகக் கொள்ளப்படும். இப் பருவ காலங்களில் அவர்களின் இன்பத்திற்கு உரிய சிறுபொழுதுகள் வைகறையும் காலை நேரமும் ஆகும்.

பிற தினங்களுள் வாழ்ந்தவர்போலவே மருதத்தில் வாழ்ந்த மக்களும தெய்வங்களை வழிபட்டு வந்தனர். பயிர்கள் விளைத்தற்கு மழை உதவியாதலின் மழைக்குத் தெய்வமான இந்திரனை அவர்கள் போற்றினர்; விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். மருதநிலத்தில் உயர்குடிப் பிறந்த தலைமகன் மகிழ்நன், ஊரன் என்றழைக்கப் பட்டான்; உயர் குடியினரான தலைமகளிர் கிழத்தி, மனைவி, என்றழைக்கப்பட்டனர்.

இவரன்றி மக்கள் பல்லோரும் மருதநிலத்தின்கண் வாழ்ந்தனர். அவர்களில் களமர், உழவர், கடையர் என ஆண்களையும் உழத்தியர், கடைசியர் எனப் பெண்களையும் கூறுவது பழந்தமிழ் மரபு.

நீர்வளம் மிகுந்தது மருதநிலம்; ஆதலால், நீர்க்கோழியும் தாராவும் மருதத்துப் புட்கள் சென்று குறிக்கப்பெறும். எருமையும், நீர்நாயும் இந்நிலத்திற் குரிய விலங்குகள்.

மருதநிலத்து மக்கள் வீடுகள் கட்டிச் செம்மையான ஊர்களில் ஒழுங்குடன் வாழ்ந்தனர். அவர்கள் கூடி வாழ்ந்த ஊர்கட்குப் பேரூர், மூதூர் எனும் பெயர்கள் வழங்கின.

மருதத்தின் நீர்வளத்திற்குப் பெருங்காரணமாக விளங்குவது அதன்கண் செல்லும் ஆறுதலேயாகும்.

ஆற்றுநீர் கட்டுப்பாடின்றிச் செல்லின் மழைக்காலத்தில் பெருவாரியாக பாய்ந்தோடிச் சென்று கடலுள் கலந்து விடும். வீணாகும் தண்ணீர் ஏரி குளம் அணைகளில் தேக்கப்பட்டு பயன் அளிக்கச் செய்யப்படுகிறது. ஆற்று நீரன்றியும், மணிக்கிணறும் பொய்கையும் மருதத்திற்கு நீர்வளம் தருவதாகும்.

மருதத்திற்குரிய தாமரைப்பூவும், கழுநீரும், இவையும் நீர்ப்பூக்களே; மருதம், வஞ்சி, காஞ்சி முதலியவை இம் மருதநிலத்திற்குரியவான மரங்களாகும். ஏராளமான நீர்வளம் உடையதாதலின் நெற்பயிர் மருதத்தில் வளமுடன் வளர்ந்து பயன் அளிக்கிறது. அவை மருதம், வஞ்சி காஞ்சி, என்பன.

நெல்விளைவின் மிகுதியால் நெல்லுண்போரே மருதநில மக்களுக்கு உரிய உணவாகும். அந் நெல்லும் செந்நெல், வெண்ணெல் என இருவகைப்படும்.

இனி, மருதத்தார் இசையிலும் ஈடுபட்டிருந்தனர். பறை, யாழ், பண் ஆகிய இசைத்துறைகளில் அவர்கள் ஈடுபட்டனர். பறையுள் மணமுழவும், நெல்லரிசிணையும் முதன்மையாக விளங்கின. யாழ் மருதயாழும் பண் மருதப்பண்ணும் மருதத்திற்கே உரியனவாய் மாண்புடன் விளங்கின.

பெரும்பாலும் உழவும் அதன் தொடர்பான தொழில்களுமே ஆற்றிவந்தவராதலின் மருதநிலத்தாரிடை வழங்குஞ் செய்திகளுள், நெல் நடுதல், களை கட்டல், நெல்லரிதல் கடாவிடுதல் என்பனவே சிறப்புடையனவாய் விளங்கின.

இத்தகைய பலவும் மருதத்திற்கு உரிய முதற்பொருள் கருப்பொருள் எனப்பழந்தமிழ் நூல்கள் எடுத்தியம்பும்.

—கேசிகன்.

# பொருளடக்கம்.


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எம்மை நீ அருளினை | ... | 1 |
| 2. | ஊடுவேன் நான் ; கூடுமென்நெஞ்சு | ... | 9 |
| 3. | கனவினுன் எய்திய செல்வம் | ... | 15 |
| 4. | எம்மையும் உள்ளுவாய் | ... | 23 |
| 5. | நீர்இதழ் புலராக் கண் | ... | 29 |
| 6. | அலர்மார்பு காணிய | ... | 35 |
| 7. | அழிந்துஉகு நெஞ்சத்தேம் | ... | 41 |
| 8. | தோலாமோ யாமெனின் | ... | 47 |
| 9. | நெஞ்சமும் ஏமுற்ருய் | ... | 52 |
| 10. | ஊடலும் கூடலும் | ... | 57 |
| 11. | செயற்பாலது என்கொலோ | ... | 64 |
| 12. | உடன் வாழ்பகை | ... | 70 |
| 13. | கையான் மலர்ந்த முகை | ... | 75 |
| 14. | புல்லல் எம்புதல்வனை | ... | 81 |
| 15. | வருகஎம்பாக மகன் | ... | 85 |
| 16. | பெயரனையாம் கொள்வேம் | ... | 90 |
| 17. | யாரேம் நினைக்குயாம் | ... | 98 |
| 18. | வெந்த புண்ணில் வேல் | ... | 105 |
| 19. | யானே் தவறுடையேன் | ... | 111 |
| 20. | வருகென்ருர் யாரோ? | ... | 118 |
| 21. | அன்பிலி பெற்ற மகன் | ... | 126 |
| 22. | ஊடுதல் என்னே? | ... | 133 |
| 23. | தேற்றேம் யாம் | ... | 138 |
| 24. | அடிசேர்தல் உண்டு | ... | 144 |

25. நிறையாற்ரு நெஞ்சு ... 149
26. நின்வயின் நெகிழும் என்நெஞ்சு ... 156
27. வேட்டது கண்டாய் ... 161
28. கடவுளைக் கண்டாயோ ... 172
29. நகாமை வேண்டுவல் ... 179
30. யாம்யாரே? ... 187
31. அறிந்தேன் உன்குதிரையை ... 195
32. வேழம் வளப்புடைத்து ... 202
33. நீ ஆடியது குமரிப்புதுப்புனல் ... 208
34. மனைவி துயர்காணுமையும்
மன்னர்க்கு ஏற்றதோ? ... 216
35. உன்னைக் கழறுதல் வேண்டுமோ? ... 222

# மருதநில மங்கை

—:o:—

## 1

## 'எம்மை நீ அருளினை'

அழகாலும் அறிவாலும் சிறந்தாள் ஒருத்தி; அவளை விரும்பி மணந்து மனையறம் வாழ்வு மேற்கொண்டான் ஓர் இளைஞன். அவர்கள் இல்லறம் இனிது நடைபெற்று வந்தது. சிலகாலம் சென்றபின் ஒருநாள், உயர்ந்தோர் கூடும் அவ்வூர் மன்றத்தில், பரத்தையர் குடியில் வந்தாள் ஓர் இளம்பெண்ணின் ஆடல் அரங்கேற்றம் நிகழ்ந்தது. இளைஞனும் சென்று அதைக் கண்டான்; அவள் ஆடல் பாடல்களில் அறிவை இழந்தான்; அவள் பால் ஆசைகொண்டான். ஆட்ட முடிவில், அவள் அளித்த அழகிய மாலையைப் பெருவிலை கொடுத்துப் பெற்றுக்கொண்டு, அவளோடு அவள்மனை புகுந்தான்; அன்றுமுதல், அம்மனையிலேயே வாழத் தொடங்கினன்; தன் மனையை மறந்தான்; மனைவியை மறந்தான். பரத்தையோடு சென்றான்; புதுப் புனலாடி மகிழ்ந்தான்; அவள்

கையோடு கைபிணைத்துத் துணங்கைக் கூத்தாடிக் களித்துத் திரிந்தான்.

கணவன் பிரிவால் கலங்கினள் அவன் மனைவி; அவன் அன்பைப் பெறமாட்டா வருத்தம் ஒருபால்; தனக்கே உரியது என உரிமை பாராட்டிய அவன் அன்பு, பிறிதொரு பெண்ணிற்குக் கிடைப்பதால் உண்டாம் பெருந்துயர் பிறிதொருபால்; இவை யனைத்திற்கும் மேலாகக், கணவன் ஒழுக்கத்தில் தவறியதால் உண்டாம் இழுக்கம் - அனைத்தும் ஒன்றுகூடி அவளைத் துன் புறுத்தின. மனத்துயர், அவளை மீளா நோய்க்கு ஆளாக் கிற்று; உள்ள நோயால் உடல் தளர்ந்தது. அந்நிலையில், கணவன் பரத்தை யொருத்தியின்பின் திரிவதையும், அவளோடு சென்று புனலாடியும், துணங்கை ஆடியும் களித்துக் காலங் கழிப்பதையும் கண்ட ஊரார்; அவள் பால் சென்று, ஒழுக்கத்தில் இழுக்கிய அவனை அலர் கூறிப் பழித்தனர்; கணவன் 'பிரிவால் கலங்கி யிருக்கும் அவள் உள்ளம், ஊரார் உரைக்கும் அலரால், மேலும் வருந்திற்று; அந்நிலையில் வாழ்ந்திருந்தாள் அவள்.

அப்பெண்ணின் துயர்கண்டாள், அயல்வீட்டில் வாழும் அவள் தோழி; அவளுக்கு ஆறுதல் உரைக்க விரும்பினள்; அவள் வீட்டிற்குச் சென்று, அவளை அணுகி "தோழி! உன் கணவன் நீ கருதுமாறு தீய னல்லன்; அவன் தீயனல்லன் என்பதை, அவன் வாழும், அவனுக்குரிய இவ்வூரின் வளமே அறிவிக்கும்; அவன் தீயனாயின், அவனைப் பெற்ற இவ்வூர், இவ்வாறு நலத்தால் சிறந்து விளங்காது; இவ்வூரின் வளத்தை, அதிலும், இவ்வூரின் நீர்வளத்தை என்னெனப் புகழ் வேன்! இவ்வூர் வயல்கள், வரப்பளவும் உயர்ந்த நீரால் நிறைந்து, கருநீல மலர்கள் மணந்து மணம் கமழும். மலர் விற்று வாழும் மக்கள், அக்கருநீல மலர்களைப் பறித்துக்

கொணர்ந்து, மன்றுகளில் விலை கூறி விற்பர். அவர்கள், அம்மலரைப் பறித்து வருங்கால், வயலை யடுத்திருக்கும் குளத்தில் பூத்துக்கிடக்கும் தாமரை மலரின் தேன் உண்டு அம்மலரில் அயர்ந்து உறங்கும் தும்பி விழித்துக் கொண்டு, அக்கருநீல மலர்களைக் காணும். கண்டதுமே, தான் வாழும் தாமரை மலரையும், அத்தாமரை தழைக்கும் பொய்கையையும் மறக்கும். மறந்து, அம்மகளிர் கொணரும் கருநீல மலரோடு ஊருள்புகும். மலர் மகளிர், ஊர் எல்லையை அடைந்ததும், ஆங்குக் காவல்மேற்கொண்டிருக்கும் யானையின் மதநீர் நாற்றத்தில் மனதை இழக்கும்; அது ஆங்கு வருவதற்கு முன்னர், அம்மத நீரில் படிந்து, உண்டு, மகிழ்ந்திருக்கும் வண்டுகள், வரவேற்று அன்புடன் அளிக்கும் அம்மதநீர் விருந்துண்டு மகிழும். பகற்காலமெல்லாம் அங்கேயே கிடக்கும் அத் தும்பி. மாலை வந்ததும், முல்லை மலரின் மணம் மனத்தை மயக்க, அம்மணம் வந்தவழியே சென்று, ஊருள்புகும் ஆங்கு அம்முல்லை மலர், தாம் விரும்பும் கணவரை, அவர் மகிழுமாறு ஆரத் தழுவிக் கிடக்கும் மகளிரின் கூந்தலில் கிடப்பது கண்டு, அக்கூந்தலைச் சுற்றி மொய்த்து, அம்முல்லைமலர்த் தேனைக் குடித்து மகிழும். அப்பேரின்ப நுகர்வால், பண்டு தான் வாழ்ந்த பொய்கையை மறக்கும்; அத்துணை நீர்வளம் செறிந்தது, அவன் ஊர். இத்தகைய வளம்மிக்க இவ்வூருக்குரிய அவன் கொடியனுதல் இயலாது. அறியாது பிழை புரிந்தானாயினும், ஒழுக்கத்தின் உயர்வுணர்ந்து மீண்டு இவண்வந்து சேர்வன்; வருந்தற்க" என ஆறுதல் உரைத்து அகன்றாள்.

கணவனின் ஒழுக்க உயர்வையும், அவன் ஒழுக்க உயர்வால் ஊர் பெற்றிருக்கும் வளத்தின் சிறப்பையும், தோழி உரைக்க, அப்பெண்ணின் உள்ளம் அவ்வூரின்

வளத்தையோ, அவ்வளத்திற்குக் காரணமாய அவன் ஒழுக்க உயர்வையோ எண்ணிப் பார்த்திலது. அவள் கூறிய தும்பியின் செயலுக்கும், தன் கணவன் செயலுக்கும் உள்ள ஒருமைப் பாட்டினையே எண்ணிப் பார்த்தது.

" தும்பி, தேனளித்துப் புரக்கும் தாமரை மலரையும், அம்மலர் விளையும் பொய்கையையும் மறந்தது; அவன், காதற்பேரின்பம் தரும் என்னையும், யான் வாழும் இம் மனையையும் மறந்துளான். அது வயலில் மலரும் நீல மலரைப்பறித்து விற்பார் துணைகொண்டு, அம்மலரைச் சூழ்ந்து திரிகிறது; அவன், பரத்தையர் சேரியில், இன்பம் நுகரலாம் இளமைப்பருவம் உடையாரைப் பாணர் துணையால் பெற்று, அவர் இன்பம் நுகர்ந்து மகிழ்கிருன். அது, பகற்காலத்தில், யானையின் மத நீராம் விருந்துண்டு கிடக்கிறது; அவன், பகற்காலத்தில், சேரிப்பரத்தையர் மனையிற்கிடந்து, அவர் நலன் உண்டு மகிழ்கிருன். மாலை வந்துற்றதும், அது முல்லை மலரை மொய்த்து மகிழ்கிறது; அவன், இரவில் இற்பரத்தையின் மனையில் இன்பம் நுகர்ந்துகிடக்கிருன். இருவர் ஒழுக்கத்திற்கும் உள்ள ஒற்றுமைதான் என்னே!" என எண்ணி ஏங்கிற்று அவள் உள்ளம்.

அங்நினைவு மிகுதியால் வருந்தித் துயர் உற்ருள்; உறக்கம் அற்று இரவைக் கழித்தாள். விடியற்காலம்; இருள்நீங்கி ஒளிபரவாக்காலம்; வாயிற்கண் யாரோவந்து நிற்கும் அரவம்கேட்டுச் சென்று நோக்கினுள்; ஆங்கு அவன் நின்றுகொண்டிருந்தான். அவன் ஒழுக்கக் கேட்டால் வருந்தியிருப்பாள் உள்ளத்தை, ஆங்கு நிற்கும் அவன் தோற்றம் பெரிதும் வருத்திற்று. பரத்தையர் விற்ற மாலையை வாங்கி அவரை வதுவை மணம் கொண்டதால் எழும் மணம் அவன் மேனியி

ணின்றும் இன்னமும் நீங்கவில்லை. புணர்ச்சி மயக்கத் தால், தன் மாலையைப் பரத்தை அணிந்துகொள்ள, அவள் மாலையைத் தான் அணிந்துகொண்ட அத் தோற்றத்தோடே வந்திருந்தான். பரத்தையரின் தோளைத்தழுவிய காலத்தில், அவர் அணிகள் அழுத்திப் பண்ணிய வடுக்கள் அவன் ஆகத்தில் அழுந்தத் தோன்றின. அவனைப் பிரிந்து, அவன் அன்பை இழந்து, அவன் ஒழுக்கக் குறைபாடு கண்டு ஊரார் உரைக்கும் அலர்கேட்டு வருந்தி நிற்கும் தன்முன், அவ்வொழுக்கக் கேட்டினை உண்மையென நிலைநாட்டி உணர்த்தும் உருவோடு வந்துநிற்கும் அவனை, நேரிற் காண நேரவே பெரிதும் வருந்தினுள். வந்தவனுக்கு வழிவிடவும் மறுத்தது அவள் உள்ளம். தெருவை நோக்கினுள்; அவன் ஏறிவந்த தேர், குதிரைகள் பூட்டவிழ்த்துவிடப் பெருமல் பூட்டியவாறே நின்றிருந் தது. அத்தேர் அருகே, தேரை விரைந்தோட்டிச் செல்லும் கருத்தோடு நிற்கும் தேர்ப்பாகனையும் கண்டாள். வந்தவன், பரத்தையர் ஒழுக்கத்தைக் கை விட்டு, தன்னேடு வாழும அறம்பிறழா அன்பு வாழ்க் கையை விரும்பி வந்தானல்லன். வேறு எங்கோ, வேறு எவளோ ஒரு பரத்தையின் மனைநோக்கிச் செல்பவன், இடைவழியில் சிறிதே இவண்வந்து நின்றுளான் என உணர்ந்தாள். அவன் பிழையை மறந்து ஏற்றுக் கொள்ள எண்ணிய அவள் மனம், உடனே மாறிவிட்டது. "அன்ப! என்னை மறவாத, எளியேன் மனைவந்து நிற்கும் உன் அன்பிற்கு என் நன்றி! உன் அன்பு மறவாமை அறிந்து மகிழ்கிறது என் உள்ளம்! அன்பு மறவாது இன்று இவண்வந்த உன்செயல் ஒன்றே போதும்; அது ஒன்றினுலேயே என் உள்ளம் நிறை வெய்திவிட்டது; மேலும், இவண் நின்று காலத்தை வீணுக்கிக் கழிக்காதே; விரைந்துசென்று, நின்னை

விரும்பி எதிர்நோக்கி நிற்கும் பரத்தையரின் ஆசையை நிறைவேற்றி மகிழ்வாயாக; தேரைப் பூட்டு அவிழ்த்து விடாது, போகத்துடித்து நிற்கின்றான் உன்பாகனும்; ஆகவே அன்ப! போய்வருக" என்று கூறி அவனை உள்ளே அழைத்துச்செல்லாது ஊடி நின்றாள்.

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயல்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந்து, ஊர்புகுந்த வரிவண்டு,
ஓங்குயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகல்அல்கிக், கங்குலான்
வீங்குஇறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினுள் அரும்புஅவிழ் நறுமுல்லைப்
பாய்ந்துஊதிப் படர்தீர்ந்து, பண்டு, தாம் மரீஇய
பூம்பொய்கை மறந்து உள்ளாப் புனல்அணி நல்ஊர!

அணைமென்தோள் யாம்வாட, அமர்துணைப் புணர்ந்து, நீ
மணமனையாய் எனவந்த மல்லலின் மாண்புஅன்றோ,
பொதுக்கொண்ட கவ்வையின் பூவணிப் பொலிந்தநின்
வதுவைஅம் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை,

கனலும் நோய்த்தலையும், நீ கனங்குழை அவரொடு
புனல்உளாய் எனவந்த பூசலின் பெரிதன்றோ,
தார்கொண்டாள் தலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
ஈர்அணி சிதையாது எம்இல்வந்து நின்றதை,

தணந்ததன்தலையும், நீ தளர்இயல் அவரொடு
துணங்கையாய் எனவந்த கவ்வையின் கடப்பன்றோ,
ஒளிபூத்த நுதலாரோடு ஓரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்த இக்கவின்காண இயைந்ததை.

என வாங்கு,
அளிபெற்றேம்; எம்மைநீ அருளினை; விளியாது
வேட்டோர் திறத்து விரும்பிய நின்பாகனும்
நீட்டித்தாய்என்று கடாஅம்; கடுந்திண்தேர்
பூட்டு விடாஅ நிறுத்து.

பரத்தை யிற் பிரிந்துவந்த தலைவனுக்குத், தலைவி, அவன் பரத்தையை வதுவைமணம் கொண்டதும், அவளோடு புனலாடியதும், துணங்கை ஆடியதும் கூறி ஊடியது இது.

*1. வீங்குநீர் - மிக்கநீர்; பகர்பவர் - விற்பவர்; வயற்கொண்ட ஓரங்கர் - வயலில் பறித்துக்கொண்டபொழுது; 2. சூழ்தந்து - சூழ்ந்துவந்து; 3. கனைகடாம் - மிக்க மதநீர்; 4. ஆங்கவை - அம்மதநீரில் முன்னரே படிந்து உண்டுவாழும் வண்டுகள்; அல்கி - தங்கி; கங்குலான் - இரவு வந்துற்றதும்; 5. வீங்குஇறை-மகிழ்ச்சி மிகுதியால் பருத்த முன்கை; வடுக்கொள - வடுவுண்டாமாறு; வீழுநர் - விரும்பும் கணவர்; 6. தேம் கமழ் - தேன் மணக்கும்; கதுப்பு - கூந்தல்: 7. ஊதி - தேன் உண்டு; மரீஇய - வாழ்ந்த; 8. உள்ளா - நினையாத; 9. அமர் துணை - விரும்பும் பரத்தை; 10. மணமனையாய் - மணம் கமழும் மனையின்கண் உள்ளாய்; என - என்று ஊரார் அலர் உரைக்க; மல்லல் - மாண்பு (இகழ்ச்சிக்குறிப்பு) 11. பொதுக்கொண்ட - சிறப்பில்லாத; பூவணிப்பொலிந்த - பரத்தையின் மலர் மாலையைப் பெற்று மகிழ்ந்த; 12. வதுவை - திருமணம்; 13. கனலும் - வருத்தும்; நோய்த்தலையும் - நோய்க்கு மேலும்: 14. பூசல் - அலர்; 15. தார் - ஆடவர் அணியும் மாலை; தலைக்கோதை - மகளிர் அணியும் தலைமாலை; 16. ஈர்அணி - இருவகை அழகு; 17. தணந்ததன் தலையும் - விட்டுப்பிரிந்ததற்கு மேலும்; 18. கவ்வை - அலர்; கடப்பு - மிக்கது; ஓர் அணி - ஒப்பற்ற அணிகளால் ஆயவடு; 20, களிதட்ப - மகிழ்ச்சி, பிறபொருளில் செல்லும் கருத்தைத் தடுக்க; 21. அளி - அருள்; 22. வேட்டோர் திறத்து - விரும்பும் பரத்தையர்பால். பாகனும், தேரை நீட்டித்தாய் என்று பூட்டுவிடாது கடாஅம், விளியாது விரும்பிய வேட்டோர் திறத்து நிறுத்து என மாற்றுக.*

**உள்ளுறை:** வீங்குநீர், பரத்தையர் சேரி; நீலம், சேரி வாழ் இளம்பரத்தை; பகர்வர், பரத்தையரைக் கொணர்ந்து தரும் பாணர்; மலரைச்சூழ்ந்த வண்டு, பரத்தையரைச் சூழ்ந்து திரியும் தலைவன்; பகற் காலத்தே மதநீர்உண்டு தங்குதல், பகற்காலத்தே சேரிப் பரத்தையரைப் புணர்ந்துகிடத்தல்; கங்குலில், முல்லைத் தேன் குடித்தல், இரவில் இற்பரத்தையோடு இன்பம் துய்த்தல்; வண்டு பொய்கையை மறத்தல், தலைவன் தன் மனைவியை மறத்தல் என உள்ளுறை கொள்க.

# 2

# ஊடுவேன் நான்; கூடும் என் நெஞ்சு

புலவர் பாராட்டும் பெருமை வாய்ந்தது வையை. நாட்டில் ஓடும் ஆறுகள் அனைத்தையும் புலவர்கள் பாராட்டுவதில்லை; தம் பாராட்டைப் பெறுதற்கேற்ற பெருமை வாய்ந்த ஆறுகளையே அவர்கள் பாராட்டுவர். அத்தைய பெருமை வையை ஆற்றிற்கு உண்டு. வையை யாற்றைக்காணும் வாய்ப்புடையார்க்கு அது விளங்கும். கார் காலத்து மழைபெற்று வையையாற்றில் வெள்ளம் பெருகும். அதன் இரு கரைக்கண்ணும் உள்ள மரங்கள், மலர்களால் நிறைந்து மணம் வீசும். காம்பற்று உதிரும் அம்மலர்களெல்லாம் வையை ஆற்றில் வீழ்ந்து, வெள்ளநீர் தோன்றுவாறு மூடி மறைக்கும்; அதனால், "இது புனல் யாறு அன்று; பூ வாறு" எனும் பெருமை அவ்யாற்றிற்குச் சூட்டுவர் புலவர். மலர்கள் நிறைய, மணமகள் மார்பில் கிடக்கும் மலர்மாலையோ என மருளுமாறு வளைந்து வளைந்து ஓடி வரும்; அவ்வாறு, பாய்ந்தோடிவரும் வையை, தன்

மதிலைச் சூழ்ந்து ஓடுவதால் பெருமையுற்றது மதுரை மாநகரம்.

மதுரைமாநகரில் இருந்து பாண்டி நாடாண்ட அரசருள், ஆற்றல்மிக்க பேரரசன் ஒருவன், பகைவரைத்தான் பாழ்செய்து மகிழ்வதல்லது, அப்பகைவரால் தான் அழிவுறுத் தறுகணாளனாய் வாழ்ந்திருந்தான்; அவன் படை, பகைவர் படையினை முற்றி அழிக்குமேயல்லது, அவன் அரசிருக்கையாம் மதுரை, பகைவர் படையின் முற்றுகையைப் பார்த்திலது. அதனால், மதுரை, வையையாற்றின் நீரால் முற்றப்படுவதல்லது, பகைவர் படையால் முற்றப்படுவதில்லை'' என அவன் பெருமையை அவன் தலைநகர்மீது ஏற்றிப் பாராட்டிப் பெருமை செய்தனர் மக்கள்.

புலவர் பாராட்ட பேராற்றல் வாய்ந்த பேரரசாய் வாழ்ந்த அவன், தன் அரசமாதேவி வருந்தி வாடுமாறு, அவளை மனையகத்தே விடுத்து மறந்து, பரத்தையொருத்தியைக் காதலித்து, அவள் மனைசென்று ஆங்கு வாழத் தொடங்கினான்.

அரசன் செயல்கண்டு வருந்தினாள் அரசமாதேவி; தம்மனைவியர்பால் உண்மை அன்புடையார்க்குப் பரத்தையர்பால் ஆசைபிறத்தல் நிகழாது; ஆதலின், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்ட அரசன் உள்ளத்தில் அன்பில்லை; என்பால் அன்புடையனல்லன் அரசன்; நற்பண்பும் நல்லொழுக்கமும் உடையார், பரத்தையர் உறவுபோலும் தீயொழுக்கத்தை நெஞ்சால் நினைக்கவும் நடுங்குவர்; ஆதலின், பரத்தையர் பின் திரியும் மன்னவன், மக்கட் பண்பற்றவனாவன்; அறமல்லாச் செயல்செய்ய நாணும் நல்உள்ளம் உடையார், பெரியோர் பழிக்கும் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொள்ளார்; ஆதலின், அத்தீயொழுக்க நெறி நிற்கும் அரசன்,

நாணம் அழிய நயமற்றவனுவன் எனப் பலப்பல எண்ணி வருந்தினுள்.

பலரும் பழிக்கும் பரத்தையர் தொடர்பு மேற்கொண்ட அரசன், அதைப் பிறர்அறியாவாறு மறைத்து மேற்கொள்ளவும் கருதினுனல்லன்; பரத்தையொடு கூடி, ஆடியும் பாடியும் மகிழுங்கால், அப்பரத்தை பொய்க் கோபங் கொண்டு மலர்மாலையால் அவனை அடிக்க அதனுல், அவன் மேனியில் உண்டான புண்ணின் வடுவைப் பிறர் பார்த்துப் பழிக்க வாழ்ந்தான், பரத்தையை அன்பால் அணைத்துக்கொண்டபொழுது. தன் மார்பிற் பூசிய சந்தனம், அவள் ஆகம்பட்டு, அழியப், பிறர்முன் அழிந்த அக்காட்சியோடே நாணுது போவன்; பரத்தையின் வாயில் முத்தம் கொண்டவழி, அவள் இளம்பற்கள் அழுந்தியதால் சிவந்து உண்டான வடு விளங்கவருதல் நாணற்ற செயலாம் என அவன் நினைப்பதிலன். பழிக்கத்தகும் அச்சின்னங்கள் சிதையாமல் வாழும் அவன், ஒரோவொருகால், தன்மனைக்கு வரும்பொழுதும், அத்தோற்றத்தோடே வருவன்; மணம்கொண்ட மனைவியின்முன் அவ்வடிவோடு வருதல் மானம் இழந்தார்க்கும் ஒவ்வாது என்பதை அவன் உணர்ந்திலன்.

கடையரும் செய்ய அஞ்சும் அச்செயலைக் கணவன் மேற்கொள்வது கண்டு கலங்கினுள் மனைவி; "அவன் என் மனைவரின், அவனை ஏற்றுக்கொள்ளேன்; அவனுெடு பேசேன்; அவனைக் காண்பது செய்யேன்; அவனுெடு புலப்பேன்; அவனுெடு ஊடுவேன்" என்றெல்லாம் உறுதிபூண்டு வாழ்ந்தாள்.

சின்னுள் கழித்து, ஒருநாள், அரசன் அரண்மனைக்கு வந்தான்; அவனைக்கண்டாள் அரசமாதேவி. கண்டவுடனே அவன்பால்கொண்ட சினம் அகன்றது; அவள்

நெஞ்சு, அவன் அன்பிற்கு அடிமையாகிவிட்டது; வாயிற்கண் சென்று வரவேற்றாள்; உள்ளழைத்துச் சென்று உணவளித்து மகிழ்ந்தாள்; இரவு கழிந்தது. காலையில் அவனைக்கண்டாள் அவள்தோழி; அரசன் பரத்தையொழுக்கத்தையும், அரசியாரின் ஊடல் உணர்வையும் அவள் அறிவாள்; அதனால் அரண்மனைபுகும் அரசனைத் தேவி ஏற்றுக்கொள்ளாள்; அவள் ஊடலைத் தணிக்கமாட்டாது, வாயிற்கண் கிடந்து வருந்துவன் வேந்தன் என எதிர்நோக்கியிருந்தாள் அவள். ஆனால், அன்றிரவு அத்தகைய நிகழ்ச்சி எதுவும் நிகழாமை அவளுக்கு வியப்பளித்தது; விடிந்ததும் அரசியை அடுத்து "தேவி! நேற்றுவரை நீ கொண்டிருந்த சினமும் உறுதிப்பாடும் இப்போது யாண்டுஉளது? புலப்பேன்; ஊடுவேன்" என உரைத்த உரையெல்லாம் என்னாயின? சிறு பூசலும் தலைக்காட்டவில்லையே! எவ்வாறு தீர்ந்தது நின் ஊடல்? இதுவோ நின் உறுதி?" என்றெல்லாம் கேட்டு எள்ளி நகைத்தாள்.

அதுகேட்ட அரசி, "தோழி! யான் என் செய்வேன்? என் நெஞ்சு என்னை ஏமாற்றிவிட்டது; செய்யத்தகும் நற்செயல் இது என்பதை அறியும் அறிவற்றது அது; தனக்கென ஓர் ஒழுக்கநெறி உணராதது அது; தனித்தியங்கும் தன்மை அற்றது அது; இவையெல்லாவற்றிற்கும் மேலாக, என் உடன்இருந்தே, எனக்கு உற்றதுணையாய் வாழ்வதுபோல் ஊறுதேடும் இயல்புடையது அந்நெஞ்சு; யான் அவன் வரின், புலப்பேன் என்றால், அது கலப்பேன் என்னும்; நான் ஊடுவேன் என்றால், அது கூடுவேன் என்னும்; இவ்வாறு, நான் ஒன்று கருதின், அதற்கு மாறாகக் கருதத் தொடங்கிவிட்டது. அவ்வியல்புடைய இந்நெஞ்சைத் துணையாகப் பெற்ற எனக்கு, எண்ணியதை எண்ணியவாறே பெறும்

*திண்மை, சொல்லியதைச் சொல்லியவாறே முடிக்கும் உறுதிப்பாடு எங்கே உண்டாகும்? என் நெஞ்சு என்னைக் கைவிட்டது; கைவிட்டது மட்டுமன்று; எனக்கு எதிராக அவரோடு சேர்ந்தும் விட்டது. அந்நிலையில், அவரை ஏற்றுக்கொள்ளாது மறுத்தல் எவ்வாறு இயலும்? அதனால் அவரை ஏற்றுக்கொண்டேன்; என்செய்வது?'' என்று கூறிப் பெண்மையின் மென்மையை, மேன்மையினை விளக்கினாள்.*

'' கார்முற்றி இணர்ஊழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்புஎய்தி, இருநிலம்
தார்முற்றியது போலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகைஅல்லால், நேராதார்
போர்முற்றொன்று அறியாத புரிசைசூழ் புனல்ஊரன்.

நலத்தகை எழில்உண்கண் நல்லார் தம்கோதையால்
அலைத்த புண்வடுக்காட்டி, அன்புஇன்றிவரின், எல்லா!
புலப்பேன்யான் என்பேன்மன்; அந்நிலையே அவன்காணின்
கலப்பேன் என்னும் இக்கையறு நெஞ்சே.

கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடுஅழி சாந்தினன் பண்பின்றிவரின், எல்லா!
ஊடுவேன் என்பேன்மன்; அந்நிலையே அவற்காணின்
கூடுவேன் என்னும் இக்கொள்கைஇல் நெஞ்சே.

இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்கு எயிறு உருஅலின்,
நனிச்சிவந்த வடுக்காட்டி நாண்இன்றிவரின், எல்லா!
துனிப்பேன்யான் என்பேன்மன், அந்நிலையே அவன்காணின்
தனித்தேதாழும் இத்தனியில் நெஞ்சே.

என வாங்கு,

பிறைபுரை ஏர்நுதால்! தாம் எண்ணியவை எல்லாம்
துறைபோதல் ஒல்லுமோ, தூவாகாது ஆங்கே
அறைபோகு நெஞ்சு உடையார்க்கு?''

**பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனை ஏற்றுக்கொண்ட தலைவி பிற்றைநாள் தோழிக்குச் சொல்லியது.**

*1.* இணர்-பூங்கொத்துக்கள்; ஊழ்த்து - அலர்ந்து: தோட்ட - இதழ்களைஉடைய; *2.* சீர் - சிறப்பு; இரு நிலம் - பெரிய நிலம்; *3.* தார் - மாலை; முற்றியது - அணிந்தது; தகைபூத்த - அழகுமிக்க; *4.* நேரார் - பகைவர்; *5.* புரிசை - மதில்; *6.* நலத்தகை - நல்ல அழகு; நல்லார் - பரத்தையர்; கோதை - மாலை; *7.* எல்லா - ஏடிஎன்னும் பொருள்படும் விளிப் பெயர்; *9.* கையறு - செய்யும் செயல்அற்ற; *10.* கொடியன்னார் - பூங்கொடி போன்ற பரத்தையர்; *11.* பாடு - பெருமை; *14.* இனி - இப்பொழுது; இலங்கு - விளங்கும்; எயிறு - பற்கள்; உருஅலின் - அழுந்துதலால்; *16.* துனிப்பேன்- வெறுப்பேனா; *17.* தனித்து - என்னைக் கைவிட்டுத் தான் மட்டும்; *19.* ஏர் - அழகு; *20.* துறைபோதல் - முற்ற முடித்தல்; ஒல்லுமோ - இயலுமோ; தூ ஆகாது - துணை ஆகாது; *21.* அறைபோதல் - துணை புரிவார்போல் உடன்இருந்தே துன்பம் செய்தல்.

# 3

# கனவினுன் எய்திய செல்வம்

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமை யுடையது மதுரை. கடுஞ்சொல் கடிதலும், பயனில் சொல் பாராட்டாமையுமாய சொல்லியல்பறிந்த பெரி யோர்கள் வழி வந்தமையால், பொல்லாங்கு தரும் சொற் கள் புகுந்தறியாத காதுகளையுடையராய்த், தமக்கு முன்னே வாழ்ந்து, தம் வாழ்வில் தாம்பெற்ற உணர்வு களை ஒன்று கூட்டி அளித்த உயர்ந்த பாக்களின் உறு துணை கொண்டு, புலவர்கள் புதிது புதிதாக ஆக்கித் தரும் அரியபாக்களின் அழகை நுகர்ந்து அகமகிழும் மதுரை மக்களுக்கு மன்னனாய்த் திகழ்ந்தான் ஓர் இளைஞன். ஆண்மையும் ஆற்றலும் ஒருங்கே அமைந் தவன் அவன்; "இந்நாடு எல்லோர்க்கும் பொது; இதை ஆளும் உரிமை அனைவர்க்கும் உண்டு" என்ற சொல்லைக் கேட்கப் பொறுது அவன் உள்ளம்; உலகம் அனைத்தையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்து ஆள வேண்டும் எனும் ஆசைக்கு அடிமைப்பட்டுக் கிடந்தான் அவன். நல்ல காலம், அவன் அமைச்சர் அறிவுடைப்

பெருமக்களாய் அமையவே, அவன் அவ்வாசையால் அழிந்திலன். அவ்வாசையால் அவனுக்கும், அவன் நாட்டு மக்களுக்கும் உளதாகும் கேட்டினை எடுத்துக் காட்டி, அரிய அறிவுரை வழங்கி, அவனை அவ்வழிவுப் பாதையினின்றும் காத்தனர் அமைச்சர்; அவர் துணை யால், இளைஞன், அழியாப் பெருவாழ்வு பெற்று வாழ்ந் தான்.

ஒருவர் இருந்து ஆளுதற்கு வேண்டுமளவு, அவன் நாடு பரந்து கிடந்தது; அவன் நாட்டை அடுத்துள்ள நாடுகளை அழிக்கும் ஆற்றல் அவன் நாட்டிற்கு இருந் ததேயல்லது, அவன் நாட்டை அழிக்கும் ஆற்றல் அந் நாடுகளுக்கு இல்லை. அதனால், நாட்டைக் காக்க வேண் டுமே என்ற கவலை அவனுக்கு இல்லை. மேலும் நாட்டு மக்கள், புலவர் கூறும் பொருளுரை கேட்டுப் பண்பட்ட வராதலின், நாட்டில் அமைதிக்கு ஊறு இல்லையாதலின், நாட்டாட்சியில் கருத்தைச் செலுத்த வேண்டிய நிலையும் அவனுக்கு இல்லையாயிற்று; அதனால், அவன் உள்ளம் ஆடல் பாடல்களில் சென்றது; அவ்வேட்கை மிகுதி யால் மனைவியையும் ஒரு சிறிது மறந்தான்; ஊரில் உள்ள பரத்தையர் வீடுதோறும் புகுந்து, அவர் ஆடலும் பாடலும் அழகும் கண்டு களித்து வாழத் தொடங் கினன். இன்று ஒரு பரத்தை வீடு; நாளைக்கு ஒரு பரத்தை வீடுஎன, நாள்தோறும் புதுப்புதுப் பரத்தைய ரைப் பெற்றுச் சிற்றின்ப வாழ்வில், அறிவைப் பறி கொடுத்து அகமகிழ்ந்து கிடந்தான்; இளைஞன் பரத் தையர் ஒழுக்கத்திற்கு உற்ற துணை புரிந்தனர், அவன் பால் பரிசில் பெற்றுப் பிழைக்கும் பாணனும், தேர்ப் பாகனும், ஆடல் பாடலில் வல்லளாய் அழகிற் சிறந்து விளங்குவாள் வாழும் மனையறிந்து வருவான் பாணன்; அவள் மனைக்கு, இளைஞனை அழைத்துச் சென்று விடுவான் தேர்ப்பாகன்.

ஒருநாள் கூடி மகிழ்ந்த பரத்தையை, மறுநாள் மறந்து விடுத்துப் புதியாள் ஒருத்தியின் பின்சென்று வாழ்வதில் பேரின்பம் கண்டான் இளைஞன்; அதனால், நேற்று அவனைப் பெற்று மகிழ்ந்தவள், இன்று அவன், வேறு ஒருத்தியைத் தேடிப் போய்விட்டான் என்பது அறிந்து, "நாடாளும் இவ்விளைஞன் நம்புதற்குரிய நல்லனல்லன்" எனக் கூறிப் பழிப்பள்; அவன், வேறு ஒரு பரத்தை வீடு சென்று வாழ்கிறான் என்பதை அறியாத பரத்தை, அவன் அரண்மனை சென்று வாழ் கின்றனனோ எனும் நினைவால், ஆங்குச் சென்று, அவனை வினவுதலும் உண்டு; இவ்வாறு வருந்தினர் அப் பரத்தையர். ஆடுகள் தழை உண்ணுமாறு, இடையன் வெட்டிச் சாய்த்த மரக்கிளை, முழுதும் வெட்டி வேருக்கப் பெருமையால் அறவே அழிந்து போகாமலும், வெட் டுண்டமையால் புதிய தளிர்விட்டுத் தழைக்காமலும் கிடந்து அழிவதுபோல், இளைஞனை முழுதும் தமக்கே உரியனாய்ப் பெற்று மகிழ்வதோ, அறவே மறப்பதோ செய்யமாட்டாது, பரத்தையர் வருந்திக் கிடந்தனர். இவ்வாறு, அவனோடு தொடர்புற்று வாழ்ந்த பரத்தையர் மிகப் பலராவர்; அவரை எண்ணிக் கணக்கிடல் இயலாது; இவ்வூர் முழுவதும் அவர்களே எனக் கூறு மாறு, ஓர் ஊரில் அவர்களை மட்டுமே குடியேற்றி வாழ வைக்கலாம்; அவன் உறவாடிய பரத்தையர் கூட்டம் அத்துணைப் பெரிது.

இளைஞன் பேராண்மை கண்டு பாராட்டிய ஊரார், அவன் ஆட்சிநலம் கண்டு நாவாரப் புகழ்ந்த அந்நாட்டு மக்கள், அவன் மேற்கொண்ட பரத்தையர் ஒழுக்கம் அறிந்து பழிக்கத் தலைப்பட்டனர். கணவன் ஒழுக்கக் கேட்டினையும், அக் கேடறிந்து ஊரார் உரைக்கும் பழி யுரைகளையும் அறிந்து வருந்தினாள் அவன் மனைவி.

அவனைப் பிரியாதிருந்து பேரின்பம் நுகர்தற்கில்லையே என்ற ஏக்கத்திலும், அவன் ஒழுக்கக் கேட்டால் உண்டாம் இழிவு பெரிதாயிற்று; அக்கவலையால், அழகும் நலமும் அவளைவிட்டு அகன்றன; மகிழ்ச்சி இழந்து மனங்குன்றிக் கிடந்தாள்;

அந்நிலையில் அரண்மனையில் ஒரு விழாக் கொண்டாடப் பெற்றது; விழாக்கருதியும் அரசன் அரண்மனைக்கு மீண்டானல்லன்; அவன் இல்லாமலே விழாக் கொண்டாடப் பெற்றது. அவ்விழாப்பற்றிய நினைவு மிகுதியால், அரசமாதேவி, தன் கவலையை ஒரு சிறிது மறந்திருந்தாள்; ஆனால், அவ்வமைதி நெடிது நிற்கவில்லை. விழா நிகழுங்கால், அரச வீதி வழியே சென்று கொண்டிருந்த பாணன், அரண்மனை விழாவைக் கண்டான்; விழாநிகழ் காலமாதலின், அரசன் அரண்மனைக்கண் இருப்பன் என எண்ணினான். உடனே உள்ளே புகுந்து நோக்கினான்; ஆனால், ஆங்கு அரசனைக் கண்டிலன்; அதனால் அரசியாரை அணுகி, "அரசர் எங்கே?" என்று வினவினான். பாணன் வினா, அரசியார் மறந்திருந்த அரசன் ஒழுக்கக்கேட்டினை நினைப்பூட்டிவிட்டது; அந்நினைவு மிகுதியால் வருத்தம் மிக்கு வாடிக் கிடந்தாள்.

அந்நிலையில் அரசனும் வந்து சேர்ந்தான்; அவனைக் காணவே, அதுகாறும் அடங்கி யிருந்த அவள் காதல் உணர்வு துளிர்க்கத் தலைப்பட்டது; ஆயினும், அவன் ஒழுக்கக் கேடு அவள் உள்ளத்தை வாட்டிற்று. மனைவி, கணவன் தரும் இன்பத்தால் மகிழமட்டும் வந்தவளல்லள்; அவன் தவறியவிடத்து, அத்தவற்றினை எடுத்துக் காட்டித் திருத்தவும் கடமைப்பட்டவள் என்பதை உணர்ந்தவளாதலின், அவனுக்கு அறிவுரைக்க விரும்பினாள்; விரும்பியவள், தான் அறிவுரைக்க

முற்படுவதால் கணவன் மனத்தை நோகச் செய்து விடுதல் கூடாதே என்றும் எண்ணினுள்; அதனுல், "தனக்குரிய நாடு சிறிதேயாயினும், அதை ஊறுநேரா வாறு காக்கும் கடமையை மறந்து, பிறநாடுகள்மீது ஆசைகொண்டு போவது அறநெறியாகாது. அஃது அழிவுப் பாதையாம் என்பதை ஆன்ருேர் உணர்த்த உணர்ந்த உரவோன் நீ" என வெளிப்படக்கூறிப் பாராட்டி வரவேற்பாள்போல் வரவேற்று, "அத்தகைய பேரறிவு வாய்ந்த நீ, மணங்கொண்ட மனைவியை மறந்து, பரத்தையர் நலம் நாடிச் செல்லுதல் பழியாம். உள்ள மனைவியை விடுத்து, ஊர்ப்பெண்களோடு திரிதல் உயர்ந் தோர்க்குரிய ஒழுக்கமன்று என்பதை உணராதது ஏனே?" என்பதைக் குறிப்பால் கூறி அறிவுறுத்தினுள்.

அவ்வாறு கூறி வரவேற்றவள், அவள் பாராட்டுரை கேட்டு, அதன்வழியே அவள் உள்ளம் உணர்த்தும் உயர்ந்த அறிவுரை உணர்ந்து உணர்விழந்து நிற்பானை உள்ளே அழைத்துச் சென்ருள். அவனை அணுகி நின்று, "ஐய! நீ என்னை மறந்து வாழ்ந்தாய்; பரத் தையர் தொடர்புகொண்டு திரிந்தாய்; அவர் மார்பு அணைக்க அழிந்த உன்மாலை என்னைநோக்கி இகழ்கிறது. சூடுவார் இல்லாமையால், வட்டிலில் வறிதே கிடக்கும் மலர்போல் வாடிக்கிடக்கின்றேன் நான். ஆயினும், நான் உன்னைப் பழிக்கேன்; பரத்தையர் பண்பு என்பால் இல்லை; அவர்கள் உன்நலன் ஒன்றே நயந்து வாழ்பவர். அதனுல் அந்நலத்தை ஒருநாள் இழப்பினும், உன்னைப் பழிப்பர்; நான் அங்ஙனம் செய்யேன்; உன்நலம் பெறும் உரிமை உடைய நான், அந்நலத்தை இழந்து, ஒருநாள் அல்ல பல நாளாக வருந்துகிறேன். எனினும், உன்னைக் காணுது வருந்தும் பரத்தையர், என் வாயிற்கண் வந்து நின்று, தம் கைவளை ஒலிக்கக், கதவைத் தட்டித் திறந்து

உள்புகுந்து உன்னை என்பால் வினவும் நிலைகண்டும் நான் வருந்தேன். 'அரசன் அறிவுடையனல்லன்: அன்புடையனல்லன்' எனப் பழிக்கும அவர்களைப்போல், • அவன் எமக்கு உறவல்லன்' எனக்கூறி, உன்னை அவர்முன் பழித்துரைக்கேன். உனக்கு ஏற்ற இளையவள் வாழும்இல் எது எனத் தேர்ந்து திரியும் பாணனையும் பார்த்துள்ளேன்; அப்பரத்தையர் வீட்டிற்கு உன்னைத் தேரேற்றிக் கொண்டுவிடுக்கும் உன் பாகன் கொடுமையையும் அறிவேன்; ஆயினும் அவர்களை நான் பழிக்கேன். ஐய! இவ்வாறு, ஒரோவொருகால் ஈங்குவரும் உன் வரவால் மகிழும் நான், நீ பிரியப் பெரிதும் வாடுகிறேன்; அதுகாணும் இவ்வூரார் உன்னைப் பழிக்கின்றனர்; 'ஒருத்தி வருந்த ஒருத்தியிடத்தே மகிழ்ந்து வாழ்கிருன்' என ஊரார் உரைக்கும் அவ்வலர் உரை ஒன்றிற்கே வருந்துகிறது என் உள்ளம். அன்ப! இவ்வாறு வரும் வருகையின்போதும், உன் உடல் ஈங்கு இருப்பினும், உன் நினைவெல்லாம், பரத்தையர் சேரிக்கண் சென்று திரிகிறது. இவ்வாறு என்பால் உள்ளன்பின்றி வாழும் உன்உறவால் நான் பெறலாகும் இன்பம், கனவில்கண்ட செல்வம்போல் கைகூடப்பெருது; பயன் நிறைந்ததும் ஆகாது. ஆகவே அன்ப; உன்னை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி கொண்டிலது என்மனம்'' எனக்கூறி ஏற்றுக்கொண்டாள்; அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமுகத்தான், அவன் ஒழுக்கக்கேட்டினையும், அதனுல் ஊரார் கூறும் அலரையும், அதனுல் அவனுக்குண்டாம் புகழ்க்கேட்டினையும் அவளுக்கு உண்டாம் இன்பக்கேட்டினையும் எடுத்துக் காட்டித் திருத்திய திறம் அறிந்து மகிழ்தற்குரியதாம்.

''பொதுமொழி பிறர்க்குஇன்றி முழுதாளும் செல்வர்க்கு
மதிமொழி இடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவி செறுவாக

முதுமொழி நீராப், புலன்நா உழவர்,
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனல்ஊர!

ஊரன்மன் உரன்அல்லன் நமக்கு என்ன உடன்வாளாது,
ஓருர்தொக்கிருந்த நின்பெண்டிருள் நேராகிக்,
களையா நின்குறிவந்து, எம்கதவம் சேர்ந்து அசைத்தகை
வளையின்வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ?
கேளலன் நமக்குஅவன் குறுகன்மின் எனமற்றெம்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

ஊடியார் நலம்தேம்ப ஒடியெறிந்தவர் வயின்
மால்தீர்க்கும் அவன்மார்புஎன்று எழுந்தசொல் நோவேமோ?
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் தார்எள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;

சேரிபால் சென்று நீசேர்ந்த இல் வினுயினன்
தேரொடு திரிதரும் பாகனைப்பழிப் பேமோ?
ஒலிகொண்ட சும்மையான் மணமனை குறித்து எம்இல்
பொலிக எனப்புகுந்த நின்புலையனைக் கண்டயாம்,

என வாங்கு,
நனவினுன் வேருகும் வேளா முயக்கம்
மனைவரின் பெற்றுஉவந்து, மற்று எம்தோள்வாட,
இனையர்என உணர்ந்தார் என்று ஏக்கற் ருங்குக்
கனவினுன் எய்திய செல்வத்து அனையதே,
ஐய! எமக்கு நின்மார்பு."

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனுக்கு, ஊடல் தீர்ந்து வாயில் நேரும் தலைவி கூறியது இது.

*1. பொதுமொழி - உலகம் அனைவர்க்கும் பொது என்ற சொல்: மதிமொழி - அறிவுரை; இடன்மாலை - உரைக்கும் இயல்புடைய; வினைவர் - அமைச்சர்; 3. செதுமொழி - பொல்லாத சொற்கள்; சீத்த - களையப் பட்ட; செறு - வயல்; 4. புலன்நாஉழவர் - அறிவு நிறைந்த நாக்கை ஏராகக்கொண்டு உழும் புலவர்; 5.*

கூட்டுண்ணும் - பெரும் அளவில் பெற்றுமகிழும்; 6. உரன் அல்லன் - உறுதியுடையானல்லன்; வாளாது - ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறைகூறி; 7. நேராகி - ஒப்பாகி; 8. களையா - கூறிய குறைகளைக் களைந்து; கதவம் - கதவு; 9. வளையின்வாய் விடல்மாலை - வளையொலியால் தம்வரவு அறிவிக்கும் இயல்புடைய; 11. வாடு - கெடுகின்ற; 12. ஒடிஎறிந்து - இடையன் வெட்டிய மரம்போலாகி; 13. மால் - துன்பம்; சொல் - பழி; 14. குழைந்த - அழிந்த; தார் - மாலை; எள்ள - நகைக்க; 15. வகைவரிச்செப்பு - அழகிய வரிகள் அமைந்த செப்புக்கலம்; 16. சேரியால் - சேரிதோறும்; 18. ஒலிகொண்ட சும்மையான் - ஆரவாரப் பேரொலியால்; 19. பொலிக - பொலிகஎன வாழ்த்தல்; புலையன் - பாணன்; 21. வேளா முயக்கம் - விருப்பமில்லாத புணர்ச்சி; 23. இனைய - இத்தன்மையர்; ஏக்கற்று - மனம்நொந்து.

4

# எம்மையும் உள்ளுவாய்!

நீர்வளம் நிறைந்தது அந்நாடு; நகர்ப்புறங்களின் இயற்கைத்தோற்றம், அந்நகர் மக்களின் பண்பட்ட வாழ்க்கையின் வனப்பினை விளக்கிக்காட்டும் வளம் நிறைந்தது. புறநகரில் இருக்கும் பொய்கையில், அல்லியும், தாமரையும் மலர்ந்து மணம் வீசும்; கரையில் நிழல்தரு மரங்கள் வளர்ந்துள்ளமையால், பொய்கைநீர் தண்ணெனக் குளிர்ந்திருக்கும்; அழகிய மெல்லிய வெண்ணிற இறகுகள் வாய்ந்த அன்னங்கள் வாழும் வனப்புடையது அப்பொய்கை: அன்னங்கள் ஆணும் பெண்ணுமாய் இணைந்து இணைந்து, ஆங்கு மலர்ந்துகிடக்கும் தாமரை மலர்களைச் சுற்றிச் சுற்றித்திரியும் காட்சி, காண்பார் கண்ணிற்குப் பெருவிருந்தாம். அக்காட்சி மனம்நிறை மகிழ்ச்சிதரும் மணநாளன்று, நாண்மிகுதியால், தாம் அணிந்துள்ள புதுமண ஆடையால் தம் முகத்தை மறைத்துக்கொண்டு நோக்கும், அழகிய மான் விழிபோலும் மருண்ட நோக்கினை உடைய உயர்குல மகளிரைத் தம் வாழ்க்கைத் துணையாக, வரைந்து

கொள்ளும் அக்குல ஆடவர், அம்மகளிர் கையைப் பற்றிக்கொண்டு, அந்தணர் ஓம்பும் செந்தழலை வலம் வந்து மணங்கொண்டு வாழும் மணவாழ்க்கையினை-மாண்புமிக்க அந்நகரின் நல்வாழ்வை நன்கெடுத்துக் காட்டும்.

அவ்வளமார் நகரில், இளங்காதலர் இருவர் வாழ்ந்திருந்தனர்; அவர்கள் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெற்று வந்தது; அந்நிலையில் ஒருநாள், தெருவழியே தேர் ஏறிச்சென்ற அவன் எதிரில், எழில்மிக்க ஓர் இளம்பரத்தை, காலில் சிலம்பொலிக்கச் செம்மாந்து வரக்கண்டான். அவள் அழகு, அவன் உள்ளத்தை அலைக்கழித்துவிட்டது; அவன் அறிவு திரிந்தது; அவள், அவன் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டாள்; அவளை எப்படியாவது அடைதல் வேண்டும்; எதைக் கூறியாவது அவள் அன்பைப் பெறுதல்வேண்டும் எனத் துடிதுடித்தது அவன் உள்ளம்; ஆனால், அவள் இன்னள்; இன்ன இடத்தள் என்பதை அறியாது கலங்கினான்; அவளைத்தேடிக் கொணருமாறு தேர்ப் பாகனை விடுத்து, அவள் வரவிற்காக ஒரு மலர்ச் சோலையில் காத்துக்கிடந்தான்; சென்ற தேர்ப்பாகன் அவளைத் தேடிப்பிடித்து, இளைஞன் இயல்பும் தகுதியும் எடுத்துக்கூறி, அழைத்துச்சென்று, பூஞ்சோலையில் அவள் வருகையை எதிர்நோக்கியிருந்த இளைஞன்பால் கொண்டுபோய் விடுத்தான். இளைஞனை அடைந்த அவள், ஆடியும் பாடியும் அவனை மகிழ்வித்தாள்; இளைஞன் அவளோடு கூடிப் பூக்கொய்தும், புதுப்புனல் ஆடியும் இன்புற்றுக்கிடந்தான்.

காலையில் தேர் ஏறிச்சென்ற கணவன், நெடிது கழியவும் வாராமைகண்டு வருந்தினாள் அவன் மனைவி; அவள் கலங்கிய நிலைகண்டு தோழியரும் வருந்தினர்;

அவருட் சிலர், இளைஞனைத்தேடிச் சென்றனர்; மலர்ச் சோலையில் மகிழ்ந்திருக்கும் அவன் நிலையறிந்துவந்து அவளுக்கு அறிவித்தனர்; கணவனைக் காணது கலங்கி யிருப்பாளைக் கணவன் பரத்தையர் தொடர்புகொண்ட பழியுடையனுயினன் என்ற செய்தி பெரிதும் வருத். திற்று; அப்பரத்தை உறவால் தன் இன்ப வாழ்க்கைக்கு இடுக்கண் நேர்ந்துவிட்டதே என எண்ணிக் கலங்கினுள்; அவ்வாறு கலங்கியிருப்பாள் முன்வந்து நின்றுன் இளைஞன்.

ஒழுக்கம்கெட்டு ஊர்திரிந்துவரும் கணவனைக் காண வும் நாணின அவள் கண்கள்; அதனுல், வந்தவனை 'வருக' என வரவேற்காது, வாயடைத்து வருந்திக் கிடந்தாள்; மனைவி, நம் ஒழுக்கக் கேட்டினை உணர்ந்து கொண்டாள்; நம்பால் அவ்வொழுக்கக்கேடு இல்லைஎன உணர்ந்தாலன்றி நம்மை ஏற்றுக்கொள்ளாள் என உணர்ந்தான் இளைஞன்; அதனுல், மனைவியின் அருகில் சென்று, பணிந்து நின்று, "மாண்புடையாய்! இன்று நான் ஒரு பரத்தையைக் கண்டது உண்மை; ஆனுல், என் உள்ளத்தை அவள்பால் பறிகொடுப்பதன் முன்னர் அவள் இயல்பினை அறிந்துகொண்டேனுதலின், அப்பழி பெருது மீண்டேன்; இது உண்மை. அவள் ஒரு பெண்ணேயாயினும், அவள்பால் அப்பெண்மைக்குரிய இயல்பு சிறிதும் காணப்படவில்லை; ஒருத்தி ஒருவ னேடே வாழவேண்டும் எனும் வரையறையுள்ளம் அவள் பால் இல்லை; பெண்களுக்குப் பேரணிகலனுய்ப் பெருமை தரும் நிறைஎனும் குணம், அவள்பால் நில்லாது நீங்கி விட்டது; மேலும், அவள் தனக்கென ஓர் உள்ளம் பெற்று, அது உணர்த்தும் வழியில் வாழக்கருதாது தன்னை விரும்புவார் உள்ளங்கள் உணர்த்தும் வழிகளி லெல்லாம் சென்று திரியும் செந்நெறி இழந்தவள்;

அவள்பால் இக்குறைபாடுகள் இருக்கக்கண்டேனுதலின் அவளை அப்பொழுதே மறந்துவிட்டேன்; ஆகவே, பழி யுடையன் என என்னை வெறுத்துத்தள்ளாது, ஏற்றுக் கொள்வாயாக" எனக் கூறி இரந்து வேண்டினுன்.

கணவன் வாய் அவ்வாறு கூறினும், அவன் உள்ளம், தன் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டோடி மறைந்துவிட்ட அப்பரத்தையை அடைதல் வேண்டும் என்ற ஆசையால் நிறைந்து அழிகிறது என்பதை அவன் முகக்குறிப்பால் அறிந்துகொண்டாள் அவன் மனைவி; அதனுல், அவன் ஒழுக்கக்கேட்டினை எடுத்துக் காட்டி இடித்துரைக்கத் துணிந்தாள்; "இளைஞ! நீ என்னை அந்தணர் ஓம்பிய செந்தழல்முன் கைப்பிடித்து மணங்கொண்டாய் எனினும், உன் மணவினைக்கு, அவ் வழலைச் சான்ருகக் கொண்டிலைபோலும்; அதனுல், மணந்துகொண்ட மனைவியாம் என்னை மறக்காது காக்கும் கடமையை நீ கருதுகின்றிலை" என எடுத்துரைக்க விரும்பினுள்; விரும்பிய கருத்தை விளங்க உரைக்காது, "ஐய! உன் புறநகர்ப் பொய்கைவாழ் அன்னச் சேவலுக்குத், தாமரை மலரைத் தன் காதல் சான்ருகக் கொள்ளும் கருத்தில்லையாகவும், அது மணமகன் மண மகளைக் கைப்பிடித்து, மணச்சான்ருகத் தன்முன் கிடக்கும் செந்தழலை வலம்வருதல்போல், தன்பேட்டினைக் கூட்டிக்கொண்டு, தாமரை மலரைச் சுற்றித்திரிகிறது; அவ்வழகிய வளம்மிக்க ஊரின் தலைவன் நீ" என அவன் ஊர்வளத்தில், அவன் ஒழுக்கக்கேட்டினை உட்புகுத்தி உரைத்தாள்.

இவ்வாறு மறைத்துமொழி கிளவியால் அவனைப் பழித்தவள், அவனைநோக்கி "ஐய! உன் உள்ளம் பரத்தைபின் ஓடுகிறது; அவளைக் காணுது கலங்கு கிறது; அவளோடு ஆடிப்பாடி மகிழ விரைகிறது;

உண்மை இதுவாகவும், "பண்பற்றவள் அப்பரத்தை; ஆகவே அவள்பால் பற்றுக்கொண்டிலேன்" எனக் கூறிப் பொய்யுரைத்தல் ஏனோ? உன் செல்வச் செருக்கால், உன் ஆட்சி ஆணவத்தால் இவ்வாறு பயனற்ற சொற்களைச்சொல்லிப் பிழை மறைக்கப்பார்த்தல் பண்பாமோ? என் அன்பிற்குப் பணிந்தாய்போல் பொய் நடிப்புக்கொள்ளுதல் பொருந்துமோ? அன்ப! நீ காட்டும் இவ் அன்பு, பொய்யானது என்பதை அறிவேன்; ஆதலின், அதுகண்டு என்மனம் மகிழாது; இவ்வாறு என்பால் அன்புகொண்டாய்போல் வந்து, பணிந்துநின்று, நின் தகுதிக்கு மாறாகப் பொய்யுரைத்து வாழ்தலைக் கைவிடுக; நான் நின்பால் வேண்டுவது ஒன்றே; அதைமட்டும் மறவாது செய்க; உன்மனம் விரும்பும் மகளிரைப்பெற்று மகிழ்ந்து வாழ்க; அவ்வாறு வாழ்ந்து, அவர்பால்கொண்ட பற்று அற்றவிடத்து, மணங்கொண்ட மனைவியொருத்தி உளள் என என்னை மறவாது நினைத்துக்கொள்வாயாக; அஃது ஒன்றே எனக்கு ஆறுதலாம்" எனக் கூறி வருந்தினாள்.

"போதுஅவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறம்சேர்பு,
காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மான்நோக்கின் மடந்தை தன்துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்
ஆய்தூவி அன்னம், தன்அணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉம் மிகுபுனல் நல்ஊர!

தெள்அரிச் சிலம்புஆர்ப்பத் தெருவின்கண் தாக்கி,நின்
உள்ளம்கொண்டு ஒழித்தாளைக், குறைகூறிக் கொளநின்றாய்,
துணிந்தது பிறிதாகத், துணிவிலள்இவள் எனப்
பணிந்தாய் போல்வந்து, ஈண்டுப், பயனில மொழிவாயோ?

பட்டுழி அறியாது, பாகனைத் தேரொடும்
விட்டு,அவள் வரல்நோக்கி, விருந்தேற்றுக்கொள நின்றாய்.

நெஞ்சத்த பிறவாக, நிறையிலள் இவள்; என
வஞ்சத்தான் வந்து, ஈங்கு வலியலைத்து ஈவாயோ ?

இணர்ததை தண்காவின் இயன்ற நின்குறிவந்தாள்
புணர்வினில் புகன்று, ஆங்கே புனல்ஆடப் பண்ணினாய்;
தருக்கிய பிறவாகத் தன்னில்லள் இவள், எனச்
செருக்கினால் வந்து, ஈங்குச்சொல் உகுத்துஈவாயோ ?

என வாங்கு,
தருக்கேம் பெரும ! நின்அல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய் போல்வந்து தகவில செய்யாது,
சூழ்ந்தவைசெய்து, மற்று எம்மையும் உள்ளுவாய்,
வீழ்ந்தார் விருப்பு அற்றக்கால் ''

**பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனொடு ஊடித், தலைவி கூறியது.**

*1. போது - அரும்புகள் ; அவிழ் - மலர்கின்ற ; புதுவது - புதிதாக ; தளைவிட்ட - மலர்ந்த ; 3. வதுவை - திருமணம் ; கலிங்கம் - ஆடை ; 5. ஓது - வேதம் ; 6. ஆய் - அழகிய ; தூவி - இறகு ; 7. மேதக - பெருமையாக ; 8. தெள் - தெளிந்த ; அரி - உள்ளிடுபரல்கள் ; தாக்கி - எதிர்ப்பட்டு ; 9. குறைகூறி - உன்குறையைக் கூறி ; 10. துணிந்தது - கருதியது ; துணிவு - தனக்கே உரித்தாக வரைந்துகொண்ட ஒழுக்கம் ; 12. பட்டுழி - சென்றவிடம் ; 13. விருந்து - விருந்தாக ; 15. வலி - ஆட்சி ஆணவத்தால் ; அலைத்தீவாயோ - வருத்துவாயோ ; 16. இணர் - மலர்க்கொத்து ; தகை - மிக்க ; கா - சோலை ; இயன்ற - குறித்த ; 17. புகன்று - பாராட்டி ; 18. தருக்கிய - நெஞ்சுமகிழ்ந்து கருதியது ; தன்னில்லள் - தனக்கென ஓர் இயல்புடையளல்லள் : 19. உகுத்து - வீணேகொட்டி ; 23. சூழ்ந்தவை - உள்ளம் விரும்பியஃத ; 24. வீழ்ந்தார் உன்னால் விரும்பப் பட்டவர்.*

# 5

# நீர்இதழ் புலராக் கண்

நவமணிகள் நாற்புறமும் சிதறிக் கிடப்பதுபோல், நிறங்களால் வேறுபட்ட மலர் வகைகள் நிறைந்த ஒரு பொய்கையில், சேவலும் பெடையுமாய் இரு அன்னங்கள் இணைபிரியாது வாழ்ந்திருந்தன; ஒருநாள்; அன்னங்கள் இரண்டும் அப்பொய்கை நீரில் உலாவந்தன; அப்பொழுது, நீரளவிற்கு மேலும் நீண்டு வளர்ந்து நின்ற ஓர் இலை சேவலை மறைத்துக்கொண்டது; உடன்வந்த சேவல், திடுமென மறைந்து போகவே, கலங்கிற்றுப் பெடையன்னம்; பொய்கை முற்றும் ஓடிஅலைந்து தேடிப் பார்த்தது; எங்கும் அதைக் கண்டிலது; அதனால், உள்ளம் சோர்ந்து, உடல்தளர்ந்து ஒருபால் ஒய்ந்து நின்றது; அந்நிலையில், வானத்தே எழுந்த வெண் மதியின் நிழல், அப்பொய்கை நீரில் எதிரொளித்தது; அந்நிழலைத் திடுமெனக் கண்ட பெடையன்னம், அதைத் தன் காதற் சேவலாகவே கருதிவிட்டது; அதனால், அந் நிழலை நோக்கி விரைந்தது; அந்நிலையில், இலைமறைவினின்றும் வெளிப்பட்ட சேவல், அதன் எதிரே வந்தது.

தன் காதற்சேவல் தன்னை மறந்துவிடாது, தன்னைத் தேடி வரக் காணவே, அதன் அறியாமை அதற்குப் பெருநாணைத் தந்தது; நாணிய அப்பேடு, நெருங்க மலர்ந்து நிற்கும் தாமரை மலர்களின் இடையே புகுந்து தன்னைமறைத்துக் கொண்டது. இத்தகைய அழகிய காட்சிகளுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் நிலைக்களமாய் வளம் மிக்க நாட்டில் காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்துவந்தனர்;

காதல் எனும் காற்று உந்த, இன்பத்திற்கு இருப்பிடமாய், அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவர் வாழ்க்கைப் படகு, பரத்தையர் ஒழுக்கம் எனும் புயலால் தாக்குண்டு தன்நெறி பிறழ்ந்தது; இளைஞன் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு, அப்பரத்தையர் சேரி புகுந்து வாழத் தொடங்கினான்.

கணவன்மார் பிரிவு, பொதுவாக மகளிர் அனைவர்க்கும் பெருந் துயர்தரும்; அதிலும், கணவன் பொருள் கருதியோ, போர் குறித்தோ பிரிந்திலன், பரத்தையர் உறவு நாடிப் பிரிந்தான் என அறிந்தால், அப்பிரிவை அவர் தாங்கிக் கொள்ளார்; அப்பிரிவுத் துயரைத் தாங்கிக்கொண்டு வாழ்தல், அம்மகளிரால் இயலாது; அதனால், கணவன், பரத்தையர் மனைபுகுந்து வாழ்கிறான் என்ற செய்தி கேட்டு அவன் மனைவி கலங்கினாள். கலக்க மிகுதியால், அவள் நலன் அவளைவிட்டு மறைந்தது. அவள் கண்கள் உறக்கம் கொள்ள மறுத்தன; உறக்கம் இழந்து, உள்ளத்துயர் மிகுந்து வருந்திய நாட்கள் எண்ணற்றன கழிந்தன; சோர்வு மிகுதியால், உடல் ஒரோவழி படுக்கையிற் சாய, அதனால் அவள் கண்கள் அணையிற் படிந்து சிறிதே உறக்கம் கொள்ளும்; ஆனால், அந்நிலையில், கணவன், புதியாளொரு பரத்தையை, அவளுக்கு உறவாய பரத்தையர்

சூழ்ந்து நின்று பாராட்ட மணங்கொள்ள, அம்மண விழாக் குறித்து எழும் முரசொலி, அவள் காதுகளுள் வந்து பாய்ந்து, அவ்வுறக்கத்தைப் போக்கிவிடும்; கணவனை நினைந்து நினைந்து, ஓயாது அழுது, உறக்கம் மறந்த அவள் கண்கள், ஒரோவொருகால், அவள் மகன், அழுதுகொண்டிருப்பாள் முன்வந்து அணைத்துக் கொள்ள, அம்மகனைப்பற்றிய நினைவு மகிழ்ச்சி, கணவன் ஒழுக்கக் கேட்டினை ஒருவாறு மறக்கச் செய்ய, சிறிதே இமை மூடி உறக்கம் கொள்ளும்; ஆனால், அந்நிலையில், அவள் கணவன், தான் விரும்பும் பரத்தையர் பலரையும் ஒன்றுகூட்டி அழைத்துச் சென்று, ஊர்மன்றத்தே கூடியிருந்து, அவரோடு துணங்கைக் கூத்தாட, அவ் ஆட்டத்தின் இடையிடையே அவர் எழுப்பும் ஆரவாரப் பேரொலி, அவ்வுறக்கத்தைக் கலைத்துவிடும். இரவும், பகலும் கணவன் கொடுமையே கருத்தில் நிற்பதால், கண்கள் எக்காலமும் நீர்நிறைந்து வழியும்; நீர் நிறைந்த கண்ணின் இமைகள், எக்காலமும் திறந்தே கிடத்தல் இயலாது; அதனால், அவள் இமைகள் சிறிதே மூடி உறக்கம் கொள்ளுமாயினும், அக்காலை, அவள் கணவன் அவன் விரும்பும் பரத்தையரை, அப்பரத்தையர் சேரியினின்றும் ஏற்றிக்கொணரும் தேர்க் குதிரைகளின்கழுத்து மணியினின்றும் எழும்ஒலி, தெளிவாக ஒலித்து, அவ்வுறக்கத்தை ஒழித்துவிடும்.

இந்நிகழ்ச்சிகளால், அவள் பெரிதும் கலங்கினாள்; அவள்நிலை பெரிதும் கவலைக்கிடமாயிற்று: ஆற்றல் மிக்க பேரரசன் ஒருவன், தன்நாற் படையும் புடைசூழ வந்து, மதிலைவளைத்துக் கொள்ள, உள்ளே ஆற்றல் இழந்து அடைப்பட்டுக் கிடக்கும் அரசன், இரவெல்லாம் உறக்கமற்றுக் கிடந்து, விடியற்காலையில் சிறிதேஉறக்கம் கொள்பொழுதில், மதிற்புறத்தே உள்ள' பகையரசன்

பாசறையில். பள்ளி எழுச்சி குறித்து எழுப்பும் முரசொலி கேட்டு, கண்ணிமை விழித்துக் கலங்குவான்போல் கலங்கி வாழ்ந்தாள் அப்பெண்.

அத்தகைய நாட்கள் பல கழிந்தன; ஒருநாள், இளைஞன் தன் வீட்டிற்கு வந்தான்; மனைவியின் தோழியைக் கண்டு, “என் மனைவி என்மீது கொண்டிருக்கும் கோபத்தைப் போக்கி, என்னை அவள் ஏற்றுக்கொள்ளத் துணை புரிவாயாக” என வேண்டிக்கொண்டான். அவனால், அவன் மனைவிபடும் பெருந்துயரைப் பார்த்திருப்பவளாதலின், அத்தோழி அவன்பால் கடுஞ்சினம் கொண்டிருந்தாள்; அவன் பிழைகளைப் பொறுத்து அவனை ஏற்றுக்கொள்ள அவன் மனைவி இசையினும், அவள் இசையாள்; அவன்பால், அவளுக்கு அத்துணைக் கடுங்கோபம்; அதனால், அவனை “ஈங்கு வாரற்க” எனக் கூறி வழிமறிக்க விரும்பினாள்; ஆனால், அது முறையாகாது என்றது, அவள் பண்பறியுள்ளம். மேலும், அவன் பரத்தையர் ஒழுக்கத்திற்குக் காரணமாயிருந்தவன், பண்டெல்லாம் தம் மனைக்குவந்து பாடிப் பரிசில் பெற்றுப் பிழைத்த பாணனே யாதலின், அவன்மீதும், அவள் கடுங்கோபம் சென்றது; அதனால், முதற்கண், அவன் ஒழுக்கக் கேட்டினையும் அதனால் உறக்கமும் இல்லாமல், அவன் மனைவி வருந்திய வருத்த மிகுதியினையும் விளங்கக் கூறிய பின்னர், “அன்ப! உன் ஒழுக்கக்கேட்டால், நாங்கள் உறக்கம் ஒழிந்து அழியினும் அழிக; அது குறித்து இனி, யாம் வருந்தேம்; ஆனால், உனக்கு உற்ற துணைவனாய், நீ விரும்பும் பரத்தையர் மனைக்கண் இருந்து, யாழிசைத்துப் பிழைக்கும் அப் பாணன், இனி, ஈங்கு வாரானாகுக: அவனைக் காணப் பொறா எம்கண்கள்; அவன் காட்சியே எம்மைக் கடுந் துயர்க்கு உள்ளாக்குகிறது” எனக் கூறி அவனுக்குக் கதவடைத்தாள்.

"மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம், தன்
அணிமிகுசேவலை அகல்அடை மறைத்தெனக்,
கதுமெனக் காணாது கலங்கி, அம்மடப்பெடை
மதிநீழல் நீருள்கண்டு, அதுஎன உவந்துஓடித்,
துன்னத் தன்எதிர்வரூஉம் துணைகண்டு, மிகநாணிப்
பன்மலர் இடைப்புகூஉம் பழனம்சேர் ஊரகேள் ;

நலம்நீப்பத் துறந்து, எம்மைநல்காய் நீவிடுதலின்,
பலநாளும் படாதகண் பாயல்கொண்டு இயைபவால் ;
துணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் ததும்பும் நின்மணமுழவந்து எடுப்புமே ;

அகலநீதுறத்தலின், அழுதுஓவா உண்கண் எம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைப வால் ;
நினக்குஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து,நின்
தமர்பாடும் துங்கையுள் அரவம்வந்து எடுப்புமே,

வாராய்நீ துறத்தலின், வருந்திய எமக்குஆங்கே
நீர்இதழ் புலராக்கண் இமைகூம்ப இயைப வால்;
நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்து நின்,
தேர்பூண்ட நெடுநன்மான் தெண்மணி வந்து எடுப்புமே ,

எனவாங்கு,
மெல்லியான் செவிமுதல், மேல்வந்தான் காலைபோல்
எல்லாம் துயிலோ எடுப்புக ; நின்பெண்டிர்
இல்லின் எழீஇய யாழ் தழீஇக், கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்."

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு வாயில் மறுக்கும் தோழி கூறியது இது.

*1. மணி - நவமணிகள் ; 2. அடை - இலை ; மறைத் தென - மறைத்துக்கொண்டதாக ; 3. கதுமென - விரைவுப்பொருள் குறிக்கும் ஒரு குறிப்புச்சொல் ; 4. மதி நீழல் - திங்களின் நிழலை ; அதுவென - சேவல் அன்ன மாகக் கருதி ; 5. துன்ன - நெருங்கிவர ; 6. பழனம் -*

வயல்கள் ; 8. படாத - உறங்காத ; இயைபஆல் - இமை பொருந்துதலும் கூடும் ; 9. கோதையார் - பரத்தையர் ; வைகலும் - நாள்தோறும் ; 10. ததும்பும் - ஒலிக்கும் ; எடுப்பும் - கலக்கும் ; 11. ஓவா - ஓயாத ; 12. பொருந்து தல் - உறக்கம் கொள்ளுதல் ; 14. தமர் - உறவினராய பரத்தையர் ; துணங்கை - ஒருவகைக் கூத்து ; அரவம் - ஒலி ; 16. நீரிதழ் - நீர்நிறைந்த மலர்போலும் ; புலராக் கண் - நீர் அருத கண்கள் ; கூம்ப - குவிய ; 19. மான் - குதிரை ; தெண்மணி - தெளிந்த மணி ஓசை ; 20. மெல் லியான் - படையின்றி மெலிந்து அரணுள் அடங்கி இருப்பவன் ; மேல்வந்தான் - படையொடு முற்றியிருப் பவன் ; காலைபோல் - காலை முரசொலிபோல் ; 21. எல் லாம் - நின் திருவிளையாடல்களெல்லாம் ; 22. கல்லா - யாழிசைத்தல் தவிர வேறு எதையும் அறியாத.

6

# அலர்மார்பு காணிய

மணங்கொண்ட மனைவி, மனையின்கண் கிடந்து வருந்த, ஓர் இளைஞன், பரத்தையர் சேரிசென்று வாழ்ந் திருந்தான். ஆங்கு, இளமைநலம் குன்றாமல் வாழும் இளம் பரத்தையர்களாகத் தேடிப்பிடித்து, அவர்பால் பேரின்பம் உற்று, மேலும் அத்தகையர் பலரைப் பெற்று மகிழவேண்டும் எனும் ஆசையால், அப்பரத் தையர் சேரியை விடுத்துவரும் மனமின்றி, ஆங்கேயே வாழ்ந்திருந்தான்.

அவன் ஒழுக்கக் கேட்டை உணர்ந்து, அதனால் அவ னுக்கும், தனக்கும் உண்டாம் புகழ்க்கேட்டை எண்ணி வருந்தினாள் அவன் மனைவி. அவன் பரத்தைமை ஒழுக்கத்தை, அவனுக்கு வேண்டியவரிடமெல்லாம் கூறி வருந்தினாள். அவன் ஒழுக்கக் கேட்டிற்குத் துணைபுரியும் அவன் பாகனையும், பாணனையும் பழித்தாள். ஒருநாள் அவளைக்கண்ட தேர்ப்பாகன், "அம்மையே! உம் கண வருக்கு வேண்டிய மகளிர், அவர் விரும்பும் மகளிர், தங்களையல்லது பிறர் எவரும் இலர்; அத்தகையார்

எவரையும் நான் தேரேற்றிக் கொணர்ந்தறியேன்; எனக்கு வாழ்வளிக்கும் இத்தேர்மீது ஆணை என்று கூறி அஞ்சி அகன்றான். பிறிதொருநாள் பாணனைப்பார்த்தாள்; அவனை அழைத்துத் தன் கணவனுக்குத் துணை போகும் அவன் கொடுமையைக் கண்டித்தாள்; அவள் சினம்கண்டு நடுங்கிய அப்பாணன், "அம்மையே! அவர் பரத்தையர் உறவு கொண்டிருப்பதை நான் அறியேன்; அவர் உறவுகொண்ட பரத்தை யார்? அவர் செல்லும் இடம் எது என்பதும் எனக்குத் தெரியாது; தெரிந்தால் அதைத் தங்கள்பால் அறிவியாதிரேன்; தங்களுக்கு மறைத்துக் கொடுமைபுரியும் சிறுமைக்குணம் என்பால் இல்லை; இது உண்மை; என் யாழ்மீது ஆணை" என்று கூறி அகன்றான். ஒருநாள், கணவனின் ஆருயிர் நண்பன் அவனைத்தேடி அவன் மனைக்கு வந்தான்; ஆங்கு அவனைக்கண்டிலன்; வந்த அந்நண்பன்பால், அவள் கணவன் மேற்கொண்டிருக்கும் ஒழுக்கக் கேட்டைக் கூறி வருந்தினாள். ஆனால் வந்த நண்பனோ, தன் தோழனின் தவறுகளைப் பொருட்படுத்தாது, அவன்பால் காணலாம் அருங்குணங்கள் பலவற்றையும் எடுத்துக்கூறிப் பாராட்டி, அத்தகையான் தவறு செய்யான் என்றுகூறி அவள் வாயடைத்துச் சென்றான்.

தேர்ப்பாகனும், யாழ்ப்பாணனும், ஆருயிர் நண்பனும், கணவனுக்கு உற்றவராகவே பேசக்கண்டு, அவள் தன் துயர்தீர்ப்பாரை அறியாது கலங்கினாள். அக்கலக்கம்தீர, ஒருநாள் இயற்கைக்காட்சிகளைக் கண்டு வரலாம் எனக் கருதிப் புறநகரை அடைந்தாள். அவள் சென்ற காலம் விடியற்காலம்; இளஞாயிறு மெல்ல மெல்லத் தன் கதிர்களைப் பரப்பிக்கொண்டிருந்தான்; ஒரு பொய்கையை அடைந்தாள்; தாமரை அரும்புகள் மலரத்தொடங்கின; ஒருவண்டு மலரும் அரும்புகளைத்

தேடிச்சென்று, அவற்றில் உள்ள தேனைக்குடித்து மகிழ்ந்தும், மேலும் அத்தேன்குடிக்கும் ஆசையால், அப்பொய்கையை விட்டு அகலாது, அப்பொய்கையி லேயே சுற்றிச் சுற்றி வந்தது. இந்தக்காட்சியை அவள் கண்கள் கண்டன; ஆனால், கணவனையே எண்ணிக் கொண்டிருக்கும் அவள் மனத்திற்கு அக்காட்சி புலப் பட்டிலது. அதற்கு மாறாக, அப்பொய்கை பரத்தையர் சேரியாகவும், மலரும் புதுமலர்கள் பருவம்பெற்ற இளம் பரத்தையராகவும், அம்மலர்களைச் சுற்றித்திரிந்து, அவற்றின் தேன் உண்டு மகிழும் வண்டு, அவ்விளம் பரத்தையர்பின் சென்று, அவர்மனம் மகிழுமாறு பலப் பல கூறி அவரை அடைந்து, அவர்பால் நலம்நுகர்ந்து கிடக்கும் கணவனாகவும்; தேன் குடித்த பின்னரும், அவ் வண்டு, பொய்கையைவிட்டுப் போக மனம் இன்றி ஆங்கேயே சுற்றிச்சுற்றி வருதல், இளம் பரத்தையர் சிலரோடு இன்பம் நுகர்ந்த தன் கணவன், மேலும் அம் மகளிர்பால் இன்பம் நுகரும் ஆசையால், அச்சேரியை விட்டு வர மனமின்றிக் கிடப்பதாகவும் தோன்றவே, பெரிதும் வருந்தினாள்.

அந்நிலையில், அதுகாறும் இலைகளால் மறைப்புண்டு அவள் கண்ணிற்குப் புலப்படாதிருந்த ஒரு பெரிய தாமரை மலர், தன்னை மறைத்திருந்த இலைகள் அகலவே, அவள் கண்ணிற்குப்பட்டது; ஞாயிற்றின் ஒளி அதன்மீதுபடரவே, அதன்மீது படிந்திருந்த பனிநீர் சிறுசிறு துளிகளாகச் சிந்திச்சொட்ட, மெல்ல மெல்ல மலரும் அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தாள். தன்னைப் பற்றிய நினைவு மீண்டும் தலைதூக்கிற்று; தன்னைப் பிரிந்து கொடுமை செய்யும் கணவன், தன்பால் வந்து 'என்பிழை பொறுத்து ஆட்கொள்க' என்று கூறி வந்து என்முன் தோன்றுவானோ? அவனைக்கண்டு என்

அகமும் முகமும் ஒருங்கே மலர, என் கண்களில் தேங்கிக் கிடக்கும் நீர் கீழே துளிர்த்து வீழ்ந்துபோக, என் முகமும் இம்மலர்போல் மகிழ்ச்சியால் மலராதா?'' என்ற எண்ணம் எழ ஏங்கினாள்.

அவ்வெண்ணம் அலைக்க எழுந்து வீட்டிற்கு வந்தாள்; அவள் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கணவனும் வந்து சேர்ந்தான். புணர்ச்சிக்காலத்தில், பரத்தையர், தம் பல்லாலும் நகத்தாலும் பண்ணிய புண்கள், அவன் மேனியில் அவ்வாறே தெரிந்தன. அவற்றை மறைக்கவேண்டும் எனும் மானவுணர்வும் அவனுக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. அம்மட்டோ! அவன் கழுத்தை நோக்கினாள்; புணர்ச்சியின்போது, பரத்தையர், அவனைத் தம் கைகளால் வளைத்து அணைத்துக் கொள்ள அந்நிலையில் அவர் கையில் அணிந்த தொடிகள் அழுந்தியதனால் ஏற்பட்ட தழும்புகள், அவன் கழுத்தில் எடுப்பாக, எல்லோருக்கும் எளிதில் தெரியுமாறு இருப்பதைக் கண்டாள். அவன் அவளை அணுகினான்; அவன் மார்பு புதுமணம் வீசிற்று; அது, அவன் உறவுகொண்ட பரத்தையரின் மணம்நாறும் கூந்தலில் கிடந்து உறங்கியதால் உண்டான மணம் என்பதை அறிந்தாள்; ஆருச்சினம் கொண்டாள்.

"அன்ப! ஒழுக்கத்தின் உறைவிடம் நீ; மனைவியையன்றிப் பிறர்மனை புகுந்தறியாக் குணக்குன்று நீ என்றெல்லாம் உன்னைப் புகழ்ந்தனர், உன்பாகனும், பாணனும், தோழனும்; அவர்கள் இப்பொழுது எங்கே? அவர்கள் இந்நிலையில் ஈண்டு வரட்டும்; வந்து உன்னைக் காணட்டும்; பரத்தையர் பண்ணிய இப்புண்களை, அவர் தொடி அழுத்திச்செய்த இத் தழும்பைக் காணட்டும்; அவள் கூந்தல் மணம் உன் மார்பில் வீசுவதை

நுகரட்டும்; பின்னர் கூறட்டும், நீ எத்துணைத் தூயோன் என்பதை" என்று கூறிச்சினந்தாள்.

பின்னர் சிறிதே அமைதியுற்று "அன்ப! அன்பு குறையாது, நீ செய்யும் தலையளியால் உன்னைப்புணரும் பேறு பெற்ற அப்பரத்தையரைப் பழிப்பவர் ஈங்கு ஒருவரும் இல்லை. வெளிவந்த கதிர்கள், பாலேறி முற்றப் பெருமழையை எதிர்நோக்கி வாடும் பயிருக்கு, மேகம், அது வேண்டும் பெருமழை தராது, சிறுதூரலை அளிப்பதுபோல், உன் அன்பை ஆரப்பெற்று உயிர்வாழ விரும்பும் என்பால், ஓர் ஆண்டிற்கு ஒருநாள் என வந்து சிறிதுபொழுதே தங்கிச் சிறிது இன்பம் அளித்துச் செல்வதை யான் வேண்டேன்; அதனால், நான் பெருந்துயர் கொள்கிறேன்; ஆகவே, அன்ப! இதுகாறும் உன் வருகையை எதிர்நோக்கி, 'இன்று வருவர் நாளை நில்லார்' என எண்ணி எண்ணி அமைதியுற்று வாழ்ந்தது போலவே, இனியும் வாழவல்லேன்; உன்னை இமைப்பொழுதும் பிரியாது பேரின்பம் நுகரும் அப்பரத்தையர் வருந்தாவாறே, அவர் மனைக்கே செல்க" என்று சினந்துகூறி அவ்விடம்விட்டு அப்பாற்சென்றாள்.

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும்பு ஊர்தரப்
புரிதலை தளைஅவிழ்ந்த பூஅங்கண் புணர்ந்து ஆடி
வரிதுவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்,
துனிசிறந்து இழிதரும் கண்ணின்நீர் அறல்வார
இனிது அமர் காதலன் இறைஞ்சித் தன்அடி சேர்பு
நனிவிரைந்து அளித்தலின் நகுபவள் முகம்போலப்,
பனிஒருதிறம் வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉம் தண்துறை நல்ஊர!

'ஒருநீ; பிறர்இல்லை அவன்பெண்டிர்' எனஉரைத்துத்
தேரொடும் தேற்றிய பாகன்வந் தீயான்கொல்?
ஓர்இல்தான் கொணர்ந்து உய்த்தார் புலவியுள் பொறித்தபுண்
பாரித்துப் புணர்த்தலின், பரத்தைமை காணிய,

'மடுத்துஅவன் புகுவழிமறையேன்' என்று யாழோடும்
எடுத்துச் சூள்பலவுற்ற பாணன் வந்தீயான்கொல் ?
அடுத்துத் தன்பொய் உண்டார்ப் புணர்ந்தநின் எருத்தின்கண்
எடுத்துக்கொள்வது போலும் தொடிவடுக் காணிய,

தணந்தனை எனக்கேட்டுத், தவறுஓராது எமக்குநின்
குணங்களைப் பாராட்டும் தோழன் வந்தீயான்கொல் ?
கணங்குழை நல்லவர் கதுப்பறல் அணைத்துஞ்சி
அணங்குபோல் கமழும்நின் அலர்மார்பு காணிய ;

என்றுநின்,
தீராமுயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்?நீ வருநாள்போல் அமைகுவம்யாம்; புக்கீமோ ?
மாரிக்கு அவாவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு ஆங்கு
ஆராத்துவலை அளித்தது போலும்,நீ
ஓர் யாட்டு ஒருகால் வரவு,''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு, வாயில் மறுக்கும் தலைவி கூறியது இது.

*2. புரிதலை - இதழ்முறுக்குண்ட தலைகள்; பூஅம்கள்- பூவில்உள்ள அழகியதேன்: 4. துனிசிறந்து - வெறுப்புற்று; 7. ஒருதிறம் - ஒருபால்; வார - ஒழுக; 8. தளைவிடும் - மலரும்; 9. ஓரு - ஆராய்ந்து பார்; 10. தேற்றிய- தெளிவித்த; வந்தீயான்கொல்-வாரானோ? 12. பாரித்து- பலரும்காணப் பரப்பி; 13. மடுத்து - வலியச் சென்று; 15. எருத்தின்கண் - கழுத்தின்கண்; 17. தணந்தனை - பிரிந்து போயுள்ளாய்; ஓராது - எண்ணிப்பாராது; 19. கதுப்புஅறல்- அறல்போன்ற கூந்தல்; 22. தீராமுயக்கம் - அன்புநீங்காத புணர்ச்சி; புலப்பவர் - வெறுப்பவர்; 23. புக்கீமோ - சென்று வாழ்க; பீள்வாடும்-கதிர்கள்வாடும்; 25. ஆராத்துவலை - நிறையாத மழை; 26. ஆட்டு - ஆண்டு.*

# 7

# அழிந்துஉகு நெஞ்சத்தேம்

கணவன் பரத்தைவீடு சென்றுவாழும் பழியுடையன் ஆனான்; அவன் செயல் அறிவுடையோர் பாராட்டும் அறமாகாது என அவனுக்கு அறிவுரைகூறுது, அவன் பரத்தையர் ஒழுக்கத்திற்குத் துணைபுரிந்தனர் அனைவரும்; கணவனும் மனைவியும் கூடி மேற்கொள்ளும் மனைவாழ்க்கையின் மாண்புகளைப் பாராட்டிப் பாட்டிசைக்க வேண்டிய பாணன், அக்கணவன் பரத்தையரோடு கூடி வாழும் வாழ்வில் பெறலாம் இன்பமே பேரின்பமாம் எனப் பாராட்டி அவனை மகிழ்வித்தான்; ஊர்மக்களின் ஆடைகளை அழுக்குப்போக வெளுத்துத் தந்து, அம் மக்களை அறநெறியில் நிறுத்தக் கடமைப்பட்ட வண்ணாத்தி, தன் வெளுக்கும் தொழிலைக் கைவிட்டு, அவன் விரும்பும் பரத்தையரைத் தேடிக்கொண்டுவரும் தூதுத்தொழில் மேற்கொண்டாள். ஒழுக்கநெறி உணர்த்தும் விழுமிய கடப்பாட்டை உடைய அந்தணன், அப் புகழ்நெறி மறந்து, பழிநெறி மேற்கொண்டு பரத்தையர் மனைசென்று வாழும் கணவனுக்கு அறவுரை கூறுவதை

விடுத்து, அதற்கு மாருக, அவனை அவன் ஒழுக்கக் கேடுணர்ந்து வெறுக்கும் அவ்வன் மனைவியின் மனைக்குச் சென்று, அவள் சினம் அடங்குமாறு அவ்வனைப் புகழ்ந்து வாழ்ந்தான்.

இவ்வாறு, அவனை இடித்துக் கூறித் திருத்துவார் அனைவரும், அதைச் செய்யாது, அவன் ஒழுக்கக் கேட்டிற்கே உறுதுணை புரிபவராக மாறவே, அவன் அவ்வொழுக்கக்கேட்டில் ஆழ்ந்து போனுன்; அதனுல், அவன் மனைவி பெரிதும் கலங்கினுள். நீலப்பட்டால் பண்ணிய மெத்தென்ற படுக்கை, அதன் ஒருபால், அன்னத்தூவியால் ஆகிய மெல்லிய அணை; அதன்மீது படுத்தும் அவள் கண்கள் உறங்க மறுத்தன. கணவன் கைவிட்டனனே; அவன் அன்பைப் பெற்று அகம் மகிழ்தற்கு இல்லையே என்ற ஏக்கம் அவள் மனத்தை மிகவும் வருத்திற்று; அதனுல் அவள்முகம் மலர்ச்சி இழந்தது; கணவனைப்பற்றிய கவலை சிறிதே மறக்குமாறு, கூண்டில் வளரும் கிளிகளுக்கு உணவூட்டும் பணியைத் தானே மேற்கொண்டாள். வெள்ளிக் கிண்ணத்தில் பாலேந்திச் சென்று அவற்றிற்கு ஊட்டினுள்; உண்ணமறுக்கும் அவற்றிற்கு, உள்ளம் மகிழும் உரைபல கூறி உண்பித்தாள்; அவை, அவள் இன்னுரை கேட்டுப் பால்உண்ண, அஃதுகண்டு அவள் முகம் சிறிதே மலர்ந்தது. கணவன் முகம் கண்டு, அவன் இன்பம் பெற்று மலராத அவள் முகம், கிளிகளின் இன்முகம் கண்டு மலர்ந்தது; ஆனுல், அம்மலர்ச்சியும் நெடிது நிற்கவில்லை; சிறிது பொழுதே நின்றது அம்மலர்ச்சி; கணவன் நினைவு மீண்டும் எழவே, அம்மலர்ச்சி அகன்றது; கவலைகொண்டு கண்ணீர் சிந்தினுள்; இவ்வாறு நாட்பலவும் வருந்திக் கிடந்தாள்.

ஒருநாள் காலை, தன் மனத்துயர் மறையுமாறு, ஊர்ப்புறத்தே சென்று சென்று உலாவிக்கொண்டிருந்

தாள்; ஆங்கே ஒரு பொய்கை; அல்லியும் தாமரையும் பின்னிப் படர்ந்திருந்தன; கரையில், நீரில் படுமாறு தாழ்ந்த கிளைகளைக்கொண்ட மாமரங்கள் நெருங்க வளர்ந் திருந்தன. அக்காட்சிகளை அகம்குளிரக் கண்டு களித் திருந்தாள்; அந்நிலையில், ஒரு பெரிய அலைவீச, அது மோதியதால் அற்று வீழ்ந்த ஒரு மாவடு, பொய்கையில் மலர்ந்து கிடந்த ஓர் அல்லி மலரில் பட்டு, அருகில் இருந்த தாமரை அரும்பைத் தாக்கிற்று; வண்டு வந்து மொய்க்க மலர வேண்டிய அத்தாமரை அரும்பு, அவ் வடுப்பட்டு மலர்ந்தது. அந்நிகழ்ச்சி, அவளுக்கு அவள் நிலையை உணர்த்திவிட்டது; கணவனைக் கண்டு மலர வேண்டிய தன்முகம், கிளிகள் உணவுண்ணக் கண்டு மலரும் தன் நிலையை நினைவூட்ட உணர்ந்து வருந்தி வீடடைந்தாள்.

ஆங்கு, அவள் வாராமுன்பே வந்து, அவளை எதிர் நோக்கி நிற்கும் கணவனைக் கண்டாள்; அவன் தோற்றம் சிறிதே மாறுபட்டிருப்பதை உணர்ந்து ஊன்றி நோக் கினாள்; தம்மை மறந்து போவதால், தமக்கு இன்பம் தந் திலன் எனும் நினைவால், அவன், தம்மை என்றும் மறவா திருக்கப் பண்ணும் குறியாக, அவன் மேனியைத் தம் நகங்களால் கீறி வடுச்செய்தார் சில பரத்தையர்; அதைக் கண்ட வேறு சில பரத்தையர், அவனைப் புணர்ந்த காலத்தில், முத்தம் கொண்டாராக, அவர் பற்கள் அழுந்தியவடு அவன இதழ்களில் ஆருமலே காட்சி அளித்தது. அவன் பரத்தையர் சிலரோடு கூடிச்சென்று புனலாடி மகிழ, அது பொருத வேறு சில பரத்தையர், அவனைச் சினந்து, அவன்மீது வாரி இறைத்த சாதி லிங்கக் குழம்பு, அவன் மார்பில் அவ்வாறே ஒளிவிட்டுக் கிடக்க அவள் முன்வந்து நின்றான். முன்னர் ஒரு பரத்தை அவனைப் புணர, அவள் அணிந்த மாலைகள்

உராய்ந்து உராய்ந்து அவன் மேனியை மெத்தென மென்மையதாக்கப், பின்னர்க் கூடிய பரத்தையின் கூந்தலை, அவன் வாரி முடிக்க, அப்போது, அவள் கூந்தன் மலர் அவன்மீது உதிர்ந்து அழகு செய்ய, அவ் வழகிய தோற்றத்தோடே அவள்முன் வந்து நின்றிருந் தான்.

கணவன் கோலத்தைக் காணக் காண, அவள் கலக்கம் அளவிறந்து பெருகிற்று. "ஐய! தகா வொழுக்கம் மேற்கொண்டு தவறு செய்தாய்; அதைக் கண்டே நான் வருந்துகிறேன்; உன் ஒழுக்கக் கேட்டினை உணர்த்தி, உனக்கு அறிவுரை கூற வேண்டியவர் அதைச் செய்திலர்; மாருக, அவ்வொழுக்கக் கேட்டிற்கு உற்றதுணையாயும் நிற்கின்றனர். அம்மட்டோ! உன் பரத்தையர் ஒழுக்கம் அறிந்தே வருந்துகிருள் உன் மனைவி. அவள் முன் இத்தோற்றத்தோடு, சென்று நிற்பது பொருந்தாது; அது அவள் துயரை அதிக மாக்கும்; ஆகவே, இக்கோலத்தோடு அவள்பால் செல் லற்க' என்று கூறியாவது தடுத்தனரா? இல்லையே!' 'அன்ப! இக்கோலத் தோடே சென்று, உன் இதழ்ப் புண்ணையும், மார்பின் சாதிலிங்கக் குழம்பையும், மலர்ப் பொடியையும் உன் மனைவிக்கும் கொண்டு சென்று காட்டு" என்று உனக்குக் கூறி, உன்னை இங்கு அனுப்பி னவரும் அவர்தாமோ? ஐய! பண்டுநீ அன்பு செய்ய, நானும் மகிழ்ந்து வாழ்ந்தேன்; இன்று உன் ஒழுக்கக் கேடு உணர்ந்து உள்ளம் நோகிறேன்; இவ்வாறு நான் வருந்த. நீசெய்த தவறுகளை எண்ணிப் பாராது, உன்னைக் கண்டவுடனே, அவற்றையெல்லாம் மறந்து, உன்னை வரவேற்க வேண்டும் என்று விரும்புகின்ருய்; அன்ப! அவ்வாறு மானம் இழந்து, மனத்துயர் மிக்கு, உன்னை வரவேற்று வாழ்வதினும், உன்பிரிவால் நான்

*அடையும் துயரம் பெரிதன்றே; அவ்வாறு உன்னை வரவேற்று வாழ்வதினும் அந்நோய் பொறுத்து வாழ்தல் இழிவுடைத்தும் அன்று. ஆகவே, அன்ப! உன்னைப் பிரிந்தும் உயிர்கொண்டு வாழும் வல்லமை உடையேன் நான்; ஆகவே, என்னைக் கைவிட்டு, உன் உள்ளம் விரும்பும் அப்பரத்தையர்பால் சென்று, அகம் மகிழ்ந்து வாழ்க!" எனக் கூறி வாயில் அடைத்துச் சென்றாள்.*

" இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்,
துணைபுணர் அன்னத்தின் தூவிமெல் அணை அசைஇச்
சேடுஇயல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
ஊடும் மென்சிறுகிளி உணர்ப்பவள் முகம்போலப்,
புதுநீர புதல்ஒற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி அலர்வீத்த ஆம்பல் வான்மலர் நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம் வயல்அணி நல்ஊர!

கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும், யாம்அழப்
பண்ணினால் களிப்பிக்கும் பாணன் காட்டு என்றாளோ?
பேணான் என்று உடன்றவர் உகிர்செய்த வடுவினான்,
மேனாள் நின்தோள்சேர்ந்தார் நகைசேர்ந்த இதழினை,

நாடி நின்தூது ஆடித், துறைச்செல்லாள், ஊரவர்
ஆடைகொண்டு ஒலிக்கும் நின்புலைத்தி காட்டு என்றாளோ?
கூடியார் புனல்ஆடப் புணையாய மார்பினில்
ஊடியார் எறிதர ஒளிவிட்ட அரக்கினை

வெறிது நின்புகழ்களை வேண்டார்இல் எடுத்துஏத்தும்
அறிவுடை அந்தணன் அவளைக் காட்டு என்றாளோ?
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட உருவின்மேல்,
குறிபெற்றார் குரற்கூந்தல் கோடுஉளர்ந்த துகளினை,

என வாங்கு,
செறிவுற்றேம், எம்மைநீ செறிய, அறிவுற்று
அழிந்துஉகு நெஞ்சத்தேம்; அல்லல் உழப்பக்

கழிந்தவை உள்ளாது, கண்உவிடத்தே
25. அழிந்து நிற்பேணிக் கொளலின், இழிந்ததோ,
இந்நோய் உழத்தல் எமக்கு ?''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு வாயில் மறுக்கும் தலைவி கூறியது இது.

*1.* இணை - பலவகை ; நிவந்த - உயர்ந்த ; சேக்கை - படுக்கை ; *3.* சேட்டுஇயல் - பெருமை மிக்க ; வள்ளம் - கிண்ணம் ; *5.* நீர - நீரைஉடைய; புதல் - புதர் ; ஒற்ற - அலைக்க ; *6.* வான்மலர் - வெண்ணிற மலர்; *8.* வடி - மாம் பிஞ்சு; *9.* கண்ணி - கருதி; கணைதொறும் - தழுவும் தொறும் ; *11.* உடன்றவர் - கோபித்த பரத்தையர்; *12.* மேனாள் - பின்னாள் ; நகை - பல்செய்தகுறி; *14.* ஒலிக்கும் - வெளுக்கும்; புலைத்தி - வண்ணாத்தி; *16.* அரக்கு - சாதிலிங்கக் குழம்பு ; *17.* வெறிது - பயன்இல்லாமல்; *18.* அவளை - அவளுக்கு; *19.* களிபட்டார் - புணர்ந்து மகிழ்ந்தவர்; கயம்பட்ட - மென்மை அடைந்த ; *20.* கோடு உளர்தல் - மயிரைச் சிக்குப் போக வாரி முடித்தல்; *22.* செறிவுற்றேம் - மனம் நிறைவுற்றேம்; *23.* உகு - வருந்துகின்ற.

# 8

# தோலாமோ யாமெனின்!

கணவன் பரத்தைவீடு சென்று வாழக் கலங்கிய ஒரு பெண், ஒருநாள், தன் ஊர் நடுவே உள்ள ஊருணித் துறைக்கண் நின்று, அதன் அழகைக் கண்டு, அக் காட்சியால், தன் கவலை மறந்து களித்திருந்தாள்; நீர் நிலையின் கரையில், நீரை ஒட்டி வளர்ந்திருந்த பகன்றைக் கொடிகள், வெள்ளியாலாய வெண்ணிறத் தட்டுக்களை வரிசை வரிசையாக வைத்திருத்தல்போல், வெண்ணிற மலர்களால் நிறைந்திருந்தன; அம்மலர்களில் படுமாறு நீண்டு வளர்ந்திருந்தது ஒரு தாமரை அரும்பு; சிறிது பொழுதிற்கெல்லாம் அது மலர்ந்தது. அக்காட்சி வெள்ளித்தட்டில் வாய்வைத்து, அதில் வார்த்துள்ள கள்ளை உண்டு மகிழ்பவள் முகம் மலர்ந்து தோன்றுவது வதுபோல் தோன்றக்கண்டு, துயர் மறந்து மகிழ்ந்தாள்.

அக்காட்சியால், சிறிதே கவலை மறந்து மகிழ்ந்த அவள், அக்காட்சி அவள் கணவன் ஒழுக்கக்கேட்டை நினைப்பூட்ட நின்று வருந்தினாள்; நீர்த்துறை பரத்தையர்

சேரியாகவும், அத்துறை அழகுபெற மலர்ந்த பகன்றைப் பூக்கள், அச்சேரிக்கு அழகுதரும் இளம் பரத்தைய ராகவும், அம்மலரை அடுத்து இருந்த தாமரை அரும்பு அப்பரத்தையரோடு தொடர்புகொண்டு வாழும் தன் கணவனாகவும் காட்சி அளித்தன; அம்மட்டோ; தாமரை மலர், கள்ளுண்ணல் தீதெனை அறிந்தும் அதை உண்டு களிப்பவள் முகம்போல் மலர்வது பரத்தையர் ஒழுக்கம் பழியுடைத்து என அறிந்தும், அவர்பால் இன்பம் நுகர்ந்து மகிழும் கணவன் செயலை நினைவூட் டிற்று; அதனால் கலங்கி, அங்கு நில்லாது வீடடைந்தாள்.

அந்நிலையில், பரத்தைவீடு சென்றிருந்த கணவனும் வந்து சேர்ந்தான்; வந்தவன் உள்ளே வாராவாறு வழி யடைத்துக் கொண்டாள்; சினந்து நிற்கும் அவள் நிலை கண்டு அவன் நடுங்கினான்; அவளைத் தேற்றும் வழி யறியாது விழித்தான்; இறுதியில், அவளைப்பணிந்து நின்று, "பெண்ணே! நீ கருதுமாறு, நான் பழி யுடையேன் அல்லேன்; நீ சினக்குமாறு செய்த குற்றம் எதையும் நான் அறியேன்" எனக்கூறி நின்றான்.

கணவன் ஒழுக்கக் கேட்டால் உள்ளம் நொந்து இருப்பவள், அவன் பொய்யுரைக்ககேட்டுப் பெரிதும் சினம் கொண்டாள். கண்கள் சிவப்பேற, அவனை நோக்கினாள்; அவன் அணிந்துள்ள தலைமாலை, அவன் விரும்பிப் புணர்ந்த இளம்பரத்தையரின் மாலை விளங்கும் மார்பை ஆரத் தழுவிக்கொண்டமையாற் கசங்கி. நிறங் கெட்டுத் தோன்றுவதைக் கண்டாள். மேலும், அவனை நோக்கினாள்; அவன் மார்பில் பூசிய சந்தனம், அப்பரத் தையர் அணிந்த மாலையாற் கலைந்து கவின் இழந்து தோன்றுவதைக் கண்டாள். அவன் ஆடையை நோக் கினாள்; அது, பரத்தையரோடு அவன் ஆடிய துணங்கைக் கூத்தில் அவர் காற்சிலம்பில் சிக்குண்டு

கரை கிழிந்துபோயிருக்கக் கண்டாள். தான் செய்த தவறுகளைத், தன் தலைமாலையும், மார்பில் சந்தனமும், ஆடையின் கரையும் காட்டிக்கொடுப்பவும், 'நான் தீதிலேன்; மனத்தால் குற்றம் இலேன்' எனப்பொய் கூறி அடிபணிந்து நிற்கும் அவன் நெஞ்சத்துணிவைக் கண்டாள்; கடுஞ்சினம் கொண்டாள்.

"அன்ப! நீ எதைச் செய்யினும், 'உன்செயல் தவறுடைத்து; துயர் விளைக்கும் கொடுமை உடைத்து' எனக்கூறி உன் ஒழுக்கக்கேட்டினை உணர்த்துவார் இல்லாத இடத்தில்,—உன் இன்ப விளையாட்டால் தன் நிறம் இழந்து கெட்ட உன் கண்ணி, பரத்தையர் மலர் மாலைபட்டு அழிந்து பாழான உன் மார்புச்சந்தனம், அவளோடு ஆடிய துணங்கைக் கூத்தில் கிழிந்து கந்தலான உன் ஆடை ஆகிய இவை; உனக்குப்பகை யாய், உன் திருவிளையாடல்களை அம்பலப்படுத்தாத போது வேண்டுமானால், 'நான் ஒழுக்கத்தால் தீதுடையே னல்லன்' என உரைத்தும், பணிந்தும் எம்மை மயக்குதல் பொருந்தும்; ஆனால், அன்ப! அது இப்போது இயலாது; அவை, உன் ஒழுக்கக் கேட்டினை உணர்த்த வல்ல நல்ல சான்றுகளாயின; அவை, அதை உள்ளது உள்ளவாறே உணர்த்தி விட்டன; இதற்கு மேலும் பொய் கூறி எம்மை ஏமாற்றுதல் இயலாது."

"அன்ப! ஆற்றில் பெருகி ஓடும் வெள்ளநீர் அனைத்தும் புகுந்தாலும் நிறைவுறாத கடல்போல், உன்நலத்தை, ஒருநாளும் இழக்காமல், ஓயாதுபெறினும்; தம் ஆசை அடங்காது, அதனால் உன்னை இடைவிடாது பெற விரும்பி, அந்நிலையில் வாய்க்காதுபோகும் காலத்தில், உன்னோடு ஊடித் துயர்கொள்ளும், அப்பரத்தையர் ஊடல்தீர்க்க, எதை வேண்டுமாயினும் கூற அவர்பால் செல்வாயாக; நான், நீ கூறும் எத்தகைய பெரிய பொய்

யையும் எளிதில் நம்பி, உன்னை ஏற்றுக்கொள்ளும் உள்ள உறுதி இழந்தவள்; ஆகவே, என்னை எப்பொழுது வேண்டுமாயினும் தேற்றித் தெளிவிக்கலாம்; அதற்காக ஈங்குக் காத்திராது, அவரைத் தேற்ற ஆங்கு விரைந்து செல்க'' எனக்கூறி, வாயில் அடைத்து வழிமறித்தாள்.

'' அகன்துறை அணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ உறநீண்ட பாசடைத் தாமரை,
கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால்
தண்கமழ் நறும்தேறல் உண்பவள் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயல்அணி நல்ஊர !

நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்,
தீதிலேன் யான் எனத் தேற்றிய வருதிமன் ;
ஞெகிழ்தொடி இளையவர் இடைமுலைத் தாதுசோர்ந்து
இதழ்வனப்பிழந்த நின்கண்ணி வந்து உரையாக்கால்

கனற்றிநீ செய்வது கடிந்தீவார் இல்வழி,
மனத்தில் தீதிலன் என மயக்கிய வருதிமன்,
அலமரல் உண்கண்ணார் ஆய்கோதை குழைத்தநின்
மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம் வந்து உரையாக்கால்,

என்னைநீ செய்யினும் உரைத்தீவார் இல்வழி
முன்அடிப் பணிந்து எம்மை உணர்த்திய வருதிமன்;
நிரைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம் வந்துரையாக்கால்.

என வாங்கு,
மண்டுநீர் ஆரா மலிகடல் போலும்நின்
தண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி, மற்றுயாம் எனின்,
தோலாமோ நின்பொய் மருண்டு ?''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு வாயில் மறுக்கும் தலைவி கூறியது இது.

*1.* பாசடை - பசிய இலையோடுகூடிய; *3.* கண்பொர - கண்கூசுமாறு; *5.* நொந்தீவார் - வெறுப்பவர்; *8.* ஞெகிழ்தொடி - சுழலும்தொடி; *10.* கனற்றி - உள்ளத்தை வருத்தி; கடிந்தீவார் - கடிவார்; *14.* என்னை - எத்தகைய பெரிய கொடுமையை; *17.* காழகம் - ஆடை; *19.* மண்டுநீர் - பெருவெள்ளம்; ஆரா - நிறையாத; *20.* தண்டா - ஆசை அடங்காத; *21.* புலத்தகை - புலக்கும் இயல்புடைய; தேற்றி - தெளிவிப்பாயாக.

9

# நெஞ்சமும் ஏமுற்றாய்

கணவன் பரத்தையர் தொடர்புகொண்டு வாழ்ந்தான்; மனைவியை மறந்து பரத்தையர் சேரிசென்று வாழும் அவன், அங்கும் தன் உள்ளம் விரும்பும் ஒருத்தியைத் தேர்ந்து, அவள் ஒருத்தியோடு மட்டும் உறவுகொண்டு வாழ்ந்தானல்லன்; காலையில் ஒருத்தி, நண்பகலில் வேறு ஒருத்தி, மாலையில் மற்றொருத்தி என வேளைக்கு ஒருத்தியாக உறவுகொண்டு வாழ்ந்தான்; இன்று தன்பால் உறவுகொண்டு, தன் மனையில் வாழும் அவன், நாளை தன்னைக் கைவிடுவன்; தன் மனையையும் மறந்துவிடுவன்; அவன் அன்பு நிலையற்றது; உண்மையற்றது என்பதை உணர்ந்தும், அப்பரத்தையர் அவன் உறவை விரும்பினர்; அவன் விரும்பும் பரத்தையரை, அவன் வேண்டும் காலத்தில், அவன் விரும்பும் இடத்திற்கு ஏற்றிக்கொணரும் அவன் தேரைக்காணும் அவ்வூரார், 'பரத்தையரை அகப்படுத்தும் பெரிய வலை அவன் தேர்' எனக்கூறிப் பழிப்பதை அறிந்தும், அதற்கு நாணாது; பரத்தையரைக் கொணரும் அப்

பணியை விடாது மேற்கொண்டான் அவன் தேர்ப் பாகன். தன்பால் உண்மை அன்புகாட்டும் மகளிர்பால் அன்பு காட்டான்; மணந்த மனேவியையும் மறக்கும் அன்பிலி; அதுமட்டுமன்று; தன் சொல்லே நம்பி, தன்னேடு உறவுகொள்ளும் மகளிரை மறந்து கைவிடும் கொடியோன்; அஃது அறநெறியாகாது என எண்ணும் அறிவும் அவன்பால் இல்லே; இவ்வாறு, அன்பை மறந்த, அறத்தைக் கைவிட்ட கொடியோன் அவன் என்பதை அறிந்தும், அவன்பால் பொருள்பெற்றுப் பிழைக்கும் பாணன் அவனேப்பாராட்டினுன்; பாணன் பாராட்ட, அவன் பரத்தையர் சேரியில் வாழ்ந்திருந்தான்.

கணவன்பால் தான் பெறவேண்டிய நலத்தைப் பரத்தையர் பெறுவது கண்டு கலங்கினுள் அவன் மனேவி; அவன்பால் பெறலாம் இன்பத்தை இழந்ததால் உண்டாம் வருத்தத்தினும், அவன் ஒழுக்கக் கேடு உணர்ந்து, ஊரார் உரைக்கும் பழியுரை கேட்டு அவள் உள்ளம் உற்றதுயர் பெரிதாம். அது பொருது பெரிதும் வருந்தி வாழ்ந்திருந்தாள். வருந்தி யிருப்பாள்முன், வந்து நின்ருன் அவள் கணவன். அவனேக் கண்டவுடனே, அவள் கலக்கம், கொடிய கோபமாய் மாறிற்று.

" ஐய! நீ மிகவும் கொடியை; உன் தேர்ப்பாகன் தேர் ஏற்றிக்கொணரும் புதிய பரத்தையை நாட்காலேயில் கூடிப், பகற்காலத்தே பரத்தையர் சேரி சென்று, அங்குப் பல பரத்தையரைக் கூடி, மாலேக்காலத்தில் உன் காதற்பரத்தையின் மனேசென்று வாழும் மாண்பிலான் நீ " எனப் பழிக்கத் துணிந்தது அவள் உள்ளம்; ஆனல் அவ்வாறு பழித்தல், பண்புடையார்க்குப் பெருமை தாராது என உணர்த்திற்று அவள் அறிவு; அதனல், அன்ப! காலேயில் எழுந்த வண்டு முதற்கண் பொய்கையுள் புகுந்து, ஆங்குப் புதிதாக மலர்ந்திருக்கும் மலர்

களில் உள்ள தேனைக் குடித்து, நண்பகற்காலம் வந்ததும் அதை மறந்து கழியை யடைந்து ஆங்கு மலர்ந்து மணக்கும் நெய்தலிற் படிந்து அவற்றின் தேனை உண்டு, இரவு வந்துற்றதும், தாமரை மலரைத்தேடி அடைந்து, அதன் பொகுட்டினுள் அடங்கும் வளம் மிகுந்தது உன் நாடு" என அவன் நாட்டையும், அவன் நாட்டு வண்டையும் வாயாரப் புகழ்வாள்போல் அவன் ஒழுக்கக் கேட்டை, அவ்வண்டின்மீது ஏற்றிப் பழித்தாள்.

மனைவி, தன் நாட்டு வளத்தைப் பாராட்டியது" தன்னைப் பழிப்பதற்கே என்பதை அவன் உணர்ந்து கொண்டானாயினும், அதை உணராதான்போல், அவளை நோக்கி, "பெண்ணே! நான் வந்து உன் வாயிற்கண் நிற்கின்றேன்; என்னை வரவேற்பதை விடுத்து, இக் காலத்திற்கும், இவ்விடத்திற்கும் பொருந்தாத எதை எதையோ கூறுகின்றனையே; நீ என்ன பித்தேறினை யோ?" என்று வினவினான்.

பிழை புரிந்தவன் அவனாகவும், அதை மறைத்து விட்டு, அவன் பிழையை நாகரிகமாக எடுத்துக்காட்டும் நம்மைப் பழிக்கின்றனனே என எண்ணிச் சினந்தாள் அவன் மனைவி. சினம் மிகவே, அவன் பிழைகளை, இனி நாகரிகமாக எடுத்துக்கூறிப் பயன் இல்லை என உணர்ந் தாள்; அதனால், "ஐய! பித்தேறினவள் நான் மட்டும் அல்லேன்; அன்பு நெறியையும், அறநெறியையும் மறந்து மாண்பிலனான உன்னையும் பாராட்டிப் புகழ்கின் றனனே உன் பாணன், அவனும் பித்தேறியவன்; நஞ்சு, உண்டார் உயிரை அழிக்கும் என்பதை அறிந்தும், அதை உண்ணும் அறிவிலிபோல், உன்பால் உண்மை அன்பு இல்லை; உன் சொல்லில் உறுதி இல்லை என்பதை உணர்ந்தும், 'உன்னை அடையத் துடித்து நிற்கின்றார் களே பரத்தையர், அவர்களும பித்தேறியவர்; ஒருவன்

*ஒருத்தியொடு வாழ்வதே ஒழுக்க நெறியாகவும், முற்பகல் ஒருத்தி, நண்பகல் ஒருத்தி, பிற்பகல் ஒருத்தி எனத் திரிகின்ற நீயும் பித்தேறியவன்; உன் தேரைக்காணும் ஊரார், 'அதோ போகிறது பார், பரத்தையரை அகப்படுத்தும் பெரிய வலை' எனக் கூறி நகைக்கவும் நாணாது, பரத்தையரைத் தேரேற்றிக் கொணரும் தன் தொழிலை விடாது செய்கின்றனனே, உன் தேர்ப்பாகன், அவனும் பித்தேறியவன்" எனப் படபடக்கும் சொற்களால் அவன் ஒழுக்கக் கேட்டை எடுத்துக்காட்டி இடித்து உரைத்தாள்.*

"பொய்கைப்பூப் புதிதுஉண்ட வரிவண்டு, கழிப்பூத்த
நெய்தல்தாது அமர்ந்துஆடிப், பாசடைச் சேப்பினுள்
செய்துஇயற்றியதுபோல வயல்பூத்த தாமரை
மைதபு கிளர் கொட்டை மாண்மதிப் படர்தரூஉம்,
கொய்குழை அகைகாஞ்சித் துறைஅணி நல்ஊர!

அன்பிலன்; அறனிலன் எனப்படான் எனஏத்தி
நின்புகழ் பலபாடும் பாணனும் ஏமுற்ருன்;

நஞ்சு உயிர்செகுத்தலும் அறிந்து உண்டாங்கு, அளிஇன்மை
கண்டும் நின்மொழிதேறும் பெண்டிரும் ஏமுற்ருர்,

முன்பகல் தலைக்கூடி, நண்பகல் அவள்நீத்துப்,
பின்பகல் பிறர்த்தேரும் நெஞ்சமும் ஏமுற்ருய்;

என வாங்கு,
கிண்கிணி மணித்தாரோடு ஒலித்துஆர்ப்ப, ஒண்தொடிப்,
பேரமர்க் கண்ணோர்க்கும் படுவலைஇது, என
ஊரவர் உடன்நகத், திரிதரும்
தேர் ஏமுற்றன்று நின்னினும் பெரிதே."

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்கு வாயில் மறுக்கும் தலைவி கூறியது இது.

*2. தாது - தேன்; அமர்ந்து - விரும்பி; ஆடி - உண்டு; பாசடைச் சேப்பு - பசிய இலைகளைக் கொண்ட*

தான் தோன்றி எனும் கிழங்குவகை; 4. மை தபு-குற்றம் அற்ற: கிளர் - விளங்கும்; கொட்டை - தாமரைப் பொகுட்டு; 5. கொய்குழை - கொய்த தளிர்கள்; அகை - துளிர்க்கும்; 7. ஏமுற்றான் - பித்தேறினன்; 8. செகுத்தல்-அழித்தல், உண்டாங்கு-உண்டதுபோல்; 11. நெஞ்சமும் - நெஞ்சை உடைய நீயும்; 15. தேர் - ஈண்டுத் தேர்ப்பாகன்.

# 10

# ஊடலும் கூடலும்

மனையற மாண்புணர்ந்த ஒரு மருதநிலப் பெண், தன் மனம் விரும்பும் நெய்தல் நிலத்து இளைஞன் ஒருவனை மணந்து, அவனோடு கூடி இல்வாழ்க்கை மேற்கொண்டு இன்புற்று வாழ்ந்திருந்தாள். வந்த விருந்தினரை வரவேற்றுப் பேணுதல் இல்லறத்தார்க்குப் பேரறமாம்; தாம் பொய் உரையாதும், பொய்யுரைப்பாரைக் காணின் அஞ்சுவதும் அறங்களில் தலையாய அறமாம்; தன்னை மணந்த கணவன் துயர்க்குத்தான் காரணமாகாமை, மனையறத்தின் மங்கலமாம் எனக் கருதும் உயர்ந்த உள்ளம் உடையவள் அவள். அத்தகையாள், அறிவே உருவாய்வந்த தன் ஆருயிர்த் தோழி துணை செய்ய, இல்லற நெறியில் இம்மியளவும் பிழை நேராவாறு பெருவாழ்வு வாழ்ந்திருந்தாள்; இவ்வின்பச் சூழ்நிலையில், அவர்கள் வாழ்க்கையில் ஒரு சில ஆண்டுகள் கழிந்தன. அவர்களுக்கு ஓர் ஆண் மகனும் பிறந்தான்; தாம் பெற்ற அச்செல்வத்திற்குக் கணவன் அவன் தந்தை பெயரையே இட்டுப் போற்றி வளர்த்தான்.

இங்ஙிலையில், அவனுக்குப் பரத்தையர் தொடர்பு எவ்வாறோ உண்டாயிற்று; நாள் ஆகஆக, அவன் அவ்வொழுக்கத்தில் ஆழ்ந்து போனான்; நாள்தோறும் ஒரு புதுப் பரத்தையை மணந்து மகிழ்ந்து வாழத் தொடங்கினான். கணவன், இவ்வாறு தன்னையும், தன் மகனையும், தங்கள் மனையறத்தையும் மறந்து திரியவும், அவள் அவன்மீது சினம் கொண்டாளல்லள்; பரத்தை வீடு சென்று வாழ்பவன், இடையிடையே, ஒரு திங்களுக்கு ஒருமுறை, பல திங்களுக்கு ஒருமுறை எனத் தன் மனைக்கு வருவன்; அவ்வாறு வருவானை அவள் ஏதும் கூறுவது இல்லை; மாறாக மகிழ்ந்து வரவேற்று வழிபடுவள்.

இதைக் கண்டாள் அவள் தோழி; அவளுக்கு அவன் செயலின் கொடுமை புலப்பட்டது; 'அவன் இத்துணைக் கொடியனாகவும், இவள் அவனை வெறுத்திலளே, என்னே இவள் மடமை!' என எண்ணி வருந்தினாள்; வருந்தியதோடு நில்லாது,'' அவ்வாறு வாய்மூடிக் கிடப்பது உன் வாழ்வைக் கெடுக்கும்; அவன் கொடுமையைக் காட்டி அவனை மறுத்தல் வேண்டும்; அவன் ஒழுக்கக்கேட்டை, அவனுக்கு வேண்டியவர்பால் உரைத்தல் வேண்டும்'' என உணர்த்தினாள்; கணவன் செய்யும் தவறுகளை அவன் தாய் தந்தையர்க்கு அறிவிப்பதில் இழுக்கில்லை; அது அவள் கடமையுமாகும்; இயற்கையோடியைந்த இனிய அறநெறியுமாம் என்பதை அவளுக்கு அறிவிக்க விரும்பிய தோழி, "பெண்ணே! உன் கணவனுக்குரிய நெய்தல்நில நாட்டில் வாழும் ஆடும் பருவத்து இளமகளிர், வயலில் மலர்ந்து கிடக்கும் நெய்தலையும், ஆம்பலையும் பறிக்கும் ஆர்வத்தால், ஆரவாரம் செய்துகொண்டே, ஒருவரை ஒருவர் முந்த ஓடுவாராக, அவ்வயலை அடுத்த உப்பங்கழிகளில்

ஆரல்மீனைத் தேடித் திரிந்துகொண்டிருக்கும் நாரைகள், அம்மகளிர் ஓடும்பொழுது எழும் ஆரவாரப் பேரொலி கேட்டு அஞ்சி, தம் தொழிலை மறந்து, அம்மகளிர் எளிதில் ஏறித் துயர்செய்ய மாட்டா மரங்களின் உயர்ந்த கிளைகளில் சென்று அமர்ந்து, அம்மகளிர் செய்த கொடுமையை, அம்மகளிரின் பெற்றோர்க்கு அறிவிப்பனபோல், உரத்த குரல் எடுத்து, ஓயாது கூவும் நிகழ்ச்சியை நினைப் பூட்டி, "பெண்ணே! நாரைகளுக்குக் கேடு செய்யவேண்டும் எனும் மனக்கருத்து இன்றி, அம்மகளிர், அறியாது செய்த கொடுமையையும், நாரைகள் எடுத்துக் கூறு கின்றன; ஆனால் நீயோ, உன் கணவன், பல கொடுமைகளை அறிந்தே செய்யவும் வாய்மூடிக் கிடக்கின்றனையே; என்னே உன் அறியாமை!" எனக் கூறாமல் கூறிக் கண்டித்தாள்.

தோழி கூறியன கேட்டாள் அப்பெண்; தன் தோழியின் அருகில் அமர்ந்தாள்; "தோழி! நானும் ஒரு பெண்தான்; கணவனைப் பரத்தை வீடு செல்லவிடுத்துக் கலங்காதிருக்கும் கல்மனம் உடையேனல்லன் நான்; அவன் கொடுமை கண்டு நானும் கலங்குகிறேன். அவன், பரத்தையர் சேரி சென்று, ஆங்குள்ள இளமகளிர் பலரோடு தொடர்புகொண்டு, அவர் நலத்தைக் கெடுத்து, அவர்பால் தான்பெற்ற புணர்ச்சிக் குறிகளோடு வரும் அவனைக் கண்டு அழுது அழுது, கண்ணீர்விட்ட நாட்கள் கணக்கில; ஆயினும் தோழி! அவனை வெறுத்து ஒதுக்க முடியவில்லையே! என் இல்வாழ்க்கை குறுக்கிடுகிறதே! என் செய்வேன்? ஒருநாள் பரத்தையர் சேரியினின்றும் நம் வீட்டிற்கு வந்தான்; வந்தவனை, வாயிற்கண் நிறுத்தி வைத்து, "இவ்வாறு, மணமகன்போல் கோலம்கொண்டு மகளிர்பின் திரியும் உன்பால் மீக்கட்டன்மை சிறிதும் இல்லையோ? இவ்வாறு திரியும் உன்

உள்ளக் கருத்துத்தான் யாதோ?' என்று கூறி வெகுண்டேன்; பின்னர் வந்தான்பால் வாய்திறந்து ஏதுவும் பேசாது உள்ளே வந்துவிட்டேன்; ஆனால் என்ன செய்வேன்? வந்தவன் தனித்து வந்திலன்; விருந்தினர் சிலரையும் தேரேற்றிக்கொண்டு வந்திருந்தான்; அவர்களைப் பார்த்துவிட்டேன்; கடமை கண்முன் நின்றது; என் ஊடலுணர்வு எங்கோ சென்று மறைந்தது; விருந்தினர்முன், அவனைக் கண்டித்ததற்கு மனம் நொந்தேன்; அவரை வரவேற்க அவன் துணை வேண்டினேன்; அவன் கொடுமை மறந்து அவனோடு குலாவினேன்''

''மற்றொரு நாள் அவன் வந்தான்; அவன் மாலை வாடியிருப்பதைக் கண்டு, 'இவ்வாறு பரத்தையர் பின் திரிந்து, அவரால் உன் பேரழகு சிதையவந்து எனமுன் நிற்காதே' என்று ஊடினேன். என் கோபம் கண்டு கலங்கிய அவன், என் கோபத்தைத் தணிக்க வேண்டி, பரத்தைமகளிர் எவரையும் நான் இதுகாறும் பார்த்ததும் இல்லை' எனத் துணிந்து ஒரு பொய் கூறினன்; பொய் கூறியதோடு நில்லாது, அதை உறுதி செய்ய ஆணையும் வைத்தான்; தோழி! அவன் கூறியது பொய் என்பதை அறிவேன்; பொய், பொல்லாங்கு தருவது; அதுவே ஒருவர் வாழ்வைப் பாழாக்கும்; அப்பொய் உரைப்பதற்கு மேலும், பொய்ச்சூளும் கூறின், கூறுவார் வாழ்வரோ? தோழி! நான் ஊடியதால் அன்றோ, அவன், இவ்வாறு பொய்யும் பொய்ச்சூளும் கூறினன்; என்றால், அவன் பொய்ச்சூள் உரைத்துப் பொல்லாங்கு அடைதல் பொருந்துமோ? அது, அவனையும், அவனோடு தொடர்பு கொண்ட என்னையும் அழித்துவிடுமே எனும் அச்சம், என் உள்ளத்தில் எழ, அவன்மீது கொண்ட கோபம் என்னைவிட்டு அகன்றது; ஊடலைக் கைவிட்டேன்; உவந்து ஏற்றுக் கொண்டேன்.''

"தோழி! ஒருநாள் இரவு அவன் வந்து சேர்ந்தான்; 'பகற்காலமெல்லாம் பரத்தையர்பின் திரிந்துவிட்டு, இப்பொழுது ஏன் இங்கு வந்தாய்?' என இடித்துக்கூறி வெறுத்து, அவனோடு மேலும் வாய்திறவாது வந்து விட்டேன்; என் ஊடல்கண்டு உள்ளம் நொந்த அவன், உடனே என் அருகில் ஆடிக்கொண்டிருந்த தன் மகனை எடுத்துக்கொண்டு சென்றான்; அவனைத் தன் மார்பில் அணைத்தவாறே படுத்துக்கொண்டான்; ஆனால் உறக்கம் கொண்டிலன்; பொய்யாக உறங்குவான்போல் கண்மூடி வருந்திக்கிடந்தான்; அந்நிலையில் அவன் வருந்திக்கிடப்பதைக் கண்டு கலங்காதிருக்க முடியவில்லை என்னால்; கலங்கினேன்; மேலும் மகன்முன் நாங்கள் மாறுபட்டிருப்பது, அம்மகனின் இளம்தூய உள்ளத்தைப் பாழ்படுத்துமே எனும் நினைவும் எழுந்தது; அவன் கொடுமையை மறந்தேன்; அவனை ஏற்றுக்கொண்டேன்."

"தோழி! இவ்வாறு, விருந்தோம்பும் இல்லறக் கடமையும், பொய்ச்சூள் பெருங்கேடாம் என அறமல்லன கண்டு அஞ்சும் அச்சமும், மகனைத் தழுவிக்கிடக்கும் மாண்பும் அவனை ஏற்றுக்கொள்ளச் செய்துவிடுகின்றன; அதனால் அவனை ஏற்றுக்கொள்கிறேன்; கொடுமை புரியினும், இல்லறக் கடமை கருதி, அவனை ஏற்றுக் கொள்ளும் நான்' அவன் பரத்தைமைக் கொடுமைகண்டு கலங்காதிருக்கவில்லை; கலங்கி, நாள்தோறும் கண்ணீர் விடுகிறேன்; ஆயினும் கடமை கருதி அவனை வெறுத்திலேன்" என்று கூறித், தன் மனையற மாண்பையும், மனத்துயர்க் கொடுமையும் ஒருங்கே புலப்படுத்தினாள்; வாழ்க அவள் உள்ளம்!

"நீரார் செறுவில் நெய்தலொடு நீடிய
நேர்இதழ் ஆம்பல் நிரைஇதழ் கொண்மார்,

சீரார் சேயிழை ஒலிப்ப ஓடும்
ஓரைமகளிர் ஓதை வெரீஇ எழுந்து,
ஆரல்ஆர்கை அம்சிறைத் தொழுதி
உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி,
அமர்க்கண் மகளிர் அலப்பிய அந்நோய்,
தமர்க்கு உரைப்பனபோல் பல்குரல் பயிற்றும்
உயர்ந்த போரின் ஒலிநல் ஊரன்,
புதுவோர்ப் புணர்தல் வெய்யன் ஆயின்,
வதுவை நாளால் வைகலும்; அஃதுயான்
நோவேன் தோழி! நோவாய்நீ என
எற்பார்த்து உறுவோய் கேள்இனித் தெற்றென,

'எல்லினை வருதி; எவன்குறித்தனை ?' எனச்,
சொல்லாதிருப்பேனாயின், ஒல்லென
விரிஉளைக் கலிமான் தேரொடுவந்த
விருந்து எதிர்கோடலின் மறப்பல் என்றும்;

'வாடிய பூவொடுவாரல் எம்மனை' என
ஊடி இருப்பேனாயின், நீடாது,
அச்சுஆறுக உணரிய வருபவன்
பொய்ச்சூள் அஞ்சிப் புலவேன் ஆகுவல்;

'பகல்ஆண்டு அல்கினை பரத்த!' என்றுயான்,
இகலி இருப்பேனாயின், தான்தன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வன் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்.

ஆங்க,
விருந்து எதிர்கொள்ளவும், பொய்ச்சூள் அஞ்சவும்,
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கு அவிந்து ஒழியும் என்புலவி; தாங்காது
அவ்வவ் இடந்தான் அவைஅவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி! கடன் நமக்கு எனவே."

'ப்ரத்தையிற் பிரிந்துவந்த தலைவனை விடாதே ஏற்றுக்கொள் கின்றாய்; அதை நான் பொறேன்' எனத் தோழி கூறத், தலைவி அதற்குக் காரணம் கூறியது இது.

*1. ஆர் - நிறைந்த; செறு - வயல்; 2. கொண்மார் - கொண்டுவருதற்பொருட்டு; 3. இழை - ஈண்டுச் சிலம்பு; 4. ஓரைமகளிர் - விளையாட்டுப் பெண்கள்; ஓதை - ஆரவாரம்; வெரீஇ - அஞ்சி; 5. ஆர்கை - உண்ணும் தொழில் மேற்கொண்ட; அம்சிறைத் தொழுதி - அழகிய இறகுகளை உடைய நாரைக்கூட்டம்; 6. பொங்கர் - சோலை; 7. அலப்பிய - அலைத்த: 10. வெய்யன் - விருப்பம் உடையன்; 11. வதுவைநாள் - திருமணநாள்; நாள்தோறும் திருமணநாளே ஆயினன் என்க: 13. உறுவோய் - துன்புறுவோய்; 14. எல்லினை - அழகாகக் கோலங்கொண்டுள்ளாய்; எவன் - என்ன; என - என்றுகூறி கண்டித்து: 16. கலிமான் - ஊக்கமிக்கு ஓடும் குதிரை; 20. அச்சுஆறுக - நான்கொள்ளும் அச்சமே, ஊடல்தீர்க்கும் வழியாக; உணரிய - உணர்த்துதற்கு; 22. அல்கினை - தங்கினை; பரந்த - பரத்தைமை உடையாய்; 23. இகலி - ஊடி; 24. தன்முதல்வன் - தன்தந்தை; முறையுளி - முறைப்படி; 28. முயங்க அணைத்துக்கொள்ள; 29. அவிந்து - அழிந்து.*

# 11

# செயற்பாலது என்கொலோ!

மருதநிலத்து இளம்பெண்கள் பலர், தம் நிலத்தை அடுத்திருந்த நெய்தல் நிலத்துக் கடற்கரைக்குச் சென்று, விளையாடி மகிழும் வழக்கம் மேற்கொண்டிருந்தனர்; அவ்வாறு செல்வாருள் அவ்வூர்த் தலைவன் மகளும் ஒருத்தி; ஒருநாள், தன் தோழியரோடு ஆங்கு ஆடச்சென்றவள், அத்தோழியர் தாம் தாம் விரும்பும் ஒவ்வொரு ஆடலை விரும்பி, அங்கங்கே, தங்கிவிட்டனராக, அவள்மட்டும் பாவை பண்ணும் கருத்துடையவளாய், தனியே சென்று, கடல்நீர் வந்து பாயும் கழியை அடைந்து, அங்கு வளர்ந்திருக்கும் தண்டாங்கோரையைப் பறித்துக்கொண்டிருந்தாள். நீண்டநேரம் நின்று பறித்தாள்; அவள் கைவிரல்களும் சிவந்துவிட்டன; ஆயினும், பாவை பண்ணுவதற்கு வேண்டுமளவு பறிக்க முடியவில்லை; அவளும் சோர்ந்துபோனாள்; அந்நிலையில் ஆங்கு வந்தான் ஓர் அழகிய இளைஞன்; அவன் அவளைக் கண்டான்; அவள் கைவிரல் சிவந்திருப்பதைப் பார்த்தான்; உடனே கழியில் இறங்கி, கணப்பொழுதில்

அவளுக்கு வேண்டும் கோரைகளைப் பறித்துத்தந்தான். அவன் செய்த நல்லதுணைக்கு நன்றிதெரிவிக்கும் கருத்தோடு அவனைத் தலைநிமிர்ந்து நோக்கினாள்; அவன் பேரழகைக் கண்டாள் காதல் கொண்டாள்; அவன் நிலையும் அஃதே.

மற்றொருநாள், அவளும் அவள் தோழியரும் மலர் பறிக்கச்சென்றனர்; கோட்டு பூ, கொடிப்பூ முதலிய மலர்களைப் பறித்தனர்; அல்லி தாமரை முதலாம் நீர்ப் பூக்களைப் பறிக்க விரும்பினர்! ஆனால், அப்பூக்கள் ஆழமான இடத்தில் மலர்ந்திருக்கக் கண்டு அஞ்சிக் கரையேறினர்; அவ்வூர்த்தலைவன் மகளைக்கண்டு காதல் கொண்ட அந்நாள் முதலாக, அம்மகளிரைப் பின் தொடர்ந்து திரியும் அவ்விளைஞன், அதைக்கண்டான்; உடனே நீரில் இறங்கினான்; நீந்திச்சென்று, அம்மலர்களைப் பறித்துக்கொடுத்தான். வேறு ஒருநாள், அப்பெண் தனித்து ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள்; அவள் அருகில் தொய்யிற்குழம்பும் அதுதீட்டும் கோலும் இருந்தன; அந்நிலையில், ஆங்கு வந்த அவன், அவளையும், அவள் அருகிற் கிடக்கும் தொய்யிற் குழம்பையும் கண்டான்; அவள் தோள், தொய்யில் எழுதப்பெறாமல் வறிதே இருப்பதையும் அறிந்தான்; உடனே, அவள் அருகில் அமர்ந்தான்; அவள் முன்கையைப்பற்றி, அவள் தோளில் கரும்புபோலும் ஓவியங்களைத்தீட்டி மகிழ்ந்தான்; இவ்வாறு வளர்ந்தது அவர் காதல்.

அவர் காதலை, அவ்வூர்வாழும் சிலர் அறிந்தனர்; அவருள்ளும் சிலர், ஊர்வம்பு பேசுவதையே வழக்கமாகக் கொண்டவர்; அது பேசாதிருந்தால், அவருக்குப் பொழுதே போகாது; அவர் இயல்பு அறிந்த அவ்வூரினர், அவர்களைப் பொருட்படுத்துவதுமில்லை; அவர்

களுக்குத் தெரிந்துவிட்டது இவர்கள் காதல்; அவர்கள் அதைக் கூட்டியும் குறைத்தும், அழித்தும், பழித்தும் பலவாறு கூறித் தூற்றத்தொடங்கினர்.

அவர்கள் கூறும் அப்பழி உரையை, அப்பெண்ணின் உயிர்த்தோழி கேட்டாள்; அவர்கள் காதலை அவளும் குறிப்பால் அறிந்திருந்தாள். நாள்தோறும், அவளும் தானும் பிறதோழியரும் ஒன்றுகூடி ஆடும் இடந்தோறும் அவர்களை விடாது, இளைஞன் ஒருவன் தொடர்ந்து வருவதையும், வந்து அவர்கள் ஆட்டத்தைப்பார்த்திருப்பவன், ஆட்டத்தில் அப்பெண்ணின் அணியும் ஆடையும் நிலைபிறழக் கண்டு, அவற்றை ஒழுங்குசெய்து விட்டதையும், அம்மகளிர் புனலாடுங்கால், அவர்க்கு அப்புனலாற் கேடு ஏதும் நேராவாறு, அவ்விடத்தைச்சுற்றிச் சுற்றிவந்து காவல் புரிந்ததையும், அப்பெண் விரும்பும் தொய்யில் எழுதியும், மகளிர் மணல்வீடுகட்டி விளையாடப்புகுங்கால், அவர்க்குத்துணையாய், அவர் விடும் குற்றேவல்களை விரும்பிச்செய்தும் அவர் நட்பைப்பெற விரும்பியதையும், அது எளிதில் கிடைக்கப் பெறுமையால் பெரிதும் வருந்திச்சென்றதையும் அவள் அறிந்திருந்தாள்; அதனல், அவனுக்கும் அவளுக்குமிடையே காதல் தோன்றி வளர்கிறது என்பதை அறிந்திருந்தாளாயினும், அப்பெண், அது குறித்து எதுவும் கூறுமையால், அவளும், அவனை ஏதும் கேட்டிலள்.

ஆனல், இப்பொழுது நிலைமை வேருயிற்று; அவர் காதலை ஊரார் உணர்ந்து கொண்டனர்; ஊரில் அலர் எழுந்து விட்டது; இனியும் அவ்வாறே விட்டால், அதனல், அவர்க்கு ஏதேனும் ஏதம் உண்டாயின் என்னுவது, என எண்ணிக் கலங்கினள். உண்மையறிந்து உற்றதுணை புரிய விரும்பினள்; உடனே,

தனித்திருக்கும் அப்பெண்ணின்பால் சென்று "தோழி! நாள்தோறும், நாம் ஆடும் இடத்திற்குத் தவருது வந்து போகும் அவ்விளைஞனையும், உன்னையும் தொடர்பு படுத்தி, இவ்வூரார் ஏதேதோ கூறுகின்றனர்; அவர் கூறுவதில் ஏதேனும் உண்மை உளதோ? அவர் கூறுவதுபோல், நீ அவனேடு உறவுகொண்டிருப்பது உண்மைதானே?" என்று கேட்டாள்.

அப்பெண், தன் காதல் ஒழுக்கத்தைத் தோழிக்குத் தானே உணர்த்த விரும்பினுள்; ஆனல், நாணம் தடுத்தமையால் உணர்த்திலள்; இப்பொழுது அத்தோழி, தானே அறிந்து வினவுகிருள்; உண்மையை ஒப்புக்கொள் என்றது அவள் உள்ளம்; ஆனல் அவள் பெண்மை. அதை ஒப்புக்கொள்ளத் தயங்கிற்று. அதனல், தோழியை நோக்கித், "தோழி! ஒருநாள், அவ்விளைஞன், பஞ்சாய்க்கோரை பறித்துத் தந்தான்; மற்ருருநாள், மலர் பறித்துக் கொடுத்தான்; பிறிதொரு நாள், என் தோளில் தொய்யில் வரைந்தான்; அவன் செய்தன இவ்வளவே; இதை வைத்துக்கொண்டு, இவ்வூரில் வாழும் வாயாடிப் பெண்கள் சிலர், வம்பு பேசுகின்றனர்; என்னேடு பழகி, என் இயல்பு அறிந்தநீ, அவர் கூறுவதில் உண்மையில்லை என்பதை உணர்ந்து, அவரைக் கடிவதை விடுத்து, என்பால் வந்து, அதில் உண்மை யிருப்பதுபோல் வினவுகின்றனே; தோழியர் பலர், என்னை இடைவிடாது சூழ்ந்திருந்து காவல்புரிகின்றனர்; அதை நீ அறிவாய்; அவர்கள் காவலும் பயனற்றதாகிவிட்டது எனக் கருதி என்னை வந்து வினவுகின்ருய்; உன்னை என்னென்பது?" என்று கூறி மறுத்தாள்.

நாணும், பெண்மையும் தடைசெய்ய, இவ்வாறு மறுத்துரைத் தாளேனும், அத்தோழியின் துணைபெற்ரு

லன்றித் தன் காதல் நிறைவேறாது என்பதை உணர்ந்து, அதை ஒப்புக்கொள்ள உறுதி கொண்டாள், அதனுள்; தோழியை நோக்கி, "தோழி! இனி, நான் எதைக் கூறினும், இவ்வூரார் அதை ஏற்றுக்கொள்ளார். ஆகவே, என் திருமணக் காலத்தில், இவ்வூரார் ஒன்று கூடி, அன்று எதைச் செய்ய விரும்புகின்றனரோ, அதை, இன்றே செய்து முடிக்கட்டும்; அவ்வாறு செய்யும் இவ்வூரார்க்கு, நாம் செய்யக் கூடியது என்ன?" அதை நீ ஆராய்ந்து கூறு" என வல்லமையாய்க் கூறித், தன் காதல் ஒழுக்கத்தை ஒருவாறு ஒப்புக்கொண்டு உண்மை உரைத்தாள்.

"புனைஇழை நோக்கியும், புனல்ஆடப் புறம்சூழ்ந்தும்,
அணிவரி தைஇயும், நம்இல்வந்து வணங்கியும்,
நினையுபு வருந்தும் இந்நெடுந்தகை திறத்து,'இவ்வூர்,
இனையள்என்று எடுத்துஓதற்கு அனையையோ நீ! என
வினவுதி ஆயின், விளங்கிழாய்! கேள்இனி;

செவ்விரல் சிவப்புஊரச், சேட்சென்றாய் என்று அவன்,
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந்தனைத்தற்கோ,
கௌவைநோய் உற்றவர், காணாது கடுத்தசொல்
ஒவ்வா என்று உணராய்நீ, ஒருநிலையே உரைத்ததை!

ஒடுங்கி யாம்புகல் ஒல்லேம் பெயர்தர அவன் கண்டு
நெடும் கயமலர் வாங்கி நெறித்துத் தந்தனைத்தற்கோ,
விடுத்தவர் விரகுஇன்றி எடுத்தசொல் பொய்யாகக்
கடிந்ததும் இலையாய் நீ கழறிய வந்ததை

வரிதுஏற்றாய்நீ என வணங்குஇறை அவன்பற்றித்
தெரிவேய்த்தோள் கரும்புஎழுதித் தொய்யில் செய்தனைத்
புரிபு நம்ஆயத்தார் பொய்யாக, எடுத்தசொல் [தற்கோ
உரிதுஎன, உணராய்நீ உலமந்தாய் போன்றதை?

என வாங்கு,

அரிதுஇனி, ஆய்இழாய்! அதுதேற்றல்; புரிபுஒருங்கு
அன்றுநம் வதுவையுள் நமர்செய்வது இன்று ஈங்கே

தான் நயந்து இருந்தது இவ்வூராயின், என்கொலோ
நாம் செயற்பாலது இனி ?''

தலைவி, தோழிக்கு அறத்தொடு நின்றது இது. திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே'' (தொல் - பொருள்; 128;) என்னும் விதியால், மருதத்தில் குறிஞ்சி வந்தது.

*1. நோக்கியும் - திருத்தியும்; 2. வரி-தொய்யில்; இல் - மணல்வீடு; 3. நினையுபு - காதலை நினைந்து; 4. இனையள் - இன்ன உறவு உடையள்; அனையையோ- அவ்வியல்பு உடையையோ; 6. சேட் சென்றாய்; நெடும் பொழுது நின்றாய்; 7. பௌவம் - கடல்; சாய்-தண்டான் கோரை; கொழுதி - பறித்துக்கோதி; 8. கௌவை நோய் உற்றவர் - அலர்உரைக்கும்நோயுடையவர்; காணாது - பொருந்தாது என்று உணராது; 9. ஒருநிலையே-அவர்கள் கருதியவாறே; 10. ஒடுங்கி - அஞ்சி; 12. விடுத்தவர் - ஊரரால் வெறுத்துவிடப்பட்டவர்; விரகு - அறிவு; 13. கழறிய - கோபித்தற்கு; 14. இறை - முன்கை; 15. தெரிவேய் - ஆராய்ந்த அழகிய மூங்கில் போலும்; 16. புரிபு - காவல்புரியும்; 17. உணராய் உரிது என மாற்றுக - உணராது, அதுஒக்கும் எனப் பொருள் கொள்க. உலமந்தாய் - வருந்தினாய்; 49. புரிபுஒருங்கு - ஒருங்கே விரும்பி.*

# 12

# உடன்வாழ் பகை

கணவன், காதலித்து மணந்த தன்னை மறந்து, பரத்தைவீடு சென்று வாழ்கிறான் எனும் கவலையால் கலங்கினாள் ஒரு பெண்; அவன் அன்பைப் பெற மாட்டாத தனக்கு அழகும் வேண்டுமோ என எண்ணினாள்; அதனால், அவன் பிரிந்த பின்னர், மயிரை மாசுபோக, எண்ணெய் இட்டு நீராட்டி, அழகாக வாரி மணம் நாறும் மலர்சூட்டி மகிழவேண்டும் எனும் நினைவற்றுப் போனாள்; உறக்கத்தை மறந்தாள்; கணவன் வருகையை, எதிர்நோக்கி இரவு பகலாகக் காத்திருந்தாள்; அதனால், பண்டு மலர்போலும் அழகுடையவாய் விளங்கிய அவள் கண்கள், தம் நீல நிறத்தை இழந்து, பொன்னிறப் பசலை பெற்று ஒளி இழந்தன; மாவின் இளந்தளிர்மீது, மகரந்தப் பொடி உதிர்ந்து கிடப்பதுபோல் மாமையும், சுணங்கும்பெற்றுப் பேரழகுடைய அவள் மேனி, அவ்வழகு கெட்டுத் தளர்ந்தது.

அந்நிலையுற்றும், அவள் ஒருவாறு உயிர்தாங்கி யிருந்தாள்; ஆனால், அந்தோ! அவ்வூரார் அவளை வாளா விடவில்லை. அவர்கள், அவளைக் காணும் போதெல்லாம், "அதோ போகும் அவள், பரத்தை வீடு சென்று வாழும் அக்கொடியோன் மனைவி" எனச் சுட்டிக் கூறத் தொடங்கினர். அப்பழிச் சொல்லைப் பலமுறை கேட்டு வருந்தினாள். அதைக் கேட்டு வருந்தி வாழ்வதினும், உயிர்விட்டு அழிதல் நன்று என நினைத்தது அவள் நல்ல உள்ளம்; அம்மட்டோ! கணவனால் முதலில் காதலிக்கப் பெற்றுப், பின்னர்க் கைவிடப் பெற்ற பரத்தையர், அவள்பால் வந்து, அவள் கணவன் செய்யும் கொடுமைகளைக் கூறிக் கண்ணீர் விட்டனர்; "கணவன் என்னை அழ விடுவதோடு அமையாது, ஊர்ப்பெண்களையும் அழவிடுகின்றனனே; அவர்கள் சிந்தை நொந்து சிந்தும் கண்ணீரால், அவனுக்கும், அவனோடு உறவு கொண்ட எனக்கும் என்னென்ன கேடுகள் வந்துவாய்க்குமோ" என எண்ணிக் கலங்கினாள். அவள் கவலையின் எல்லை அத்துடன் முடிவுற்றிலது. கணவன், அவன் விரும்பும் அழகிகளைத் தேர்ந்து தந்து துணைபுரியும் பாணனும், அறியாத பரத்தை வீடுசென்று வாழ, அப்பாணன், அவனைத்தான் அறிந்த இடங்களில் தேடியும் காணமையால் கலங்கி, இறுதியில், அவன் அவன் வீட்டிற்குச் சென்றிருப்பான் எனும் நினைவால் அங்கு வந்து, அங்கு வருந்தி யிருக்கும் அவள்பால், 'அம்மையே! அவன் எங்கே? அவன் சென்ற இடம் எது?" என்று கேட்டுச் சென்றான். காணவும் வெறுக்கும் அப்பாணன், தன் மனைக்கே வந்து, தன் கணவன் சென்ற பரத்தை வீடு எது எனத் தன்னையே கேட்பதைக் கண்டு கலங்கிக் கண்ணீர்விட்டுக் கிடந்தாள். கணவன் பிரிவால் உண்டான வருத்தத்தோடு, ஊரார் உரைக்கும் பழிச்சொல், அவன் பரத்தையர் உரைக்கும்

கொடுமை, பாணன் வருகை ஆகியவற்றால் உண்டாம் வருத்தமும் ஒன்றுகூடி அவளைப் பெரிதும் வருத்தின. அவ்வாறு வருந்தியிருப்பாள்முன், ஒருநாள், அவள் கணவன் வந்து நின்றான்; வந்துவாளா இராது, "பெண்ணே! என் பிரிவால் நீ பெரிதும் வருந்தினை போலும்? கவலையால் உன் மேனி அழகு இழந்து விட்டதே! உன் கண்கள் ஒளிஇழந்து விட்டனவே! உறக்கத்தை மறந்தாயோ? கூந்தலை மாசறக் கழுவி மலர் சூட்ட வேண்டும் என்பதையும் மறந்தனையோ?" என்று கேட்கத் தொடங்கினான்.

கணவனைக் காணவும் வெறுத்த அவள், அவன் கேட்கும் கேள்விகளைக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்டாள். "அன்ப! நீவரும் வழியில் உள்ள தாமரைப் பொய் கையில், நன்குபருத்து, மலரும் பருவம் பெற்று விளங் கும் இரண்டு அரும்புகளுக்கிடையே, ஒரு தனி மலர் ஓங்கி மலர்ந்து நிற்க, கரைவளர் மரத்தில் வாழும் பறவை ஒன்று தாழப் பறந்து, அதை அலைக்க, அதனால், அம்மலர், சிறிதே வளைந்து தாழ, அதே நிலையில் அம் மலரின் அகத்தே படிந்திருந்த பனிநீர் தெறித்து, அவ் வரும்புகள்மீது விழும் காட்சியைக் கண்டுவந்த உன் கருத்தில், எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லையோ? அக்காட்சி, கணவன் பரத்தையர்பின் சென்றுவிட்டா னாக, சிந்தும் கண்ணீர் கொங்கையில் வீழ்ந்து சிதறக் கலங்கி நிற்கும் அவன் மனைவியின் துயர்நிலையை நினைப் பூட்டவில்லையோ?" என்று கேட்டுச் சினந்தாள்.

பின்னர், "அன்ப! நீ என்னைப் பிரியாதிருக்க வேண்டும்; நான், இழந்த என் நலனை மீண்டும் பெற வேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லை; ஊரார் உரைக் கும் பழி ஒழிந்தால் போதும் என்றே எண்ணுகிறேன்; என் கண்கள், கவலையற்று உறங்க வேண்டும்; அதற்கு,

நீ என்னை அகலாதிருத்தல் வேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லை ; பரத்தையர் என்பால் வந்து, உன்னைப் பற்றிக் குறைகூறுதல் ஒழிந்தால் போதும் என்றே ஆசைப்படுகிறேன்; அன்ப! கூந்தலை வாரிமுடித்து, மலர்சூட்டி மகிழ நான் விரும்பவில்லை ; உன்னைத் தேடி, பாணன் என் வீட்டிற்கு வாராதிருத்தல் வேண்டும் என்றே விரும்புகிறது என் உள்ளம்'' என்று கூறிப் புலந்தாள்.

அவள் அவ்வாறு கூறிப் புலந்தாளேனும், அவள் நெஞ்சு, அவனை ஏற்றுக்கொள்ளத் துடித்தது. நெஞ்சின் துடிப்பையும், அதை அடக்கி ஆளுதல் தன்னால் ஆகாது என்பதையும் அறிந்தாள்; அதனால் அதுகாறும் ஊடியிருந்து அவனுக்கு வாயில்விட மறுத்தவள், அவனை நோக்கி, "அன்ப! பரத்தை வீடு சென்று பழிகொண்டு நிற்கும் உன்னைக் கண்டும், எனக்குத் துணையாய் என்பால் தங்குவதை விடுத்து, உன்பால் வந்து உன் ஏவல் வழி நிற்கத் துடிப்பதோடு, என்னையும் உன் வயத்தளாக்க வற்புறுத்துகிறது என் நெஞ்சம்; ஐய! என்னுடன் வாழ்ந்தும், எனக்கே பகையாகும் இந்நெஞ்சைத் துணையெனக் கொண்ட என்னால், உன்பால் காதல் கொள்ளப் பண்டு தூண்டிய உன் மார்பைத் தழுவேன் எனக் கூறிப் புலத்தலும், புலந்த அந்நிலையிலேயே நிற்றலும் இயலுமோ?'' என்று கூறி, அவனை ஏற்று இன்புற்றாள்.

"இணைஇரண்டு இயைந்து ஒத்தமுகை நாப்பண், பிறிது
துணைஇன்றித், தளைவிட்ட தாமரைத் தனிமலர், [யாதும்
திருமுகம் இறைஞ்சினள், வீழ்பவற்கு இனைபவள்
அரிமதர் மழைக்கண்ணீர், அலர்முலைமேல் தெறிப்பபோல்
தகைமலர்ப் பழனத்த புள்ஒற்ற ஒசிந்துஒல்கி
மிகநனி சேர்ந்த அம்முகைமிசை, அம்மலர்
அகஇதழ்த் தண்பனி உறைத்தரும் ஊர!கேள் :

தண்தளிர்த்தகை பூத்த,தாதுஎழில் நலம்செலக்
கொண்டுநீ மாறிய கவின்பெறல் வேண்டேன்மன்
உண்டாதல்சாலா என்உயிர் சாதல் உணர்ந்துநின்
பெண்டு எனப் பிறர்கூறும் பழிமாறப்பெறு கற்பின் ,

பொன்எனப் பசந்தகண் , போதுஎழில் நலம்செலத்;
தொன்நலம் இழந்தகண் துயில்பெறல் வேண்டேன்மன் ;
நின்அணங்குற்றவர் நீசெய்யும் கொடுமைகள்
என்னுழை வந்துநொந்து உரையாமல் பெறுகற்பின் ;

மாசற மண்ணுற்ற மணிஏசும் இருங்கூந்தல்
வீசேர்ந்து வண்டுஆர்க்கும் கவின்பெறல் வேண்டேன்மன்;
நோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாணன் எம்மனை
நீசேர்ந்த இல்வினாய் வாராமல் பெறுகற்பின்,

ஆங்க,
கடைஇய நின்மார்பு தோயலம் என்னும்
இடையும், நிறையும் எளிதோ ? நிற்காணின்,
கடவுபு, கைத்தங்கா நெஞ்சு என்னும், தம்மோடு
உடன்வாழ்பகை உடையார்க்கு''.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனோடு ஊடிய தலைவி, ஊடல் தீர்ந்து கூறியது இது.

*1. முகை - அரும்பு ; நாப்பண் - நடுவே; 2. தளை விட்ட - மலர்ந்த; 3. இறைஞ்சினள் - கவிழ்ந்து; வீழ்பவர்க்கு - விரும்பிய கணவனுக்காக; இனைபவள்-வருந்துபவள்; 4. அரி - செங்கோடுகள் படர்ந்த; 5. தகை - அழகுடைய; புள்ஒற்ற - பறவை தாக்க; 7. உறைத்தரும்- துளிர்க்கும் : 8. தகைபூத்த - அழகைப்பெற்ற; செல - அழிய ; 10. சாலா - அமையாத: 11. பெறுகற்பின் - பெற்றால் ; 14. நின் - உன்னால்; அணங்குற்றவர் - வருந்திய பரத்தையர் ; 16. மண்ணுற்ற - கழுவப்பெற்ற; மணி ஏதும் - நிறத்தால் நீலமணியை வெல்லும்; 17. வீ- மலர் ; 21. கடைஇய - தூண்டிய; தோயலம் - தழுவேன்; 22. இடை - ஊடல்; நிறை - உள்ளத்தை ஒருவழி நிறுத்தும் நிறை என்றும் குணம்; 23. கடவுபு - செலுத்தி; கைத்தங்காது - என்பால் தங்காது.*

# 13

# கையான் மலர்ந்த முகை

அமைதி நிலவிய ஒரு நாட்டில் மக்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்; ஒருநாள் பகையரசன் படையொன்று அந்நாட்டில் திடுமெனப் புகுந்து பாழ்செய்யத் தொடங்கி விட்டது; அந்நாட்டில் நல்வாழ்வு வாழ்தல் இனி இயலாது எனக் கருதிய அந்நாட்டுக் குடிமக்கள் அந்நாட்டை விட்டகன்று, நல்லாட்சி நிலவும், வேறு ஒரு நாட்டைத்தேடி அடைந்து, ஆங்கு வாழ்வு மேற்கொண்டனர்; அவர்கள் ஆண்டு வாழினும், தாய்நாட்டுப் பற்று அவர்களை விட்டகலவில்லை. அவர் உள்ளம் தாம் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த தம் நாட்டை மறவாது எண்ணியிருந்தது; நாட்கள் சில கழிந்தன; அழிந்த நாட்டிற்குரிய அரசன், தன் படைத்துணையால், பகைவரை வென்று ஓட்டினன், நாட்டில் மீண்டும் அமைதி நிலவிற்று; அஃது அறிந்த அக்குடிகள், மீண்டும் தம் நாடடைந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியை நினைவூட்டும் இயற்கை நிகழ்ச்சி ஒன்று ஓர் ஊரில் நிகழ்ந்தது. அவ்வூரை அடுத்

இருந்தது ஒரு பொய்கை; அப்பொய்கையில் மலர்ந்திருந்த தாமரை மலர்களில், தும்பிகள் தம்தம் பெடையோடு தேன் உண்டு வாழ்ந்திருந்தன. ஒருநாள் அப்பொய்கையின் கரை திடுமென உடைத்துக்கொள்ளவே, அவ்வுடைப்பின் வழியே வெள்ளநீர் உட்புகுந்துவிட்டது; தாமரை மலர்களெல்லாம் தண்ணீருள் ஆழ்ந்துவிட்டன; தாம் வாழ்ந்த மலர்கள் தண்ணீருள் மறைந்துவிட்டமையால், அங்கு வாழ்தற்கு வழியற்றுப் போன அத்தும்பிகள், அக்குளத்தைவிட்டு நீங்கி அதை அடுத்திருந்த, காவல் நிறைந்த கரை அமைந்த பிறிதொரு பொய்கையைத் தேடி அடைந்து, ஆங்குள்ள மலர்களில் வாழத்தொடங்கின; இதற்கிடையில், முற்கூறிய பொய்கைக்கு உரியோர், ஓடோடிவந்து, உடைந்த உடைப்பினை அடைத்துப், புகுந்த புதுப் புனலைப் போக்கிவிட்டனர்; தாமரை மலர்கள் பண்டே போல் தண்ணீர் மட்டத்திற்குமேல் தலைதூக்கி நிற்கத் தொடங்கின; அஃதறிந்த அத்தும்பிகள், மீண்டுவந்து, தம் மலர்களுட்புகுந்து மகிழ்ந்து உறங்கின.

இக்காட்சியைக் கண்டு நின்றாள் ஒருபெண்; கணவன் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டமையால் கலங்கியிருப்பவள் அவள்; அன்று அவள்கண்ட இக்காட்சி, அவள் உள்ளத்தில் பற்பல எண்ணங்களைத் தோற்றுவித்தன; வாழும் இடம், வாழ்தற்கு இயலாதுபோனமையால் வண்டுகள் அவ்விடத்தை விட்டன; ஆனால் என் வீடு இன்பக்களஞ்சியமாய் இருக்கவும், என்கணவன் அதை மறந்தான்; சென்ற இடம் வாழ்ந்த இடத்தினும் சிறந்து விளங்கினமையால், வண்டுகள் ஆங்கு அடைந்தன; ஆனால் கணவன் சென்று வாழும் பரத்தையர் சேரி, நம் நகரினும் நனிமிக இழிவுடைத்து; நல்லோர் நணுக அஞ்சும் பொல்லாங்கு நிறைந்தது; அதை

அறிந்தும் கணவன் அங்குச்சென்று வாழ்கிருன்; வண்டுகள், வாழும் இடத்தைவிட்டு வந்தும், அவ்விடத்தை மறக்கவில்லை; கணவன் என்னைக் கனவிலும் கருதுவதில்லை; வண்டுகளை வருக என அழைப்பார் எவரும் அப்பொய்கையில் இல்லை; எனினும், அவை அவ்விடத்தை மீண்டு அடைந்தன; கணவன் வருகைக்காக, இரவு பகலாகக் காத்துக்கிடக்கிறேன் நான்; ஆயினும் அவன் வந்திலன்; வாழும் இடத்தில் இவ்வண்டுகள் வைத்திருக்கும் பாசமும், மணந்த மனைவியாகிய என்னிடத்தில், என் கணவனுக்கு இல்லையே" என்ற எண்ணங்கள் அலை அலையாய் எழுந்து அலைக்க வருந்தி வீடுவந்து சேர்ந்தாள்.

அவள் வந்து சேர்ந்த சிறிது பொழுதிற்கெல்லாம், பரத்தைவீடு சென்றிருந்த கணவனும் வந்துசேர்ந்தான்; வந்தவனை வரவேற்க விரும்பி, அவனை அணுகினுள்; ஆங்கு அவள் கண்ட கோலம், அவள் உள்ளத்தை வாட்டியது; அவன் தலைமாலையில் பிணைந்துள்ள மலர்கள், தம் நிறங்கெட்டு உருவிழந்து நலங்கிப்போயிருந்தன; அவன் மார்பில், மகளிரைப் புணர்ந்தமையால் பெற்ற புதுமணம் வீசிற்று; அவன் மேனியில், அவனைப்புணர்ந்த மகளிரின் கைவளை அழுந்தியதால் உண்டான தழும்புகள் ஆங்காங்கே காட்சி அளித்தன; பரத்தையரை, அண்மையில் புணர்ந்து வருகிருன் என்பதை அவை காட்டிவிட்டன; அதனுல், அவன் உள்ளத்தில், பரத்தையர்பால் கொண்ட பாசம், இன்னமும் வற்றுமலே உளது என்பதை உணர்ந்தாள்! அதனுல் அவள் அன்பு மாறிற்று: ஆருச்சினம் மிகுந்தது; வந்தவன் தன்மீது அன்புகொண்டு வந்திலன் எனக் கருதினுள்; வரவேற்கச் சென்றவள், வழியை அடைத்துக்கொண்டு நின்றவாறே, "அன்ப! 'நாம்

பிரிந்தால் பாழ்படும் பேரழகு, நாம் வந்ததும், மீண்டு விடும்; இவளுக்கென ஒரு தனி இயல்பு இல்லை; நம் இயல்பிற்கேற்ப இயல்பவள் இவள்' எனும் நெஞ்சத் துணிவாலன்றோ, பரத்தையிற் புணர்ச்சியால் பாழான கண்ணியோடு என் கண்ணெதிர் வந்து நிற்கின்றாய்? 'ஞாயிறுதோன்ற மலர்ந்து, அது மறையக் கூம்பும் தாமரை மலர்போன்றவள் இவள், நான் பிரியப் பிரியும் இவள் நலம், நான் வந்து கூடக்கூடிவிடும்' எனும் கருத்துடைமையாலன்றோ, அம்மகளிரின் கூந்தல் மலரின் மணம் நாறும் மார்போடு என்முன் வந்து நிற்கத் துணிந்தாய்? 'மழை பெய்தால் வளம்பெற்று, அது பொய்த்தால் வாடும் பயிர்போன்றவள் இவள்; நான் பிரிந்தால் வாடும் இவள், நான்வந்து புணர்ந்தால் பொலிவுறுவள்' என்ற எண்ணத்துணிவாலன்றோ, அம்மகளிர் வளையல் அழுத்திப் பண்ணிய வடுவோடு இவண் வந்து நிற்கிறாய்?'' எனச் சினந்துக்கூறிக் கண்டித்தாள்.

சில நாழிகை அமைதியாய் இருந்தாள்; பின்னர் மீண்டும் தொடங்கினாள்; "அன்ப! உன் கருத்தும் செய்கையும் வியத்தற்குரிய; நீ விரும்பும் பரத்தையரும், உன்னை விரும்பும் பரத்தையரும் உன் பிரிவால் வருந்தி வாடுமாறு ஈங்கு வாரற்க! அவர் மகிழ ஆண்டே செல்க; இயல்பாக மலராது, கையால் மலர்த்தி மலர்வித்த மலர் மணம் தாராது; சிறிதே மணம் தரினும் அது நறுமணம் ஆகாது; அதுபோல், உள்ளுணர்வின்றி, ஊரார் உரைக்கு அஞ்சி ஈண்டு வந்து புணரும் உன் புணர்வில் பேரின்பம் காணேன்; அக்கூட்டத்தை நான் விரும்பேன்; அக்கூட்டம் கொடிய பனிக்காலம்போல், எனக்குக் கொடிய துயர்தரும்; ஆகவே அது வேண்டேன்'' என்று கூறி வழிமறித்து நின்றாள்.

''பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
இன்மலர் இமிரபுஊதும் துணைபுணர் இருந்தும்பி,

உண்துறை உடைந்தபூப் புனல்சாய்ப்பப் புலந்துஊடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென,
அதுகைவிட்டு அகன்று ஒரீஇக், காக்கிற்பான் குடைநீழல்
மதிபடர்ந்து இறைகொள்ளும் குடிபோலப், பிறிதும்ஒரு
பொய்கை தேர்ந்து அலமரும் பொழுதினான், மொய்தப,
இறைபகைதணிப்ப, அக்குடி பதிப்பெயர்ந்தாங்கு
நிறைபுனல் நீங்கவந்து, அத்தும்பி, அம்மலர்ப்
பறைதவிர்பு அசைவிடூஉம் பாய்புனல் நல்ஊர!

நீங்குங்கால் நிறம்சாய்ந்து; புணருங்கால் புகழ்பூத்து
நாம்கொண்ட குறிப்பிவள்நலம் என்னும் தகையோதான்,
எரிஇதழ் சோர்ந்துஉக, ஏதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறும் கண்ணியை ஈங்குஎம்இல்வருவதை ;
சுடர்நோக்கி மலர்ந்து, ஆங்கேபடின் கூம்பும் மலர்போல்என்
தொடர்நீப்பின், தொகும் இவள்நலம் என்னும் தகையோதான்,
அலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப், பிறர்கூந்தல்
மலர்நாறும் மார்பினை ஈங்கு எம்இல் வருவதை ?
பெயின்நந்தி, வறப்பின்சாம் புலத்திற்குப் பெயல்போல் யான்
செலின்நந்திச், செறின்சாம்பும் இவள்என்னும் தகையோ
முடியுற்ற கோதைபோல் யாம் வாட, ஏதிலார் [தான்
தொடிஉற்ற வடுக்காட்டி ஈங்கு எம்இல் வருவதை ?

ஆங்க,
ஐய அமைந்தன்று ; அனைத்தாகப் புக்கீமோ ;
வெய்யாரும், வீழ்வாரும் வேறாகக், கையின்
முகை மலர்ந்தன்ன முயக்கில் தகையின்றே ;
தண்பனிவைகல் எமக்கு,''

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனுக்கு வாயில்வி மறுக்கும் தலைவி ஊடிக் கூறியது இது.

*1.* பழனம் - வயல் ; *2.* இமிர்பு - ஆரவாரம் செய்து; இருந்தும்பி - கரிய தேன் வண்டு ; *3.* உண்துறை - நீர் உண்ணும் துறை ; *4.* தலைவந்தென - ஆங்கே வந்ததாக ; *5.* ஒரீஇ - போய் ; காக்கிற்பான் - காப்பவன் ; *6*

இரைகொள்ளும் - தங்கும்; 7. அலமரும் - வருந்தும்; மொய்தப - பகைவன் பலம் கெடுமாறு; 8. இறை - அரசன்; 10. பறைதவிர்பு - பறத்தலைக் கைவிட்டு; அசைவிடுஉம் - இளைப்பாறும். 11. சாய்ந்து - கெட்டு; பூத்து - நிறைந்து; தகை - தகுதிப்பாடு; 13. எரிஇதழ் - எரிநிறம்கொண்ட இதழ்; சோர்ந்துஉக - வாடிஉலர; 14. கரி - சான்று; வருவதை - வருகின்ற தன்மை; 15. சுடர் - ஞாயிறு; படின் - மறையின்; கூம்பும் - வாடும்; 16. தொகும் - மறையும்; 17. கைம்மிக - அளவிறந்து பெருக, 19. நந்தி - செழித்து; சாம் - வாடும்; 20. செறின் - செல்லாமல் வருத்தினால், சாம்பும் - கெடும்; 24. ஐய - வியப்புடைய; புக்கீமோ - சென்று சேர்க; 25. வெய்யார் - விரும்பப்படுவார்; வீழ்வார் - விரும்புவார்; 26. முயக்கின் - கூட்டத்தால்; தகைஇன்று - அழகு இல்லை.

## 14

# புல்லல் எம் புதல்வனை !

செந்நெல்வளம் சிறந்த மருதநில மகள் அவள்; அவள் கணவன், அவளையும், அவள் மகனையும் மறந்து, ஊரில் உள்ள பரத்தையர் பின்சென்று, அவர் ஆடல் பாடல்களால் அறிவிழந்து திரிந்தான். அதனால் வருந்தி யிருக்கும் அவள், ஒருநாள், தன்வயலைப் பார்க்கச் சென் றிருந்தாள்; பறவைகள் பல கூடிப் பெரிய ஆரவாரம் செய்துகொண்டிருந்த வயலில், செந்நெல் செழிக்க வளர்ந்து, கதிர்முற்றிக் காட்சி அளித்தது. அவ்வயலைச் சுற்றி நோக்கினாள். வயலிடையே ஒரு தாமரை மலர்; மலர்ந்திருந்தது; அதன் தண்டு முள் நிறைந்தது என் பதையும் பாராமல், ஒரு கதிர், அதன்மீது படிந்து, அதை அடியோடு சாய்த்து, அம்மலர்மீது கிடந்து உயர்ந்து தோன்றிற்று; அவ்வழகிய காட்சியைக் கண் குளிரக் கண்டிருந்தாள். அக்காட்சியைக் கண்டு களிக்க, கணவன் தன்னுடன் இல்லையே என்று கலங்கினாள்; இந்நேரம், அவன், பல்லோர் புகழ, அரங்கின்மீது ஆடி மகிழ்விக்கும் அழகிய பரத்தையையும், அவள் தலைக்

கோலத்தில் பிணிக்கப் பெற்று, அவள் நெற்றியில் வந்துதாழும் வயந்தகம் எனும் அணியால், அவள் அழகு, முன்னினும் அதிகமாகித் தோன்றுவதையும் கண்டுகளித்திருப்பான் எனக் கருதிக் கலங்கினள்; அந்நிலையே, தன்னை அணுகும் உயிர்களைத் தன் முட்களால் ஊறு செய்யும் தாமரைபோல், தன்னை அடைந்தாரைத் தன் காதல் கொடுமையால் துன்புறுத்தும் இயல்புடையான் என்பதை அறிந்தும், அவனையும் தன் வயத்தனாக்கிக்கொண்டு அவனுக்கு அழகுசெய்து கிடப்பாளும் ஒருத்தி உள்ளனளே என அவன் விரும்பும் பரத்தையை நினைந்து வருந்தினள்.

அந்நினைவு அலைக்க, மேலும் அங்கு நில்லாது தன் வீடடைந்தாள். அவள் மகன், தெருவில் நடைதேர் உருட்டி ஆடிக்கொண்டிருந்தான்; அந்நிலையில், மார்பில் மணம் நாறும் சந்தனம் பூசி, கழுத்தில் முத்தாரம் அணிந்து, தலையில் பன்னிற மலர்களால் ஆன கண்ணி சூடித் தன்னை ஒப்பனைசெய்துகொண்டு, தான் விரும்பும் பரத்தை வீடு நோக்கிச் செல்லும் அவள் கணவன், தெருவில் ஆடி மகிழும் மகனைக் கண்டான்; மகன்மேல் உண்டான காதலால், பரத்தையை மறந்தான்; அவனை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டே வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

மகனோடு வந்து நிற்கும் கணவன் கோலத்தைக் கண்டாள் அவள்; அவன் கோலம், அவன் பரத்தை வீடு செல்லும் கருத்தோடு பண்ணிக்கொண்டது என்பதைத் தெளிவாக உணர்த்திற்று. அதனால், கணவன், "என்மீது கொண்ட காதலால் வந்திலன்; மகனைக் கண்டவுன், அவனைக் காணான்போல் செல்வது கூடாது; அவனை மனைவயின் சேர்த்துப் போதல் வேண்டும் எனும் கருத்தால், ஈங்கு வந்துளான்" என்று கருதினள்.

அக்கருத்தோடு அவனை நிமிர்ந்து நோக்கினாள்; மகன், அவன் மார்பிற் பூசிய சந்தனத்தை அழிப்பதையும், முத்துமாலையை ஈர்த்து அறுப்பதையும், மாலையைப் பிய்த்து எறிவதையும் கண்டாள். உடனே, அவனை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்; தன் செயல் கண்டு நாணி நிற்கும் கணவனை நோக்கி, "ஐய! இவனை எடுத்து அணைத்துக் கொள்ளாதே; இவன் நனிமிகக் கொடியவன்; உன் மார்பிற் சந்தனத்தைச் சிதைப்பன்; முத்தாரத்தை அறுப்பன்; கண்ணியைக் கலைப்பன்; சந்தனம் சிதைவுற்றதையும், மாலை அறுபட்டதையும், கண்ணி கசங்கியதையும உன பரத்தைக் காதலி பார்ப்பளாயின், இது, நீ வேறு ஒரு பரத்தையோடு தொடர்புகொண்டு, அவளைக் கூடியதால் நேர்ந்தது எனக்கொண்டு, உன்னைச் சினப்பள்; புலந்து புல்லாது செல்வள்; அதனால் நீ வருந்துவை; ஆகவே, இவனை விடுத்து, ஈண்டு இமைப்பொழுதும் நில்லாது அவள்பால் விரைந்து செல்க" எனக் கூறி வாயில் அடைத்தாள்.

"புள்இமிழ் அகல்வயல் ஒலிசெந்நெல் இடைப்பூத்த
முள்அரைத் தாமரை முழுமுதல் சாய்த்துத் தன்
வள்ளிதழ் உறநீடி வயங்கிய ஒருகதிர்,
அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள், அணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம்போல் தோன்றும்
தகைபெறு கழனிஅம் தண்துறை ஊர்! கேள்:

அணியொடு வந்துஈங்குஎம் புதல்வனைக் கொள்ளாதி;
மணிபுரை செவ்வாய் நின்மார்பகலம் நனைப்பதால்;
தோய்ந்தாரை அறிகுவேன் யான்எனக் கமழும்நின்
சாந்தினால் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ?

புல்லல் எம்புதல்வனைப், புகல்அகல் நின்மார்பின்,
பல்காழ்முத்து அணிஆரம் பற்றினன் பரிவானால்;

மாண்இழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பின்
பூணினுல் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ?

கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி, நின்சென்னி
வண்டுஇமிர் வகைஇணர் வாங்கினன் பரிவாளுல்;
நண்ணியார்க் காட்டுவது இதுஎனக், கமழும்நின்
கண்ணியால் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ?'

என வாங்கு,
பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய்; நெடுங்கடை நில்லாதி;
ஆங்கே அவர்வயின் சென்றீ, அணிசிதைப்பான்
ஈங்குஎம் புதல்வனைத் தந்து."

பரத்தையிற் பிரிந்து வந்து, புதல்வன் வாயிலாகப் புகுந்த தலைவனுக்கு வாயில் மறுக்கும் தலைவி கூறியது இது.

*1. இமிழ் - ஆரவாரிக்கும்; ஒலி - முற்றிஒலிக்கும்; 2. அரை-தண்டு; 3. வயங்கிய - விளங்கிய; 5. வயந்தகம்-நெற்றியில் அணியும் ஒருவகை அணி; 8. மணிபுரை; பவளமணி போன்ற; 9. தோய்ந்தார் - புணர்ந்த மகளிர்-10. சாய்குவள் - வருந்துவள்; 11. புல்லல் - அணைத்துக் கொள்ளாதே; புகல் - பரத்தையர்புகழும்; 12. பல்காழ்-பலவிடம்; பற்றினன் பரிவாளுல் - பற்றி அறுப்பான்; 16. வாங்கினன் - பற்றி; 17. நண்ணியார் - புணர்ந்த மகளிர்; 20. பூங்கண் - அழகியகண்; 21. இகவாய் - கடவாய்; நெடுங்கடை - பெரிய வாயில்; 22. சென்றீ - செல்வாயாக.*

# 15

# வருக எம் பாகமகன்

பவழத்தால் பண்ணி, விளிம்பில் முத்தை அரும்பாக அழுத்தி ஆக்கிய வட்டப்பலகைமீது, செதுக்கிவைத்த சின்னஞ்சிறு மரயானையை வைத்து ஆடிக்கொண்டிருந் தான் மகன்; அவன் ஆட்டத்தையும், பஞ்சுபோல் மெத் தென்ற தலையில் மூன்று மணிவடங்கள் விளங்கும் அழகிய கோலத்தையும் கண்டு களித்திருந்தாள் அவன் தாய்; அவள் கணவன், அவளையும் அழகிய மகனையும் மறந்து ஒரு பரத்தைபால் காதல்கொண்டு, அவள் வீட்டில் வாழ்ந்திருந்தான்; கணவன் பிரிவால் கலங் கினாள் அவள்; "மகனை ஈன்று தாயாம் நிலைபெற்ற என்பால் அவர் அன்பு குறைந்தமை கண்டு நான் வருந் தேன்; ஆனால், பகைவரும் விரும்பும் பேரழகு வாய்ந்த தன் மகன்மீது கொண்ட அன்பையும் மறந்து விட் டாரே" என எண்ணி வருந்தி வாழ்ந்தாள்.

ஒருநாள், மகன் யானையை வைத்து ஆடிக்கொண் டிருந்தான்: மணி மணியாக முறுக்கிய மெல்லிய

கயிற்றால் கட்டி, காலில் அணிந்த கெச்சை கலீர் கலீர் என ஒலிக்க, மெல்ல மெல்ல ஈர்த்து மகிழ்ந்திருந்தான். அவன் ஆடலைக் காணும் இன்பத்தில் காதலன் பிரிவால் நேர்ந்த கடுந்துயரையும் மறந்திருந்தாள் அவள்; அந்நிலையில், ஆங்கு வந்து நின்றான் அவள் கணவன். கணவன் வருகையை அவள் அறிந்தாள்; ஆனால், அவள் அவன்பால்கொண்ட வெறுப்புள்ளம், அவனை வரவேற்க மறுத்தது; வரவேற்க மறுத்ததோடு, அவன் பிரிவால் தான் உற்ற துயரையும், அத்துயர்போக்க அவள் மேற்கொண்ட வழியையும் விளங்கக்கூறி, அவனுக்கு வாயில் அடைக்க விரும்பினாள். அதனால், அவன் வருகையை அறிந்தும் அறியாதாள்போல், மகனை நோக்கி, "மகனே! உன் உருவ அழகைக்கண்டு, உன ஆடல் அழகை அறிந்து, அன்புகாட்ட மறுத்து, உன்னை மறந்து வாழ்வார் வாழ்க! உன்பால் மாறா அன்புகொண்ட யான், என் கண்ணாரக்கண்டு மகிழுமாறு உன யானைத்தேர் ஈர்த்து என்பால் வருக!" என அழைத்து, தன் மடிமீது அமர்த்தி அணைத்துக் கொண்டாள்.

அணைத்தவாறே "அன்புடை மகனே! உன் காலில் கட்டிய கிண்கிணி கலீர் கலீர் என ஆரவாரிப்பத், தத்தித் தத்தித் தளர் நடையிட்டு வரும் உன் நடை அழகைக் கண்டு, களித்து கவலை மறந்து மகிழ்கிறேன்: ஆனால், 'நாங்கள் ஈருடலும் ஓருயிருமென உள்ளம் ஒன்றி வாழ்கிறோம்' எனக்கூறி, உன் தந்தையோடு உறவுகொண்டு மகிழ்ந்த மகளிர், பின்னர் அவன் கைவிட்டுப் போனமையால், கவலையுற்றுக், கைவளை சோர மெலிந்து, கண்ணீர் விட்டுக் கலங்கும் அக்காட்சியைக் காணநேரின், கலங்குகிறது என் உள்ளம். ஐய! என் ஆருயிர் மகனே! காண இனிக்கும் கண்ணழகு வாய்ந்த நீ, அத்தா!

அத்தா! என்று வழங்கும் உன் இனிய மழலைமொழியைக் கேட்கக் கேட்க இனிக்கிறது; ஆனால், ஊரில் தப்பிப் பிழைத்தவர் ஒருவரும் இலர் என்று கூறுமாறு, உன் தந்தையால் நலன் இழந்து வருந்தும் மகளிரின், மனத் துயரைக் காணத் துன்புறுகிறது என் உள்ளம்; உன் முகம்கண்டு, உன் மொழியைக்கேட்டு மகிழும் நான், அம் மகளிர் துன்பநிலை கண்டு, துயர் உறுகிறேன். வானத்தில் உலாவரும் வெண்திங்காள்! என் மகனுடன் ஆட வருக! இதோ என்மகன் எனக்கூறி, உன்னை அம்புலிக்குக்காட்டி மகிழ இனிக்கிறது என் உள்ளம்: ஆனால், உன் தந்தை விரும்பி நலன் நுகர்ந்த பின்னர் வெறுத்துக் கைவிடப்பெற்ற மகளிரின் பசந்தமேனியைப் பார்த்துப் பார்த்துப் பெருந்துயர் கொள்கிறது என் உள்ளம்'' என்று கூறி, மகனைப் பாராட்டுவாள்போல், கணவன் கொடுமைகளை அவன் கேட்குமாறு கூறிக் கண்டித்தாள்.

பின்னர், "மகன் வளர்ந்துவிட்டான்; ஆகவே அவன் அறியப்பிழை செய்தல் கூடாது; செய்யின் அவன் சீறுவான்'' என்பதைக் கணவனுக்கும், "குற்றம் புரிவார் பெற்ற தந்தையேயாயினும் அவரைத் தண்டித்தல் உன்கடன்'' என்பதை மகனுக்கும் கூற விரும்பினாள்; உடனே மடியில் அமர்ந்திருந்த மகனை முன்னெடுத்து நிறுத்தினாள்; பின்னர் அவனை நோக்கி, "மகனே! நீ என் காதில் அணிந்திருக்கும் குழையைக் கழற்றிச் செல்லுந்தோறும், உன்னை அன்பால்பற்றி, உன் தந்தை பிரிந்த துயரால் வாரிமுடித்து மலர் சூட்டப் பெறுமல் வறிதே கிடக்கும் என் கூந்தல் கிடைந்தலையும் என் தோளில் உன்னை அமர்த்தி மகிழ்வேனே, அது ஏன் தெரியுமா?, தோளில் அமர்ந்து, என் கூந்தலைப்பற்றி ஈர்த்து, என்னைத்

துன்புறுத்துவதுபோல், பரத்தை வீடு சென்று பழியொடுவரும் உன் தந்தை, உன்னை எடுத்து வாரி முத்தங் கொள்ளுங்கால், பரத்தையர் கண்டு மகிழ்க என அவன் மார்பில் அணிந்த மாலையைப்பற்றி ஈர்த்துப் பாழாக்க உன்னைப் பழக்குவதற்கே; அஃது அறிந்து அவ்வாறே நடப்பாயாக'' என்று கூறினாள்; என்னே அவள் அறிவும் நெஞ்சத் துணிவும்!

'' நயம்தலை மாறுவார் மாறுக, மாறுக்
கயம்தலை மின்னும் கதிர்விடு முக்காழ்ப்,
பயந்தஎம் கண்ஆர யாம்காண நல்கித்
திகழ்ஒளி முத்துஅங்கு அரும்பாகத் தைஇப்,
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழம் அறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றில் பைபய வாங்கி
அரிபுனை புட்டிலின் ஆங்கண்ஈர்த்து ஈங்கே,
வருக! எம்பாக மகன்!

கிளர்மணி ஆர்ப்பஆர்ப்பச் சாஅய்ச்சாஅய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது; மற்று இன்னாதே,
உளம்என்னா நுந்தைமாட்டு எவ்வம் உழப்பார்
வளைநெகிழ்பு யாம்காணுங் கால்.

ஐய! காமரு நோக்கினை, அத்தாஅத்தா என்னும்நின்
தேமொழி கேட்டல் இனிது,மற்று இன்னாதே,
உய்வின்றி நுந்தை நலன் உணச் சாஅய்ச் சாஅய்மார்,
எவ்வநோய் யாம்காணுங் கால்.

ஐய! திங்கட் குழவி! வருக! என யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது, மற்று இன்னாதே,
நல்காது, நுந்தை புறமாறப் பட்டவர்
அல்குல்வரி யாம்காணுங் கால்.

ஐய! எம்காதில் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்,
போதுஇல் வறுங்கூந்தல் கொள்வதை, நின்னையான்,

ஏதிலார் கண்சாய நுந்தை வியன்மார்பில்
25. தாதுதேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபுஆடக் காண்கும்."

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் சிறைப்புறத்தானாகத், தலைவி மகனுக்கு உரைப்பாள்போல், தலைவன் கொடுமை கூறி வாயில் மறுத்தது இது.

*1. நயம் - அன்பு; தலைமாறுவார் - கைவிடுவார்; 2. கயம் - மென்மை; முக்காழ் - மூன்றுவடம்; 4. தைஇ - அழுத்தி: 5. பருதி - வட்டமாகப் பண்ணிய பலகை; 6. கவழம் அறியா - உணவு உண்ண மாட்டாத; கைபுனை வேழம் - யானைப் பொம்மை; 7. புரிபுனை - முறுக்கிப் பண்ணிய; பூங்கயிறு - மெல்லிய கயிறு; வாங்கி-இழுத்து; 8. அரி - சிலம்பினுள் இடும் சிறுசிறு கற்கள்; புட்டில் - கெச்சை; 9. பாக மகன் - பாகனாகிய மகன்; 10. கிளர் - ஒளிவீசும்; சாஅய் - சாய்ந்து; 12. உளம்என்னு - எங்கள் உள்ளம் என்று கூறி; எவ்வம் உழப்பார்-துன்பம் அடைவார்; 13. வளைநெகிழ்பு-வளைகள் நெகிழ்தலை; 14. காமரு-அழகு நிறைந்த; 16. சாஅய்ச் சாஅய்மார்-நொந்து தளர்வார்: 19. அம்புலி - திங்கள்; 20. புறம்மாற - வெறுக்க; 23. போதுஇல் - மலர்சூட்டப்படாத; கொள்வதை - கொள்வது; 25. தைஇய - கட்டிய ; 26. பரிபு -அறுத்து ; ஆட - விளையாட.*

## 16

# பெயரனை யாம் கொள்வேம்

வளம் மிக்க குடியில் வாழ்க்கைப்பட்டாள் ஒருத்தி; கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்ந்தனர்; விருந்தோம்பல் முதலாம் இல்லறக் கடமையில் கருத்துடையளாய் வாழ்ந்தாள் அவள்; அவள் மேற்கொண்ட இல்வாழ்க்கைக்கு உற்ற துணையாய் உறுபொருள் ஈட்டி அளித்தும், அவள்பால் குறைவறியாப் பேரன்புகொண்டும் வாழ்ந்திருந்தான் அவன்; அவர் மனையறத்தை மாட்சிமைப்படுத்தும் நன்கலமாய் வந்து பிறந்தான் ஒரு மகன்; தன் மனையறக் கடன்களுக்கிடையே, மகனைப் பேணி வளர்க்கும் பெரிய பொறுப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டாள்; மகன், நடை தேர் பயிலும் பருவம் பெற்றான்; அவன் வளர வளர, அவ்வனைப் பேணும் பொறுப்பு பெருகிற்று; அதனால் கணவனோடு கலந்து மகிழ்தல் குறைந்தது; கணவன் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டான்; நாட்கள் செல்லச் செல்ல, அவன் அவ்வொழுக்கத்தில் ஆழ்ந்து போனான்; மகன் வளர்ப்பிலும், மனையறக் கடமையிலும் கருத்துடையளாய்

வாழ்ந்தமையால் கணவனைப் பேணும் கடமையில் சிறிதே தளர்ந்தாளாயினும், அவன் பரத்தைமை ஒழுக்கம், அவளைப் பெருந்துயர்க்கு உள்ளாக்கிற்று; அவள் பெரிதும் கலங்கினுள்.

ஒருநாள், கணவன் மேற்கொண்ட ஒழுக்கக்கேட்டை எண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்கி யிருந்தவள், தான் இருந்த இடம் நோக்கித், தன் மகன் நடைதேர் உருட்டி வருவதைக் கண்டாள். அவள் கலக்கம் அகன்றது; மகனைக் கண்ட மகிழ்ச்சி, கணவனைப்பற்றிய கலக்கத்தை மறக்கப் பண்ணிற்று.

மணி போன்ற அவன் வாய்; அவ்வாயினின்றும் வெளிப்படும் பொருளொடு பொருந்தா மழலை; மழலை வழங்கும் வாயினின்றும் வழிந்தோடும் உமிழ்நீர்; அவ் வெச்சிலால் நனைந்த மார்பணி; மணம் நாறும் தலைமயிர்; அம்மயிரில் முடிக்கப்பெற்ற பிறைஅணி: அப்பிறையி னின்றும் தொங்கும் முத்துவடம்; அவ்வடத்தின் ஈற்றில் கிடந்து நெற்றியில் வந்துதவழும் சுட்டி; உள்உருவைப் புறங்காட்டும் மெல்லிய உயர்ந்த ஆடை; பால் ஒலிக்கும் சதங்கை; சதங்கை அணிந்த கால்களை ஆடைதடுக்கவும் நில்லாது, தாயிடத்தே பால் உண்ணும் நினைவும் அற்று, நடைதேர் உருட்டி நடைபயிலும் அவன் முயற்சி ஆகிய இவற்றைக் கண்டு மகிழ்ந்தாள்.

ஆடும் மகனை ஓடிப்பற்றினுள்; தன்முன் நிறுத்தி னுள்; "மகனே! நம் வீடுநோக்கிவரும் விருந்தினரை ஓம்பும் வேலைமிகுதியால், உன்னை எடுத்து மகிழவும் ஒய் வில்லை; ஓய்வற்று உழலும் என்னை, நீயும் நினைத்துப் பார்ப்பதில்லை" என்று கூறி அன்பால் கண்டித்தாள்; பின்னர், "மகனே! உன் மழலைமொழி கேட்டு மகிழும் என் உள்ளத்தை மேலும் மகிழ்விக்கும் வண்ணம், அறு சுவை கூடிய இனிய உணவை உண்டவர், அதற்கு

மேலும் அமிழ்தம் உண்டு மகிழ்தல்போல் நானும் மகிழு மாறு, மழலைமொழி வழங்கிய உன்வாயால், உன்னைப் பேணி வளர்க்கும் பேரன்புமிக்க செவிலியர், ஆடல் பாடல் துணையால் கற்றுத்தந்த சொற்களைத் திருந்தக் கூறி என்னைத் தித்திக்கப்பண்ணுவாய்" என்று கூறி ஏங்கினள்.

அவள், அவனைத் தன் முகத்திற்கு நேரே நிறுத்தி அவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்பொழுது, ஆங்குவந்த அவள் கணவன், தன் வருகையை அவள் அறிந்து கொள்ளாவாறு அவள்பின் ஒளிந்து நின்றான்; அவ் வாறு ஒளிந்துகொண்டதோடு, தன் மனைவியின் முன்னும், மகன் பின்னும் நின்று, தன் வருகையைப் பார்த்துவிட்ட தோழியையும், தன் வருகையை அறிவியா வாறு, கைஅமர்த்தி அடக்கிவிட்டான்; அதனால், அவன் வருகையை அவன் மனைவி அறிந்திலள்; தாய் தன்னை முன்னே நிறுத்தி, அதைக் கூறிக்கொண்டிருக் குங்கால், மகன் தாயின் பின்வந்து நிற்கும் தந்தையைக் கண்டுகொண்டான்; அதனால், தாய் கேட்பதை மறந்து, "அப்பா! அப்பா!" என இரைந்து அழைக்கத்தொடங்கி விட்டான.

அவள், மகன் செயல்கண்டு மருண்டாள்; அவன் அவ்வாறு கூறுவது ஏன் என அறியாது விழித்தாள்; அவனை வாரி எடுத்துத் தன் தோள்மீது கிடத்தி அணைத்துக்கொண்டாள்; அந்நிலையிலும், தன் கண்முன் தந்தையே நிற்பதால், மீண்டும் அவன், "அப்பா! அப்பா!" என்றே அழைக்கத் தொடங்கினன்; தான் ஒன்று கேட்க, அவன் ஒன்று கூறும் செயல், அவளுக்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை நினைவூட்டிற்று; அதனால், 'தன்முன் நிற்கும் தோழிபால், "தோழி! நம் நோய்தீர்க்கும் மருந்தாவான் இவன் என்று கருதி நாம்

இவனைப்பாராட்ட, இவன் நாம் கேட்டதற்கு விடை தாராது, தனக்குத் தொடர்பல்லாத, நமக்குத் துன் பத்தைத் தரவல்ல எதையோ ஒன்றைக் கூறுகிருன்; இவன் செயல், முன்பு ஒருநாள் நம்மால் வளர்த்துவிடப் பெற்ற பாணன், சேய்மைக்கண் வரக்கண்டு, அவனை அழைத்து நாம் ஒன்று வினவ. அவன்செய்த தவறு அவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தமையால், வாய்மறந்து "ஏறுதிப்பாடி எனும் பரத்தையர் சேரியில் வாழ்கிறோம்" எனக்கூறி விரைந்து மறைந்துபோன செயலை நினைப்பூட்டி நகை விளைக்கிறதன்றோ?" என்று கூறினள்.

கணவன் வருகையையும், அவன் வருகை அறிந்தே, மகன் "அப்பா! அப்பா!" என அழைக்கிருன் என்பதை யும் அறிந்துகொள்ளாமையால், அவ்வாறு கூறினவள், பின்னர், மகன் தன் பின்புறமேநோக்கி நிற்பதாலும், தன்முன் நிற்கும் தோழியின் கண்களும், அவ்வப்போது, தன் பின்புறத்தையே நோக்கியதாலும், கணவன் வந்து பின்புறத்தே நிற்கிருன் என்பதை உணர்ந்துகொண் டதும், "தோழி! கணவர் வந்துளார் என்பதை அறிந்து கொண்டேன்; ஆனல், அவர் வருகை கோட்டையுள் வாழ்வாரை அழித்தற்குவேண்டிய படைக்கலங்களைப் போட்டுச்செல்லும் கருத்தோடு, கள்வர் சிலர் அக் கோட்டையுள் நுழைவதுபோல், நம் நலத்தை அழித்து, நலம் அழிந்த நம் நிலைகண்டு நகைக்கும் கருத்தோடு வந்ததல்லது, நம்பால்கொண்ட அன்பால் வந்திலர் என்பதை அறிவேனுதலின், அவர் வருகைகண்டு மகிழ்ந்திலேன்" என்று கூறினள்.

மனைவி, தன்மீது குற்றம் சாட்டிக்கூறவே, மறை விடம்விட்டு, அவள்முன்வந்து நின்ருன். நின்று "பெண்ணே! பெரிய மதில்சூழ்ந்த அகன்ற கோட்டை

யைக் காக்கும் காவலர், கோட்டையுள் கள்வர் எவரும் புகாதிருக்கவும், கள்வரால் ஏதம் உண்டாகும் என அஞ்சிய அச்சத்தால், கள்வரைக் கண்டோம் எனக் கூறிக் கலங்குவார்போல், எம்மைவிட்டு அகன்று நின்று, நான் செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாகச் சொல்லி, சினந்து வருந்தாதே; நான் உன் அடிமை உன் ஆணையை மீறும் உள்ள உறுதி, இவ்வடிமைக்கு இல்லை'' என்று கூறிப் புணிந்து நின்றான்.

"குற்றம் புரிந்திலேன்'' எனக் கணவன் கூறக் கேட்ட அவள்; அவன் குற்றம் உடையன் என்பதை ஊர் அறியச் செய்வது தன் கடனே எனக் கருதினாள்; அதற்கேட்ப, அவனும், பரத்தையைப் புணர்ந்த விடத்து அவள் மாலையின் மலர்கள் சில, இதழ் அற்று அவன்மீது உதிர, அதை அறியாது, அம்மலர்த் துகள்களோடு, அவள் முன்வந்து நின்றான்; அதை அது வரையும் காணாதிருந்தவன், அவள் தன்மீதும் குற்றம் சாட்டிக் கூறவே, அவன் ஒருமுறை தன்னை நோக்கிக் கொண்டான்; தன்மீது மலர் இதழ்கள் சிந்திக் கிடப்பதை அறிந்தான்; அதை அவள் அறியாவாறு அகற்றிவிட எண்ணினான்; உடனே பெருங்காற்று வீசும் இடமாகப் பார்த்து நின்றான்; மலர் இதழ்கள், காற்றில் பறந்து மறைந்தன; அதை அவள் அறியக் கூடாது என அவன் விரும்பினாலும், அவள் அதை அறிந்து கொண்டாள்: அறிந்து கொண்டதை அவன் அறியக் கூறி, "ஆகவே அன்ப! நீ என் மகன் மீதுகொண்ட அன்பால் வந்தவன் அல்லை'' என்று கூறிக்குற்றம் சாட்டினாள்;

அவனால் ஏதும் கூற முடியவில்லை; தன் குற்றத்தை மறைப்பது இயலாது என்பதை அறிந்தான்; ஆயினும் அதை ஒப்புக்கொள்ளவும் அஞ்சினான்; செய்வதறியாது

விழித்தான்; இறுதியில் மகன் துணையால் அவள் மனத்தை மாற்றத் துணிந்தான்; உடனே, "பெண்ணே; நான் குற்றம் அற்றவன் என்று கூறுகிறேன்; அதை ஏற்றுக்கொள்ள நீ மறுக்கிறாய்; அவ்வாறே நான் குற்றம் புரிந்தவனாகவே கொள்; ஆனால் அது கருதி மாறுபட்டு நிற்பதற்கு இதுவல்ல சமயம்; அதோ நிற்கிறான் நம் மகன்; அவனைத் தனியே விடுத்து நாம் முரண்பட்டு நிற்பது முறையாகாது, கன்று தனித்திருக்கப் பார்த்திராது பசு; நாம் பார்த்துப் பிரிந்து நிற்கிறோம்; இந்நிலை இனியும் வேண்டாம்; கன்றைக் கண்டு விரைந்தடையும் ஆ போல், நம் மகனை, இருவரும் ஏந்தி இன்புறுவோமாக" என்று கூறிக்கொண்டே, மனைவியின் தோளிற் கிடக்கும் மகனைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டான்; அக்காட்சி கண்டு அகம் மகிழ்ந்தாள் அவள்.

" மைஅற விளங்கிய மணிமருள் அவ்வாய்,தன்
மெய்பெறு மழலையின் விளங்குபூண் நனைத்தரப்,
பொலம்பிறையுள் தாழ்ந்த புனைவினை உருள்கலன்,
நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர,
உருவுஎஞ்சாது இடைகாட்டும் உடைகழல் அந்துகில்,
அரிபொலி கிண்கிணி ஆர்ப்புஒவா அடிதட்பப்,
பாலோடு அலர்ந்த முலைமறந்து, முற்றத்துக்
கால்வல் தேர்கையின் இயக்கி, நடைபயிற்றா
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும்என் உயிர்.

பெரும ! விருந்தொடு கைதூவா எம்மையும் உள்ளாய் ,
பெருந்தெருவில் கொண்டாடி, ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாம் கேட்ப,
மருந்துஓவா நெஞ்சிற்கு அமிழ்தம் அயின்றற்றாப்
பெருந் தகாய் ! கூறு சில

எல்இழாய் ! சேய்நின்று, நாம் கொணர்ந்த பாணன் சிலைதந்து
வாய்ஓடி ' ஏனாதிப் பாடியம் ' என்றற்றா, [ஆங்கே,

நோய்நாம் தணிக்கும் மருந்தெனப் பாராட்ட
ஓவாது, அடுத்து அடுத்து, அத்தா அத்தா என்பான் மாண,
வேய் மென்தோள் வேய்த்திறம் சேர்த்தலும், மற்றுஇவன்,
வாய் உள்ளிற் போகான் அரோ :

உள்ளி, உழையே ஒருங்கு படைவிடக்
கள்ளர் படர்தந்தது போலத், தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு.

ஏதப்பாடு எண்ணிப் புரிசைவியல் உள்ளோர்,
கள்வரைக் காணாது கண்டேம் என்பார் போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல் ; நின்
ஆணை கடக்கிற்பார் யார் ?

அதிர்வில் படிறுஎருக்கி வந்துஎன் மகன்மேல்
முதிர்பூண் முலைபொருத ஏதிலாள் முச்சி
உதிர்துகள் உக்க நின்ஆடை ஒலிப்ப
எதிர்வளி நின்றாய் நீசெல்.

இனி,எல்லா !யாம் தீதிலேம் என்று தெளிப்பவும் கைந்நீவி
யாதொன்றும் எம்கண் மறுத்தா இல்லாயின்,
மேதக்க எந்தை பெயரனை யாம் கொள்வேம்
தாவா விருப்பொடு கன்று யாத்துழிச் செல்லும்
ஆபோல் படர்தக நாம்.''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன், தன் மகனைத் தழுவிநின்ற தலைவி அறியாவாறு சென்று நின்று, அவளோடு உறழ்ந்து கூறி ஊடல் தீர்ந்தது இது.

*1. அவ்வாய் - அழகிய வாய், 2, மெய்பெறு - பொருள் செறியாத; நனைத்தா - நனைய; 3. பொலம் பிறை - பொன்னால் பிறைபோல் பண்ணிய அணி; உருள் கலன் - சுட்டி; 5. எஞ்சாது - முழுமையும்; உடைகழல் - உடுத்த உடை கழன்று போகும்; 6. அரிபொலி - உள்ளே இட்ட பரலால் அழகு பெற்ற; தட்ப - தடுக்க; 7. அலர்ந்த - பருத்த; 9. பெருவிறல் - முருகன்; 11. கை*

தூரவா - கையோயாத; 12. ஞாயர்-செவிலித்தாயர்; பயிற்ற- கற்றுத்தர; 17. வாய்ஓடி - வாய்மறந்து; ஏனாதிப்பாடி - ஏனாதி என்பான் பெயரால் எழுந்த ஒரு பரத்தையர் சேரி; 21. வாய்உள்ளல் - வாயினின்றும்; 22. உண்ழையே - கோட்டையின் உள்ளே; 24. எள்ளுமார் - நகைத்தற் பொருட்டு; 28. கடக்கிற்பவர் - மீறுபவர்; 29. படிறு - வஞ்சனை; எருக்கி - வருத்தி; 30. முச்சி - உச்சியி னின்றும்; 32. எதிர்வளி - எதிர்காற்று; 33. கைந்நீவி - கைகடந்து; 35. எந்தை - என் தந்தை; 36. தாவா - குறையாத; யாத்துழி - கட்டியுள்ள இடத்திற்கு;

# 17

# யரேம் நினக்கு யாம்

கணவன் பரத்தைவீடு சென்று வாழ்ந்தான்; பெற்ற மகனோடு பெருமனைக் கிழத்தியாய் வாழ்ந்தாள் மனைவி. ஒருநாள் மாலை, மகனுக்கு அழகிய ஆடை உடுத்து அணிபல பூட்டி, ஏவல் மகள் ஒருத்தியை அழைத்து, "ஏடி! இவனை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று கடவுளை வழிபட்டு வருக" எனப் பணித்து அனுப்பினாள்; அவளும், அவனோடே சென்று கோயிலை வலம் வந்து வணங்கி வெளியே வந்தாள், வந்த அவளையும் அவள் கையில் தவழும் அம்மகனையும் கண்டாள் ஓர் அழகி; அவள் ஒரு பரத்தை; அம்மகனைப்பெற்ற தந்தை முதன்முதலாகக் காதலித்துக் கைப்பிடித்த பரத்தை; மிகவும் இளமைப்பருவம்; தக்க இன்ன, தகாதன இன்ன என்று எண்ணிப்பார்க்கும் அறிவு வாய்க்காத அத்துணை இளம்பருவம்; செல்லக்கூடிய இடம் இது; செல்லலாகா இடம் இதுஎனப் பாராது, வேண்டிய இடமெங்கும் திரிந்து விளையாடும் பருவம்; அவள், தன்போலும் பருவம் வாய்க்கப்பெற்ற மகளிர்

சிலரோடுகூடி, மணல்வீடு கட்டியும், மரப்பாவைக்கு மணம்செய்தும் விளையாடிக்கொண்டிருந்தாள் ஒருநாள்; அவளை அந்நிலையில் கண்டு காதல்கொண்டான் அம் மகனைப்பெற்ற அவ்விளைஞன்; அவளை வதுவை அயர்ந்து அவளோடு சிலநாள் மகிழ்ந்து வாழ்ந்தான்; பின்னர் அவளையும் கைவிட்டுச்சென்றான்; அன்றுமுதல் அவள் அவன் நினைவால் வருந்திக்கிடந்தாள்; இவ் வகையால், அம்மகனுக்கு அவளும் ஒரு தாயானாள், அதிலும் முதல் தாயாம் முறைமை உற்றாள்; அவள் ஏவல்மகள் ஏந்திச்சென்ற அம்மகனைக்கண்டாள்; அவன் பால் அன்புசுரந்தது; அவனைத் தன்கையில் வாங்கிக் கொண்டாள்; அவள் இன்னள் என்பதை, அப்பணிப் பெண் அறிவாளாதலின், மறுக்காது அளித்து அவள் பின் சென்றாள்; மகனைப்பெற்ற பரத்தை, வீட்டிற்குச் சென்றாள்; அழகிய அணிபலபூட்டிப் பாராட்டினாள்; தன் முன்னிறுத்து, 'மகனே! நான் கண்டு மகிழ, சிறிதே உன் நகைமுகம் காட்டு' என்றாள்; அவனும் அவ்வாறே நகைத்து மகிழ்ச்சியூட்டினன்; அவனையும், அவன் நகை முகத்தையும் கண்ட அவள் கண்முன், அவன் தந்தையே நேர்வந்து நிற்பதுபோல் தோன்ற, அவன் நினைவால், கயிறு அறுந்து முத்து உதிரும் காட்சிபோல் அவள் கண்கள் நீரைச்சொரிந்தன; மேலும் அம்மகன் ஈங்கு இருந்தால், தன் கவலையும் கண்ணீரும் பெருகும் எனக்கருதினாள்; உடனே மகனை எடுத்து, ஏவல் மகள் பால் அளித்து "எடுத்துச்செல்க" என விடுத்தாள்.

ஏவல் மகள், மகனை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்; தன்மனைநோக்கிச் செல்லத்தொடங்கினாள்; சிலவீடுகளைக் கடந்துவந்ததும், தன் வீட்டின் வாயிற் கண்நின்று, யாரையோ எதிர்பார்த்திருந்த ஓர் இளம் பெண், அம்மகனைப் பார்த்துவிட்டாள்; அவளும் ஒரு

பரத்தையே; அம்மகனைப்பெற்ற இளைஞன் உறவை ஒரு காலத்தே பெற்று, இப்போது இழந்து வருந்தியிருப் பவள்; அக்காதல்நோய் அலைக்க அழுது வாழ்பவள்; என்றும் அவன் நினைவால் இளைபவள்; அவள் தன் காதலன் பெற்ற மகனைத்தன் தெருவில்கண்டதும், பாய்ந்தோடிவந்து ஏந்திக்கொண்டாள்; தன்மார்போடு அணைத்துக்கொண்டாள்; அவன் வாயில் பலமுறை முத்தங்கொண்டாள்; மகிழ்ச்சி தாங்கவில்லை; மகனோடு தன் மனையுள் புகுந்தாள்; குழந்தைகளுக்கு அணியும் அணிவகைகளுள் சிறந்த பல அணிகளை ஆராய்ந்து எடுத்து அவனுக்கு அணிவித்தாள்; திடுமென அவள் சிந்தனையில் ஒரு கலக்கம்: “இத்தனையும் செய்கிறோமே, இவனொடு நமக்கு என்ன உறவு; இவனுக்குத் தாயாம் தகுதி எனக்கு ஒருகாலத்தே இருந்தது; அன்று, இவன் தந்தை என்னோடு உறவுகொண்டிருந்தான்; அவன் இன்று என்னை மறந்துவிட்டான்; இந்நிலையில், அவன் பெற்ற இவனொடு எனக்கு உறவு ஏது?” என்று எண்ணி வருந்தினாள்; மகன் மாண்புடையனாதல் கண்டு மகிழ்ந்தாள்; ஆனால், அவன் தந்தையின் குணம் இவன் பாலும் அமைந்துவிடுதல் கூடாதே என்ற எண்ணம் எழ மனங்கலங்கினாள்; காலம் கடந்தது; மகனை மீண்டும் எடுத்து முத்தங்கொண்டாள்; “மகனே; என் கண்கள் சிவக்க அழுது வருந்துமாறு என்னைக்கைவிட்டுப்போன கொடியோனாய உன் தந்தைபோல், நீயும் ஆகிவிடாதே! உன்னைக்காதலிக்கும் மகளிரை வருந்தவிடும் வழக்கத்தை அவன்பால் கற்றுக்கொள்ளாதே” எனக் கண்ணீர் மல்கக்கூறி அவனை அவ்ஏவல் மகள்பால் கொடுத்து அனுப்பினாள்.

மகனோடு, அவன்மனைநோக்கிச் செல்லும் அவளைக் கண்டாள் மற்றோர் இளம்பரத்தை; அம்மகனைப்பெற்ற

தந்தையோடு அப்போது உறவுடையாள் அவள்; அச் செருக்கால், அம்மகன் தாயை வெறுப்பவள்; அவன் தாய், தன் காதலன் மனைவி, அவன் தன்னோடு உறவு கொள்வதைப் பொறுது காய்பவள் என்ற கருத்தால், அவன் தாயொடு பகைகொண்டு வாழ்பவளேனும், அவன் தன் காதலன்பெற்ற கண்மணியாதலின், அவனைத் தன்மனைக்கு அழைத்துச்சென்று, அவனொடு சிறிதுநேரம் மகிழ்ந்திருந்து, அவனை அனுப்பினாள்; இறுதியில் அவனை அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள் பணிப்பெண்.

மகனைக் கோயிலுக்கு அனுப்பிய தாய், அவன் நெடிதுநேரம் கழியவும் வாரானாகவே வருந்தினாள்; வாயிற்கண்சென்று அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கிடந்தாள்; இறுதியில் அவனோடு வந்து சேர்ந்தாள் ஏவல் மகள்; அவள்மீது மாறுச்சினம் கொண்டாள் தாய்; "ஏடி! கோயிலுக்குச்சென்றுவர இத்தனை நாழிகை ஆகாது; நீ கோயிலுக்குமட்டும் சென்று வரவில்லை; இவனொடு நீ எங்கெங்கோ சென்று திரிந்து வந்துளாய்; அதனாலேயே இத்தனை நாழிகை; இவனைக் கூட்டிச்சென்ற இடம் எதையும் ஒளியாமல் என்னிடம் கூறு" எனக் கடிந்துரைத்தாள்.

தாயின் கோபத்தைக்கண்டாள் அவ்வேவல் மகள்; நாழிகை கடந்தது என்பதற்கே இவ்வாறு சினப்பவள், இவனை அழைத்துச்சென்ற இடங்களைக் கூறினால் நம்மை உயிரோடு விடாள் என அஞ்சினாள்; ஆயினும் உண்மையை மறைப்பதும் ஆகாதுஎன எண்ணினாள்; அதனால் "தாயே! சென்ற இடங்களைக் கூறுகிறேன்; சினவாது அமைதியாகக் கேட்பாயாக என வேண்டிக் கொள்கிறேன்" என அஞ்சி அஞ்சிக்கூறினாள்;

அவள் அச்சம் கண்ட தாய் "உன்னைக்கோபித்து ஒன்றும் செய்யேன் ; உண்மையைக்கூறு" என்றாள்.

அப்பெண் கோயிலுக்குச் சென்றதுமுதல் நடந்த நிகழ்ச்சிகளை முறையாகக் கூறிக்கொண்டே வந்தாள் ; அவள் கூறுவனவற்றை அமைதியாகக் கேட்டுவந்த தாய், அவள் "மகன் புதுப்பரத்தை இல்லுள் புகுந்தான்" என்று கூறக்கேட்ட உடனே கடுங்கோபம் கொண்டாள் ; அவள் கண்கள் சிவந்தன ; புருவங்கள் வளைந்து நிமிர்ந்தன ; மகனைப்பிடித்து இழுத்து முன் நிறுத்தினாள் ; "ஏடி ! ஓடி ஒருகோல் கொண்டுவா என அவளை விரட்டினாள்" தாயின் செயல்கண்டு நடுங்கி நிற்கும் அம்மகனை "ஏடா ! அவள் யார் ? உனக்கு என்ன உறவு ? அவள்பால் நீ செல்லலாமோ ? பார்த்த உணவைப் பருந்தடித்துச் செல்வதுபோல் நான் இங்கு வருந்தி வாடுமாறு, உன் தந்தையைக் கைப்பற்றித் தன் வயத்தனாக்கிக்கொண்ட கொடியவள் அவள் ; அவனை இமைப்பொழுதும் பிரியாது, அவனோடு எப்போதும் புணர்ந்து, அவன் மார்பிலும், தோளிலும், எள்ளிருக்கும் இடமும்விடாமல், தன் வளையாலும, தொடியாலும் வடுக்கள் பல ஆக்கியவள் அக்கொடியாள்; அவள் அத்தகையள் என அறியாது ஆங்குச் சென்ற உன்னை அலைப்பேன், அறக்கொடியவனே" என்று கூறிக் கோலை ஓச்சினாள் ;

தாயின் கடிய கோபத்தையும், அவள் கைக் கோலையும் கண்டு ; அஞ்சி நடுநடுங்கிப் போனான் அம் மகன்; கண்கள் நீர்மல்க, வாய் திறந்து அழத் தொடங்கினான் ; மகன் அஞ்சிய நிலைகண்டாள் தாய்; கணவன் மீதுகொண்ட கோபத்தால், இவனைக் கடிந்து கொண்டேனே என எண்ணி வருந்தினாள் ; உடனே மகனை வாரி எடுத்தாள் ; கண்ணீரைத் துடைத்தாள் ; களிப்

பூட்டினாள்; அழுகை ஓய்ந்தான் அவனும்; அவனை அழைத்துச் சென்று அவனோடு ஒருபால் அமர்ந்தாள்; அவனை நோக்கி, " மகனே! நடந்ததை மறந்துவிடு. அதுபோலும் இடங்களுக்கு இனிச் செல்லாதே; உன் தந்தையை இழந்து, நம்போல் வருந்தி வாடுவார் வீட்டிற்கு வேண்டுமானால் செல்; இனி, உன்னை நானும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பேன்; நீயும் போதல் கூடாது" என்று அறிவுரை கூறி அணைத்துக் கொண்டாள்.

" ஞாலம் வறம்தீரப் பெய்யக் குணக்குஏர்பு
காலத்தில் தோன்றிய கொண்மூப்போல் எம்முலை
பாலொடு வீங்கத் தவநெடிது ஆயினை;
புத்தேளிர் கோட்டம் வலம்செய்து இவனொடு
புக்கவழி எல்லாம் கூறு.

கூறுவேன்; மேயாயே போலவினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல்யான்.

காயேம்,

மடக்குறு மாக்களோடு ஓரை அயரும்
அடக்கம்இல் போழ்தின்கண் தந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாய்உழைப் புக்காற்கு, அவளும்
மருப்புப்பூண் கையுறை யாக அணிந்து
'பெருமான்! நகைமுகம் காட்டு' என்பாள், கண்ணீர்
சொரிமுத்தம் காழ்சோர்வ போன்றன; மற்றும்,
வழிமுறைத் தாய்உழைப் புக்காற்கு அவளும்,
மயங்கு நோய் தாங்கி, மக்கள்எதிர் வந்து
முயங்கினள்; முத்தினள் நோக்கி நினைந்தே
" நினக்கு யாம் யாரேம் ஆகுதும்?" என்று
வனப்புறக் கொள்வன நாடி அணிந்தனள்;
ஆங்கே", அரிமதர் உண்கண் பசப்ப நோய் செய்யும்
பெருமான் பரத்தைமை ஒவ்வாதி" என்றாள்,
அவட்கு இனிதாகி விடுத்தனன், போகித்

தலைக்கொண்டு நம்மொடு காயும் மற்றீதோர்
புலத்தகைப் புத்தேள்இல் புக்கான் ; அலைக்குஒரு
கோல்தா ; நினக்கு அவள் யாராகும் ? எல்லா !
வருந்தியான் நோய்கூர, நுந்தையை என்றும்
பருந்து எறிந்தற்றாகக் கொள்ளும் ; கொண்டாங்கே,
தொடியும் உகிரும் படையாக, நுந்தை
கடியுடை மார்பில் சிறுகண்ணும் உட்காள்
வடுவும் குறித்தாங்கே செய்யும், விடு இனி ?
அன்ன பிறவும் ; பெருமான் ! அவள்வயின்
துன்னுதல் ஓம்பித் திறவதின் முன்னிநீ
ஐயம் இல்லாதவர் இல்ஒழிய, எம்போலக்
கையாறு உடையவர் இல்அல்லால் செல்லல் ;
அமைந்தது இனி நின் தொழில்.''

**புத்தேளிர் கோட்டம் வழிபட, சேடியரோடு சென்ற மகன், கணவன் காதலிக்கும் பரத்தையர் இல்லிற்குச் சென்று வந்தமை அறிந்ததாய் அவனைச் சினந்து கூறியது இது.**

*1. ஞாலம் - உலகம்; வறம்தீர - வறுமை நீங்க; குணக்கு - கிழக்கு; 2. கொண்மூ - மேகம்; 3. தவநெடிது ஆயினை - மிகவும் நீட்டித்தாய்; 4. புத்தேளிர் கோட்டம்- கோயில்; 6. மேயாயே போல - விரும்பினவள்போல்; 9. மடக்குறுமாக்கள் - மடப்பம் பொருந்திய இளமகளிர், 11. தொடக்கத்துத்தாய் - தந்தையின் முதற்காதலி; 16. மயங்குநோய் - காதலால் மயங்கும் நோய்; 17. முயங்கினள் - தழுவினள்; 23, தலைக்கொண்டு - நம்மோடு மாறுபாடு கொண்டு; காயும் - சினக்கும்; 24. புலத்தகை- புலக்கும் இயல்புடைய; புத்தேள் - புதியாள்; 29. சிறுகண்ணும் - சிறிய இடமும்; உட்காள் - அஞ்சாது; 32. துன்னுதல் - நெருங்குதல்; 33. ஐயம் இல்லாதவர்- காதலன் வருவனோ? வாரானோ? எனும் ஐயம்கொள்ளாது வருவான் என உறுதியாக நம்பும் பரத்தையர்; 34. கையாறு உடையவர் - காதலனை இழந்து துன்புறுவார்; 35. அமைந்தது - முடிந்தது.*

# 18

# வெந்த புண்ணில் வேல்

அரண்போல் பெரியமனை ; அளந்துகாணமாட்டாப் பெருஞ்செல்வம் ; வருவார்க்கு வாரி வாரி வழங்கவும் வற்றாத பெரிய சோற்றுமலை ; இன்பத்தின் ஊற்று என விளங்கும் ஓர் இளமகன் ; வளமும் வனப்பும்மிக்க இவ்வாழ்வு வாய்க்கப்பெற்றும் வருந்திக்கிடந்தாள் ஒருத்தி ; அவள் கணவன், அவளோடு அவ்வீட்டில் வாழும் விருப்பம் இலனாய் பரத்தை ஒருத்திபால் ஆசை கொண்டு, அவளோடு அவள்மனையில் வாழ்ந்திருந்தான்; அதனால் மனம் நொந்த அவன் மனைவி, தன் மகன்முகம் காணும் மகிழ்ச்சியால் ஒருவாறு உயிர்தாங்கியிருந்தாள்.

ஒருநாள் மாலை, தன் மகனை நன்கு அலங்கரித்து, சேடி ஒருத்திபால் அளித்து, "இவனோடும் தேர்ஏறிச் சென்று, ஊர்ப்பொதுவிடத்தே, இளஞ்சிறுவர்கள் ஆடுதற்குஎன அமைந்துள்ள ஆடிடத்தே, இவனைச்சிறிது பொழுது ஆடவிட்டு அழைத்துவருக" எனப்பணித்துப் போக்கினாள் ; அவள் அவனை அழைத்துக்கொண்டு

ஆடிடம் அடைந்தாள்; ஆங்குப் பரப்பிய புதுமணலில் அவன் சிறிதுபொழுது ஆடிமகிழ்ந்தான்; சிறிது ஆண்டு முதிர்ந்த இளம்சிறுவர், பனங்காய்களைப் பறித்துக்கொணர்ந்து, அவற்றைக் கொடிகளை முறுக்கிப் பண்ணிய கயிற்றில் பிணைத்து, ஈர்த்து ஆடிமகிழ்ந்தனர். அதையும் கண்டு மகிழ்ந்தான் அவ்இளமகன்; பொழுதும் மறைந்தது; மேலும் இருந்தால் தாய் சினப்பள் எனக்கருதி அவனைத் தேரில் ஏற்றிக்கொண்டு வீடு திரும்பினாள் சேடி.

அவன் தேர் ஊர்ந்துசெல்லும் காட்சியைச் சாளரத்தின் அகத்தே இருந்து காணும் அத்தெருவாழ் மக்கள் "ஆலமர் செல்வனின் இளையமகனும் முருகவேளுக்கு, ஊரார் விழா எடுக்கும் நாள் வந்துவிட்டதோ; விழாவின் முதல்நாள் அன்று அவன் உலாவரும் காட்சிதானோ இது" எனக் கருதிக்களித்தனர்; அவ்வாறு அவனைப் பார்த்து மகிழ்ந்தாருள் ஒரு பரத்தையும் இருந்தாள்; அண்மையில் வந்த அவன் தேரைக்கண்ட அவள், அத்தேரில் இருப்போன் இன்னான் என்பதை அறிந்துகொண்டாள்; அவன், தன் காதலன் ஈன்ற கான்முளை என்பதைக் கண்டுகொண்டவுடனே, தன்காலில் கட்டிய சிலம்பொலிக்க ஓடி, அவன் தேரை அடைந்தாள்; அவள் வருகைகண்டு தேரும் நின்றது; அவள் அவனை எடுத்து அணைத்து முத்தம்கொண்டு, "என் செல்வ மகனே! உன் கண்ணழகைக் கண்டும், நெற்றியைத் துடைத்தும், கன்னத்தைக் கைகளால் தடவியும் களிக்கும் உன் தாய்முன் அவர் மனம் மகிழுமாறு, நீ உன் கைகளால் செய்யும் சிறு குறும்புகளை, நான் காணச் செய்து என்னைக்களிப்பூட்ட, இன்று இரவு என் இல்லில் தங்கிச்செல்வையோ? நீ அவ்வாறு தங்குவையாயின் என் புதுநலம் விரும்பி என்னைக்காதலித்துவந்து, அந்

நலத்தை உண்டு, பின்னர் என்னை மறந்து பிரிந்துவாழும் நாணற்ற நல்லோனாய உன் தந்தையால் நான் உற்ற நோயை மறந்து மகிழ்வேன்; ஆகவே மகனே! என் இல் வந்து வாழ வருக!" எனக்கூறி வழிமறித்து நின்றாள்; அவளை மதியாது அவள் கூறுவனவற்றைக் கேளாது வந்துவிடுதல் அம்மகனால் இயலாதுபோயிற்று; அதனால், அங்குத்தங்கி, அவள் கூறுவனகேட்டுப் புறப்பட்டான்; அதனால் சிறிதுகாலம் கடந்தது.

வீட்டில் மகனை விளையாட அனுப்பிய தாய்க்கு, அவனைக்காணாது இருக்க முடியவில்லை; அவன் வருகையை விரைவில் எதிர்நோக்கினாள்; ஆனால் நாழிகை பல கழியவும் அவன் வந்திலன்; பலமுறை வெளியேவந்து வீதியை நோக்கினாள்; இறுதியில் வாயிற்கதவில் சாய்ந்து அங்கேயேநின்று அவனை எதிர் நோக்கியிருந்தாள்; மேலும் மகன் பால்உண்டு நாழிகை பல கழியவே, அவள் மார்புமுலையில் பால்மிகுந்து துன்புறுத்திற்று; இவ்வாறு அவன் வருகையைக் காணாது துடிதுடித்துக் கிடந்தாள்; இறுதியில் தேர் வந்து நின்றது; மகனை இறக்கி அழைத்துக்கொண்டு மனையுள் புகுந்தாள் சேடி.

தாய் சேடியைப்பிடித்து நிறுத்தினாள்; "ஏடி, நான் வழிமேல் விழிவைத்து வருந்திக்கிடக்கிறேன்; நான் இத்தனைநேரம் வாடிவருந்த, நீ வரத்தாமதித்தது ஏன்?" எனக் கேட்டுச் சினந்தாள்; தாயின் சினங்கண்டு அஞ்சிய சேடி, "தாயே! அதற்குக்காரணம் இதோ நிற்கும் இக்கள்வனே" என்று மகனைச் சுட்டிக்காட்டி விட்டு, நடந்ததை நடந்தவாறே உரைத்து, "இவன் அங்கு அத்தனைநேரம் தங்கியதால் காலங்கடந்ததல்லது என்னால் நேர்ந்த தவறு எதுவும் இல்லை" என்று கூறி உட்சென்றாள்.

சேடி கூறிய அனைத்தையும் கேட்டுக்கொண்டே அங்குவந்து சேர்ந்தான் அவ்வீட்டின் தலைவன். கணவனை அந்நிலையில்காணவே, அவள் சினம் அளவு கடந்து பெருகிற்று; மகன்தலையில் புதிய மலர்சூட்டி யிருப்பதைக்கண்டாள்; அது அப்பரத்தை சூட்டிய மலர்என அறிந்து அதை எடுத்து எறிந்தாள்; "மகனே! இனி, இவ்வாறு உனக்கும், உன் தந்தைக்கும் உறவு டையளாய அவள் சூட்டும் மலர் அணிந்து ஈண்டு வாரற்க" என்று கூறி வருந்தினாள்; அந்நிலையில், தம் காதலியர் பண்ணிய புணர்ச்சிக்குறிகள் விளங்கும் மேனியோடு வந்து நிற்கும் காதலனைக் காணவே, அவள் கோபம் கொடிய துயராகமாறிற்று; "மகனே தன் காதலியின் மனைபுகுந்து, அவள் சூட்டிய மாலையோடு வந்து தந்த நோயினும், அவன் தந்தை அக்காதலியைக் கூடிய கோலத்தோடே வந்து நின்று தரும் நோய் பெரிதாம்; அது வெந்தபுண்ணில் வேல் எறிந்தாற் போல் வருத்துகிறது என்னை" என வெறுத்துகூறி வாயடைத்துக் கிடந்தாள்.

"பெருந்திரு நிலைஇய, வீங்குசோற்று அகன்மனைப்,
பொருந்து நோன்கதவுஒற்றிப், புலம்பி, யாம் உலமர
இளையவர் தழூஉஆடும் எக்கர்வாய் வியன் தெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்கு எனச் சென்றாய்,
உளைவுஇலை; ஊட்டல் என் தீம்பால் பெருகும் அளவெல்லாம்
நீட்டித்த காரணம் என்?

கேட்டீ;

பெருமடல் பெண்ணைப் பிணர்தோட்டுப் பைங்குரும்பைக்
குடைவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்
பெருமணித் திண்தேர்க் குறுமக்கள் நாப்பண்
அகன்நகர் மீள்தரு வானாகப், புரிஞெகிழ்பு,
நீல நிரைப்போது உறுகாற்கு உலைவன போல்
சாலகத்து ஒல்கிய கண்ணர், உயர்சீர்த்தி

ஆல்அமர் செல்வன் அணிசால் மகன் விழாக்
கால்கோள் என்று ஊக்கிக், கதும் என நோக்கித்
திருந்தடி நூபுரம் ஆர்ப்ப இயலி, விருப்பினல்,
கண்ணும் நுதலும் கவுளும் கவவியார்க்கு
ஒண்மை எதிரிய அங்கையும் தண்ணெனச்
செய்வன சிறப்பின் சிறப்புச் செய்து, இவ்இரா
எம்மொடு சேர்ந்து சென்றீவாயால் ; செம்மால் !
நலம் புதிதுஉண்டு உள்ளா நாண்இலி செய்த
புலம்பு எலாம் தீர்க்குவேம்மன் '' என்று இரங்குபு
வேற்று ஆனுத் தாயர் எதிர்கொள்ள, மாற்றுத
கள்வனல் தங்கியது அல்லால், கதியாதி
ஒள்இழாய் ! யான் தீது இலேன்.
எள்ளலான், அம்மென் பணைத்தோள் நுமர் வேய்ந்த கண்ணியோடு
எம்இல் வருதியோ ? எல்லா ! நீ ; தன்மெய்க்கண்
அம் தீம் சொல் நல்லார் அணிந்த கலம் காட்டி,
முந்தை இருந்து மகன்செய்த நோய்த்தலே,
வெந்த புண் வேல் எறிந்தற்றல், வடுவொடு
தந்தையும் வந்து நிலே.''

விளேயாடப்போன மகன், மீண்டுவருங்கால், அவன் தந்தை காதலியின் மனைபுகுந்து வந்தான் என்பதறிந்து, தலேவி அவனைக் கண்டிக்கும்போது, தலேவனும் வரக்கண்டு, அவள் வருந்திக் கூறியது இது.

1. வீங்கு - பெரிய ; 2. நோன்கதவு - வலியகதவு ; உலமர - வருந்த ; 5. உளேவிலே - கவலேயின்றி ; ஊட்டல் - ஊட்டப்பெருமல். 8. தோடு - இலே ; குரும்பை - பனங்காய் ; 9. குடவாய் - குடம்போன்ற வாயுடைய (காய்) ; வாங்கி - இழுத்து ; 10. நாப்பண் - நடுவே ; 11. புரிநெகிழ்பு - மலர்ந்து ; 12. நீல நிரைப்போது - வரிசையாக நிற்கும் நீல மலர்கள் ; உறுகாற்கு - வீசும் காற்றிற்கு ; உலேவனபோல் - அசைவனபோல் ; 13. சாலகம் - சாளரம் ; ஒல்கிய - தளர்ந்த ; சாளரத்திற்கு

அப்பால் நிற்கும் மகளிரின் சுழலும் கண்கள், காற்றால் அசையும் நீலப்போதுகளின் வரிசைபோல் தோன்றும் 15. கால்கோள் - தொடக்கம்; 16. நூபுரம் - சிலம்பு; இயலி - நடந்து; 21. உள்ளா - நினையாத; மறந்துபோன 23. வேற்று ஆனுத்தாயர் - வேற்றுத்தாய், ஆனல் அன்புகுறையாத தாய். 25. கதியாதி - சினவாதே; 26. எள்ளலான் - இகழ்தலால்; 28. அம் - அழகிய; தீம் - இனிய; கலம் - அணிகலன்கள் அழுத்திச்செய்த வடு; 29. நோய்த்தலை - நோய்க்குமேலும்.

# 19

# யானே தவறுடையேன்

தெருவுதோறும் தேவகோட்டம் எனக் கூறுமாறு கோயில்கள் மலிந்த ஒரு மாநகரின் செல்வக்குடியில் வாழ்ந்திருந்தாள் ஒருபெண். பால்மணம் மாருப்பருவம் வாய்ந்த தன் மகனேடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தாள்; மகனின் மலர்ந்த முகம்கண்டும், அவன் மழலைமொழி கேட்டும் மகிழ்ந்திருந்தாளேனும், தன்னைக்கைவிட்டுக் கணிகையர்பின் திரியும் தன் கணவன் நிலைகுறித்து கண்ணீர் உகுத்துக் கலங்கிக்கிடந்தாள். அவள் ஒரு நாள் தன் மகனை அழகுசெய்து, சேடி ஒருத்திபால் அளித்து, ஊரில்உள்ள கோயில்களுக்கெல்லாம் சென்று வழிபாடாற்றி வருமாறு அனுப்பினுள்; குடைவிரித்து, அதன் நிழலில் செல்லும் தன் மகனின் தோற்றம், ஒரு இலை ஓங்கி உயர்ந்து நிற்க, அவ்இலையடியில் மலர்ந் திருக்கும் தாமரை மலர்போல் தோன்றக்கண்டு, மகிழ்ந்து அவன் மறையும்வரை பார்த்திருந்துவிட்டு உள்ளே சென்றுள்.

மகனை அழைத்துச்சென்ற சேடி, தாய் கூறியவாறே கோயில்கட்கு எல்லாம்போய்க் கடவுளரை வணங்கினள்; பின்னர் அவனோடு வீடுதிரும்பினள்; அவர்கள் மீண்டு வரும்வழி ஒரு பரத்தையர் தெரு; அத்தெருவில், அவன் தந்தையின் அன்பைப்பெற்ற பரத்தையர் பலர் வாழ்ந்திருந்தனர்; . அவர்கள், சேடியொடு செல்லும் அவனைக்கண்டனர்; அவன் தந்தை ஒருகாலத்தில் தம்மைக் காதலித்து, தம்மோடு வாழ்ந்து, தம்நலத்தை நுகர்ந்துவிட்டு, இப்போது தம்மை அறவே மறந்து கைவிட்டுச்சென்ற கொடியோனாயினும், அவன்பால் அவர்கொண்ட காதல் குறையாமையால், அவன் மகனைக் கண்டவுடனே, அக்காதல் உணர்வு உயிர்பெற்று ஓங்க, அம்மகன்பால் பேராசைகொண்டனர்; அவ்வாசை மிகுதியால், தம் வீடுகளை விடுத்து வெளியே ஓடி வந்தனர்; அவனைச் சூழ்ந்துநின்று, தந்தை அழகே தன் அழகாக்கொண்ட அவன் பேரழகைக்கண்டு மகிழ்ந்தனர்; பின்னர்த் தாம் அணிந்த அணிகளுள் சிறந்தனவும், அவனுக்கு ஏற்றனவுமாய அணிகளை ஆராய்ந்து, அவனுக்கு அணிவித்து அகம் மகிழ்ந்தனர்.

மகன்சென்று நேரமாகிவிட்டது; காலம் கடக்கக் கடக்க அவள் கவலை பெரிதாயிற்று; மேலும் அவன் பால் உண்ணும் நேரமும் போய்விட்டது; பால் தாராமையால், பால் அவள் மார்பில் குடம்போல் கட்டிவிட்டது; அதைப் பிறர் பாராவாறு பலமுறை தன்கைகளால் அழுத்தித் தேய்த்துவிட்டாள்; அப்படியும் அது அடங்கவில்லை. இவ்வாறு வருந்தி, அவள் மகனை எதிர் நோக்கி இருந்தாள்; அந்நிலையில், பரத்தையர் அணிவித்த அணியோடு, அவள்மகன் வந்துசேர்ந்தான்; மகனைக் காலங்கடந்து அழைத்துவந்த சேடியைச் சினந்தாள் தாய்; “கோயில்களுக்குச் சென்று வழிபட்டு

வர இத்தனைகாலம் வேண்டியதில்லை; கோயிலுக்குச் செல்லும் வழியில், இவன் தந்தைசெல்லும் பரத்தையர் வீடுகள் உள என்பதை அறிவேன்; நீ, இவனை அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்கே சென்றுவந்துளாய். என் கட்டளையை நீ மீறிவிட்டாய்; அப்பரத்தையருள் எவள் வீட்டிற்கு இவனைக் கூட்டிச்சென்றாய்; அதை ஒளியாமல் உரை'' எனச் சினந்து வினவினாள்.

தலைவியின் சினங்கண்டு நடுங்கிய சேடி, பரத்தையர் தெருவில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்று விடாது உரைத்தாள். தன்மகன், பரத்தையர் அளித்த-அதிலும், தன்பால் அன்பற்றுத்திரியும் தன் கணவன் காதலிக்கும் பரத்தையர் அளித்த அணிபூண்டு வந்துளான் என்பது கேட்டு வெறுப்பும் வேதனையும் கொண்டாள்; பரத்தையர் அளித்த அணி பூண்டுவந்த இவனும் ஒரு மகனா? சீ! இவன் மகன் அல்லன்; வெறுத்து ஒதுக்கத்தக்க வீணன் இவன்'' என்று தனக்குள்ளேகூறிக் கலங்கினாள்.

பின்னர், மகனைப்பிடித்து ஈர்த்துத் தன்முன்நிறுத்தினாள்; ''நாடோடிப்பயலே, நடுத்தெருவில், ஊர்ப் பெண்கள், என்னை எள்ளிநகைக்கும் கருத்தோடு, உன் கைவிரலில் இட்ட மோதிரம் எது? அதை எனக்குக் காட்டு'' என்று கடிந்துரைத்தவாறே, அவன் கைவிரலைப்பற்றி, அதில் அணிந்திருந்த மோதிரத்தை நோக்கினாள். நறுமலரின் அழகிய செவ்விதழ்போல் சிவந்த விரலுக்குப் பொருந்துமாறு செறிக்கப்பெற்ற மோதிரத்தைக்கண்டாள்; சுறுமீன் உருவம் பொறித்த அம்மோதிரத்தைக்கண்ட அவள், ''சுறு காமன்கொடி: அதைப்பொறித்த மோதிரத்தை இவன் கையில் அணிந்துவிட்ட அப்பரத்தை, 'இவன் தந்தையை, உன் கணவனை, நான் என் வயமாக்கிக்கொள்வேன்; அவன்

மார்பில் காமன்கொடியைப் பொறித்து, அவனை என் அடிமையாக்கி கொள்வேன்' என்று கூறி எனக்குவிட்ட எச்சரிக்கையன்றே இது; நான் கண்டு கலங்கவேண்டிய வற்றுள் இதுவும் ஒன்றுபோலும்" எனக்கூறிக் கண்ணீர் சொரிந்தாள்.

சுறுபொறித்த சிறுவிரல் மோதிரம் கண்டு சினந் தவள், மகன்கையில் புதிய தொடி ஒன்றிருக்கக் கண்டாள்; அதைப் பற்றி நோக்கினாள்; அது, அவள் கணவனுக்குரியது; கணவன்கையில் இருந்தகாலத்தில் தான்கண்டு மகிழ்ந்த தொடி, இன்று அதை அவன், தான் விரும்பும் பரத்தைக்கு அளிக்க, அவள் அதைத் தன்மகன் கையில் அணிந்து அனுப்பியுள்ளாள் என்பதை அறிய, வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சினாற் போலாயிற்று அவள்நிலை, "நான்கண்டு வருந்த எனக்கு நேர்ந்த இழிநிலைகளுள் இதுவும் ஒன்று" என நினைந்து வருந்தினாள்; தன்காதலன் தன்னை விரும்பித் தனக்கு அளித்த இத்தொடியை, அப்பரத்தை இவன் கையில் சூட்டி அனுப்புவானேன்? அனுப்பிய அவள் கருத்து யாதாம் என்று சிந்தித்து நின்றாள். "தன்னினும் நான் குறையுடையேன்; தன் கணவனைக் காதலிக்கும் தகுதி எனக்கு இல்லை, என என்னை இழித்துப் பேசி இறுமாந்து திரியும் அவள் உணர்ந்து கொள்ளட்டும், அவள் கணவனைக் காதலிக்கும் தகுதி எனக்கும் உண்டு; அவளுக்கு எந்நிலையிலும் நான் தாழ்வுடையேனல்லேன் என்பதைக் கூறாமல் கூறி, என்னை எள்ளி இகழும் கருத்தினாலேயே அவள் இதை இவனுக்கு அணிவித்து என்பால் அனுப்பியுள்ளாள்; இதுவும் எனக்கு ஏற்பட்ட ஓர் இழிவு போலும்" என்று கூறிக் கலங்கினாள்;

தாயின் சொல்லும் செயலும் கண்டு அஞ்சினான் அவ் இளம் மகன்; அஞ்சவேண்டாத காலத்தே அவன்

அஞ்சியது காண அவள் வருந்தினாள். தந்தை செய்த தவற்றினுக்கு மகனைக்காயும் என் மடமையை என்னென்பேன் எனத் தன்னை நொந்துகொண்டாள்; உடனே, அஞ்சி அகன்று நிற்கும் மகனை அருகழைத்து அணைத்துக்கொண்டாள்; "மகனே! அஞ்சாதே; குற்றம் செய்தவன் நீ அல்லை; இவ் அணிகளை உனக்குத்தந்த அப் பரத்தையரும் தவறு செய்தவர் அல்லர்; தவறு உன் தந்தை உடையதோ என்றால், அதுவுமில்லை; இள வேனிற் காலத்தில், ஆற்றில் தெளிந்தோடும் தண்ணீர் போன்றவன் உன் தந்தை; அவன் எல்லார்க்கும் இனியன்; அவன், யாருக்கு எதை வேண்டுமாயினும் அளிக்கும் உரிமை உடையான்; ஆகவே, அப்பரத்தையர்க்கு இத்தொடி அளித்த அவன் செயலும் குற்றம் உடைத்தன்று; 'இதை இவனுக்கு அளித்தவர் யார்' என்று கேட்டு, அதனால் இத்தனையும் அறிந்து, வருந்தும் நானே தவறுடையேன்; நான் அதைக் கேட்டதே தவறு; ஆகவே, மகனே! அதுகுறித்து நீ அஞ்சாதே" என்று கூறி, அவன் அச்சத்தை அகற்றி அணைத்துக்கொண்டு அழுது கிடந்தாள்.

"உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்
நறுவடி ஆர்இற் றவைபோல் அழியக்
கரந்துயான் அரக்கவும், கைநில்லா வீங்கிச்,
சுரந்தஎன் மென்முலைப்பால்பழு தாக,நீ
நல்வாயில் போத்தந்த பொழுதினான், எல்லா!
கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வாஎனச், சென்றாய், விலங்கினை;
ஈரம் இலாத இவன் தந்தை பெண்டிருள்
யார்இல் தவிர்ந்தனை? கூறு.
நீருள், அடைமறை ஆய்இதழ்ப் போதுபோல் கொண்ட
குடைநிழல் தோன்றும் நின் செம்மலைக் காணூஉ,
'இவன் மன்ற' யான்நோவ உள்ளம் கொண்டு, உள்ளா

மகன்அல்லான் பெற்ற மகன்', என்று அகன் நகர்
வாயில் வரை இறந்து போத்தந்து, தாயர்
தெருவில் தவிர்ப்பத், தவிர்ந்தனன் , மற்று அவர்
தத்தம் கலங்களுள் கையுறை என்று இவற்கு
ஒத்தவை ஆராய்ந்து அணிந்தார் ; பிறன்பெண்டிர்
ஈத்தவை கொள்வாளும் இஃது ஒத்தன் ' சீத்தை !
செறுத்தக்கான் மன்ற பெரிது.

சிறுபட்டி! ஏதிலார் கை எம்மை எள்ளுபு நீ தொட்ட
மோதிரம் யாவோ ? யாம் காண்கு.

அவற்றுள், நருவிதழ் கண்டன்ன செவ்விரற்கு ஏற்பச்
சுறு ஏறு எழுதிய மோதிரம் தொட்டாள் ;
குறிஅறிந்தேன் ; காமன்கொடி எழுதி, என்றும்
செறியாப் பரத்தை இவன் தந்தை மார்பில்
பொறி ஒற்றிக்கொண்டு ஆள்வல் என்பது தன்னை
அறீஇயச் செய்த வினை.

அன்னையோ ! இஃது ஒன்று ,
முந்தைய கண்டும் எழுகல்லாது என்முன்னர்
வெந்த புண்வேல் எறிந்தற்று ; இஃது ஒன்று !
தந்தை இறைத்தொடி மற்றுஇவன் தன்கைக்கண்
தந்தார் யார் எல்லாஅ ! இது ?

இஃதுஒன்று ; எனஒத்துக் காண்க பிறரும் இவற்கு என்னும்
தன்னலம் பாடுவி தந்தாளா ? நின்னை
இது தொடுகு என்றவர் யார் ?

அஞ்சாதி ; நீயும் தவறிலை ; நின்கை இதுதந்த
பூ எழில் உண்கண் அவளும் தவறிலள் ;
வேனில் புனல் அன்ன நுந்தையை நோவார் யார் ?
மேல்நின்றும் எள்ளி, இது இவன் கைத்தந்தாள்
ஊஙு யாரோ என்று வினவிய, நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன்.''

கோயில் வலம் செய்து வரச் சேடியொடு சென்ற மகன், வழியில் பரத்தையர் சூட்டிய அணியோடு வரக்கண்ட தலைவி, தனக்குள்ளே நொந்து கூறியது இது.

*1. உறுவளி - பெருங்காற்று; தூக்கும்-அசைக்கும்; 2. வடி - பிஞ்சு; ஆர்இற்று - காம்பற்று; 3. அரக்கவும்-அழுத்தித் தேய்க்கவும்; 5. போத்தந்த - போன; 6. கடவுள்கடிநகர் - கோயில்; 7. விலங்கினை - தவறி விட்டாம்; 8. ஈரம் - அன்பு; 9. தவிர்ந்தனை - தங்கினாய்; 10. அடைமறை - இலையால் மறைந்த; 14. வாயில் வரை இறந்து - வாயிலைக்கடந்து; 18. இஃது ஒத்தன்-இவன் ஒருவன்; 18. சீத்தை - கைவிடத்தக்கவன்: 19. செறுத்தக்கான் - கோபிக்கத் தக்கவன்: 20. எள்ளுபு - இகழ்; 23. சுறுஏறு - சுறாமீன்; 31. இறைத்தொடி - முன்கைத் தொடி; 34. தன்னலம் பாடுவி - தன்புகழ்பாடுவாள்; 40. நோய்ப்பாலேன் - துன்பத்திற்குள்ளான நான்.*

# 20

# வருகின்றார் யாரோ?

தெருவில் நடைதேர் உருட்டி விளையாடிக்கொண்டிருந்தான் ஓர் இளம் சிறுவன்; விளையாட்டின்பால் கொண்ட விருப்ப மிகுதியால், பால்உண்ணும் நினைப்பையும் இழந்திருந்தான் அவன். காலம அறிந்து பால் குடிக்கும் கருத்து அவனுக்கு இல்லையாயினும், அவன் தாய், அவன் பால்உண்ணும் காலம் இது என உணர்ந்து உண்பிக்கும் உயர்ந்த அன்புடையளாய் விளங்கினாள். மேலும், காதலித்துக் கடிமணம் புரிந்து கொண்ட கணவன், மகன் பிறந்த பின்னர், மனையறமாண்பை மறந்து, பரத்தையர்பின் திரியும் பழிநிறை வாழ்வுடையனானமையால், தன் உள்ளம் கொள்ளும் துயரை, அவள், தன்மகனைப் பேணி வளர்க்கும் பெரும் பணியால் ஒரு சிறிது மறந்து வாழ்ந்தாள். அதனால், அவள் அவனை, ஆடை அணிகளால் அழகு செய்து ஆட விடுப்பதும், அவன் விரும்பும் பால்உணவை, அவன் உண்ணும் காலம் அறிந்து, உவந்து உண்ணும்

வகையில் இனிய உரை பல வழங்கி உண்பிப்பதும் ஆகிய கடமை மேற்கொண்டு காலங் கழித்தாள்.

ஒருநாள், அச்சிறுவன் தெருவில் ஆடிக்கொண் டிருந்தான்; பால்உண்டு நெடிது பொழுது ஆகவே, அவனுக்குப் பாலூட்ட விரும்பிய அவன் தாய், பொற் கிண்ணத்தில், தேனும் சீனியும் கலந்த தீம்பால் ஏந்தித் தெருவிற்கு வந்தாள்: வந்தவள் மகனின் அழகிய திருக் கோலத்தைக் கண்டாள். பசும்பொன்னை உருக்கி வார்த்து, வளைத்து இரட்டையாகப் பண்ணிய பாதசரம் அணிந்து, நெருப்பில் இட்டு நிறம் ஊட்டிச் செய்த சதங்கை ஒலிக்கும் கால்களின் கவினைக் கண்டாள்; பண்ணுவோன், தன் கைத்திறம் எல்லாம் காட்டிப் பண்ணிய பொன்மணிகளை வரிசையாகக் கோத்த மணி வடமும், அம் மணிவடத்தின் மெலே பவழவடமும் கிடக்க, அவை இரண்டினுக்கும் மேலாக, உள்ளே உள்ள அவற்றின் உருவைப் புறத்தே தெள்ளெனத் தெரி விக்கும் மெல்லிய பூந்துகில் உடுத்த இடையின் இனிய தோற்றத்தைக் கண்டாள். நண்டின் கண்களை நெருங்க வைத்தாற் போன்ற அருப்புத் தொழில்கள் அழகாக அமையப் பண்ணிய, பேரொளி வீசும் பொற்றொடி அணிந்த கைகளின் கவினைக் கண்டாள்; மழை பெய்த நிலத்தில் ஊர்ந்து திரியும் இந்திர கோபத்தின் அழகிய செந்நிறம் வாய்ந்த இருபெரும் பவழங்கள் இருபால் கிடக்க, இடையே, ' இளம் சிறுவர்களை இன்னல் இன்றிக் காப்பீராக ' என இறைவனை வேண்டும் கருத்தால், அவன் படையாம் வாள்போலவும், மழுப்போலவும் பண்ணிய அணிகள் தொங்க, அவ்விரண்டிற்கும் இடையே, அவ்விறைவன் ஏறும் ஆனேற்றின் உருவும் பொறித்த அணிகிடந்தசையும் அழகிய ஆரம் விளங்கும் கண்டத்தைக் கண்டாள்; கடலில் கண்டெடுக்கும் முத்து

முதலாம் அரிய மணிகள் பலவும் கலந்து கோக்கப் பெற்ற கவின்மிக்க மாலையும், தேன் உண்டு வாழும் வண்டுகள் வந்து மொய்க்குமாறு புதுப்புது மலர்களால் தொடுக்கப் பெற்ற தலைமாலையை, நிறத்தாலும் வடிவாலும் நிகர்ப்பதும், நீரில் மலரும் நீலம்தானோ எனக் காண்பார் கண்டு மருளுமாறு, அம்மலரின் நிறம் ஊட்டிப் பண்ணியதுமாய நீலமணிமாலையும் விளங்கும் மார்பைக் கண்டாள். இளமையால், தன் இனிய உறுப்பு நலத்தால், இயல்பாகவே அழகனான தன் மகனை, அவ் அணியும், பிறவும் மேலும் அழகனாக்கிக் காட்டும் காட்சியைக் கண்டு கண்டு களித்தாள்.

அவ்வழகிளம் சிறுவன், தன் சின்னம்சிறு கால்கள் சிவக்குமாறு தளர்நடையிட்டுச் சிறுதேர் உருட்டும் இடத்தை அணுகினாள்; "என் அருமை மகனே ! ஓயாது ஆடித்திரியின் உன் சின்னம்சிறு கால்களின் மெல்லிய விரல்கள் வருந்தும்; ஆட்டத்தை மறந்து அடிமேல்அடி வைத்து, உன் தேரைப் பைய உருட்டிக் கொண்டே என் பால் வந்து, உனக்கென்று உறுசுவை ஊட்டிக் கொணர்ந்த இப்பாலை உண்டு பசியாறிச் செல்க" என்பன போலும் இனிய உரைகளைக் கூறிக்கொண்டே பால் ஊட்டத் தொடங்கினாள்.

பாலும் சுவை மிகுந்துளது; ஊட்டும் காலமும் அவன் பாலுண்ணும் காலம்; இன்முகம் காட்டி, இன்னுரை வழங்கி ஊட்டுகிறாள் தாய்; ஆயினும், ஆடல் பால் உள்ள வேட்கை மிகுதியால், அவன் வயிறார உண்டிலன்; வேண்டுமளவு உண்ணானாயின், விரைவில் பசியால் வருந்துவன் என அறிந்த தாய், அவன் ஆட்டத்தை மறந்து பால்உண்ணும் வகையில் அவன் கருத்தினை ஈர்ப்பனவையும், ஈர்க்கும் நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறியாவது பாலூட்ட வேண்டும் எனக் கருதினாள். மக்கள்;

தாயின் முகத்தை அடுத்துக் காணக் கூடிய முகம், தந்தை முகமே; தாயை அடுத்துத் தந்தையையும், அவன் செயலையுமே மக்கள் அறிவராதலின், மகனுக்கு அவன் தந்தையை நினைப்பூட்டி, "அத்தந்தைக்காக வேண்டி, ஒரு பங்குப் பால் பருகுக" எனக் கூற வாயெடுத்தாள்.

அந்நிலையில் அவன் தந்தை ஆங்கு இல்லை; பரத்தைவீடு சென்றிருந்தான்; அந்நினைவு எழவருந்திய அவள், "மகனே! பாடிப் பிழைக்கும் உரிமையால் எவரிடமும் எளிதிற் சென்று பழகும் தன் பாண் தொழிலால், தான் செய்யும் தவறுகளை மறைத்து வாழும் துறையில் வல்லனாய பாணனை, மீனை அகப்படுத்தும் தூண்டில்போல் தூதாக விடுத்துத், தான் விரும்பும் மகளிர் மனத்தைத் தன் வயமாக்கி, திரிவதையே தொழிலாகக் கொண்ட உன் தந்தைக்குரிய கூறு இது; இதை உண்" எனக் கூறி ஒரு சிறிது ஊட்டினாள்.

கணவன் நினைவை அடுத்து, அவனால் காதலிக்கப் பட்டுச், சிறிதுபொழுது அவன்பால் நலம் நுகர்ந்து, பின்னர் அவனால் கைவிடப்பட்ட மகளிர் நினைவும் எழவே, "மகனே! உன் தந்தை, காணும் புதிதில், 'உன்னைக் கைவிடேன்; கலங்கற்க' எனக் கூறும் ஆணையை உண்மை என உளம்கொண்டு நம்பி, அவனால் தம் நலம்இழந்து, பின்னர், அவன் தன்ஆணை மறந்து கைவிட்டுச் சென்றானாகத், தம் கண்கள், நீலமலர்போன்ற நிறைந்த அழகு அழிய, நீர் ஆறெனப் பெருக அழுது அழுது, உறக்கம் கொள்ளாது உறுதுயர்கொண்டு உள்ளம் நொந்து கிடக்கும் உன் தாய்மார்களுக்காக ஒரு சிறிது உண்" என்று கூறி, ஒரு கூறு ஊட்டினாள்.

அந்நிலையில், பரத்தைவீடு சென்று மீண்டவன், பாணன் முதலாம் தன் தோழர்களோடு ஆங்கு வந்து.

அவளறியாவாறு, அவள்பின் நின்முன்; ஆனால், அவன் வருகையை அறிந்துகொண்டான் அம்மகன்; அதனால், பால் உண்பதை விடுத்து, தந்தையை நோக்கத் தொடங்கினன்; மகன் செயலால், கணவன் வருகையைக் கண்டு கொண்டாள் அவள்; கணவன் ஒழுக்கக் கேட்டால், கலங்கியிருக்கும் அவள், அவனை அவன் தோழரோடு ஆங்குக் காணவே கடுங்கோபம் கொண்டாள்; அதனால், " என் மகனை நான் பாராட்டிக் கொண்டிருக்கும் ஈங்கு, இந்நிலையில், தன் தோழர் களோடு வந்து நிற்கும் இவனை 'வருக' என அழைத் தவர் யாரோ?" என வெறுத்துரைத்தாள். பின்னர் மகனை நோக்கி, "நான் கூறும் பாராட்டுரை கேட்டு மகிழும் மகனே! நான் தரும் என் பங்குப் பாலை முதலில் பருகு; ஈங்கு வந்து நிற்கும் வீணரை வேடிக்கை பார்ப் பதைப் பிறகு மேற்கொள்" என்று கூறிப் பாலூட்டத் தொடங்கினாள்.

ஆனால், தந்தையைக் கண்ட மகிழ்ச்சியால், அம் மகன், தாய் ஏது கூறி ஊட்டவும் உண்ணாது மறுத்து விட்டுத் தந்தையின் முகத்தையே நோக்கி நின்றான். தான் இன்னுரை வழங்கி, இனிய பால் ஊட்டவும் அதை உண்ணாது, பரத்தைவீடு சென்ற பழியோடு வந்து நிற்கும் அவன்பால் பரிவு காட்டுகின்றனனே என்ற எண்ணத்தால் சினம் மிகவே மகனைக் கடிந்தாள்; ஆனால் அம்மகனோ, தாய் கடிவது கண்டு கலங்காது, ஆடியும், பாடியும் அவள் கோபத்தைத் தணித்து மகிழ்ச்சி ஊட்டினான். ஆடல் பாடல்களால் தன்னை மெய்ம்மறக்கச் செய்யும் மகன் செயல் கண்டு மகிழ்ந்த அவள், "மகனே! உன் செயலால், உன்மீது பேரன்பு கொண்டு உன்னைப் பாராட்டும், என் பாராட்டுப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே, உன்னை ஈன்ற யான், உனக்கு உவந்தளிக்கும்

*இப்பாலை உண்ணுவாயாக, இப்பாலை உனக்கு ஊட்டினாலல்லது என் உள்ளம் அமைதி கொள்ளாது; உனக்கு ஊட்டாது யானும் விடேன்" என்று கூறி, மகனுக்குப் பாலூட்டும் பணியினை மேற்கொண்டு? வாயிற்கண்நிற்கும் கணவனை வரவேற்கும் கருத்திழந்து கிடந்தாள்.*

" காலவை, சுடுபொன் வளைஇய ஈர்மை சுற்றொடு
பொடியழல் புறந்தந்த செய்வுறு கிண்கிணி ;
உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேல்
மையில் செந்துகிர்க் கோவை, அவற்றின் மேல்
தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை ;
கையதை, அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுள் சிலகோல் அவிர்தொடி ;
பூண்டவை, எறியா வாளும், எற்றா மழுவும்
செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற்று அவிர்பூண் .
சூடின, இருங்கடல் முத்தமும்; பன்மணி பிறவும் ஆங்கு
ஒருங்குடன் கோத்த உருளமை முக்காழ் மேல்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ் நூலாக,
அரும்பவிழ் நீலத்து ஆயிதழ் நாணச்
சுரும்பாற்றுப் படுத்த மணிமருள் மாலை,

ஆங்க, அவ்வும் பிறவும் அணிக்கு அணியாக, நின்
செல்வுறு திண்தேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பைபயத் தூங்கும் நின்மெல்விரல் சீறடி
நோதலும் உண்டு , ஈங்கு என்கை வந்தீ ;
செம்மால் ! நின்பால் உண்ணிய,

பொய்போர்த்துப், பாண்தலையிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித் தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்தல் தொழிலாகத் திரிதரும்
நுந்தைபால் உண்டி சில.
நுந்தைவாய், மாயச்சூள்தேறி மயங்குநோய் கைமிகப்

பூவெழில் உண்கண் பனிபரப்பக், கண்படா
ஞாயர்பால் உண்டி சில.

அன்னையோ! யாம்எம்மகனைப் பாராட்டக் கதுமெனத்
தாம் வந்தார் தம்பா ல்வரொடு ; தம்மை
வருகென்றார் யார்கொலோ ஈங்கு ?

என்பாலல், பாராட்டு உவந்தோய்! குடியுண்டீத்தை, என்
பாராட்டைப் பாலோ சில.

செருக்குறித்தாரை உவகைக் கூத்தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகீத்தை ;
தண்டுவென் ஞாயர் மாட்டைப் பால்.

**தலைவி, தன் மகனுக்குப் பாலூட்டுகின்ற வழிப், பரத்தையர் வீடுசென்ற கணவன் வந்து சிறைப்புறத்தானாகத், தன்னுள்ளே புலந்து கூறியது.**

*1. ஈரமை - இரண்டாய் அமைந்த ; சுற்று - பாத சரம் ; 2. புறம்தந்த - புறத்தே நிறம் விளங்கப்பண்ணிய; 3. காசு - மணிகள் ; பொலங்காழ் - பொன்மாலை; 4. மை இல் - அழுக்கு இல்லாத ; துகிர் - பவளம்; 5. தைஇய ; உடுத்த ; ஐதுகழல்-நழுவிநழுவி விழுகின்ற; 6. அலவன்-நண்டு ; 7. கோல் - அறுப்புத் தொழில்; அவிர் தொடி-ஒளிவீசும் தொடி ; 8. எறியாவாள் எற்றுமழு - சிவனுக்குரிய படைக்கலங்களாய - வாளும், மழுவும்போல் பண்ணிய அணிகள்; 10. பொய்புலமூதாய் - மழை பெய்த நிலத்தில் மொய்க்கும் இந்திர கோபம் அல்லது தம்பளப் பூச்சி எனப்படும் பட்டுப்பூச்சி; அதன் மேற்புறம், அழகிய செந்நிறம் வாய்ந்தது. 13. முக்காழ் - மூன்றுவடம். 16. சுரும்பாற்றுப்படுத்த மாலை - வண்டுகள் மொய்க்காத மணிமாலை ; 19. தூங்கும் - அசையும் ; 20. வந்தீ - வருக; 21. உண்ணிய - உண்ணற் பொருட்டு ; உண்ணியவந்தீ; 22. பலவல் - பலதொழில்வல்ல ; 23. துடக்கி - வலிதிற்*

கைப்பற்றி ; 26. மாயச்சூள் - பொய்ச்சூள் ; தேறி - நம்பி; 27. பனிபரப்ப - நீர்நிறைய; கண்படா-உறக்கம்இல்லாத; 28. ஞாயர் - தாய்மார்கள் ; 29. கதுமென - திடுமென; 30. தம்பாலவர் - தம்முடைய நண்பர்; 32. குடியுண் டைத்தை - குடிப்பாயாக ; 34. செருக்குறித்தாரை-சினந்து போர்கருதி வந்தாரை; உவகைக் கூத்தாட்டும் - மகிழச் செய்யும் ; 35. வரிசைப் பெரும்பாட்டு - பெரிதும் பாராட்டுதல்; பருகீத்தை - குடிப்பாயாக ; 36. தண்டுவென் - மனம் அமைதி கொள்வேன் ; ஞாயர்மாட்டைப்பால் - தாயர்க்கு உரிய பால்.

# 21

# அன்பிலி பெற்ற மகன்!

அறிவன அறிந்த அறிவுடையவள் அவள்; தவறு செய்பவன் தன் கணவனே ஆயினும், அதை அவனறியக்காட்டித் திருத்தும் அஞ்சாமையும் உடையவள் அவள். அத்தகையள் என்பதை அறியாத அவள் கணவன், அவளையும் மகனையும் மறந்து பரத்தைவீடு சென்று வாழத்தொடங்கினான்; அவனோர் அரசிளங் குமரன்; பகைகொண்டு பாய்ந்துவரும் பகைவர் எத்துணை ஆற்றலுடையரேனும், அவரை அறவே அழித்தொழிக்கவல்ல ஆண்மை, தன் குடைக்கீழ் வாழ்வாரின் குறைகளையும், முறையீடுகளையும் உள்ளவாறு உணர்ந்து அவற்றிற்கேற்ற அறம்வழங்கும் செங்கோற் சிறப்பு, தன்னைப்பாடிவரும் பாணர் பெருநர் முதலாம் இரவலர்க்குக் குறைவறக் கொடுக்கும் கொடை முதலாம் அரிய பண்புகள் பலவும் அவன்பால் பொருந்தியிருந்தனவேனும், அவன் மனைவி, அவன்பால் பரத்தையர் ஒழுக்கம் எனும் குறைகண்டு மனம்பொருளாயினள்; அவன்பால் காணலாம் அவ்வரும்பெரும்

பண்புகள்கண்டு பாராட்டிமகிழும் அவள் உள்ளம், அவன் ஒழுக்கக்கேடறிந்து உறுதுயர்கொண்டது; அதை அவனறியக்கூறிக் கண்டிக்கும் காலத்தை எதிர் நோக்கிக் காத்துக்கிடந்தாள்.

அவளுக்கு ஒரு மகன்; அழகின் திருவுருவாம் அவனைத் தன் அரசநிலைக்கேற்ற ஆடைஅணிகள் அழகு செய்து மகிழ்ந்தாள்; அவனும், தான் பிறந்த அரச குடிக்கு ஏற்ற ஆடற்பொருள்களைவைத்து ஆடி மகிழ்ந் தான்; பெற்ற மகனைச் சான்றோனாக்கும் கடமை மேற் கொண்ட அவன்தந்தை, அதைச்செய்ய மறந்து பரத்தைவீட்டில் வாழ்வதால், அம்மகனை ஈன்று புறம் தந்ததோடு சான்றோனாக்கும் பணியையும் அவளே மேற் கொண்டாள். இவ்வாறு, மகனை அழகுசெய்து, ஆடற் பொருள்களோடு புறத்தே அனுப்பி அவனை ஆட விடுத்து அவ்வழகிய காட்சியைக்கண்டும், ஆடி வீடு திரும்பும் அவனுக்கு, அரியபல அறவுரைகளை உரைத் தும், வாழ்ந்திருந்தாள் அவள்.

ஒருநாள் மகன் தெருவில் ஆடிக்கொண்டிருந்தான்; பவளப்பலகைமீது பொன்னால்செய்து அமைத்த அழகிய யானையைவைத்து ஆடிக்கொண்டிருந்தான்; வேறோர் யானையைத் தன்கோடுகளால் குத்திக்கொல்வதுபோன்ற தோற்றம் அமையவிருந்தது அந்த யானை; வளர்ந்து பேரரசனாய் வாழும் தான் பிற்காலத்தே, காவல்மிகுந்த பெரிய கோட்டைகளைத் தன் வேழப்படையால் பாழ் படுத்தப்போகும் அவன் இன்று, தன்னோடு உடன் ஆடும் இளையமகளிர் ஆக்கிய மணல்வீடு அழியுமாறு தன் யானையை ஈர்த்து ஆடிக்கொண்டிருந்தான்; தேரையின் வாய்போலும் வடிவுடையவாய்ப் பண்ணிய பொற்சதங்கைகள் ஒலிக்க ஆடும் அவன், அவள் கண்ணிற்கு யானைபோன்றே காட்சிதந்தான்; மென்மை

வாய்ந்த அவன் தலையில் கிடந்து அலையம் முக்காழ்வடம் இளைய களிற்றின் மத்தகத்தில் கிடந்து அசையும் ஓடைபோல் காட்சியளிக்கக் கண்டுகளித்தாள்; "இளம சிறுவர்களை இன்னல் இன்றிக்காக்க" என வேண்டிச் செவிலித்தாயர், அவ்விறைவன் படைக்கலங்களாய வாள், மழுப்போலும் வடிவங்களாக ஆக்கி அணிந்த அணிகளை, அவன் வாயினின்றும் ஒழுகும் எச்சில் நனைக்கும் காட்சியை நின்று நோக்கிக்களித்தாள்.

மனத்தைக்கவரும் மகனின் அழகிய கோலத்தைக் கண்டு அவள் மகிழ்ந்திருப்புழி, பரத்தைவீடு சென்றிருந்த அவள் கணவன் வந்து மனைபுகுந்தான்; அவன் வரவைக்கண்ட அவள், அவன் ஒழுக்கக்கேட்டை உணர்த்தி, அவனைத்திருத்த எண்ணங்கொண்டாள்; அதற்கு உற்றதுணையாய்த்தன் மகனைக்கொள்ள விரும்பினாள்; உடனே, வந்த கணவனைக் காணாதாள்போல் எழுந்துசென்று, தெருவில் ஆடிமகிழும் மகனை அழைத்துவந்தாள்; வந்து கணவன் கேட்கும் அண்மையில் ஓரிடத்தே அமர்ந்தாள்; மகனை மடிமீது இருத்தி அணைத்துக்கொண்டவாறே "மகனே! நீ, உன் தந்தையின் வடிவே உன்வடிவாய், அவன் வனப்பே உன் வனப்பாய்க்கொண்டு விளங்குகின்றனை; அழகிய அவ் வடிவும் வனப்பும்கண்டு நான் மகிழ்கிறேன். ஆனால் உன் தந்தையின் வடிவையும், வனப்பையும் முழுதும் அவ்வாறே பெற்றிருக்கும் நீ, உன் தந்தையின் குணங்கள் அனைத்தையும் அவ்வாறே பெற்றுவிடுதல் கூடாது. உன் தந்தைபால் காணலாம் பண்புகளில் கொள்ளலாம் பண்புகள் எவை, தள்ளலாம் பண்புகள் எவை என்பதை என்பால் அறிந்து மேற்கொள்வாயாக. மகனே! தன்னோடு பகைத்த பகைவர்களைப் பாய்ந்து அழித்து, வென்று களம்கொள்ளும் வெற்றிச்சிறப்பு உன் தந்தைபால் உளது; அதை நீ பெற்றுக்கொள். இவர்

நமக்கு வேண்டியவர்; ஆகவே பிழைபுரியினும் போக விடுக; இவர் நம் பகைவர்; ஆகவே இவர்பால் பிழை யில்லை எனினும் பிடித்து ஒறுக்க எனக்கருதும் முறை கேடறியாது, வேண்டுவார்க்கும், வேண்டார்க்கும் ஒரே நீதி வழங்கும் செங்கோல்நெறி நிற்பவன் உன் தந்தை; அச்செங்கோற் சிறப்பினைச் சிறிதும் நழுவவிடாது அவ்வாறே பெற்றுக்கொள்; தன்பால்வந்து, தம் வறுமைநிலை காட்டி இரந்து நிற்பார்க்குப், பொருள்களை வாரி வாரி வழங்கி, அவர் வாட்டத்தைப் போக்கும் வள்ளல் உன் தந்தை; அவ்வண்மைக்குணத்தை வழுவாது பெறுதல் உன் விழுமிய கடனும். உன் தந்தை பால் காணலாம் கொள்ளலாம் குணங்களைக் கேட்டறிந்து கொண்ட நீ, அவன்பால் காணலாம் தள்ளலாம் குணங்கள் இன்னின்ன என்பதையும் கூறுகிறேன் கேள்; மகனே! உன் தந்தையின் செங்கோற்சிறப்பை அறிந்து, 'செந்நெறி நிற்கும் இவன் நம்மைச் சீரழிய விடான்' என நம்பி, மனம் ஒன்றிய காதல்கொண்ட மகளிர், காற்றால் அலைப்புண்ட மலர்போல், மென்தோள் தளர்ந்து, மனநோய் மிகுந்து வருந்துமாறு விடுத்து மறந்துவாழும் கொடுமையில் குன்றென நிற்பன் உன் தந்தை; அந்த ஒரு கொடுமை உன்னைக் குறுகாதொழிக!" எனக் கூறத்தொடங்கினாள்.

தாய் கூறும் அறவுரைகளை அமைதியாக இருந்து கேட்டுவந்த அவன், தாயின் பின்வந்து நிற்கும் தந்தையைப்பார்த்துவிட்டான்; பலநாள் பாராதிருந்த தந்தையைப் பார்த்துவிட்டமையாலோ, அல்லது தந்தையை வைத்துக்கொண்டே அவனைத் தாய் குறை கூறியதாலோ, அவன் தந்தையைக்கண்டு நகைக்கத் தொடங்கினான்; மகனின் நகைமுகம் கண்ட அவள், " தக்க இன்ன, தகாதன இன்ன என நான் அறிவுரை

கூறிக்கொண்டிருக்க, மகன் எனப் பாராட்டற்குரிய மாண்பு சிறிதும் இல்லாதான்பெற்ற இம்மகன், யாரைப் பார்த்து நகைக்கிறான்'' என்று கடிந்துகொண்டே பின்புறம் நோக்கினாள். நோக்கினவள் ஆங்குக் கணவன் நிற்கக்கண்டு, '' இதுகாறும் எங்கோ சென்று மறைந்து வாழ்ந்த இவர்தாமோ, இப்போது ஈங்கு வந்திருப்பவர்'' எனக்கூறி எள்ளினாள்.

மனைவியின் மனநிலையும் சினநிலையும் கண்டு நடுங்கிய இளைஞன், '' பெண்ணே! உனக்கு நான் அறியச்செய்த தவறு எதுவும் இல்லையே; அவ்வாறாகவும் என்னைக் கொடுமை கூறுவது ஏனோ? மகனைக்கட்டிப் பிடித்துக் கொள்ளாது என் கையில் கொடுப்பாயாக'' எனக் கேட்டுத்தன் இரு கைகளையும் ஏந்தி நீட்டினான்; தந்தை கைநீட்டக்கண்ட அம்மகன், மலைமீது பாயும் சிங்கம் போல், அவன் மார்பில் பாய்ந்து பற்றி ஏறிக்கொண்டான். அணைத்து அடக்கவும் அடங்காது, மகன் கணவன் மார்பைப்பாய்ந்து பற்றிக்கொண்டானாகவே, செயலற்ற அவள், '' மனைவியையும், மகனையும் கைவிட்டு வாழும் கடையன் இவன்; மனைவிபாலும் மகன்பாலும் அன்புகாட்ட மறந்த கொடியன் இவன்; ஆகவே இவன்பால் செல்லற்க என நான் விலக்கவும், அதை ஏற்றுக் கொண்டு அச்சொல்வரையில் நிற்காது, அவன்பால் சென்றுவிட்டான் இவன்; அவன் பெற்ற இவன்பாலும், அவனுக்குரிய பண்பே பொருந்திவிட்டதுபோலும்; நான் என்செய்வேன்'' என்று கூறி அப்பாற்சென்றாள்.

'' மைபடு சென்னி மழகளிற்று ஓடைபோல்
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்,
பொலஞ்செய் மழுவொடு வாள்அணி கொண்ட
நலங்கிளர் ஒண்பூண் நனைத்தரும் அவ்வாய்
கலந்துகண் நோக்குஆரக், காண்பின் துகிர்மேல்

பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
கடிஅரணம் பாயா நின்கைபுனை வேழம்
தொடியோர் மணலின் உழக்கி அடியார்ந்த
தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப இயலும் என்
போர் யானை வந்தீக ஈங்கு.

செம்மால்! வனப்பெலாம் நுந்தையை ஒப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்தகுறி என்வாய்க் கேட்டு ஒத்தி;
கன்றிய தெவ்வர்க்கடந்து களம்கொள்ளும்
வென்றி மாட்டு ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி,
ஒன்றினேம் யாம் என்று உணர்ந்தாரை, நுந்தைபோல்
மென்தோள் நெகிழ விடல்.

பால்கொளல் இன்றிப் பகல்போல் முறைக்கு ஒல்கா
கோல் செம்மை ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி,
கால்பொரு பூவின் கவின்வாட நுந்தைபோல்
சால்பு ஆய்ந்தார் சாய விடல்.

வீதல்அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல் மாட்டு ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி,
மாதர்மென் நோக்கின் மகளிரை நுந்தைபோல்
நோய்கூர நோக்காய் விடல்.

ஆங்க, திறன்அல்ல யாம் கழற, யாரை நகும் இம்
மகன் அல்லான் பெற்ற மகன்?
மறைநின்று, தாம் மன்ற வந்தீத்தனர்.

ஆயிழாய்! தாவாத எற்குத் தவறுண்டோ? காவாது ஈங்கு
ஈத்தை இவனை யாம் கோடற்குச், சீத்தை! யாம்
கன்றி, அதனைக் கடியவும் கைநீவிக்
குன்ற இறுவரைக் கோண்மா இவர்ந்தாங்குத்
தந்தைவியன் மார்பில் பாய்ந்தான், அறன்இல்லா
அன்பிலி பெற்ற மகன்."

தலைவி, தன் மகனுக்கு அவன் தந்தைக்குணங்களுள் கொள்ள லாம் குணம் இவை, தள்ளலாம் குணம் இவை, என [illegible] கொண்

**டிருப்புழிப், பரத்தையிற் பிரிந்துசென்ற தலைவன் வந்து நின்றானாக, மகன் அவனை அடைந்தமைகண்டு, தலைவி வருந்திக்கூறி ஊடல் தீர்ந்தது இது.**

*1.* மைபடு - கருநிறம் பொருந்திய; மழகளிறு - இளையயானை; ஓடை - முகபடாம்; *2.* கயந்தலை - மெத் தென்ற தலை; *3.* பொலம்செய் - பொன்னாற்செய்த; *4.* நலம்கிளர் - அழகுமிக்க; ஒண்பூண் - ஒளிவீசும் அணி; *5.* ஆர் - நிறையுமாறு; காண்பின் - காண்டற்கு இனிய; துகிர்மேல் - பவளப்பலகைமீது; *6.* செம்பாகம் - சரி பாதி; *7.* கடிஅரணம் - காவல்மிக்க கோட்டை; *8.* தொடியோர் - தொடிஅணிந்த மகளிர்; உழக்கி - அழித்து; அடிஆர்ந்த - காலில்கட்டிய; *10.* போர்யானை - காதல் மிகுதியால் மகனை யானை என்றாள்; வந்தீக - வருக; *12.* நிலைப்பாலுள் - நிலைபெற்ற குணங்களுள்; ஒத்தி - ஒப்பா யாக; *13.* கன்றிய - கோபித்த; தெவ்வர் - பகைவரை; கடந்து - வென்று; களம்கொள்ளும் - போர்க்களத்தைத் தன தாக்கிக்கொள்ளும். *15.* ஒன்றினேம் - மனம் ஒன்று பட்டோம், *17.* பால் - ஒருபால்; ஒருவர் பக்கத்தில்; பகல்-எவருக்கும் ஒப்பக்காயும் ஞாயிறு; ஒல்கா-தளராத; *19.* கால்பொரு-காற்றால் அலைப்புண்ட; *21.* வீதல்-கெடுதல்; நச்சியார்-விரும்பினவர்; *24.* நோய்கூர-நோய் மிகுமாறு; *25.* கழற - இடித்துரைக்க; *27.* வந்தீத்தனர்-வந்தனர்; *28.* தாவாத - வருத்தம் செய்யாத; காவாது - வரவிடாது தடைசெய்யாது; *29.* எந்தை - கொடுப்பா யாக! சீத்தை - இகழ்ச்சிக்குறிப்புடையதோர் இடைச் சொல்; *30.* கன்றி-வெறுத்து; அதனை - மகன் தந்தை பால் அணைவதை; கைநிவி - கைகடந்து; *31.* கோல்மா - சிங்கர்; இவர்ந்தாங்கு - பாய்ந்ததுபோல்.

# 22

# ஊடுதல் என்னே?

கணவன், பரத்தையர் உறவுகொள்ளத் தொடங்கினன்; மனைவி அதனல் அவனை வெறுத்தாள்; அவனைக் காணவும் நாணினள்; அக்கவலை வருத்த வருந்தித் தன் தோழியோடு வாழ்ந்திருந்தாள்; ஒருநாள் பரத்தை வீடு சென்றிருந்த அவள் கணவன், அவள் வீட்டிற்கு வந்தான்; வந்தானை வரவேற்க விரும்பாது, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவள் சினம் கண்டு செய்வதறியாது சிறிது நேரம் சிந்தித்தவாறே நின்றிருந்தான் கணவன்; பின்னர் மெல்ல மெல்ல அவள் அருகிற் சென்ருன்; சென்று அவள் கூந்தலைக் கையாற் பற்றி, அவள் தலையைச் சிறிதே தடவிக் கொடுத்தான்.

கணவனைக் காணவும் விரும்பாது வாழும் அவள், அவன் தன் கூந்தலைக் கையாற்பற்றியதை உணர்ந்த வுடனே, அதை அவன் கையினின்றும் விரைந்து ஈர்த்துக்கொண்டாள்; அவ்விடம்விட்டுப் பெயர்ந்து ஒதுங்கினள்; "ஏடா! உன்னைக் காணவும் வெறுக்கின்றேன் நான்; ஆதலால் என்னை அணுகி என்

கூந்தலைத் தீண்டாதே; என்முன் நிற்கவும் நிற்காது நீங்கி அப்பாற்செல்'' எனக் கூறிக்கடிந்தாள்.

பரத்தையர் சேரிசென்று வாழும் தன்பழியொடு பட்ட வாழ்வை மனைவி அறியாள் என மனப்பால் குடித்தவன் அவன்; அதனால், மனைவியின் கோபம் காணத்-தொடக்கத்தில் சிறிதே கலங்கினனேனும், தன்பால் தவறு இல்லை என்றே இறுதிவரை உரைத்தல் வேண்டும்; அதுவே அவள் உள்ளத்திற்கு ஆறுதலாம் என உணர்ந்த உணர்வால் உள்ளஉரம் பெற்றான். அதனால், தன்னை வெறுத்துநோக்கும் அவள் முன் பணிந்தான்போல் நின்று "பெண்ணே! நீ கூறும் அப் பரத்தையர் பால் நான் எவ்விதத்தொடர்பும் கொண்டிலேன்; இது உண்மை; அவ்வாறாகவும், செய்த தவறு எதுவும் இல்லாத என்னைச் சினந்து ஒதுக்குகின்றாய்; இது நினக்கு முறையோ'' என்று கூறி இறைஞ்சினான்.

"என்பால் தவறு இல்லை; தவறு இல்லாத என்னை இடித்துரைக்கின்றனை'' எனக் கணவன் கூறக்கேட்ட அவளுக்குக் கடுஞ்சினம் பிறந்தது. காலையில் தன் மனையில் இருப்பான்போல் தோன்றுகிறான்; நண்பகலில் பரத்தையர் சேரியில் திரிகிறான்; பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே மறைந்து, மனம்விரும்பும் மகளிர்பால் சென்றுவிடுகிறான்; அத்தகையான் தன்பால் தவறு இல்லைஎனக் கூறுவதா என எண்ணி வருந்தினாள், வருத்த மிகுதியால் "ஏடா! கண்மூடி கண் திறப்பதற்குள் காணாது மறைந்துபோகும் இயல்புடையவன் நீ; நீ அத்தகைய இயல்புடையவன் என்பதை அறிந்தும், உன்னைக் காதலித்து, அக்காதற்பயனை முற்றவும் பெற மாட்டாமையால் கலங்கி, உன்னோடு ஊடி நிற்பவரே, உண்மையில் தவறுடையவராவர்; உன்மீது தவறு இல்லை; தவறு நீங்கிய தறுகணாளன் நீ; விரும்பிய

இடத்திற்குச்செல்லும் உரிமை உடையாய் நீ" என் வெறுத்துக்கூறி வாயடைத்து நின்ருள்.

அவள் தன்னைக் கண்டவுடனே கடிந்து கூறிய சொற்களினும், இப்போது வெறுத்துக் கூறிய இச்சுடு சொற்கள் தன்னைப் பெரிதும் வருத்துவதை உணர்ந் தான் இளைஞன்; வருந்தினனேனும், அந்நிலையிலும் உண்மையை ஒப்புக்கொள்ள இசைந்திலன்; அதனல், மனைவியை நோக்கி, "பெண்ணே! அணைபோலும் உன் தோளைத்தந்து எனக்கு இன்பம் ஊட்டவேண்டிய நீ, என்பால் தீய ஒழுக்கம் எதுவும் இல்லையாகவும், தீயோரைத் துன்புறுத்துமாறு, என்னைத் துன்புறுத்து கின்ருய்; பெண்ணே! என்னைக் கடிந்து ஒதுக்கத்தக்க குற்றம் எதையும் நான் செய்திலேன்; இதை நீ நம்பு." என்று கூறிப் பணிந்து நின்ருன்.

மனைவி விரட்ட, கணவன் பணியும் இக்காட்சியைத் தோழி, மறைந்துநின்று பார்த்துக்கொண்டிருந்தாள்; ஊடலின் இயல்பை உணர்ந்தவள் அவள்; உணவிற்கு உப்புபோல், கூடலுக்கு இன்றியமையாதது ஊடல்; ஆனல் அது சிறிது நீண்டால், உப்புமிகுந்த உணவு போல், அக்கூடல் பயனற்றுப்போகும் என்பதை அறிந்தவளாதலின், அவள் ஊடல் அந்தஅளவோடு முற்றுப்பெறுதல் வேண்டும் என விரும்பினுள்; மேலும் கணவன், பரத்தையர் தொடர்புகொண்டிருப்பது உண்மையே எனினும், மனைவிபால்கொண்ட அச்சமிகுதி யால், அவன் அதை மறுக்கிருன்; தவறுசெய்த ஒருவர், அதைப்பிறர் அறிந்து கண்டித்தவழி, அத்தவற்றினைத் தாம் செய்யவில்லை என மறுப்பராயின், அவரை மன்னித்துவிடுதல் மக்கட் பண்பாகும்; ஆகவே தவறு செய்திலேன் எனக்கூறும் கணவனை முன்னிந்து ஏற்றுக் கொள்ளுதல்வேண்டும் என்றும் அறிந்தாள். அதனல்

விரைந்து தன்தோழிபால் சென்றாள்; "தோழி! இதோ நிற்கும் உன்கணவன் மான்விழிபோலும் நின் அழகிய கண்கள், கண்ணீர்வடித்துக்கலங்கி அழ அழ உன்னைப் பிரிந்தவன்தான்; பிரிந்து அப்பிரிவுத்துயரால் உன்னை வருத்தியவன்தான்; ஆயினும், செய்த அத்தவற்றிலேயே ஆழ்ந்துவிடாது ஈண்டு மீண்டு வந்துளன்; அம்மட்டோ! மானத்தைவிட்டு உன்னை வணங்கி நிற்கின்றான்; இவனோடு, இனியும் ஊடிநிற்பது உன் பெருமைக்கு ஏற்குமோ?" என்று ஏற்பக்கூறினாள்.

தோழி கூறியன கேட்டாள் அப்பெண்; தோழி அறிவுடையவள்; தன் நலத்தில் கருத்துடையவள் என்பதை அவள் அறிவாள்; அதனால் ஊடுதல் இனிக் கூடாது எனத் தோழி உரைத்ததற்கு உடன்பட்டாள்; ஆயினும் அதை அவ்வாறே ஏற்றுக்கொள்ள நாணம் மிக்க அவள் நல்லுள்ளம் தயங்கிற்று; அதனால் "நெஞ்சே! நம்மை உயர்வாகக் கருதி, நம் நலம் ஒன்றே குறித்துக் கூறும் எதையும் இனியும் கூறுதல் ஏலாது' எனத் தோழி கூறிவிட்டாள்; தகுதி மிக்க தோழியின் அவ் அறிவுரையினை நீ ஏற்றுக் கொள்வாயாக; இதுகாறும் நீர் அறாது, நித்திரை கொள்ளாது வருந்திய கண்கள், இனியேனும் உறக்கம் கொண்டு உய்யுமாக!" எனத் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவாள் போல்கூறி, ஊடல் தணிந்து அவனை ஏற்றுக் கொண்டாள்.

"ஒரூஉநீ; எம்கூந்தல் கொள்ளல்; யாம் நின்னை
வெரூஉதும் காணும் கடை

தெரிஇழாய்! செய்தவறு இல்வழி யாங்குச் சினவுவாய்,
மெய் பிரிந்து அன்னவர் மாட்டு?

5 ஏடா! நினக்குத் தவறுண்டோ? நீ வீடு பெற்றாய்;
இமைப்பின் இதழ் மறைபாங்கே கெடுதி;

நிலைப்பால் அறியினும் நின்னொந்து நின்னைப்
புலப்பார் உடையர் தவறு.

அணைத்தோளாய்! தீயாரைபபோலத் திறன்இன்றுஉடற்றுதி;
காயும் தவறிலேன் யான்,

மான்நோக்கி! நீஅழ நீத்தவன் ஆனாது
நாண் இலனாயின் நலிதந்து அவன்வயின்
ஊடுதல் என்னோ இனி?

இனி, யாதும் மீக்கூற்றம் யாம்இலம் என்னும்
தகையது காண்டைப்பாய்; நெஞ்சே! பனிஆனாப்
பாடில்கண் பாயல் கொள''

பரத்தையர் உறவுகொண்டு மீண்ட தலைவனோடு ஊடிய தலைவி, தோழி வாயிலாக ஊடல் தீர்வுழிக் கூறியது இது.

*1.* ஒரூஉ - நீங்கிநில்; கொள்ளல் - தொடாதே; *2.* வெரூஉதும் - வெறுக்கிறோம்; காணும்கடை-காணும் பொழுது; *4.* அன்னவர் மாட்டு மெய் பிரிந்து செய் தவறு இல்வழி என மாற்றுக. அன்னவர் - அப் பரத்தையர்; *5.* வீடு - விடுதலை; *6.* கெடுதி - மறைந்து விடுகிறாய்; *7.* நிலைப்பால் - உன் நிலையின் இயல்புகளை; *9.* இன்று - இல்லையாகவும்; உடற்றுதி - வருத்துகிறாய்; *12.* நலிதந்து - வருத்தி; *14.* யாதும் - சிறிதும்; மீக்கூற்றம் - தம்மை மேம்படுத்திக் கூறும் புகழ் உரை; யாம் இலம் - நமக்கு இல்லை: *45.* காண்டைப்பாய் - காண்பாயாக; பனிஆனா - கண்ணீர் வற்றாத; *16-* பாடுஇல் - உறக்கம் இல்லாத.

# 23

# தேற்றேம் யாம்

தானும், தன் கணவனும் பிரிவறியாப் பேரின்ப வாழ்வினராதல் வேண்டும் என விரும்பும் இன்ப வேட்கை உடையாள் ஒருத்தி, அக்கணவன் பழியில ஞதலும் வேண்டும் என்ற உயர்ந்த உள்ளமும்கொண் டிருந்தாள். தவறு செய்த ஒருவர், தாம் செய்த தவற்றினை மறைக்கப் பொய்ச்சூள் உரைப்பராயின், அவரைத் தெய்வம் ஒறுக்கும் என எண்ணி அஞ்சுவள். ஆனல், அவள்பால் பேரன்புகொண்ட அவள் கண வனே, குற்றம்புரியவும், குற்றத்தை அறியின் மனைவி செற்றம் கொள்வள் என அஞ்சுவதால், அதை அவள் அறியாவாறு மறைக்கப் பொய்ச்சூள் உரைக்கவும் அஞ்சாது வாழ்ந்தான். மனைவி, இளமையும், அழகும், அன்பும் உடையளாகவும், ஒருகால், ஊரில் உள்ள பரத்தை யொருத்தி பால், அவன் காதல் கொண்டான்; ஒருநாள், மனைவி அறியாவாறு சென்று, தன் மனம் விரும்பிய அப்பரத்தையின் மனைபுகுந்து மகிழ்ந்தான்.

அப்பரத்தைபால்கொண்ட வேட்கை மிகுதியால், மனைவியின் அன்பைப், பிழை காணப்பொறு அவள் உள்ள உறுதியை மறந்திருந்த அவன், அவ்வேட்கை தீர்ந்தவுடனே, அவ் அன்பும் உறுதியும், அவன் உள்ளத்தைத் துயர் செய்யவே, அஞ்சித் தன் மனை புகுந்தான்.

அஞ்சி அஞ்சி மனைபுகும் அவனை மனைவி கண்டாள். தொலைவில் வரும்போது, அவன் தோளில் மலரிதழ்கள் சில உதிர்ந்து கிடப்பதைக் கண்டாள். அவை, அவன் புணர்ந்த பரத்தையின் மணம் நாறும் மயிர் முடியில் சூட்டிய மாலையினின்றும், அவளும், அவனும் புணருங் கால் காம்பற்று உதிர்ந்தவையே என்பதை உணர்ந்து உள்ளம் வருந்தினாள். அந்நிலையில், அவன் அவளை அணுகினான். அண்மையில் வந்து நிற்பானை அவள் உற்று நோக்கினாள். அவன் மேனியில் புதிய வடுக்கள் பல விளங்குவதைக் கண்டு வருந்தினாள். அருகில் வந்து தன்னைத் தொட்ட அவன் கைகளை விரைந்து அகற்றினாள்; "பூங்கொடி போன்ற மெல்லிய இயல்பு வாய்ந்த பரத்தையரின், மயிர் முடியில் சூட்டிய மலர்களின் இதழ்கள், உன் தோளில் உதிர்ந்து கிடக்க, அக்காட்சியோடு ஈங்குவந்து என்னைத் தொடும் நீயார்? உனக்கும் எனக்கும் என்ன உறவு?. என்னைத் தொடாதே; அகன்றுபோ; கணவனைப் பிரிந்து கலங்கி நிற்கும் எளியராகிய மகளிர், தம் மனைவியர் வருந்தக் கண்டும் மனம கலங்காது பிரியவல்ல பெரியோராகிய ஆடவர்க்கு அடிமையாவரோ? ஆகார்! இதை அறிந்து அகல்க" என்று வெறுத்துக் கூறினாள்.

மனைவியின் கொடிய கோபத்தைக் கண்ட அவன், அதைத் தன் சொல்லாற்றலால் தணிக்கத் துணிந்து, அவள் கேட்குமாறு, "ஆத்திரத்தில் அறிவு மழுங்கிப் போகும் என்று கூறுவர்; இவ்வாறு அறிவு இழந்து

கடுமையாக இருப்பவரைக் காரணம் காட்டித் தெளி விப்பது இங்கு யாரால் ஆகும்" என்று கூறினான்.

தான் செய்த தவற்றினுக்குச் சமாதானம் கூற வருகிறான் என்பதை அறிந்து கொண்ட அவள், அவனைப் பார்த்து. "ஏடா! நீ எங்கோ போக விரும்பு கின்றாய்; அதை விடுத்து, இங்கே நின்று, உண்மை யற்ற பொய்யுரைகளை என்பால் உரையாதே; அதை, நீ கூறும் பொய்யை உண்மையெனக்கொண்டு ஏமாறுபுவா ரிடத்தே சென்று கூறு" என்று கூறிச் சினந்தாள்.

அவள் கடிந்து கூறுவன கேட்ட அவன், "அழகிய அணிகளை ஆராய்ந்தணிந்து நிற்பவளே! உன்னை அடைந்து, உன் அருளைப் பெற்றாலல்லது உயிர்வாழ மாட்டாப் பேரன்பு கொண்ட என்பால் தவறு என்ன கண்டாய்? அதை நான் அறியக் கூறு" எனப் பணிந்து வேண்டினான்.

தவறும் செய்துவிட்டு, ஏதும் தவறு செய்யாதவன் போல் பேசும் அவன் செயல் அவளுக்கு ஆறாச்சினத்தை அளித்தது; அளிக்கவே, அவன் நேர்நின்று, "ஏடா! நீர் நிலைகளில், நண்டுகள் ஊர்ந்தமையால் உண்டான கால்வடுக்களைப்போல், உன் காதற் பரத்தையர் தம் பல்லாலும் நகத்தாலும், உன் மேனியில் பண்ணிய இவ் வடுக்களும், அவரோடு புணர்ந்த புணர்ச்சி மிகுதியால், தன் நிறம் இழந்து, இதழ் உதிர்ந்து பாழான இக் கண்ணியும், உன்னோடு ஊடிய பரத்தையர், சினம் மிகுந்து, தம் மாலைகளை அறுத்து அடித்த அடிபட்டுச் சிவந்த உன் மார்பும், நீ செய்த தவறுகளைக் காட்டப் போதாவோ?' எனக் கூறிக் கடிந்தாள்.

தான் செய்த தவற்றினைத் தன் மெய்வேறு பாட் டினைக் காட்டி அவள் உறுதி செய்யவே, இனி, அதை மறுத்தற்குக் காரணம் காட்ட முற்படல் மடமையாம்

எனக்கருதிய இளைஞன், "ஏடி! நீ கூறிய வேறுபாடு என்கண் இருத்தல் உண்மை; ஆனல் அவ்வேற்றுமைக்கு நீகாட்டும் காரணம் பொருந்தாது; இவ்வேற்றுமைகளைக்கொண்டு, என்னைக் குற்றம் உடையவனுக் கொள்ளாதே; என்பால் குற்றம் இல்லை; நான் பிழையேதும் புரிந்திலேன் என்பதை ஆணையிட்டு மெய்ப்பிக்கவும் நான் அஞ்சேன்" எனக் கூறித், தனக்குத் துணையாகப் பொய்ச்சூளை நாடினன்.

"கணவன் பரத்தையர் உறவுகொண்டது உண்மை; அவன் அப்பரத்தையர் மனையினின்றும் தேர்ஏறிவரும் விரைவில், அவள் மாலையைத் தான் அணிந்து வந்துளான்; அதனுல் தனக்குவரும் இழிவையும் கருத்தில் கொண்டிலன்; இவன் நிலை இவ்வாருகவும், இவன் தவற்றினைக் கண்டு நான் கடியின், இவன்சூள் உரைக்கத் துணிகிருன்; ஆனல் இவன் உரைக்கப் புகுவது பொய்ச்சூள் என்பதை நான் அறிவேன்; பொய்ச்சூள் உரைப்பாரைத் தெய்வம் ஒறுக்கும்; நான் சினக்க, இவன் பொய்ச்சூள் உரைக்கின், இவன் தெய்வத்தால் கேடுறுவன்; இவன் கெட்டால் நான்மட்டும் வாழ்வனே? வாழேன்; ஆகவே, என் வாழாமைக்கு என் சினமே காரணம் ஆம்போலும்" என்று இவ்வாறு சென்றது அவள் சிந்தனை? அதனுல், அவனைச் சினப்பதை மறந்தாள்; மறந்தவள், அவனை நோக்கி, "ஏடா! நீகூறும் பொய்ச்சூளால் கேடுவருமாயின், அக்கேடுயாரை வருத்தும்?" எனக் கேட்டு ஊடலைக் கைவிட்டாள்.

"ஒருஉக்; கொடிஇயல் நல்லார் குரல்நாற்றத்து உற்ற
முடிஉதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்,
தொடிய, எமக்கு நீயாரை? பெரியார்க்கு
அடியரோ, ஆற்ருதவர்?

கடியர்தமக்கு, யார்சொல்லத் தக்கார் மற்று ?
வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை உரையாது கூறுநின்,
மாயம் மருள்வார் அகத்து.

ஆயிழாய் ! நின்கண் பெறினல்லால், இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் என்னோ தவறு ?

இஃதுஒத்தன் புள்ளிக்களவன் புனல்சேர்பு ஒதுக்கம்போல்
வள்உகிர் போழ்ந்தனவும், வாள்எயிறு உற்றனவும்,
ஒள்இதழ் சோர்ந்த நின்கண்ணியும், நல்லார்
சிரறுபு சீறச் சிவந்த நின்மார்பும்
தவறுதல் சாலாவோ ? கூறு.

அதுதக்கது, வேற்றுமை என்கண்ணோ ஓராதி ; தீதின்மை
தேற்றங் கண்டியாய் ; தெளிக்கு.

இனித் தேற்றேம் யாம் ;
தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்ததவறு அஞ்சிப், போர் மயங்கி
நீஉறும் பொய்ச்சூள் அணங்காகின், மற்றுஇனி
யார்மேல் விளியுமோ ? கூறு.''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன், தன் பிழையை மறைக்கப் பொய்ச்சூள் உரைக்கத் துணிந்தமை கண்டு, தலைவி, பொய்ச்சூளால் வரும் கேடஞ்சி ஊடலைக் கைவிட்டது.

*1.* ஒரூஉ - நீங்கு ; குரல் - மயிர் ; *2.* மொய்ம்பின - தோளின் கண் உள்ள ; *3.* தொடிய - தொட ; பெரியார் - பிரியும் ஆற்றல் வாய்ந்தவர் ; *5.* கடியர் - கொடியகோபம் உடையவர் ; *6.* வாய்லா - உண்மை அல்லாத : வெண்மை - பொய் ; *7.* மருள்வார் - உண்மை எனப் பிறழக் கருதுவார் ; *8.* நின்கண் - உன் அருள்; *9.* என் கண் - என்னிடத்தில் ; *10.* புள்ளிக்களவன் - புள்ளிகள் நிறைந்த நண்டு ; சேர்பு ஒதுக்கம் - சேர்ந்து செய்த வரிகள் ; *11.* வள்உகிர் - கூரிய நகம் ; வாள்எயிறு -

வெள்ளிய பற்கள், *12.* நல்லார்-பரத்தையர்; *13* சிரறுபு-கோபித்து; சீற - அடிக்க; *14.* சாலாவோ-போதாவோ; *15.* ஓராதி - ஆராய்ந்து பார்க்காதே. *16.* தேற்றங் கண்டீயாய் - தெளிவாயாக; தெளிக்கு-தெளிவிப்பேன். *18.* தெரிகோதை - ஆராய்ந்து தொடுத்த மாலை; *19.* தவறஞ்சி நீ செய்தவற்றிற்கு அஞ்சி, போர் மயங்கி-நான் தொடுத்த போரால் நீ அறிவு மயங்கி; *21.* விளியும் - அழியும்.

## 24

# அடிசேர்தல் உண்டு

நராவிற்கு இருகோடு தோன்றினாற்போல், உயிரும் உள்ளமும் ஒன்றாய், உடல் இரண்டாய் ஒன்றிவாழும் இளங்காதலர் இருவர் ஓர் ஊரில் வாழ்ந்திருந்தனர்; இடையீடு எதுவும் பெறாமல், அவர்கள் வாழ்க்கை சிலகாலம் இனிது நடைபெற்று வந்தது. ஆண்டு சில கழிந்தன; இளைஞன் உள்ளத்தில், பரத்தையராசை எவ்வாறோ குடிகொண்டுவிட்டது. ஊரில் அழகுமிக்க ஒரு பரத்தைபால் அன்புகொண்டான் அவன்; அவள் மனைபுகுந்து, சிலநாள் அங்கு வாழ்ந்து மகிழ்ந்தான்; மனம் தெளிந்தான்; மீண்டு தன் மனைக்கு வந்தான்; வந்து அவன் வருகையை எதிர்நோக்கி, அவன் ஒழுக்கக் கேட்டை எண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்கி நிற்கும் மனைவியின் அருகிற்சென்று, அவள் கூந்தலை மெல்லத் தடவிக்கொடுத்தான்.

தன்னை மறந்து, தன்போலும் ஒரு பெண்ணின்பால் ஆசைகொண்டு, அவள்பின் திரிந்த அவன் செயல்

கண்டு வெறுப்புற்றுக்கிடந்த அவள், அவன் இப்போது வந்து தன் கூந்தலைத் தடவிக்கொடுப்பதை கண்டு, “இவன் யார்? என் கூந்தலைத்தொட இவனுக்கு என்ன உரிமை? என்னைப்பிரியாது, என்பால் பேரன்புகாட்டி வாழக் கடமைப்பட்டவன் இவன்; இவன் அக்கடமையில் தவறிவிட்டான்; கடமையில் தவறிய இவன்; அதை மறந்து கடமையுணர்ச்சியுடையான்போல் வந்து அன்பு காட்டுகிருன்; இவன்செயல், தன் ஆட்சிக்கீழ்வாழும் மக்களை, அவர்க்கு வேண்டுவன அளித்துக்காக்க வேண்டிய கடமையில் தவறிய ஒருவன், தன்னை அக்குடி மக்கட்குக் கோன் எனக் கூறிக்கொள்வதுபோலும் கொடுமையுடைத்து” என்று கூறி, பின்னர் அவனை நேர்முகமாக நோக்கி, “ஏடா! நீ என் வீட்டிற்கு வாராதே; வந்த வழியைப் பார்த்து நீ வந்த இடத்திற்கே சென்று சேர்வாயாக” என்று கூறி வழிமறித்தாள்.

இளைஞன், மனைவி வழிமறித்து நிற்பதைக்கண்டு சிறிதும் மனம் கலங்காதே அவளைப்பார்த்துப் “பெண்ணே! நீயும் நானும் ஓருயிரும் ஈருடலுமாய் இயைந்து வாழக்கடமைப் பட்டவராவோம்; அத்தகைய நாம், ஒருவரோடொருவர் ஊடிநிற்பது முறையோ? பெண்ணே! எட்டுக்கால்களும், இரண்டு தலைகளும் கொண்ட சிம்புள் எனும் பறவையொன்று இருப்பதாகச் சிலர் கூறுவதை நீயும் அறிவாய்; அப்பறவையின் ஒருதலை மற்றொரு தலையோடு போரிடுவதுண்டோ? என்னேடு ஊடிப்புலந்து நிற்கும் உன்செயல், அப்பறவையின் தலைகள் ஒன்ருேடொன்று போரிடுவதுபோலப் பொருத்தமற்றதாம்; என்னை வெறுத்து ஒதுக்காதே; நீ வெறுத்துவிட்டால் நான் உயிர்வாழ்வது எவ்வாறு? நீயே ஆராய்ந்து கூறு” என அன்புதோன்றக் கூறி அவள்முகம் நோக்கி நின்ருன்.

அதுகேட்ட அவள், "ஏடா! காட்டில் கோயில் கொண்டிருக்கும் வெற்றிக்கடவுளாம் கொற்றவை, எல்லாம் அறிந்தவள்; அவ்வாறாகவும், அவள் ஏதும் அறியாதாள் என எண்ணி, அவளை அடுத்துவாழும் சில பேய்கள், அவளுக்கு நிகழ இருக்கும் சில நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறத் துணிந்ததாக ஒரு கதை உண்டு; ஏடா! உன்செயலும் அதுபோன்றுளது; வஞ்சம் கலந்த உன் பொய்யுரைகளை என்பால் உரைத்து என்னை ஏமாற்ற எண்ணுதே; உன்கொடுமைகளை நான் நன்கு அறிவேன்" என்று கூறி அவனை மடக்கினாள்,

மனைவியின் மனத்தை மாற்றி மகிழ்விப்பது இயலாது என்பதை அறிந்துகொண்டான் இளைஞன்; ஆயினும், தன்பால் தவறில்லை எனக் கூறுவதையோ, அவள் மனத்தை மாற்ற முயற்சிப்பதையோ அவன் கைவிட்டிலன்; அதனால் அவளை அணுகியிருந்து "பெண்ணே! அரசன் ஒருவன், தன் ஆட்சிக்கீழ் வாழ்வான் ஒருவனைச் சினந்து சீறுகின்றான் என்றால் அக்குடிமகன் குற்றம் உடையவன் என்பது பொருளன்று; குடிமகன்மீது குற்றம் இல்லாதபோதும், கோமகன் அவனைக் கோபிப்பன்; அதுவே நம் நிலையும்; நீ என்னைச் சினக்கின்றாய்; அதனால் என்பால் தவறு உளது என்பது கருத்தன்று; என்பால் தவறு இல்லையாகவும் நீ சினக்கின்றாய்; இனியவளே! நான் தவறுடையேனல்லேன்" எனக் கூறி அவள் கோபத்தைத் தணிக்க முயன்றான்.

கணவன் நிலையைக் கண்டாள் மனைவி; எவ்வகையிலாவது அவன் தன்னைத் தெளிவித்து அடையத் துணியும் அவன் உறுதிப்பாட்டை உணர்ந்தாள்; அதனால் அவனை ஏற்றுக்கொள்ள இசைந்தாள்; இசைந்தவள் தன் நெஞ்சைநோக்கி, "நெஞ்சே! இவன் நம்மை

அறவே மறந்தவன்; பரத்தையர்பின் திரிந்து பழியொடு பட்ட வாழ்வு வாழ நாணாதவன் என்பதெல்லாம் உண்மை; ஆனால், அக்குற்றம் கண்டு, அவன் கூறும் பொய்யை ஏற்றுக்கொள்ளாது வெறுத்தால், இவன் பொய்கூறுவதை விடுத்து, "நான் பிழை செய்து விட்டேன்; என்பிழை பொறுத்து ஏற்றுக்கொள்வாயாக" என வேண்டி நம் காலில் விழ்ந்து பணியவும் துணிவன்; அது நம் நிலைக்கு ஏலாது; ஆகவே நெஞ்சே! இவனோடு, நாம் இப்போது மேற்கொண்ட ஊடற்போரில் தோற்று, இவனை ஏற்றுக்கொள்ளும் வழிகளைக் காண்பாயாக" எனக்கூறி ஊடல் தீர்ந்து உவந்தாள்.

"யார் இவன் எம் கூந்தல் கொள்வான்? இதுவும் ஓர்
ஊராண்மைக்கு ஒத்த படிறுடைத்து, எம்மனை
வாரல் நீ; வந்தாங்கே மாறு.

என்இவை? ஒருயிர்ப்புள்ளின் இருதலையுள் ஒன்று
போரெதிர்ந்தற்றுப் புலவல் நீ; கூறினென்
ஆருயிர் நிற்குமாறு யாது?

ஏஎ; தெளிந்தேம் யாம், காயாதி; எல்லாம்வல் எல்லா!
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்கொடுத்தாங்கு,
வருந்தல் நின்வஞ்சம் உரைத்து.

மருந்தின்று; மன்னவன் சீறில் தவறுண்டோ? நீ நயந்த
இன்னகை! தீதோ இலேன்.

மாணமறந்து உள்ளா, நாணிலிக்கு இப்போர்
புறம்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே! உறழ்ந்து இவனைப்
பொய்ப்ப விடேஎம் என நெருங்கின், தப்பினேன்
என்று அடி சேர்தலும் உண்டு."

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனோடு, தலைவி ஊடல் தீர்ந்து கூறியது.

2. படிறு - கொடுமை; 3. வாரல் - வாராதே; வந்தாங்கேமாறு - வந்ததுபோல் மீண்டுசெல்; 5, போர் எதிர்ந்தற்று - போர் புரிந்ததுபோல; புலவல் - வெறுக்காதே; கூறின்என் - புலந்துகூறுவதால் யாதுபயன். 7. காயாதி - வருத்தாதே; எல்லாம்வல் - வஞ்சனைபலவும் வல்ல; 8. கொற்றி - கொற்றவை; நொடித்தல் - வருவது உரைத்தல். 11. இன்நகை - இனியநகையினை உடையாய்; 12. மாணமறந்து - அடியோடு மறந்து; உள்ளா - நினைத்துப்பாராத, 13. புறம்சாய்ந்து-தோற்று; காண்டைப்பாய் - காண்பாய்; 14. நெருக்கின் - விடாது கோபித்தால்.

# 25

# நிறையாற்ரு நெஞ்சு

இளைஞன் ஒருவன் பரத்தையொருத்திபால் ஆசை கொண்டான். ஒரு சிலநாட்கள், அவன் அப்பரத்தை மனைக்குச்சென்று மகிழ்ந்து வரவும் தலைப்பட்டான். அவன் களவுக்காதலை அவன் மனைவி அறியாள். அதில் அவன் பெரிதும் விழிப்பாயிருந்தான். ஆனால், அது தவறிவிட்டது. அவன் பரத்தையுறவை அவள் அறிந்து கொண்டாள்.

ஒருநாள் இரவு நல்ல மழைபெய்துகொண்டிருந்தது. நள்ளிருட்பொழுது, நடு யாமம். இளைஞன், மனைவியோடு தன்வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தான். திடுமெனத் தெருக்கதவைத் தட்டும் ஒலிகேட்டு இருவரும் விழித்துக் கொண்டனர்; கதவைத்திறக்க, இளைஞன் விரைந்து சென்ருன்; கதவைப்புடைத்ததால் எழுந்த ஒலியைத் தொடர்ந்து, காற்சிலம்பு ஒலிக்கும் ஒலியும் கேட்கவே அவன் மனைவி, அவனைப்பின்தொடர்ந்து மெல்லச் சென்று, திறந்த கதவுவழியே தெருவை நோக்கினுள்.

ஆங்கு அவள்கண்ட காட்சி, அவளைப்பெரிதும் கலக்கி விட்டது. ஒருபெண் தோளில் தொடியும், கூந்தலில் மலரும், காதில் மகரக்குழையும், வேறுபிற அணிகளும் அணிந்து ஆங்கு நிற்பதைக்கண்டாள். அணிவகைகளாலும், கூந்தல் மலர்க்குவியலாலும் உண்டான பாரத்தைத் தாங்கமாட்டாது ஒடிந்துவிடுமோ என அஞ்சுமாறு சிறுத்திருந்தது அவள் இடை. அவள் காலில் சிலம்பு ஒலித்தது. அவள் கண்கள் சிவந்திருந்தன. அதனால், அவள் யார்மீதோ சினங்கொண்டுள்ளாள் என்பதை அறிந்தாள். இளைஞன் காதலிக்கும் பரத்தை அவளே. இளைஞன், அன்று தன்மனைக்கு வாராமையால் வருந்தி மழையையும், மையிருளையும் பொருட்படுத்தாது அவனைத்தேடிவந்தாள். தன் காதல் நோயை அடக்கி, ஊரார் கூறும் அலர் உரைக்கு அஞ்சித் தன்உருவை மறைத்துக், காதலனைக்காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி தந்த செருக்கோடு வந்திருந்தாள். ஆங்கு அவளைக்கண்ட இளைஞன் மனைவி, அங்கு என்ன நிகழ்கிறது என்பதை, அவ்விருவர் கண்ணிலும் படாவாறு கரந்துநின்று காணத்தொடங்கினாள்.

கதவைப் புடைத்தும், காற்சிலம்பை இயக்கியும் ஒலியெழுப்பி நின்ற பரத்தை, அவ்வொலிகேட்டு எழுந்து வந்து, கதவைத்திறந்து வாயிற்கண் நிற்கும் இளைஞனைக் கண்டதும் கடுங்கோபம் கொண்டாள்; அவன் மார்பில் கிடந்து மணம்நாறும் மலர்மாலையைப் பற்றி ஈர்த்துப் பிய்த்து எறிந்தாள். இளைஞன், அவள் சினம்கண்டு அஞ்சினான்; அவள் காலில் வீழ்ந்து பணிந்தான். " தீமை ஏதும் செய்திலேன்; உன்னை நான் மறப்பதும் செய்யேன்; இது உண்மை; இன்று வாராமைக்கு, இம் மழையே காரணமாம்; என்னை ஏற்றுக்கொள் " என்று கூறி இறைஞ்சினான்.

அக்காட்சியைக் கண்டாள் இளைஞன் மனைவி. அதற்குமேல் காண அவள் விரும்பவில்லை. காண நாணிற்று அவள் கற்பு. விம்மலை அடக்கி விரைந்து சென்று படுக்கையில் வீழ்ந்தாள். நாழிகை சில கழித்து இளைஞன் ஏதும் நிகழாததுபோல்வந்து, மனைவியின் அருகில் படுத்து உறங்கிவிட்டான்.

பொழுது புலர்ந்தது. மனைவிமுகத்தில் மகிழ்ச்சி யில்லை; அதுவாடி வனப்பிழந்து கிடந்தது. கண்கள் சிவந்தும், நீர் நிறைந்தும் தோன்றின. அவள் நிலை, இளைஞனைப் பெரிதும் துன்புறுத்திற்று. அவன் அருகிற்சென்ருன். அவள் மேனியை மெல்லத்தடவிக் கொடுத்தான். அவள்மனம் மகிழுமாறு, அவளைப் பாராட்டினன்; "பெண்ணே! உன்பால், இன்று காணலாம் இம்மாற்றத்திற்குக் காரணம் என்ன?" என அன்போடு கேட்டான். அவன் கேள்வி, அவள் சினத்தை அதிகப் படுத்திற்று. "ஏடா! இதுகாறும், உன்னை ஒழுக்கநெறி நிற்கும் உரவோன் என எண்ணி ஏமாந்தேன். நீ வஞ்சகன் என்பதை இன்று அறிந்தேன். உன் களவுக்காதல் எனக்குத்தெரிந்துவிட்டது. உன் நகை, பொய்நகை என்பதை அறிந்துகொண்டேன், இனி என்முன் பல்லைக்காட்டாதே. நீ கூறுவது எதையும் நான் கேளேன்; இனி நான் விரும்பாதனவற்றை வலியவந்து கூருதே. என்னைத்தொடுவதும் செய்யாதே. தழுவி மகிழ உனக்குப் பெண்டிர் பலர் உளர்; ஆண்டுச்சென்று அவர்களைத் தழுவு" எனக்கூறி அவனை விரட்டினுள்.

தான் பரத்தையர் தொடர்புகொண்டதையோ, அப்பரத்தை வந்து சென்றதையோ மனைவி அறியாள் என நம்பியிருப்பவனுதலின், அவள் சினத்திற்காம் காரணத்தை அறியாது கலங்கினுன். அதனுல் சினக்கும் அவள்முன் சென்று, "பெண்ணே! நீ

இவ்வாறு சினந்துவெறுக்க, என்பால் நீ கண்ட தவறு யாது?" என்று கேட்டான்.

"என்பால் நீ கண்ட தவறு யாது?" என்று கேட்ட கணவனை விழித்துநோக்கியவாறே, "ஏடா! நேற்று இரவு, மழையையும் கருதாது, மங்கை ஒருத்தி, தன்னைக் கண்டவர் மனம்மகிழும்வண்ணம் அணிசெய்துகொண்டு வந்து, நம் கதவைத் தட்டிய அச்செயல், உன் தவற்றினைக் காட்டப்போதாவோ? அவள் தட்டிய ஒலிகேட்ட நீ, விரைந்தோடிச்சென்று கதவைத்திறந்தது உன் தவற்றினைக்காட்டப்போதாவோ? வந்தவள் சினம் மிகக்கொண்டு உன் மாலையைப்பற்றி ஈர்த்துப் பாழ்செய்த அந்தச்செயல் உன் தவற்றினைக் காட்டப்போதாவோ? சினம்கொண்டு நிற்பாளின் காலில் வீழ்ந்து பணிந்து, 'பிழை பொருத்தருள்க' என வேண்டிக்கொண்ட உன் செயல், உன் தவற்றினைக் காட்டப்போதாவோ? ஏடா! இப்போது சொல், நான் உன்னைச் சினப்பது பொருந்தாதோ" என்று, அன்று இரவு, தன்கண்ணுல் கண்ட நிகழ்ச்சிகளை நிரலே எடுத்துக்கூறி அவனைக் கண்டித்தாள்.

மனைவி, தன் களவு வாழ்க்கையைக் கண்டுகொண்டாள் என்பதை அறிந்து இளைஞன் நடுங்கினன். ஆனல், அந்நடுக்கத்தை அவளறியாவாறு மறைத்துக் கொண்டு, "பெண்ணே! நன்கு சிந்தித்துப்பார்த்தால், நான் தவறற்றவன் என்பது தெளிவாம். நீ கூறிய இரவு நிகழ்ச்சிகள், இரவில் நீ கண்ட ஒரு கனவு நிகழ்ச்சி போலும்" என்று கூறி, அவளை மறுவலும் ஏமாற்ற எண்ணினன்.

ஆனல், அது அன்று பயனற்றுப்போயிற்று. பண்டெல்லாம், அவள், அவன் ஒழுக்கக்கேட்டை அறியாமையால், அவன் ஆணையிட்டுக் கூறுவனவற்றை

நம்பி, அவனை ஏற்றுக்கொள்வாள். ஆனல் இன்று அவன் வஞ்சகத்தை நேர்நின்று கண்டுவிட்டமையால், அவன் கூறுவனவற்றை ஏற்றுக்கொள்ளாது, "ஏடா! 'கருத்துத் திரண்டமேகம், பெருமழை பெய்யும் இரவின் நடுயாமத்தில், காதலன் வரக்குறித்த இடத்திற்கு வந்து நின்ற காதலி ஒருத்தியை நீ கண்ட நினைவின் விளைவால் வந்த கனவாகும், நீ கூறும் அந்நிகழ்ச்சி' எனக்கூறி, உன் ஒழுக்கக்கேட்டை ஒப்புக்கொள்ளாது நிற்கின்றாய், உன்நிலையை உள்ளவாறு உணர்ந்துகொண்டேனாதலின், நீ இன்று உரைக்கும் ஆணை, பண்டைய ஆணைகள் போல், என் அறிவை மயக்கி உனக்குப் பயனளிக்காது; ஆகவே, ஏற்காதன கூறி ஈண்டு நிற்காதே. நீ விரும்பிப் புகும் வீடுகள் பல உள; ஆண்டுச்செல்" எனக்கூறி, அவன் கூற்றை மறுத்தாள்.

இளைஞன், மனைவியைப் பொய்கூறி ஏமாற்றுதல் இயலாது என்பதைக் கண்டு கொண்டான். அதனல், அவள் அழகைப் பாராட்டி, அவ்வழகு நுகரப்பெறாது பாழாவதை எடுத்துக் காட்டி, பணிவும், அன்பும் பொருந்திய சொற்களால், "பெண்ணே! என்னை ஆட்கொண்டு, உன் அழகை நான் பருக எனக்கு அருள் புரிவாயாக; அதை நுகரத் துடிக்கிறது என் நெஞ்சம்" எனக் கூறி, அவள் முகம் நோக்கி நின்றான்.

பணிந்த அவன் நிலை கண்ட அவள் நெஞ்சம், அவன்பால் பரிவுகொண்டது. அவனை வெறுத்து வாழ்தல், அவள் பெண்மையின் மென்மைக்கு இயலாது போயிற்று. அதனல், ஏடா! உறுதிப்பாடற்ற உள்ளம் என் உள்ளம்; அவ்வுள்ளத்தை உறுதுணையாகக் கொண்ட என்னல், 'நீ செய்யும் இழிசெயல்களால் ஆகும் துன்பச் சுமையைத் தாங்கிக்கொள்ள இயலாது. ஆகவே, அகன்றுசெல்' எனக் கூறி, உன்னை விரட்ட

*முடியுமோ? முடியாது; ஆகவே உன்னை ஏற்றுக்கொண்டேன். உன் குறைகளைக் கூறிப் பணிந்து நிற்க வேண்டுவது இனித் தேவையில்லை'' என்று கூறி ஊடல்தீர்ந்து, அவனைக் கூடி மகிழ்ந்தாள்.*

'' கண்டேன் நின்மாயம் களவாதல்; பொய்ந்நகர்,
மண்டாத சொல்லித் தொடாஅல்; தொடீஇய, நின்
பெண்டிர் உளர்மன்றோ ஈங்கு.
ஒண்தொடி! நீகண்டது எவனோ தவறு?
கண்டது நோயும், வடுவும் கரந்து, மகிழ்செருக்கிப்,
பாடுபெயல் நின்ற பானாள் இரவில்,
தொடிபொலி தோளும், முலையும், கதுப்பும்,
வடிவார் குழையும், இழையும் பொறையா
ஒடிவது போலும் நுசுப்போடு அடிதளரா
வாராக் கவவின் ஒருத்தி வந்து, அல்கல் தன்
சீரார் ஞெகிழம் சிலம்பச், சிவந்துநின்
போரார் கதவம் மிதித்தது அமையுமோ?
ஆயிழை யார்க்கும் ஒலிகேளா, அவ்வெதிர்
தாழாது எழுந்து நீ சென்றது அமையுமோ?
மாறாள் சினைஇ, அவள் ஆங்கே நின்மார்பின்
நாறிணர்ப் பைந்தார் பரிந்தது அமையுமோ?
தேறிநீ, தீயேன்அலேன், என்று மற்றுஅவள்
சீறடி தோயா இறுத்தது அமையுமோ?
கூறு; இனிக் காயேமோ யாம்?
தேறின், பிறவும் தவறிலேன் யான்,
அல்கல், கனவுகொல் நீகண்டது?

'கனைபெயல், தண்துளி வீசும்பொழுதில் குறிவந்தாள்
கண்டகனவு' எனக், காணாது, மாறுற்றுப்
பண்டைய அல்ல நின்பொய்ச்சூள் நினக்கு, எல்லா!
நின்றாய்; நின்புக்கில் பல..

மென்தோளாய்? நல்குநின் நல்எழில்; உண்டு.
ஏடா! குறையுற்று நீஎம் உரையல்; நின்தீமை

பொறை ஆற்றேம் என்றல் பெறுதுமோ? யாழ
நிறையாற்று நெஞ்சுடையேம்.''

**தலைவன் பரத்தையர்ஒழுக்கம் கண்டு ஊடிய தலைவி, அவன் ஆற்றுமை கண்டு ஊடல் தீர்ந்தது.**

*1. மாயம் - ஈண்டு பரத்தையர் ஒழுக்கம்; 2. மண்டாத - விரும்பாதன ; தொடீஇய - தொட ; 5. வடு-உரு; கரந்து - மறைத்து. 6. பாடுபெயல் - பெரு மழை; பானாள் இரவு - இரவின் நடுயாமம் ; 7. பொலி - அழகு செய்யும் ; 9. நுசுப்பு - இடை ; 10. அல்கல் - இரவு ; 11. ஞெகிழம் - சிலம்பு ; சிலம்ப - ஒலிக்க ; சிவந்து - கோபித்து ; 12. போரார் - பொருந்திய ; 15. மாருள்-தன் நிலையில் மாறுபடாது ; 16. தார் - மாலை ; பரிந்தது - அறுத்தது ; 17. தேறி - தெளிவாய் ; 18. சீறடி - சிறிய அடி; தோயா-தொட்டு ; பணிந்து ; இறுத்தது-தங்கியது; 22. கணைபெயல் - பெருமழை ; 23. காணது - உன்பிழையைப் பாராது ; காணது மாறுற்று நின்ருய் ; சூள் நினக்குப் பண்டைய அல்ல எனமாற்றுக. 24. பண்டைய அல்ல - பண்டைய சூள்போல பயன்தாரா ; 25, புக்கில் - நுழையும் வீடு. 26. உண்டு - நுகர்வேன் ; 28. யாழ - அசை.*

## 26

# நின்வயின் நெகிழும் என்நெஞ்சு

இளகிய நெஞ்சுடையாள் அவள்; கணவன் சிறிது அதிகமாக அன்பு காட்டினுல், அவன் செய்த தவறுகளை மறந்து. மன்னிக்கும் மாண்பு மிக்க மனம் உடையாள். அவள் அத்தகையாள் என்பதை அறிந்தமையால், அவள் கணவன், பரத்தையர் உறவுபோலும் தவறு களைத் துணிந்து செய்துவந்தான்.

ஒருநாள், அவன் பரத்தையர்சேரிசென்று அங்குப் பலரோடு தொடர்புகொண்டு மகிழ்ந்திருந்துவிட்டுத், தன்மனை புகுந்தான். வந்த கணவன் தோற்றத்தைக் கண்டாள் அவன் மனைவி. அல்லி, முல்லை, அனிச்சம், நீலம் முதலாம் மலர்களை நறும்பூவோடு கலந்து கட்டிய கண்ணியும், கழுத்து மாலையும், அப்பரத்தையரொடு புணர்ந்தமையாலும், அப்பரத்தையர் அவனோடு புலந்து, பற்றி அலைக்கழித்தமையாலும், வண்ணம் இழந்து வாடித் தோன்றின. அத்தோற்றம், அவன் பரத்தையர் மனையினின்றும் வருகிருன் என்பதை உணர்த்திற்று.

அதனால் உள்ளம் வருந்திய அவள், அவன் அண்மையில் வந்ததும், "என் தலைவன் அழகு, நேற்றினும், இன்று நனி மிக நன்று" எனக்கூறி எள்ளி நகைத்து, வெறுத்து வேறிடம் சென்றாள்.

வெறுத்துச் செல்லும் மனைவியைக் கண்டான்; அணைபோல் சேர்ந்தார்க்கு மென்மையும், இனிமையும் தரும் அவள் தோளழகைக் கண்டு உள்ளுக்குள்ளே மகிழ்ந்தான்; பின்னர் அவளைத் தொடர்ந்து பின் சென்று, "பெண்ணே! புறத்தே செல்லும் என்க்குப் பரத்தைவீடல்லது வேறு போக்கிடம் உண்டோ? என்ற ஐயம், உன் உள்ளத்தில் எவ்வாறோ இடம் பெற்று விட்டது; அதனால், நான் செய்யாத குற்றத்தைச் செய்த தாகக் கூறி என்னைச் சினக்கின்றாய், அது வேண்டாம்; நான் பிழையேதும் புரிந்திலேன் எனத் தெய்வத்தின் முன் நின்று ஆணையிட்டு உரைக்கவும் நான் அஞ்சேன்; நீ கூறும் தவறு என்பால் இல்லை; இதை நீ நின்கருத்தால் உணர்தல் வேண்டும்" என அவள்உள்ளம் உருகும் வகையில், விளங்க எடுத்துரைத்தான்.

கணவன் கூறியன கேட்டாள், அவன் ஒழுக்கம் கெட்டவன் என்பதை அவள் ஐயமற அறிந்திருந்தா ளாதலின், அன்று, 'சூளுரைக்கவும் அஞ்சேன்' என அவன் உரைத்ததை ஒப்புக்கொள்ள மறுத்தது அவள் உள்ளம்; அதனால், பலப்பல கூறிப் பின்தொடர்ந்து வரும் அவனை நோக்கி, "ஏடா! ஈங்கிருந்து சென்றநீ, ஆங்குச் செய்த செயல்யாது என்பதை அறிவேன்; உன் சூள், பொய்ச்சூள் என்பதையும் அறிவேன்; பரத் தையர்சேரியுள் ஒருத்தி உன்னைப்பெற்றுத் தழுவ, அக்காலை அவள்தொடி அழுத்திப்பண்ணிய தழும் பையும், நீ செய்த குறியிடத்தே வந்து நோக்க அக்காலை, நீ மற்றொருத்தியின் மனைசென்று மகிழ்ந்திருந்தமையால்

ஆண்டுக்காணுது கலங்கிய ஒரு பரத்தை, உன்னைப் பிறிதோரிடத்தில் கண்டு, உன்னோடு ஊடிப்புலந்தக்கால், அவள் கூரிய உகிர்பட்டு உன் மார்பில் உண்டான வடுவையும், அவள் பற்றிப் பாழாக்கப் பாழான உன் மாலையையும், அவள் கலைக்கக் கலைந்த மார்புச் சந்தனத்தையும், மற்றும் சேரியில்வாழும் செவ்வரிபரந்த, செருக்கொடு மைதீட்டிய மாண்பும் வாய்ந்த கண்களை யுடைய பரத்தையர் பலரும், உன்னைப் பலகாலும் புணர்ந்தமையால் பாழான உன் மேனியையும் கண்டேன்; இத்தகையான் நமக்கு இன்பம் தருதற்கு ஏற்றவனுகான் என உணர்ந்தது என்உள்ளம்; ஆகவே, உன்னோடு ஊடுவதைக் கைவிட்டேன்; ஆகவே, இனி என்னைக் கண்டு அஞ்சாது, நீ விருமபும் இடத்திற்குச்சென்று மகிழ்ந்து வாழ்வாயாக" எனக் கூறி வெறுத்து அப்பால் சென்ருள்.

மனைவி தான்செய்த தவறுகளை வரிசையாக எடுத்துக்காட்டி இடித்துரைப்பதைக்கண்ட இளைஞன், எதையும் கூறுதற்கு இயலாது சிறிதுநேரம் விழித்தான்; பின்னர், "பிழை புரிந்திலேன்" என்ற தன் பொய்யை நிலைநாட்டுவதே வழியாம் எனத்துணிந்தான்; அதனுல் மீண்டும் அவளை அணுகி, "பெண்ணே! பிழையற்றவன் நான் எனப் பலகால் கூறவும், அதை ஏற்றுக்கொள்ளாது மேலும் மேலும் என்னைச் சினந்து வெறுக்கின்ருய்! இனி, உன்னைப்பணிந்து உன் உள்ளம் ஏற்கும் சொற்களால், என் தவறின்மையைக் காட்டத்துணிந்தேன்; அதை இனிக்காண்பாயாக" எனத் தோற்றுவாய் அமைத்துக்கொண்டு தொடரத்தொடங்கினுன்.

கணவன் உறுதிப்பாட்டைக் கண்டாள் மனைவி; அதற்கு மேலும் அவனை வெறுக்க அஞ்சிற்று அவள் உள்ளம்; ஊடல் தணிந்தது; ஏற்றுக்கொள்ள இசைந்

தாள்; கணவனை நோக்கினாள் உனக்கு நான் எளியளாய், உன்னோடு புணர்தற்கு இசைந்தால் அவ்வெளிமையால் என்னை விடுத்துப் பரத்தையர்பால் செல்லும் நீ நான் உன் பழிகண்டு, உன்னை வெறுத்துப் புலக்கத்தொடங் கியடவுனே பெரிதும் வருந்துகின்றாய்; பரத்தையர் யொழுக்கம் என்ற இப்பழியேயன்றி, வேறுபல பெரும் பழிகளைப் புரியினும், உன்னை வெறுக்காது விரும்பும் என் உள்ளம், இன்று நான் ஊடிநிற்பதால், வருந்தும் உன்நிலைகண்டு மிகவும் கலங்கிவிட்டது. என்உள்ளத் தின் உறுதிப்பாடற்ற இந்நிலையை அறிந்துகொள்ள மாட்டாது, நீ நான் விரும்புமாறு காரணம்பல காட்டி, உன் பிழையின்மையை நிலைநாட்ட நீ ஏன் பெரிதும் முயல்கின்றனை; உன்செயல் வேண்டாத வீண் செயலாம்; என் நெஞ்சம், உன்னை ஏற்றுக்கொண்டபின்னர், என்னைத் தெளிவிக்க நீ மேற்கொள்ளும் முயற்சிகள் தேவையற்றன'' எனக்கூறி ஊடல் தவிர்ந்து உவந்தாள்.

"அரிநீர் அவிழ்நீலம், அல்லி, அனிச்சம்,
புரிநெகிழ்முல்லை, நறவோடு அமைந்த
தெரிமலர்க் கண்ணியும், தாரும், நயந்தார்
பொருமுரண் சீறச் சிதைந்து, நெருநையின்,
இன்று நன்று என்னை அணி.
அணைமென்தோளாய்! செய்யாத சொல்லிச் சினவுவது
ஐயத்தால் என்னைக் கதியாதி, தீதின்மை [ஈங்குஎவன்?
தெய்வத்தால், கண்டீ, தெளிக்கு.
மற்றது, அறிவல்யான் நின்சூள், அனைத்தாக, நல்லார்
செறிதொடி உற்ற வடுவும், குறிபொய்த்தார்
கூர்உகிர் சாடிய மார்பும், குழைந்தநின்
தாரும், ததர்பட்ட சாந்தமும் சேரி
அரிமதர் உண்கண்ணார், ஆராக் கவவின்
பரிசழிந்து யாழநின் மேனிகண்டு, யானும்
செரு ஒழிந்தேன்; சென்றீ இனி.

தெரியிழாய்! தேற்ருய்; சிவந்தனை, காண்பாய்நீ; தீதின்மை
ஆற்றின் நிறுப்பல் பணிந்து,

அன்னதேல், ஆற்றல்காண்!
வேறுபட்டாங்கே கலுழ்தி, அகப்படின்,
மாறுபட்டு ஆங்கே மயங்குதி; யாதொன்றும்
கூறி உணர்த்தலும் வேண்டாது, மற்றுநீ
மாணுசெயினும் மறுத்து ஆங்கே, நின்வயின்
காணின் நெகிழும் என்நெஞ்சாயின், என்உற்ருய்
பேணுய்நீ பெட்பச் செயல்,"

தலைவன் பரத்தையர் ஒழுக்கம் கண்டு ஊடிய தலைவி, அவன் ஆற்ருமை கண்டு ஊடல் தீர்ந்தது.

*1. அரி - அழகிய; 2. நெகிழ் - மலர்ந்த; 3. கண்ணி - தலைமாலை; தார் - மார்புமாலை; நயந்தார் - விரும்பிய பரத்தையர்; 4. நெருநையின் - நேற்றைக்காட்டிலும்; 5. என்னை - என் தலைவன். 7. கதியாதி - கோபிக்காதே. 8. தெய்வத்தால் தெளிக்கு; கண்டீ என மாற்றுக; தெளிக்கு - தெளிவிப்பேன்; கண்டீ - காண். 12. ததர்பட்ட - கலந்த; 13. ஆரா - மனநிறைவு தாராத; கவவு - புணர்ச்சி. 14. பரிசு - பெருமை; 15. செரு - ஊடல். 17. ஆற்றின் - முறைப்படி, நிறுப்பல் - நிலைநாட்டுவேன்; 18. அன்னதேல் - அவன்கருத்து அதுவானல்; ஆற்றல்காண் - நெஞ்சே அவன் ஆற்றலைப்பாராய். 19. வேறுபட்டாங்கே - புலந்து வேறுபட்ட அப்பொழுதே; கலுழ்தி - வருந்துகிருய்; 22. மாணு - மாண்பற்றசெயல்கள். 24. பெட்ப - நான் விரும்பும் செயல்களை.*

# 27

# வேட்டது கண்டாய்

நான்மாடக்கூடல் எனும் பெயர்வாய்ந்த மதுரைமாநகரில் வாழ்ந்த ஓர் இளைஞன் ஒருநாள், சில பரத்தையரோடு, வையையாற்றைக் கடந்து திருப்பரங்குன்றத்திற்குச்சென்று, ஆங்கு அவரோடு ஆடிப்பாடி அக மகிழ்ந்திருந்தான். சிலநாள் கழித்து வீட்டிற்கு வந்தான். கணவன் செயல்கண்டு சினந்திருந்த மனைவி, வந்தவனை வரவேற்றிலள்; அவனோடு வாய்திறந்து பேசவுமில்லை. அதனால், அவன் பெரிதும் வருந்தினான். அவள் ஊடலைப்போக்கிக் கூட்டுவிப்பார் எவரும் இல்லை. யாரேனும் வருவர் எனச்சிறிது நாழிகை காத்திருந்தான். எவரும் வந்திலர். மேலும் காத்திருக்க அவனால் இயலவில்லை. அதனால், அவள் ஊடலைத் தானே தணிக்கத் துணிந்தான். அவள் அண்மையில் சென்றான். "மனத்தில் வளரும் பூங்கொடி போன்றவளே!" என அவளைப் பாராட்டினான். பின்னர், "பெண்ணே! நான் ஒரு கனவுகண்டே

உறக்கத்தினிடையே கண்ட அக்கனவு, மிகவும் அழகு வாய்ந்த ஓரின்பக்கனவாகும்; உலகில் காதலனும் காதலியும் ஒருகால் கூடினுல் ஒருகால் ஊடுவர்; உயர்ந்த பொருளை விரும்புவார் ஓயாது உழைத்தல்வேண்டும்; ஆன்ருேர் உலக இன்ப வாழ்வை வேண்டுவார், அரிய பல தவம் ஆற்றியே அடைவர். பெண்ணே! இந்தக் கட்டுப்பாடும் தடையும் கனவிற்கு இல்லை. கனவில் காதலனும் காதலியும் பிரிவறியாது பேரின்பம் நுகர்கின்றனர்; பொருள்தேடிப்போகாது ஊக்கம் குன்றி இருப்பவரும் பெரும்பொருள் பெற்றுச்சிறந்து வாழ்கின்றனர். ஆன்ருேர்உலகவாழ்வு, அரிய முயற்சி இல்லாமல் அனைவர்க்கும் கிடைக்கிறது. உலகியல் நெறிக்கு மாறுபட்ட இந்நிகழ்ச்சிகளோடு, காதலனும் காதலியும் கூடுதலும் ஊடுதலுமாகிய உலகியல் நிகழ்ச்சிகளும் அக்கனவில் உள. ஆகவே பெண்ணே! அக்கனவு நனிமிக இன்பம் உடைத்து” என்று கூறினுன்.

கனவின் இயல்பை இவ்வாறு கூறி அவன் பாராட்ட, அவள் அதை அமைதியாக இருந்து கேட்டாள். அதனுல் அவள் சினம் சிறிதே தணிந்திருப்பது கண்ட இளைஞன், நறுமணம் நாறும் அவள் நெற்றியின் அழகைப் பாராட்டிய பின்னர், “பெண்ணே! அரசியல் அலுவற் சிறப்பாலும், வாணிப வளத்தாலும் இரவு பகல் எப்பொழுதும் ஒலி அடங்காத நம் நான்மாடக்கூடலின், வரைபோல் உயர்ந்த நீண்ட மதிலைச் சூழ்ந்து ஓடும் வையையாற்றின் கரைக்கண் இருந்த ஒரு பூஞ்சோலைக்கு நண்பகற் காலத்தில் நல்ல நினைவோடு செல்பவன்போல், நேற்று இரவு கண்ட கனவில் சென்றேன்” எனத் தொடங்கி மேற்கொண்டு தொடர முற்பட்டான்.

கனவு நிகழ்ச்சியைக் கட்டுரைச் சுவைபட அவன் கூறத்தொடங்கவே, அவன் கூறும் அக்கனவைக் கேட்கும் ஆர்வமிகுதியால், அவள் அவன்மீதுகொண்ட சினத்தை மறந்து, சிறிதே அன்புகொண்டாள். அந் நிலையில் கண்ட அவன் தோற்றம், அவள் கண்களுக்குக் குறையாப் பேரின்பம் தரும் பெருமை வாய்ந்ததாகத் தோன்றவே, அத்தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தாள்; கண்டு தனக்குள்ளே மகிழ்ந்ததோடு நில்லாது, அதை அவன் கேட்கப் பாராட்டிய பின்னர், "ஏடா! கனவில் புகுந்த அப்பூஞ்சோலையில் நீ என்னென்ன கண்டாய்? ஆங்கு என்னென்ன நிகழ்ந்தது, அதைக் கூறுக" என விரும்பி வேண்டிக்கொண்டாள்.

கனவு நிகழ்ச்சிகளைக் கேட்கும் ஆர்வம் மிகுதியால், மனைவி தன் தவற்றினை மறந்துவிட்டாள் என மனச் செருக்குற்ற இளைஞன், தன் களவு நிகழ்ச்சிகளையே கனவு நிகழ்ச்சியாகக் கூறத்தொடங்கி, "பெண்ணே! நான் அங்குக் கண்ட காட்சிஅழகை என்னென்பேன்; அகன்ற அழகிய ஆகாயத்தில் பறந்து திரிந்த அழகிய அன்னப் பறவைகள், அந்திக்காலம் வந்ததும், தாம் பிரியாது வாழும் இமையமலைச் சாரலின் ஒருபால் கூட்டமாகத் தங்கியிருக்கும் காட்சிபோல், அழகிய மங்கையர் பலர், தம் ஆயத்தாரோடுகூடி, அப்பரங் குன்றிற்குச் சென்று, அம்மலையின் ஒருபால், ஆற்றுநீர் கொண்டுவந்து குவித்த மணல்மேட்டின் மீது அமர்ந் திருப்பதைக் கண்டேன்" என்று கூறினான்.

கணவன் கனவு நிகழ்ச்சியைக் கூறுகிறான் எனும் நம்பிக்கையால், அதைக் கேட்க விரும்பிய அவள், அவன் ஆங்கு மங்கையர் கூட்டத்தைக் கண்டேன் எனக் கூறியவுடனே, கணவன், கனவைக் கூறவில்லை; நினைவில் தான் கண்ட காட்சியையே கூறுகிறான்

என்பதை உணர்ந்துகொண்டாள்; உணர்ந்தாளாயினும், அவன் மேற்கொண்டு கூறுவனவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும் எனும் ஆர்வமிகுதியால், அவனோடு ஊடல் கொண்டிலள்; ஆயினும், கூறுவது கனவன்றே; நினைவில் நிகழ்ந்த நிகழ்ச்சியே என்பதைத்தான் அறிந்து கொண்டதை அவனுக்கு அறிவிக்க விரும்பினாள்; அதனால், "ஏடா! பறை, தன்னை அடித்து முழக்குவோன், மனத்தில் என்ன இசையை எழுப்புகின்றானோ அந்த இசையே தானும் ஒலித்து எழுப்பும்; அதைப்போல், உன் உள்ளம் எதை விரும்பிற்றோ, அதையே கனவிலும் கண்டாய் போலும்'' என்று கூறினாள்.

தான் கூறுவது கனவு நிகழ்ச்சியன்று; தன் நினைவில் நிகழ்ந்த நிகழ்ச்சியே என்பதை மனைவி கண்டு கொண்டாள் என்பதை அறிந்துகொண்ட இளைஞன், மேலும் அவளைப் பேசவிடின் அவள் தன் ஒழுக்கக் கேட்டினை ஒழுங்காகக்கூறி ஒறுத்து விடுவள் என அஞ்சினான்; அதனால் அவளைப்பேசவிடாது வாயடைத்துத் தான் கூறக் கருதியன அனைத்தையும் விரைந்து கூறி, அவளைச் சினம் அடங்கப் பண்ணுதல் வேண்டும் எனத் துணிந்தான். அதனால், " ஏடி! இடையிடையே எதையும் கூறாதே; நான் கூறுவனவற்றை மட்டும் கேள்; நான் கூறுவனவற்றை, இடையே புகுந்து நீ விரைவில் முடித்துவிடாதே'' என்று கூறி வெகுள்வான் போல் நடித்தான்.

கணவன் கோபம் கண்ட அவள், " நன்று நன்று; உனக்குக் கோபம் வருகிறது; நான் இடையே எதையும் கூறவில்லை; நீ மேற்கொண்டு சொல்'' எனக்கூறி வாயடைத்து அமைதியாக இருந்து கேட்டாள். அவன் தொடர்ந்தான். "மலர்க்கொடிபோன்ற அம் மங்கையர் மணல் மேட்டைவிட்டு எழுந்தனர்; சோலையுள் புகுந்து

ஆங்குள்ள ஒரு பூங்கொடியை அனைவரும் ஒருங்கே பற்றி, அக்கொடியில் உள்ள மலர்களைப் பறிக்கத் தொடங்கினர்; மகளிர், மலர்களைப் பறிக்கத் தொடங் கினமையால், அம்மலர்களில் அமர்ந்து தேனைக்குடித்து அகமகிழ்ந்திருந்த வண்டுகள், அம்மகளிர்க்கு அஞ்சி, அம் மலர்க்கொடியை விடுத்துப் பறந்துஓடின; பெண்ணே! அஞ்சிய வண்டுகள் ஓடிய காட்சி எவ்வாறு இருந்தது தெரியுமா? வேப்பம்பூமாலை அணிந்த நம் வழுதி வரக் கண்ட பகைவர் படை பயந்தோடும் காட்சிபோல் இருந்தது அக்காட்சி; நிற்க. மேலே கேள். பெண்ணே! மகளிர் திடுமெனப் புகுந்து பறிக்கவே, அவ்வண்டுகள், அம்மகளிர்க்கு அஞ்சி பறந்தோடினவேனும் பின்னர்ப் பறந்தோடிய வண்டுகள்பலவும் ஒன்றுகூடிவந்து, அம் மகளிரை மொய்த்துத் துன்புறுத்தத் தொடங்கின.

வண்டுகள் ஒன்றுகூடிவந்து வருத்தத் தொடங் கவே, அம்மகளிர், அஞ்சினர்; அலறிப்புடைத்துக் கொண்டு ஓடி ஒளிந்தனர்; அவ்வாறு மூலைக்கு ஒருவ ராய் ஓடவே, ஒருத்தி அணிந்த மலர்மாலையும் முத்து மாலையும், வேறொருத்தியின் தொடியில் மாட்டிக்கொண்டு இருவரையும் மடக்கின; ஆராய்ந்த அழகிய முத்துக்களை வைத்துப் பண்ணிய ஒருத்தியின் நெற்றித் திலகத்தில் வேறு ஒருத்தியின் காதிற்கிடந்தசையும் மாண்புமிக்க மகரக்குழை மாட்டிக் கொண்டது; ஒருத்தியின் ஆடையை, வேறொருத்தியின் காற்சிலம்பில் சுறுமீன் வடிவுபோல் பண்ணிய மூட்டுவாய்கள் தொடக்கி ஈர்த் தன; இருவரும் வீழ்ந்தனர்; கணவனோடு ஊடிக் கூடாதிருந்த ஒருத்தி, வண்டுகளின் வருகைகண்டு வெருவி, விரைந்து ஓடி, கணவனை அடைந்து அவன் மார்பை இறுக அணைத்துக்கொண்டு, ஊடல் மறந்து கூடினாள்.

ஒருத்தி, இடையினின்றும் நழுவி அடியிலே தாழ்ந்த ஆடையை ஒரு கையாலும், முடி நெகிழ்ந்து குலைந்து வீழும் கூந்தலை ஒரு கையாலும் பற்றிக் கொண்டே ஓடி, அச்சம் மிகுதியால் இடைவழியில் இருக்கும் குளத்தை அறியாது, அதில் வீழ்ந்து வருந்தினாள்.

ஒருத்தி, வந்து மொய்க்கும வண்டுகளைக் கைகளால் ஓட்டிப்பார்த்தாள்; கைககள் ஓய்ந்தனவே யல்லது, வண்டுகள் ஓடவில்லை; மார்பில் அணிந்த மாலையைப் பறித்து ஓட்டினாள்; அப்போதும் அவை அகலவில்லை; அவற்றை ஓட்டும் வகையறியாது நாற்புறம் நோக்கினாள்; அருகே, நீர்நிலையில் ஓடம் ஒன்று மிதந்து கிடப்பதைக் கண்டாள்; உடனே அதில் பாய்ந்து, உந்தி ஓட்டினாள்.

ஒருத்தி அளவிற்குமீறிக் குடித்திருந்தாள்; அதனால் கண் திறந்து நோக்குவதும் அவளால் இயலாது போயிற்று; ஆயினும் வண்டுகள் மொய்த்து வருத்துவதை உணர்ந்தாள்; தன் இரு கைகளையும் ஓங்கி அவற்றை ஓட்ட முற்பட்டாள்; ஆனால், கண்திறந்து பார்க்க மாட்டாமையால், வண்டுகள் உள்ள இடம் அறியாது, வெற்றிடத்தே வீசிவீசிக் கைகள் சோரக் கலங்கி நின்றாள்.

ஒரு பூஞ்சோலையில், காற்றுப்புகுந்து அடிக்க, மலர்க் கொடிகள் அக்காற்றால் அலைப்புண்டு, ஒன்றின்மீது ஒன்று வீழ்ந்தும், ஒன்றோடொன்று பிணைந்தும் பாழாகும் காட்சிபோல், அம்மகளிர், வண்டுகள் வருத்த வருந்தி, உணர்விழந்து ஓடி, ஒருவர்மீது ஒருவர் வீழ்ந்து வருந்தினர்; பெண்ணே! நான் கனவில் கண்ட காட்சி இதுவே" என்றான்.

கணவன் கூறுவது கனவுக்காட்சியன்று, நினைவில் அவன் நிகழ்த்திய நிகழ்ச்சியே என்பதைத் தொடக்கத்

திலேயே அறிந்துகொண்ட அவள், அவன் இதுகாறும் கூறியவற்றைக் கேட்டமையால், தன் கருத்தே உண்மையாம் என்பதை உறுதிசெய்து கொண்டாள்; அதனுல், அவனைப் பார்த்து "ஏட! பரத்தையர் உன்னோடு ஊட, அவர் ஊடல்தீர்த்துக்கூடக் கருதிய நீ, அவர் அடியில் வீழ்ந்து வணங்கி, அவர் ஊடல் தீர்த்துக் கூடி மகிழ்ந்தாய்; அதை நான் அறிந்து கொண்டேன்; அதை மறைக்க இக்கனக் கதையைக் கட்டிவிட்டாய்; உன் இழி செயல்கண்டு நான் சினவாது இருத்தல் வேண்டும் எனும் கருத்தால், நீயே கற்பித்துக் கூறிய கதைதானே இக்கனவு? உண்மையைக் கூறு" எனக் கூறி உறுத்து நோக்கினள்.

மனைவியின் சினம் கண்டு, இளைஞன் மனம் நடுங்கினன். அவள் அருகிற்சென்று அடி பணிந்து "பெண்ணே! நான் கனவு கண்டது உண்மை; நான் கூறியன அனைத்தும் நான் கண்ட கனவுக் காட்சிகளே; நான் பொய் சொல்லி அறியேன்; என்னை நம்பு; மேலும், நான் பிழையே புரிந்திருப்பினும், அது குறித்து என்னோடு ஊடுதற்கு இது ஏற்ற காலம் அன்று. பெண்ணே! அதோ பார் அக்குயிலை; தன் பெடையை ஓயாது அழைக்கும் அதன் அன்பை என்னென்பேன்; அக்குயிலின் குரல் கூறும் பொருள் யாது தெரியுமா? மக்களைப்பார்த்து, 'ஏ, மக்காள்! மனம் மகிழப் புணர்ந்து கிடப்பீரேல், அப்புணர்ச்சியைக் கைவிடாதீர்கள்; பிரிந்து வாழ்வீரேல், உடனே புணர்ச்சி மேற்கொள்ளுங்கள்; இன்பம் நுகர்தற்கேற்ற இளவேனிற் பருவம் வந்து விட்டது; ஆகவே இன்ப நுகர்விற்கு ஏற்பன மேற்கொள்ளுங்கள்' என்பதைக் கூறுவது போலன்றே அவை கூவுகின்றன. அம்மட்டோ! அதோ பார்: குயிலின் குரல் கேட்ட மதுரை மா மக்கள், மகளிரும்,

அவர் கணவரும், இளவேனிற்கால இன்பத்தை' ஆற்றை அடுத்த அழகிய சோலைகளில் இருந்து நுகர, தம்மை ஆடை அணிகளால் அழகு செய்துகொள்ளும் காட்சியைக்காண்; என் கனவு நனவாகும் காலம் வந்து விட்டது; அது உண்மையாகும் வண்ணம், ஊடல் தவிர்த்துக் கூடும் கருத்தை, உன் உள்ளத்தில் கொள்வாயாக'' எனக் கூறி வேண்டிக் கொண்டான்.

'' புனவளர் பூங்கொடி அன்னாய்! கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே;
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி
மயங்கி மற்று ஆண்டுச் சேறலும், செல்லாது
உயங்கி இருந்தார்க்கு உயர்ந்த பொருளும்,
அரிதின் அறம்செய்யா ஆன்றோர் உலகும்,
உரிதின் ஒருதலை பெய்தலும், வீழ்வார்ப்
பிரிதலும், ஆங்கே புணர்தலும், தம்மின்
தருதல் தகையாதால் மற்று.
நனவினுற் போலும், நறுநுதால்! அல்கல்
கனவினுற் சென்றேன், கலிகெழு கூடல்
வரைஉறழ் நீள்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரைஅணி காவின் அகத்து,
உரைஇனி; தண்டாத் தீம்சாயல் நெடுந்தகாய்! அவ்வழிக்
கண்டது எவன் மற்று நீ?

கண்டது, உடன்அமர் ஆயமொடு, அவ்விசும்பாயும்
மடநடை மாயினம், அந்தி அமையத்து
இடன்விட்டியங்கா இமையத்து ஒருபால்,
இறைகொண்டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்,
துறைகொண்டு உயர்மணல்மேல் ஒன்றி நிறைவதை,
ஓர்த்தது இசைக்கும் பறைபோல் நின்னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா,

கேட்டை; விரையல்நீ; மற்றுவெகுள்வாய், உரை யாண்டு
இதுவாகும், இன்னகை நல்லாய்! பொதுவாகத்

தாங்கொடியன்ன தகையார் எழுந்ததோர்
பூங்கொடி வாங்கி, இணர்கொய்ய, ஆங்கே,
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண்போல உடைந்தன்று, அக்காவின்
துணைவரி வண்டின் இனம்.

மற்றுங்கே, நேரிணர் மூசியவண்டெல்லாம், அவ்வழிக்
காரிகைநல்லார் நலங்கவர்ந்து உண்பபோல் ஓராங்குமூச ;

அவருள்,
ஒருத்தி செயல்அமை கோதை, நகை,
ஒருத்தி இயலார் செருவில் தொடியொடு தட்ப ;
ஒருத்தி தெரிமுத்தம் சேர்ந்த திலகம்,
ஒருத்தி அரிமாண் அவிர்குழை ஆய்காது வாங்க ;
ஒருத்தி வரியார் அகல்அல்குல் காழகம்
ஒருத்தி அரியார் நெகிழத்து அணிசுருத் தட்ப ;
ஒருத்தி புலவியால் புல்லாது இருந்தாள், அலவுற்று
வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக், காதலன்
தண்தார் அகலம் புகும்.

ஒருத்தி, அடிதாழ் கலிங்கம் தழீஇ, ஒருகை
முடிதாழ் இருங்கூந்தல்பற்றிப், பூவேய்ந்த
கடிகயம் பாயும், அலந்து.

ஒருத்தி, கணங்கொண்டு அவைமூசக், கையாற்றாள், பூண்ட
மணம்கமழ்கோதை பரிவு கொண்டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்.

ஒருத்தி. இறந்த களியான்இதழ் மறைந்த கண்ணள்
பறந்து அவைமூசக் கடிவாள், கடியும்
இடம்தேற்றாள் ; சோர்ந்தனள்கை.

ஆங்க, கடிகாவில் கால்ஒற்ற ஒல்கி, ஒசியாக்
கொடிகொடி தம்மில் பிணங்கியவை போல்,
தெரிஇழை ஆர்ப்ப மயங்கி இரிவுற்றார், வண்டிற்கு
வண்டலவர் ; கண்டேன் யான்.

நின்னை நின்பெண்டிர் புலந்தனவும், நீ அவர்
முன்னடிஒல்கி உணர்த்தினவும் பன்மாண்
கனவின் தலையிட்டு உரையல்; சினைஇ, யான்
செய்வதுஇல் என்பதோ கூறு.

பொய்கூறேன்; அன்னவகையால் யான்கண்ட கனவுதான்
நன்வாயாக் காண்டை; நறுநுதால்! பன்மாணும்
கூடிப்புணர்ந்தீர்! பிரியன்மின்! நீடிப்
பிரிந்தீர்! புணர்தம்மின் என்பனபோல
அரும்புஅவிழ் பூஞ்சினைதோறும் இருங்குயில்
ஆனுது அகவும் பொழுதினுன், மேவர
நான்மாடக்கூடல் மகளிரும், மைந்தரும்
தேன்இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்
ஆனுவிருப்போடு அணிஅயர்ப; காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன், தலைவியின் ஊடல்தீர்வது குறித்து, தெய்வ மகளிர் ஆடிமகிழும் கனுக்கண்டு களித்தேன் எனக் கூறியது இது.

*1. புனவளர்-பூஞ்சோலையில் வளரும். கழியக்கனவு-நல்ல கனவு; பெருங்கனவு 2. காரிகை நீர்த்து-அழகுடைத்து; 3. முயங்கிய - புணர்ந்த; 5. உயங்கி - செயலற்று; 7. ஒருதலை-உறுதியாய்; வீழ்வார்-விரும்புவாரை; 9. தகையாது - விலக்காது; ஆல்-அசை; 10. அல்கல்-இரவு; 11. கலிகெழு - ஆரவாரம்மிக்க; 12. வரைஉறழ் - மலைபோன்ற; 14. தண்டா - குறையாத; தீம் - இனிய; 16. அவ்விசும்பு - அழகிய ஆகாயம்; 17. மாஇனம் - அன்னப்பறவையின் கூட்டம்; 19. இறைகொண்டு - தங்கி; 20. ஒன்றி நிறைவதை - ஒன்று சேர்ந்து இருத்தலை; ஒன்றி நிறைவதைக் கண்டேன் என மாற்றுக; 21. ஓர்த்தது - மனம் எண்ணியதை; 22. வேட்டது - விரும்பியது; 23. கேட்டை - கேட்பாயாக; விரையல் - அவசரப்படாதே; 25. தகையார் - அழகுடையார்;*

26. வாங்கி - வளைத்து; இணர் - மலர்க்கொத்துக்களை; 27. சினை அலர் - கிளைகளில் மலர்ந்த; பொருப்பன் - பொதிய மலைக்குரிய பாண்டியன்; 29. துனை - விரைந்து பறக்கும்; 30. மூசிய - மொய்த்த; 31. காரிகைநல்லார் - அழகுடைய நல்ல மகளிர்; ஓராங்கு - ஒன்று சேர்ந்து; 33. செயல்அமை - வேலைப்பாடுமிக்க; கோதை - மலர் மாலை; நகை - அணி; 34. தட்ப - மாட்டிக்கொள்ள 35. தெரி முத்தம் - ஆராய்ந்த முத்து: 36. அரி - அழகு; அவிர் - ஒளிவீசும்; ஆய்காது - அழகியகாது. வாங்க - மாட்டிக்கொள்ள; 37. காழகம் - ஆடை; 38. அரிஆர் - பரல்கள் நிறைந்த; நெகிழம்-சிலம்பு; அணிசுரு - அழகிய சுருப்போலும் வடிவம்; 39. அலவுற்று - வருந்தி; 42. கலிங்கம் - ஆடை; 43. பூவேய்ந்த - பூக்கள் நிறைந்த; 44. கடிகயம் - காவல் அமைந்தகுளம்; அலந்து - அலவுற்று. 45. கணம்கொண்டு - கூட்டமாய் வந்து; 45. கையாற்றாள் - கையால் ஓட்டமாட்டாள்; 46. பரிபு-அறுத்து 46. வங்கம் - ஓடம்; 48. இறந்த - அளவிற்குமீறிய; களியாள் - கள்ளுண்ட வெறியால்; 49. கடிவாள் - ஓட்டுவாள்; 50. தேற்றாள் - அறியாள்; 51. காவில் - சோலையில்; கால்ஒற்ற - காற்றுவீச; ஒல்கி - தளர்ந்து; ஒசியா - வளைந்து: 53. இரிவுற்றார் - நாற்புறமும் சிதறி ஓடினார்; 54. வண்டலவர் - மகளிர்; வண்டலவர், வண்டிற்கு இரிவுற்றார் என மாற்றுக; 57. கனவின் தலையிட்டு - கனவின் மேலேற்றி; 60. வாயா - உண்மை ஆகுமாறு; காண்டை - வழிச்செய்வாய்; 64. ஆனாது - ஓயாது; மேவர - பொருத்தமாக; 66. தேன்இமிர் - தேனீக்கள் ஒலிக்கும்; ஆடுமார் - விளையாடற் பொருட்டு; 67. ஆனா - குறையாத; அணிஅயர்ப - அணிகளை அணிவர்; 68. வேனில்விருந்து - வேனில் விழா, எதிர்கொண்டு - எதிர்நோக்கி; விருந்து எதிர்கொண்டு அணிஅயர்ப என மாற்றுக.

# 28

# கடவுளைக் கண்டாயோ

காலையில் சென்ற கணவன், இரவில் நாழிகை பல கழித்து வந்து சேர்ந்தான். வந்தானை மனைவி உற்று நோக்கினாள். அவன் மார்பில் பூசிய சந்தனம் புலராமலே இருந்தது. அதைப் பார்த்துவிட்டாள் அவள்; இந் நேரத்தில், இவனுக்குச் சந்தனம் பூசி அனுப்பியவர் யார் என எண்ணினாள்; அவ்வெண்ணத்தைத் தொடர்ந்து, அவன் சில நாட்களாகவே, தன்னோடு பண்டுபோல் பழகாது, இவ்வாறு இரவில் நாழிகை கழித்துப் புதிய பொலிவோடு வருவது நினைவிற்கு வரவே, அவன் யாரோ ஒரு பரத்தைபால் தொடர்பு கொண்டுளான் எனத் துணிந்தாள்; அதனால், பண்டு தழுவத்தழுவ வற்றாப்பேரின்பம் தந்த அவன் மார்பு, இப்போது பரத்தைமையுற்றுப் பாழ்பட்டதாக எண்ணி வெறுத்தாள். அவ்வெறுப்பு மிகுதியால், "ஏடா! சந்தனம் பூசிய வடு விளங்க வந்து நிற்கின்றாய்; இரவில் நாழிகை பல கழித்து வரும் வழக்கம் மேற்கொண்டுள்ளாய்; பண்டெல்லாம், நீ இவ்வாறு நெறிகெட்டுத் திரிய

வில்லை; நீ, இவ்வாறு ஒழுக்கம் கெட்டுவர, போன இடத்தில் நீ எதைக் கண்டுவிட்டாய்? அதை நான் அறியக் கூறு" என்றாள்.

தன் களவுவாழ்க்கையைத் தன்மனைவி அறிந்து கொண்டது கண்டு கலங்கிய இளைஞன், அவளுக்கு ஏற்ப எதையேனும் கூறி, அவளை ஏமாற்றத் துணிந்தான்; "நான் சென்று தங்கிய இடத்தைக் கேட்டறியத் துடிக்கும் தோளாய்! கூறுகிறேன் கேள்; நாம் இப்போது மேற்கொண்டிருக்கும் இல்வாழ்க்கை நிலையை அடுத்து, நாம் மேற்கொள்ள வேண்டிய துறவுவாழ்க்கையில், நம் கடமைகள் இன்னின்ன என்பதை அறநூற் சான்று காட்டி அறிவிக்கவல்ல கடவுளராகிய முனிவர் சிலரைக் கண்டேன்; அவர்பால் அவ்வறம் கேட்க, ஆங்குத் தங்கினேன்; அதனால் வரக் காலம் கடந்து விட்டது" என்று கூறினான்.

கணவன், கடவுளரைக் கண்டு அவர்பால் தங்கி வந்தேன் என்று கூறினானாயினும், அவன் கடவுளரைக் கண்டிலன்; இல்லறக் கடமைகளையே கடைப்பிடிக்காத அவன், அதற்கு அடுத்தநிலையாய வானப்பிரத்த நிலைக்கு வழிதேட மாட்டான்; அவன் யாரோ சில பரத்தையர்பாலே தங்கி வந்துளான் என உறுதியாக நம்பிய அவள், "அன்ப! உன்னால் கடவுட்டன்மை உடையாராகக் கருதப்பட்டு, உன்னால் வணங்கத் தக்கவர், சோலையில் அலரும் மலர் அணிந்து, பெண்மான்போலும் பார்வை வாய்ந்த பரத்தையர் பலராவர்; அப்பரத்தையருள், நீ கூறிய பரத்தை யாவள்? அடியேனுக்கு அதை அறிவிப்பாயாக" என நையாண்டி கூறி வேண்டிக் கொண்டாள்.

தன்னை எள்ளி நகைக்குங்கால், முத்தையொத்த அவள் வெண்பற்களைக் கண்டு மகிழ்ந்த அவன், முதலில்

அவள் பல்லழகைப் பாராட்டிவிட்டு, "பெண்ணே! நாம் மணம் செய்துகொண்ட காலத்தில், மணம்செய்து கோடற்குரிய காலம் இது என மணநாள் வைத்துக் கொடுத்த, அக்கடவுளரே, நான் கண்ட கடவுளராகும்; அவரிடத்திலேயே நான் தங்கி வந்தேன்" என்று கூறினான்.

தான், அவன் தங்கியது பரத்தையர்சேரியில் என அறிவிக்கவும், அவன் அதை மறைத்து, மணநாள் வைத்துத்தந்த முனிவர் மனையில் தங்கிவந்தேன் எனக் கூறக் கேட்ட அவள், அதை ஏற்றுக் கொள்ளாத தன் நிலையை "அன்ப! நீ கூறியது ஒக்கும் ஒக்கும்" என உடன்பாட்டு வாய்பாட்டால் கூறிவிட்டு, "எல்லா! கடவுளரைக் கண்டேன் எனக் கூறும் நீ, தலைநடுங்க, நாக் குழற நிற்கின்றனை; உன் தடுமாற்ற நிலையே, நீ கூறுவது பொய் என்பதைக் காட்டிவிட்டது; உன் களவு வெளிப் பட்டுவிட்டது; நீ கண்ட கடவுளர் யாவர் என்பதை, நான் உண்மையாகக் கூறுகிறேன் கேள்" எனத் தோற்றுவாய் செய்துகொண்டு கூறத் தொடங்கினாள்.

கணவன் கண்டு தங்கிய கடவுளர் யார் என்பதை அவனுக்குக் காட்டத் தொடங்கியவள், "காதல! பார்த் தவர் உயிரைப் பறிக்கும் பேரழகுமிக்க வடிவோடும், விழுந்து முளைத்த பற்களைக்கொண்ட இளமையோடும் வந்து, உன்னைப் பெற்றுப் பேரின்பம் நுகரும் வேட்கை யால், நீ செய்த குறியிடத்தே உன்னைக் கண்டு, உன் னோடு உன்மனைபுகுந்த பரத்தையாகிய கடவுளரைக் கண்டாயோ?" என்று வினவ விரும்பியவள், அதை அவ் வாறே வெளிப்பட வினவாது, "அன்ப! பொருள்மீது கொண்ட ஆசையால், உன் மனம்விரும்பியதையெல் லாம் வழங்கி ஆட்கொள்ளும் கடவுள், ஆசையை அடக்கும் ஆற்றலைப் பெற்றுத் தன்னைக் கண்டு வணங்கி

வழிபடுவார்க்குப் பிறவிப் பெருநோயைப் போககும் அருட்டிருவோடு உன் இல்லம் புகுந்ததைக்கண்டாயோ?" எனப் பிறிதொன்றை வினவுவாள்போல், வினவினாள்.

"அன்ப! பார்த்தாரைத் தன் வயமாக்கவல்ல பார்வையோடு சென்று, நல்ல மணம் மிக்க குளிர்ந்த மயிர்ச்சாந்தமும், புழுகும் தடவி வாரி முடித்த கூந்தலில் காலையில் அணியும் அணிகளுக்கு ஏற்றவாறு நீ பறித்து அளித்த மலர்களைச் சூடிமகிழும் பரத்தையரைக் கண்டாயோ?" என்று கேட்கத் துணிந்தவள், "அன்ப! சாந்தும் புழுகும் சேர்ந்து நறுமணம் நாறும் மகளிர் கூந்தலில், அவர் நாளணிக்கேற்ற மலர்சூட்டி மகிழக் கருதும் உன் மனத்தை, அம்மலர் மாலைகளை, அருட் பார்வையால் அன்பர்களின் பிறவிநோயைப் போக்கும் தமக்குச் சூட்டுமாறு மாற்றிய கடவுளரைக்கண்டாயோ?" என்று கேட்டுத் தன் உட்கருத்தை உணர்த்தினாள்.

"அன்ப! புனலாடி, அதற்கேற்ற புத்தாடை அணிந்து, அழியா விரதம் மேற்கொண்டு, சென்று, சூரனைக்கொன்ற செவ்வேல் முருகனைப்பாடிப் பரவிப், பின்னர்த் தாம் உற்ற பெருங்காதலால், உன்னோடு, அம்முருகன் உறையும் திருப்பரங்குன்றத்தில், மாரிக் காலத்தில் பலநாள் தங்கி மகிழ்ந்த பரத்தையரைக் கண்டாயோ?" எனக் கேட்க எண்ணியவள், அப் பொருள் தோன்றுமாறு, "அன்ப! நீர் பலகால் மூழ்கி, தூய ஆடை அணிந்து, அழியா நோன்பு மேற்கொண்டு சூரனைக்கொன்ற செவ்வேல் முருகனை, வீடு பேற்றில் கொண்ட பேராசையால், பலநாளும் பரவி வழிபட்டு, அவன் உறையும் பரங்குன்றத்தில், மாரிக்காலத்தும் அகலாது, உன்னோடு இருந்து தவவொழுக்கம் மேற் கொண்ட கடவுளரைக் கண்டாயோ?" எனப் பிறி தொன்றை வினவினாள்.

இறுதியாக, "அன்ப! நீ கண்ட பரத்தையர் பலருள், மணம் நிறை மலர்மாலைகளை யணிந்தும், சந்தனம் பூசியும், மணம்நாறும் உன் மார்பை, அது தன் பண்டைத் தூய்மை கெட்டுப் பாழாகுமாறு, தன் பல்லாலும், நகத்தாலும் வடுப்பல செய்த அப்பரத்தை யாவள்? அதை நான் அறியக் கூறு. பெரியோரால் வெறுக்கத்தக்க பழியுடையாய்! நீ ஈங்குச் சிறிது பொழுது தங்கினும் அப்பரத்தையர் உன்னைச் சினப்பர்; உன் ஒழுக்கக்கேட்டை உணர்ந்து, உன்னைப்பிரிந்து வாழும் வன்மையில் நான் தேறிவிட்டேன்; ஆகவே ஈண்டு நில்லாது ஆண்டுச்செல்க; செல்லாயாயின், நல்ல மாலை அணிந்து மலர்ந்து தோன்றும் உன் மார்பின் மீது பெருங்காதல் கொண்ட, நீண்ட கரிய கூந்தலை யுடைய அப்பரத்தையர்க்கு முட்டுப்பாடு உண்டாம்; ஆகவே அவர்பால் விரைந்து செல்க" எனக்கூறி விரட்டினாள்.

ஆனால், அதை வெளிப்படைச் சொற்களால் விளங்கக் கூறாது, இதையும் குறிப்பு மொழிகளால் கூறத் தொடங்கி, "அன்ப! நீ கண்ட கடவுளர் பலருள் உன்னை வானப்பிரத்த வாழ்வில் விருப்பம் கொள்ளுமாறு உன் மனத்தை மாற்றிய கடவுளர் யாவர்?" அக்கடவுளர் பால் நீ செல்லாதொழிவையேல், பிற சமயவாதிகள் விடுக்கும் நல்ல கடாக்களுக்கு அளிக்கவல்ல நல்ல விடைகளையும், நீர் பலகால் மூழ்குதலால், ஈரம் நிறைந்து நீண்ட கரிய சடாமுடியினையும் உடைய அக்கடவுளர் எல்லோர்க்கும், நல்லோன் ஒருவனை வானப்பிரத்த வாழ்வில் வாழவைக்குமாறு அறமுறைக்கும் வாய்ப் பற்றுப்போக ஒரு குறைபாடுண்டாம்; ஆகவே அன்ப! அவர்க்கு அக்குறைபாடு நேராவாறு, அவண் விரைந்து செல்க" எனக்கூறித் துரத்தினாள்.

"வண்டுது சாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத் தீம்சாயல், பரத்தை வியன் மார்ப !
பண்டு இன்னை யல்லைமன் ; ஈங்கு எல்லி வந்தீயக்
கண்டது எவன் ? மற்று உரை.

நன்றும், தடைஇய மென்தோளாய்!' கேட்டீவாயாயின்,
உடனுறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர்கண் தங்கினேன்,

சோலை மலர்வேய்ந்த மான்பிணை யன்னார்பலர், நீ
கடவுண்மை கொண்டொழுகுவார்;
அவருள், எக்கடவுள் ?மற்றுஅக் கடவுளைச் செப்பீமன் ;

முத்தேர் முறுவலாய் ! நாம் மணம்புக்கக்கால்
' இப்போழ்து போழ்து ' என்று அது வாய்ப்பக் கூறிய
அக்கடவுள், மற்று அக்கடவுள், அது ஒக்கும்,

நாவுள்அழுந்து தலைசாய்த்து நீகூறும்
மாயமோ கைப்படுக்கப் பட்டாய் ; நீ கண்டாரை
வாயாக யாம்கூற வேட்டீவாய் கேளினி.

பெறல்நசை வேட்கையின் நின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகாராகக்; கண்டார்க்கு
இறுமுறை செய்யும் உருவொடு நும்இல்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ ?

நறும்தண் தகரமும், நானமும் நாறும்
நெறிந்த குரல்கூந்தல் நாளணிக்கு ஒப்ப
நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு மேனாள்நீ,
பூப்பலிவிட்ட கடவுளைக் கண்டாயோ ?

ஈர்அணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலான் பாடிப் பலநாளும்
ஆராக் கனைகாமம் குன்றத்து நின்னொடு
மாரிஇறுத்த கடவுளைக் கண்டாயோ ?

கண்டகடவுளர் தம்முளும், நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறாகச் செய்து

குறிகொளச் செய்தார் யார்? செப்பு; மற்று, யாரும்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர்; செறுதக்காய்!
தேறினேன்; சென்றீநீ; செல்லாவிடுவாயேல்,
நற்றூர் அகலத்துக்கு ஓர்சார மேவிய
35. நெட்டு இரும்கூந்தல் கடவுளர் எல்லார்க்கும்
முட்டுப்பாடு ஆகலும் உண்டு."

பரத்தை வீடு சென்றுவந்த தலைவன், தலைவிக்கு அஞ்சிக் கடவுளரைக் கண்டு வந்தேன் எனக் கூற, அதற்கு அவள் கூறி ஊடியது.

*1. நீவிய - பூசிய; 2. தண்டா - குறையாத; தீம் - இனிமை; வியன் - அகன்ற; 3. இன்னை - இத்தன்மை உடையை; எல்லி - இரவு; வந்தீய - வர; 5. தடைஇய - பருத்த; கேட்டிவாய் - கேட்பாய்; 6. உடனுறை வாழ்க்கை - காட்டில் சென்று மனைவியோடு வாழும் வானப்பிரத்த நிலை; 10. செப்பீமன்-சொல்லுக; 11. முத்தேர் - முத்தையொத்த; 12. போழ்து - காலம்; 14. நாஉள் அழுந்தலாவது, சொற்கள் தடைப்படுதல்; 16. வாயாக-உண்மையாக; வேட்டிவாய் - விரும்பினவளே! 17. நசை-ஆசை; 18. பறிமுறை நேர்ந்த நகார் - வீழ்ந்து முளைத்த பற்களை உடைய இளைய மகளிர்; 19. இறுமுறை - அழிவுப்பாட்டை; 20. செறிமுறை - சேர்ந்து வரும் உரிமையால்; 21. தகரம் - மயிர்ச்சாந்தம்; நானம் - புழுகு; 22. நெறிந்த - அடர்ந்த; 23. நோக்கில் - பார்வையால்; 25. ஈரணி - புனலாடற்கேற்ற அணிவகை; ஒடியா - கெடாத; படிவம் - விரதம்; 27. ஆரா - நிறையாத; கனைகாமம்-மிக்க காமம்; 28. மாரி-மாரிக்காலம்; இறுத்த-தங்கிய; 30. வெறி - மணம்; 31. குறி - வடு; 32. சிறுவரை - சிறிதுகாலம்; செறுதக்காய் - வெறுக்கத்தக்கவனே; 36. அகலம் - மார்பு; கேள்விக்குத்தரும் விடை; ஓர்சார - ஒருசேர;*

# 29

# நகாமை வேண்டுவல்

அரண்மனை ஒன்றில், ஒரு கூனியும் ஒரு குறளனும் குற்றேவல் புரிந்துவந்தனர்: அக்கூனிக்குக் குறளன் மீது காதல்; குறளனுக்குக் கூனிமீது காதல்; ஆனால் கூனி தன்மீது காதல்கொள்வதைக் குறளன் அறியான்; குறளன் தன்மீது காதல் கொள்வதைக் கூனி அறியாள். அவர்கள் காதல், அவர்கள் மனத்திற்குள்ளேயே மறைந்து கிடந்தது.

ஒருநாள் குறளன், அரண்மனையின் ஒதுக்கிடத்தே தனித்து இருந்தான்; அவ்வழியே, ஏதோ பணிமேற் கொண்டு வந்தாள்போல் வந்துசேர்ந்தாள் கூனி. கூனியைப் பார்த்துவிட்டான் குறளன். நெடுநாட்களாக எதிர்நோக்கியிருந்த நன்னாள் வந்து வாய்த்ததாக எண்ணி மகிழ்ந்தான்; கூனியை அணுகி, "நீரில் தெரியும் நிழல்போன்ற தெளிந்த சாயலும், கூனிக்குறுகி வேறுபட்ட வடிவம் கொண்டுசெல்லும் ஏ கூனி! உன்னோடு சிறிது பேசவேண்டும், சற்றே நில்;

உன்னோடு நான் பேச, நீ என்ன புண்ணியம் பண்ணி னையோ ?'' எனக்கூறி வழி மறித்தான்.

"இவன் ஒரு குறளன்; அதை மறந்து என்னைக் கூனி எனக்கூறிப் பழிக்கின்றான்; என்னே இவன் அறியாமை!'' என எண்ணிய அக்கூனி, எதிரில் வழி மறித்து நிற்கும் அக்குறளனைப் பார்த்து, "ஐயே!'' என ஒலித்து இகழ்ந்துவிட்டு, "கண்ணால் காண ஒவ்வாத கட்டழகனே! குறளாய்ப் பிறத்தற்குரிய வாய்ப்பு அமைந்த நாழிகையில், ஆண்தலை கொண்டு வாழும் பறவைக்குப் பிள்ளையாய் வந்து பிறந்தவனே! நீ, 'உன்னை விரும்புகிறேன்' என்று கூறி, என்னை எதிர் நின்று விலக்கினாய்; உன்னைப்போலும் குறளர், என்னைத் தீண்டுதற்கும் உரியரோ? வழிவிட்டு விலகி நில்'' எனக் கூறி, அவனைக்கடந்துசெல்ல முற்பட்டாள்.

"உனக்கு என்னைத் தொடுதற்கும் உரிமை இல்லை'' என்று கூனி கூறக்கேட்ட குறளன் உள்ளம் குன்றிற்று; அந்நிலையே, கூனிக்கும் இத்தனை ஏற்றமோ எனவும் அவன் எண்ணினான். அதனால் அவளை நோக்கி, "கூனி! கலப்பையில் கோக்கும் கொழுப்போல், ஓரிடத்தே கூன் தோன்ற, ஓரிடம் முன்னே வளைந்து முறித்துப் போட்டதுபோல் தோன்றும் உன் பேரழகால் நான் பொறுக்கலாகாக் காமநோயுற்றேன், அந்நோயைத் தாங்கி, உயிர் வாழும் ஆற்றலை நான் இழந்துவிட்டேன்; என்மீது அன்புகொண்டு அளித்தால் என் உயிர்வாழும்; இன்றேல், அது இன்றே அழியும்; ஆகவே, என்னை வாழவைப்பதும், வாழாமற் செய்வதும் உன்பாடு'' என்று கூறி இரங்கி நின்றான்.

குறளன் உறுதிப்பாட்டையும், உள்ளக்காதலையும் உணர்ந்த கூனி, "இவன் மனத்துணிவின் மாண்பைக் காண்'' எனத் தனக்குள்ளே கூறி வியந்துகொண்டாள்.

ஆனால், " அகத்தே இத்தகைய உயர்ந்த காதலையுடைய இவன், அதை விரும்பும் வகையில் எடுத்துக்கூறும் வகையற்று, சினம் பிறக்கும் வகையில் வெறுப்பக் கூறு கின்றனனே" என எண்ணி வெகுண்டாள்; அதனால் "சூதாடு கருவிகளை வைத்தற்கெனக் குடைந்தெடுத்த வல்லுப் பலகையை எடுத்து நிறுத்தியதுபோல் தோன்றும் ஏகுறளா! மகளிரை மனம்மகிழப்பண்ணிப் பின்னரே கூடுதல்வேண்டும் என்ற காதல் முறையினைக் கல்லாதவனே!" என்றெல்லாம் விளித்து இழித்துரைத் தாள்; பின்னர், "ஏடா! எவரும் இயங்காத இங்கே இந்நேரத்தில், என் கையைப் பிடித்து, 'இல்லத்திற்கு வந்து இன்பம் தருக' என்று கூறி இழுக்கும் கொடிய வனே! பெண்டிர் எவரும் உன்னோடு பிறக்க வில்லையோ?" என்று கூறிச் சினந்தாள்.

கூனி கோபிப்பது கண்டும், குறளன் எள்ளி நகை யாடலைக் கைவிட்டிலன்; ஆதலால், "கூன் தலைக்குமேலே உயர்ந்து தோன்ற, கொக்கை உரித்துவைத்தாற்போல், வளைந்த வடிவோடு வந்து நிற்பவளே! நான் கூறு வதைக்கேள்; உன்னை நான் மார்போடணைத்துக் கொள்வேனாயின், உன் முதுகின்கூன் என் நெஞ்சிலே வந்து குத்தும்; உன்னை உன் முதுகின் பின்புறமாக அணைத்துக்கொள்வேனாயின், நீண்டு நிற்கும் உன் கூன், என்னைக் கிச்சுகிச்சு மூட்டும்; ஆதலின், உன்னை அணைத்துக்கொள்வது என்னால் இயலாது; உன்னைக் கூடி மகிழ்வதொன்றே இயலும்; ஆகவே, நம் கூட்டத் திற்கு உன் கூன் இடையூறு ஆகாவாறு, சிறிதே புணர்தற்கு என் பக்கத்தே வருக" எனக் கூறி அழைத்தான்.

குறளன், மேலும் மேலும் தன் கூனைப் பழிக்கவே, அவளுக்குச் சினம் மிகுந்தது; "சீ! கேடுகெட்டவனே! என்னைவிட்டு அப்பால் நட" என்று கூறி, அவனை

விலகி நின்ருள். விலக்கவும் விலகாது, விலகவும விடாது, அவன் தன்னை அணுகுவது கண்ட கூனி "மக்கள் வடிவில் ஒருபாதியைக்கொண்ட உருவத்தாய்! இவ் இழிவொழுக்கத்தை இனிக் கைவிட்டொழிக;" என அறிவுறுத்திவிட்டு, மீண்டும் பேச்செடுத்து. "ஏடா! நான் கூனிதான்; ஆயினும் கூனிய என் உடலை அணைத்து, அன்புகாட்டி, என்னை என் வாழ்நாள் உள்ளளவும் வைத்துக்காப்பவர் ஆயிரவர் உளர். அவ்வாருகவும், பரத்தைக்குணம் படைத்த இக்குறளன், 'தழுவ உன் பக்கத்தைத்தாராய்' எனக்கூறி, எள்ளி நகைக்கின்றனன். இவன் இவ்வாறு எள்ளி நகைக்க, எனக்குற்ற குறைதான் யாதோ?" என்று அவன் கேட்பத் தனக்குள்ளே கூறிக்கொண்டாள். அவ்வாறு கூறியும் அவள் சினம் அடங்கவில்லை: அதனல் "உழுந்து பல ஒன்றுகூடிப் பண்ணிய பணியாரத்தைக் காட்டினும், உருவால் உயர்ந்திராத ஏ குறளா! உன் பிறப்பினும், கூன் பிறப்பு இழிந்ததோ?" என்று கேட்டு விட்டு அப்பாற்சென்ருள்.

செல்லும் அவள் பின்புறத்தைக் கண்டான் குறளன்; காமநோய் அவனை அலைத்தது; அதனல், அவளை எள்ளி நகைப்பதை விடுத்தான்; "நெஞ்சே! 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று கூறி இவள் பின் திரிகிறேன்; நான் அவ்வாறு திரியவும், அதைப் பொருட்படுத்தாது, என்னைவிட்டு அப்பாற்செல்லும் அவள், தளர் நடையிட்டு அசைந்து அசைந்து செல்லும் அவ்வழகைப்பார்" என்று அவள் கேட்டு மகிழுமாறு, சில கூறிக்கொண்டே அவளைப் பின்தொடர்ந்தான்.

குறளன் கூறியன கேட்டாள் கூனி; அவள் சினமும் சிறிதே தணிந்தது; ஆயினும், அவன், தன்னை எள்ளி நகையாடிக் கூறிய சொற்கள், அவள் உள்ளத்தை

அரித்துக்கொண்டேயிருந்தன. திரும்பி அவனை நோக்கினாள்; அவன் நடையழகைக்கண்டு மகிழ்ந்தாள்; மகிழ்ந்ததோடு நில்லாது, நெஞ்சொடு கூறுவாள்போல் "நெஞ்சே! நிலத்தில் ஊர்ந்துசெல்லும் யாமையை எடுத்து நேரே நிறுத்தினாற் போன்ற தோற்றம் வாய்க்கப் பெற்ற இவன், குறுகிய தன் இரு கைகளையும் தன் விலாவிற்குள்ளே வீசியவாறே, 'நான் உன்னை விரும்பேன்' என்று கூறி விலக்கவும் விடாது நம்பின் வருவதைப் பார்; காமன் நடந்து வருவதுபோலும் இவன் நடை அழகையும் காண்" எனக் கூறி நகையாடினாள்.

குறளன் கூனிமீது கொண்ட காதல் மிகுதியால், அவள் யாமையை எடுத்து நிறுத்தியதுபோன்ற வடிவம் எனத் தன் வடிவையும், காமன் நடையெனத் தன் நடையையும் பழிக்கவும், அதைப் பொருட்படுத்தாதே, "பெண்ணே! நாம் ஒருவரையொருவர் காதலிப்பதற்குக் காரணமாய மலர்க்கணையேந்தி நிற்கும் மாரன் நடையை நீ கண்டதில்லையே; இதுகாறும் கண்டிலையேல், இப்போது காண்" எனக் கூறிக்கொண்டே, தன் இரு கைகளையும் வீசிநடந்து அவளுக்கு மகிழ்ச்சி ஊட்டினான்.

குறளன் நடைகண்டு மகிழ்ந்தாள் கூனி. கூனி, தன் மீது கொண்ட கோபத்தை மறந்தாள் என்பதை அறிந்துகொண்ட குறளன், உடனே அவளை அணுகி, "அன்பே! இனி உன்னை இகழ்ந்து கூறேன்; இது உறுதி; அரசன்மீது ஆணை; இனி நம் பகை மறந்து மகிழ்ந்து வாழ்வோமாக; நாம்ஒருவரையொருவர் தொட்டுக்கூடி மகிழ்தற்கேற்ற குறியிடம் எது என்பதை ஆராய்ந்து கூறுவாயாக" என்று கூறி வேண்டி நின்றான்.

குறளன், தன் பிழை உணர்ந்து, சூளுரைத்து அடங்கவே, அவளுக்கும், அவன்மீது ஆராக்காதல் பிறந்தது. அதனால், அவன் மார்பு பண்டுபோலாது, மென்மையும் இனிமையும் வாய்ந்ததாகப் புலப்பட்டது; அவன் மார்பின் மாண்பைப் பாராட்டிவிட்டு, " அன்ப! உன்னை இகழ்வதை நானும் கைவிட்டேன்; நீ விரும்பிய வாறே, இனிக் கூடி வாழ்வோம். ஆனால், அதற்கு இது ஏற்ற இடமன்று; நம்மைக் காணும் இவ்வரண்மனை வாழ்வார், "பேயும் பேயும் கூடிய காட்சிபோல் இக் கூனும் குறளும் கலந்த காட்சியைக் காண்மின்" எனக் கூறி நகைப்பர்; அவ்வாறு நகைத்தலை நான் பொறேன்; ஆகவே, பொற்றகடுபோலும் பேரழகு மிக்க உருவத்தாய், அரண்மனைக்கு அப்பால், அயலார் புகாத ஒரு பூஞ்சோலை உளது; ஆண்டு வருக. ஆங்கு, ஆன்றோர்கள், தம் அரிய ஓலைச் சுவடியின் தலையைக் கட்டி, அதன் மீது இட்ட அரக்கிலச்சினை போல், ஆரத்தழுவி அகம் மகிழ்வோமாக" என்று இனிக்கக் கூறி இசைந்து சென்றாள்.

" என் நோற்றனை கொல்லோ ?
நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்,
ஈங்கு உருச் சுருங்கி
இயலுவாய் ! நின்னோடு உசாவுவேன் ; நின்றீத்தை.
அன்னையோ! காண்தகை இல்லாக், குறள்நாழிப் போழ்தினுன்
ஆண்டலைக்கு ஈன்ற பறழ்மகனே ! நீ எம்மை
வேண்டுவல் என்று விலக்கினை ; நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று.

மாண்ட, எறித்த படைபோல் முடங்கி, மடங்கி
நெறித்துவிட்டன்ன நிறை ஏரால், என்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் போறீஇ , நிறுக்கல்லேன் ;
நீ நல்கின் உண்டு என்உயிர்.

குறிப்புக்காண் ; வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன
கல்லாக்குறள ! கடும்பகல்வந்து, எம்மை
இல்லத்துவா என மெய்கொளீஇ ; எல்லா ! நின்
பெண்டிர் உளர்மன்னோ ? கூறு.

நால்லாய்கேள் ! உக்கத்து மேலும் நடு உயர்ந்து, வாள்வாய
கொக்கு உரித்தன்ன கொடுமடாய் ! நின்னையான்
புக்கு அகலம் புல்லின், நெஞ்சு ஊன்றும் , புறம்புல்லின்,
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் , அருளீமோ !
பக்கத்துப் புல்லச் சிறிது.

போ ; சீத்தை , மக்கள் முரியே ! நீ மாறு ; இனித்தொக்க,
மரக்கோட்டம் சேர்ந்தெழுந்த பூங்கொடிபோல
நிரப்பமில் யாக்கை தழீஇயினர் எம்மைப்
புரப்பேம் என்பாரும் பலரால் ; பரத்தை, என்
பக்கத்துப் புல்லீயாய் என்னுமால் ; தொக்க
உழுந்தினும் துவ்வாக் குறுவட்டா ! நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்பு ? கழிந்தாங்கே,
யாம் வீழ்தும் என்று தன்பின்செலவு முற்றீயாக்
கூனிகுழையும் குழைவு காண் ;

யாமை எடுத்து நிறுத்தற்றால் ; தோள்இரண்டும் வீசி,
யாம்வேண்டேம் என்று விலக்கவும், எம்வீழும்
காமர் நடக்கும் நடைகாண் ; கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க.

ஓஒகாண் ; நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முள்நாம்
உசாவுவம் ; கோன்அடி தொட்டேன்.

ஆங்காக, சாயல் இன்மார்ப ! அடங்கினேன் ; ' ஏஎ
பேயும் பேயும் துள்ளல் உறும் ' எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல் !
தண்டாத் தகடுருவ ! வேறுகக் காவின்கீழ்ப்
போதர் அகடுஆரப் புல்லி முயங்குவேம் ;
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு. "

குற்றேவல் புரியும் கூனும் குறளும் ஊடிப் பின்னர்க் கூடியது.

1. நோற்றனை - தவம்செய்தனை; 2. நுடங்கிய- நெளிந்த; 4. உசாவுவேன் - வினவுவேன்; நின்றீத்தை - நிற்பாயாக; 5. காண்தகை: காணத்தக்க அழகு; குறள் நாழிப்போழ்து - குறளாய்ப் பிறப்பதற்குரிய வாய்ப் பமைந்த காலம்; 6. பறழ் - இளமையைக் குறிக்கும் பெயர்; 9. மாண்ட - மாட்சிமைப்பட்ட; எறித்தபடை- கலப்பையில் கோக்கும்கொழு; 10. நெறித்துவிட்டன்ன- முறித்துவிட்டாற் போன்ற; நிறை ஏரால் - நிறைந்த அழகால் (இகழ்ச்சிக் குறிப்பு) 11. பொறீஇ - தாங்கிக் கொண்டு; நிறுக்கல்லேன் - வாழமாட்டேன்; 13. வல்லுப் பலகை - சூதாடும் பலகை; 15. மெய்கொளீஇ - என் கைகளைப்பற்றி; 17. உக்கம் - தலை; இடையுமாம்; வாள் வாய - வாள்போலும் வாயைஉடைய; 18. கொடுமடாய் - வளைந்த கூனியே; 19. அகலம்-மார்பு; 20. அக்குளுத்து, கிச்சுக்கிச்சுற்று; 22. சீத்தை - சீ கெட்டவனே; முரி-பாதி அதாவது குள்ளன்; 24. நிரப்பமில்யாக்கை - முழுதும் வளராத உடல்; அதாவது கூன்; 25. பரத்தை - கீழ் மைக்குணங்கள் உடையவன்; 26. புல்லியால் - தழுவு வாயாக; என்னுமால் - என்று கூறும்; 27. துவ்வா - வளராத; நிரம்பாத; அதாவது, உழுந்தின் அளவினும், உருவால் சிறியவன் என்பது; 29. வீழ்தும் - விரும்பு கின்றேம்; முற்றீயா - இசையாத; 30. குழைவு - நெளிவு அசைவு; 33. கவர்கணை - காதலர் உள்ளங்களைக்கவரும் மலர்க்கணை, 34. சாமனுர்-காமன் தம்பி; தம்முன் - அவன் முன் பிறந்தோன் (காமன்); 35. தொடீஇயர் நகுதல் என மாற்றித், தொட்டு மகிழ்தற்கு எனப் பொருள் கொள்க; 36. உசாவுவம் - ஆராய்வோம்; கோன்-அரசன்; அடிதொட்டேன் - அடிதொட்டு ஆணையிட்டேன்; 38. துள்ளல் - துள்ளிக்கூத்தாடல்; உறும் - ஒக்கும்; 39. கோயில் - அரண்மனை; 40. தகடு - பொன்தகடு; 42. துகள்தபு - குற்றமற்ற; காட்சி - அறிவு; 43. முகடு- தலை; காப்பு யாத்து - கட்டு அரக்கிலச்சினையிட்டு;

# 30

# யாம் யாரே?

மணந்து மனையறம் மேற்கொண்டு, மனம் நிறைந்த வாழ்வு வாழும் ஓர் இளைஞன், மனைவி தரும் இன்பத்தைப் பெருக நுகர்ந்தமையால் அவ்வின்பத்தில் வெறுப்புற்றுச் சிறிதுகாலம், பரத்தையர் தொடர்புகொண்டு திரிந்தான். அவன், அவ்வாறு வாழ்க்கையில் தவற, அவனுக்கு வழிகாட்ட வந்து சேர்ந்தான் பாணன். இளைஞன் அளிக்கும் புதுப் புதுப் பொருள்களைப் பெற்றுப் புகழ்ந்து பாடி, அவனை இமைப்பொழுதும் பிரியாது வாழும் பாணன் இளைஞன் பரத்தையர் ஒழுக்கத்திற்கு உற்ற துணையாய் அமைந்தான். அவன் துணையால், நாள்தோறும் புதுப்புதுப் பரத்தையரைப் பெற்றுப் பேரின்பம் நுகர்ந்தான்; நாள் சில கழிந்தன. மனைவியோடுகூடி நடாத்தும் மனையற மாண்பினை நினைந்து, மீண்டு, தன் மனை புகுந்தான்.

கணவன் ஒழுக்கக் கேட்டை உணர்ந்து, அவனை வெறுத்து, வருந்திக்கிடந்த மனைவி, வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்த அவனை வரவேற்க விரும்பவில்லை;

மேலும். "இத்தனைநாள், என்னை மறந்து திரிந்தவனுக்கு, இன்று, என்மீது அன்பு சுரந்திருக்கும் என்பதற்கு என்ன உறுதி; தான் விரும்பும் பரத்தையின் வீடு நோக்கிச் செல்வான் எனவீடு வழியில் இருந்தமையால், ஈங்கு வந்துளான்" என இவ்வாறு எண்ணிற்று அவள் உள்ளம். அதனால், அவனைத் தான் காண்பதையும், அவன் தன்னை அணுகுவதையும் வெறுத்தாள்; அவன் தன்னை அணுக வருவதைக் கண்டு, "ஏடா! அணுக வாராதே; அங்கேயே நில்; அங்கேயே நில்; உன்னைப் புணரும் மகிழ்ச்சிப்பெருக்கால், மணம்நாறும் எண்ணெய் பூசி, மலர்சூடி வாழும் மங்கையர் மனைநோக்கிச் செல்லும் நீ, வழி மயங்கி, இங்கு வந்துள்ளாய் என்பதை அறிவேன்; நீ வந்தவாறே திரும்பிச்செல்; உன் உள்ளம் கவர்ந்த அப்பரத்தையின் மனைநோக்கி உன் கால்கள் சிவக்கக் கடுகி நட" என்று கூறி வெகுண்டாள்.

இளைஞன், மனைவியின் சினம் கண்டு சிறிதே மருண்டான்; பின்னர் ஒருவாறு தெளிந்து, "பெண்ணே! ஊர்ப்புறத்தே, ஒருவன் புதிதாகப் பிடித்துவந்த காடைகளைப் போர்செய்யவிட்டு, வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான்; அதைக்கண்டு நின்றமையால் காலம் கடந்து விட்டது; அதுவல்லது, நீ கூறும் குறை எதையும் நான் அறியேன்; இது உண்மை" எனத் துணிந்து ஒரு பொய் கூறினான்.

கணவன், காடைப்போர் கண்டுவந்தேன் எனக் கூறுவது பொய்யென்பதை அவள் அறிவாளாதலின், "ஏடா! நீ காடைப்போர் கண்டு களித்து நின்றாய் என்பதை நானும் கேட்டறிந்தேன். அமமட்டோ! நீ கண்ட காடைப்போர் எத்தகைத்து? அக்காடையின் இயல்பு யாது? அக் காடைக்குரியோன் யாவன் என்பனவும் அறிவேன்; அன்ப! புதிய புதிய காடைகளைக்

கைப்பற்றிக் கொணர்ந்து போரிட்டுக் காட்டுவதால் உண்டாம் வளத்தை வாயாரப் பாராட்டி, அக் காடைகள் அகப்படும் இடத்தைவிட்டுப் பிரியாது காத்திருந்து அகப்பட்ட காடைகளை அன்பாகத் தடவிக்கொடுக்கும் புலையன், இனிய இசை எழுப்ப, அவ்விசைகேட்டு மயங்கி அகப்பட்ட புதிய காடையின் போரைக் கண்டுவந்தாய் என்றும், அப்போரில்பட்ட புண், புலராது பெருந்துயர் தந்தது என்றும் பிறர் கூறக்கேட்டேன்;

"அன்ப! எப்பொழுதும் நீ அக்காடையோடு திரிவதைக் காணும் ஊரார் கூறும் பழிச்சொற்களைப் பொருட்படுத்தாது, நீ, அக்காடையை மார்பிலே அணைத்துக்கிடக்க, நீ அவ்வாறு கைவிடாது கைக்கொண்டு வாழ்வதால், செருக்குற்ற அக்காடை, தனக்கு மாறுபாட்டைத் தருமாறு தன்னோடு போர்செய்யவல்ல பிறிதொரு காடையைக் கண்டவிடத்தும் அஞ்சாது அதனோடு போர்செய்யும் போரையும் கண்டு மகிழ்ந்தாய் என்றும் சிலர் வந்து கூறினர்.

"அன்ப! அக் காடை போரில் பெற்ற புண்ணிற்கு மருந்திடும் நீ, அம்மருந்து புண்ணில் நன்கு படுதற் பொருட்டு, அப்புண்ணை மூடிய மயிர்களைப் பறிக்குங்கால் நோவப் பறிக்காது, பையப் பறித்து அன்புகாட்ட, அக் காடை தன்னை எதிர்த்த காடையை, விரைந்து போரிட்டு வென்று முடிவு காணாது, அக் காடையோடு தொடர்ந்து செய்த போரைக்கண்டு நின்றாய் என்றும் வேறுசிலர் வந்து கூறினர்" என்று கூறி, அவன் கூறிய காடைப் போர்க்காட்சிகளைக் காட்டுவாள்போல், "அன்ப! நாள் தோறும் நீ புதிய புதிய பொருள்களைக் கொடுக்க, பெற்ற அக் கொடையைப் பாராட்டித் தன் கையாழ் இசைத்து உன்னை மகிழ்வித்து, உன்னைவிட்டு நீங்கா உன் நிழல் போல் உன்பின் திரியும் பாணன், தன்யாழோசை

கேட்டுத் தன் வயப்பட்ட பரத்தையரை, மேலும் இனியன பல கூறி அகப்படுத்திக்கொண்டுவந்து கொடுக்க, அப்புதிய பரத்தையரோடு கலவிப்போர் கண்டு களித்தாய்; அப்போரில் நீ பட்ட புண்கள் இன்னமும் ஆறிற்றில.

"அன்ப! உன் ஒழுக்கக் கேட்டினை உணர்ந்த ஊரார் பழிப்பதையும் பொருட்படுத்தாது, அப்பரத்தையை உன் மார்புமாலை மயங்குமாறு அணைத்துக்கொண்டு அன்பு காட்டிய நீ, அப்பரத்தையை அனுப்பி, வேறு சில பரத்தையரை அகப்படுத்தக் கருதினையாக, அதுகண்டு அவள் ஊட, அதைப் பொருட்படுத்தாதே, புதிய பரத்தையரைப் பெற்று மகிழ்ந்தனை; அதனால் உண்டான உன் உடற்புண்கள் இன்னமும் ஆறவில்லை.

"மேலும், அன்ப! கலவிக் காலத்தில், பல்லாலும், நகத்தாலும், கன்னங்களில் பண்ணும் புண்கள், ஆழமாய்ப்பதியின் இவள் வருந்துவாள் என்று, அன்பால் அஞ்சும்நீ, புண்பண்ணாது, அவள் மேனியை மெல்லத் தடவிக்கொடுக்க, அதனால் ஆராமைகொண்ட அவள், 'இவன் என்னை வருத்தி இன்பங் கொண்டிலனே' என எண்ணி ஏங்கி, உன்னோடு ஊட, அவள் ஊடல்தணித்துப் புணர்ந்து வந்துளாய்; அன்ப! நீ மறைவாக நிகழ்த்திய அக்காதல் விளையாட்டை, உன் முகமே உணர்த்தி விட்டது" என்று அவன் மேற்கொண்ட பரத்தையர் ஒழுக்கத்தினைத் தான் உணர்ந்திருப்பதை உரைத்து ஊடிச் சினந்தாள்.

"இவள் என் ஒழுக்கக் கேட்டினை உணர்ந்துகொண்டாள்; ஆனால், அதை ஒப்புக்கொண்டால், இவள் உளம் வருந்துவாள்; ஆகவே, அதை அறவே மறுத்தல் வேண்டும்" எனத் துணிந்தான் இளைஞன்; அதனால், "பெண்ணே! நீ கூறிய எதையும் நான் அறியேன்:

இஃது உண்மை; இதை உறுதி செய்ய உன்னைத் தொட்டுச் சூளுரைக்கவும் தயங்கேன்" என்று கூறினான்

தவறும் செய்துவிட்டு, அதை மறைக்கத் தன்னைத் தொட்டுச் சூளுரைக்கவும் துணிந்த கணவன் செயல் கண்டு கலங்கிய அவள், "ஐயே!" என இசைத்து அவனை இகழ்ந்தாள்.

தான் சூளுரைக்கத் துணிந்தமை கண்டும், மனைவி, தன்னைத் தெளியாமை கண்ட இளைஞன், "பெண்ணே! நான் நடந்ததைக் கூற, அதைப் பொய்யென்று தள்ளும் நீ, உலகியலறியாப் பேதை போலும்" எனக் கூறிச் சிறிதே சினந்தான்; ஆனால், அவளோ, அவன் சினம் கண்டும் சிந்தை கலங்கினாளல்லள்; மனைவியின், மன வுறுதியைக் கண்டான்; பொய்யுரைப்பதில் இனிப் பய னில்லை; உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப்பை வேண்டுவதே வழி எனக் கருதினான்; உடனே "நல்ல வளே! நான் செய்த தவறுகளை நீ கண்டு கொண்டாய்; நான் கூறியன பொய் என்பதையும் புரிந்துகொண்டாய் என் களவொழுக்கத்தைக் கையோடு பிடித்துவிட்டாய்; நான் உனக்குத் தவறு செய்துவிட்டேன்; என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயாக" என்று இரந்து கூறி வேண்டிக் கொண்டான்.

கணவன், தவற்றினை ஒப்புக்கொண்டு மன்னிக்க வேண்டியும், அவள் சினம் தணிந்திலது; அதனால், அவள், "அன்ப! நீ வேண்டியவாறு, உன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள நான் யார்? அதற்கு எனக்கு என்ன உரிமை உளது? மேலும், உன் அன்பைப் பெற்ற அப் பரத்தையர், நீ கைவிடின் பெரிதும் கலங்குவர்; அவர் வருந்தாவாறு அவரைப் பாணன் துணையால் பெற்று, அவர்க்குப் பேரின்பம் தந்து மகிழ்ந்து வாழ்வாயாக" எனக் கூறி வெறுத்து விரட்ட விரும்பினாள்; ஆனால்

அதை அவ்வாறு விளங்கக் கூற அவள் பெண்ணுள்ளம் நாணிற்று; அதனால், "அன்ப! அக்காடைகள், முன்னர் உன்னால் அளிக்கப் பெற்றுப் பின்னர்க் கைவிடப்படின் வருந்தும்; அவை வருந்தாவாறு, அவற்றைப் புலையன் துணையால் பெற்று, போர் செய்யவிட்டு மகிழ்வாயாக" என்று கூறி, அவண் நில்லாது, அவ்விடம் விட்டு அகன்றாள்.

"நில் ஆங்கு! நில் ஆங்கு; இவர்தரல் எல்லா! நீ,
நாறுஇருங் கூந்தலார் இல்செல்வாய், இவ்வழி,
யாறு மயங்கினை போறி; நீ வந்தாங்கே
மாறுஇனி நின்றாங்கே நின் சேவடி சிவப்பச்!
செறிந்து ஒளிர் வெண்பல்லாய்! யாம் வேறு இயைந்த
குறும்பூழ்ப் போர்கண்டேம், அனைத்தல்லது, யாதும்
அறிந்ததோ இல்லை, நீ வேறு ஓர்ப்பது,

குறும்பூழ்ப் போர் கண்டமை கேட்டேன்; நீ என்றும்
புதுவன ஈகை வளம்பாடிக், காலிற்
பிரியாக், கவிகைப்புலையன் தன் யாழின்
இகுத்த செவிசாய்த்து இனிஇனிப் பட்டன
ஈகைப் போர் கண்டாயும் போறி; மெய்எண்ணில்
தபுத்த புலர்வில புண்.

ஊரவர் கவ்வை உளைந்தீயாய், அல்கல் நின்
தாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர் வாய்ப்பக் காணினும் போகாது கொண்டாடும்
பார்வைப்போர் கண்டாயும் போறி; நின்தோள் மேலாம்
ஈரமாய்விட்டன புண்.

கொடிற்றுப் புண் செய்யாது, மெய்ம்முழுதும் கையின்
துடைத்து நீ வேண்டினும், வெல்லாது கொண்டாடும்
ஒட்டியபோர் கண்டாயும் போறி; முகந்தானே
கொட்டிக் கொடுக்கும் குறிப்பு.

ஆயின், ஆயிழாய்! அன்னவை யான் ஆங்கு அறியாமை
போற்றிய நின்மெய் தொடுகு.

அன்னையோ ! மெய்யைப் பொய்என்று மயங்கிய கைஒன்று
அறிகல்லாய் போறி ; காண் நீ.

நல்லாய் ! பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் ; பிழைத்தேன் ; அருள் இனி,

அருளுகம் ! யாம் யாரேம் ? எல்லா ! தெருள
அளித்து நீ பண்ணிய பூழெல்லாம் இன்னும்
விளித்து, நின் பாணனோ டாடி, அளித்தி ;
விடலை ! நீ நீத்தலின் நோய்பெரிது ஏய்க்கும்
நடலைப்பட்டு, எல்லா ! நின்பூழ், ''

**பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன், அது மறைத்துக் குறும்பூழ்ப்போர் கண்டு வந்தேன் என, தலைவி உறழ்ந்துகூறி ஊடியது.**

*1. இவர்தரல் - அணுகவாராதே; 2. நாறுஇருங் கூந்தல் - மணம் நாறும் கரிய கூந்தல்; 3. யாறு - வழி; போறி-போன்றுஉள்ளாய்; வந்தாங்கே - வந்தது போலவே ; 4. மாறு - திரும்பிச் செல்; நின்னுங்கே-உனக் குரிய அப்பரத்தையர் மனைக்கே ; நின்னுங்கே, சேவடி சிவப்பமாறு எனக் கூட்டுக. 5. செறிந்து - நெருங்கி; ஒளிர் - ஒளிவீசும்; வேறுஇயைந்த - புதிதாகவந்த; 6. குறும்பூழ் - காடை; 7. ஓர்ப்பது-எண்ணுவது; 9. ஈகை கொடை, காடை; இருபொருளும் கொள்க; காலிற்பிரியா- உன்னிடத்தினின்றும் பிரியாத; 10. கவிகை - யாழ் வாசிக்கக் கவிந்த கை; காடையைத் தழுவக் கவிந்தகை; புலையன்-பாணன்; காடைபிடிப்போன் ; 11. இகுத்த - தாழ்ந்த; இனிஇனி - புதிதாக; 13. தபுத்த - கொன்றன; 14. கவ்வை - அலர் ; உளைந்தீயாய் - வருந்தாய் ; அல்கல்- தங்குகின்ற ; 15. தாரின்வாய் - மாலையிடத்து; 19. கொடிற்றுப்புண்-கன்னத்தில் செய்யும்புண்; 21. ஒட்டிய- உன்னைவிடாதுபற்றிய; 22. கொட்டிக் கொடுக்கும்-தெளி வாக அறிவிக்கும்; 24. போற்றிய - உனக்கு உறுதியாக உணர்த்தற் பொருட்டு; தொடுகு - தொட்டுச்சூள் உரைப்*

பேன்; 25. கைஒன்று - உலகியல் ஒழுக்கம் எதையும்; 26. அறிகல்லாய் - அறியாய்; 27. தலைப்பெய்து-தலைமேல் ஏற்றி; 28. பிழைத்தேன் - பிழை செய்துவிட்டேன்; 31. அளித்தி-அருள் பண்ணுவாயாக; 32. விடலை - ஒரு ஆண்பாற் சிறப்புப் பெயர்; 32. ஏய்க்கும் - அடையும்; 33. நடலைப்பட்டு - வஞ்சிக்கப்பட்டு.

# 31

# அறிந்தேன் உன் குதிரையை

ஓர் அரசிளங்குமரன், தன் ஆருயிரனைய மனைவியோடு, மனையற வாழ்வு மேற்கொண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்; ஒருநாள் வீட்டைவிட்டு வெளியே சென்றவன், ஆங்கே ஓர் இளம் பரத்தையைக் கண்டு, அவள் அழகிற்கு அடிமையாகி அறிவிழந்தான்; அவள் பின் சென்று, அவளோடு ஆடிப்பாடி அகமகிழ்ந்தான்; அவன் மனைவி, நாள் சில கழியவும், கணவன் வாராமையால் கலங்கி, அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தாள்; அந்நிலையில் அவனும் வந்து சேர்ந்தான்; அவன் வருகையைத் தொலைவிலேயே கண்டு களிமகிழ் கொண்டாள்; அவனை எதிர்கொண்டழைக்க விரைந்து வாயிலை அடைந்தாள்; ஆனால் அந்தோ! அவள்கண்ட அவன் காட்சி, அவளை அழப்பண்ணிற்று; அவன் மார்பின் அழகைக்கண்டு, அவன் மொழியின் இனிமை கேட்டு மகிழத்துடித்தவள், அவனை அணுகவும் அஞ்சினாள்; அவன் ஆடைகள் மடிப்புக்குலைய, கரைகள் கிழிய நலங்கியிருந்தன; அவன் மார்பிற் பூசிய சந்தனச்

சாந்து, கரைந்து கலையுமாறு வேர்வை வழிய வழிய வந்திருந்தான்; அவன் தலைமாலை, தோளிலே வீழ்ந்து தன் நிறம் கெட்டுக் கசங்கிக்கிடந்தது. இக்காட்சிகளைக் கண்டாள்; கணவன் எங்கோ சென்று இவ்வாறு தன் நிலைகுலையுமாறு, யாதோ ஒரு பெருஞ்செயல் புரிந்து வருகிறான் என எண்ணினாள்; அவன் செய்த செயல் எவ்வளவு சிறந்ததேயாயினும், அவன் தன்னைத் தனியே விடுத்து, இத்தனை நாளும் பிரிந்திருந்த வருத்தம் அவளை வாட்டியதால், அவள் அவனை நோக்கி "ஐய! இத்தனை நாட்களாக நீ எங்கே போயிருந்தாய்; அங்கே நீ இவ்வாறு நிலைகுலையுமாறு, நீ பண்ணிய பெருஞ் செயல் யாது? இப்பொழுது, இங்கு எங்கே வந்தாய்?" என வினவிச் சினந்தாள்.

பரத்தையர் தொடர்பால் தன் மெய்பெற்ற வேறு பாடுகளை, அவள் சிறிதும் பிழையின்றிக் கண்டு கொண்டது, அவனை நடுங்கச்செய்தது; அதை அவள் அறிந்துகொள்ள அவளுக்குத் துணைபுரிந்த அவள் கண்களைக் கண்டு அஞ்சினான்; அவை, தம் நுண்ணுணர் வால், எதையும் ஊன்றி நோக்கும் நோக்கால், தன்பால் உள்ள பிற குறைகளையும் கண்டுவிடுமோ எனக் கலங்கி னான்; அதனால் அவற்றை, அவற்றின் தொழிலை மறக்கச்செய்யும் கருத்தோடு, "இரு நீல மலர்களை எதிர் எதிராக ஏந்திப்பிடித்துப் பிணைத்துவைத்தாற்போல் பேரழகுகாட்டும் அழகிய கண்களே! அத்தகைய கண்களைப்பெற்ற அழகிய நல்லாளே!" என அவற் றையும், அவளையும் பாராட்டினான்; தன் பாராட்டால் அவையும், அவளும் குறைகாணும் தம் செயல் மறந் திருப்பர் எனும் துணிவால், "பெண்ணே! போன இடத்தில், குதிரை ஏற்றம் பழகினேன்; அதனாலேயே என் வருகை தடைப்பட்டது" என்றான்.

அவன் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்பொழுதே, அவள் அவனை உற்று நோக்கினாள்; ஆடையும் அணிந்த மாலையும் நிலைகுலைந்திருப்பதோடு, அவன் மேனியும் தன் நிலை திரிந்திருப்பதைக் கண்டாள்; அவன் உடம்பெல்லாம், நகம்கொண்டு கீறியதாலும் பற்கள் அழுந்தியதாலும் உண்டான புண்கள் நிறைந் திருப்பதைப் பார்த்தாள்; இவ்வாறு அவனைப் புண் செய்யும் ஆற்றல்வாய்ந்த பகைவர் ஒருவரும் இல்லை என்பதை அவள் அறிந்தவள்; அதனால், அப்புண்கள் அவன்பால் விருப்பங்கொண்ட யாரோ ஒரு பெண், அவனோடு கூடிப்புணர்ந்த காலத்தில் பண்ணிய புண்களே என்பதை உணர்ந்துகொண்டாள்; அவன் ஆடை நலங்கியதும், சந்தனம் சிதைந்ததும், மாலை கசங்கியதும் அதன் விளைவே என அறிந்தாள்; இவற்றால், கணவன் பரத்தையர் தொடர்பு கொண்டு ளான், இதுகாறும் அவன் அவளிடத்திலேயே சென் றிருந்தான் என்பதை உறுதிசெய்து கொண்டாள்; அதனால், அவன் "குதிரை ஏறி உலாவந்தேன்" எனக் கூறக் கேட்டதும், அவள் அவனை நோக்கி "அன்ப! நீ ஊர்ந்த குதிரை எது என்பதை நான் அறிந்துகொண் டேன்; அது, வனப்பு மிகுமாறு வாரிமுடித்த அழகிய கூந்தலாகிய, அழகாகக் கத்தரித்துவிடப்பெற்ற பிடரி மயிரையும், கூந்தல் முடிமீது விரித்துப் பிணித்த துஞ்சு எனும் அணியாகிய சிவந்த தலையாட்டத்தையும், இடை யிடையே நீலமணி வைத்துத் தைத்துக் கழுத்தைச் சுற்றி அணியும் கட்டுவடமாகிய வல்லிகை எனும் கழுத்தாரத்தையும், காதிற் கிடந்து தொங்கும் புல்லிகை எனும் காதணியாகிய கன்னசாமரையினையும், தெய்வ உத்தி எனும் தலையணியில் பிணித்து, கண்களில் படு மாறு தொங்கவிடப்பெற்ற சுட்டி எனும் அணியாகிய சம்மட்டி எனும் சாட்டையும், நூலால் ஆய மெல்லிய

மேலாடை ஆகிய, கடிவாளத்தையும், பன்னிற மணி களைக்கொண்டு மூன்று கோவையாகப் பண்ணிய முக் கண்டன் எனும் கழுத்து வடமாகிய கண்டிகை எனும் கழுத்தணியையும், அணிந்து, மேகலையாகிய தண்டையும் சிலம்பாகிய கெச்சையும் கலீர் கலீர் என ஒலிக்க வந்து, உன்னால் காதலிக்கப்பெற்று, நீ ஊர்ந்து திரியும் காமக் கிழத்தியாகிய அக்குதிரையைச் செண்டு வெளியில் கொண்டு சென்று ஊராது, வண்ணம் தீட்டி வனப்புற்று விளங்கும் அவள் மாடத்தில், அழகிய நிலா முற்றத்தில், ஆதி எனும் விரைவுதோன்ற ஊர்ந்து இளைத்தாய்; அன்ப! நீ நல்ல குதிரைச் சேவகன் ஆகுவை; நீ வாழ்க !''

" அன்ப ! நம் மதுரைமாநகரில், வீதிகளில் வீழ்ந்து கிடக்கும் குப்பைக் கூளங்களை, விடியற்காலத்தே சென்று பெருக்கி எடுத்து, வாரிக்கொண்டுபோக, அவ்விடங் களில், பெருக்கிய துடப்பம் இழுத்த கோடுகள் வரி வரியாகத் தோன்றுவதுபோல், உன் மேனியில் வரி யாகப் புண்படுமாறு கீறியதும் அக்குதிரைதானே? கூரிய நகம் பொருந்திய குளம்பினைக்கொண்ட அக் குதிரை மிகவும் கொடிதுபோலும்; அக்குதிரையை அடக்கி ஆளும் அன்ப! அதனால் அழிவுறாது நீ நெடிது வாழ்க! அன்ப! மூங்கிலால் பண்ணிய நாழி உழக்கு போன்ற அளவு கருவிகளின் அடியை வண்ணத்தில் தோய்த்துத் தோய்த்து அழுத்தி அழகு செய்யப்பெற்ற குதிரையின் முதுகுபோல், உன் மேனியைக் கவ்விக் கவ்விப் புண்ணாக்கியதும் அக்குதிரைதானே? சிறிதும் அச்சம் அற்று, அவ்வாறு கடித்து வடுப்படுத்திய அக்குதிரை பெரிதும் விஷம்போலும்; அக்குதிரையை அடக்கி ஆளும் அன்ப! அதனால் அழிவுறாது நீ நெடிது வாழ்க !'' என வாழ்த்துவாள்போல் பழித்தாள்.

*அவள் ஆத்திரம் அம்மட்டோடு அடங்கவில்லை; மேலும் அவனைப் பார்த்து, 'அன்ப! நீ ஏறித் திரிந்த குதிரை இது என்பதை அறிந்துகொண்டேன்; அது ஓர் அழகிய நல்ல குதிரை என்பதையும் அறிந்தேன்; ஆனால், அக்குதிரை, உற்றாரும், பெற்றாரும், ஊராரும் கூடி மணம் செய்துதர, அறவழி நின்று பெற்ற பெருமை யுடையதன்று; தன்னலம் நாடி உன் பின் திரியும் பாணன் தூதாகச் சென்று, சேரிப் பரத்தையர் சினந்து நோக்க, காற்றெனக் கடுகிக்கொணர்ந்தது அக்குதிரை; உன் உருவு நலத்தை அழிக்கும் கொடுமை மிக்க அக்குதிரைமீது ஏறித்திரிய எண்ணாதே; என் சொல் கேளாது, அக்குதிரையை அடக்கி ஆளும் சேவகனாய் வாழ்வதையே விரும்புவையாயின், ஈண்டு வாராது யாண்டேனும் சென்று திரிக; அதன்மீது ஏறித்திரிய இன்றே செல்க; இமைப்பொழுதும் ஈண்டு நில்லற்க" எனக் கூறிக் கடிந்தாள்.*

"ஏந்து எழில் மார்ப! எதிர் அல்ல நின்வாய்ச்சொல்;
பாய்ந்து ஆய்ந்த தானைப் பரிந்து ஆனா மைந்தினை;
சாந்தழி வேரை; சுவல் தாழ்ந்த கண்ணியை;
யாங்குச்சென்று, ஈங்கு வந்தீத்தாய்! கேள் இனி,
ஏந்தி, எதிர்இதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்!
குதிரை வழங்கி வருவல்.

அறிந்தேன்; குதிரைதான்,
பால் பிரியா ஐங்கூந்தல் பன்மயிர்க் கொய்சுவல்,
மேல்விரித்து யாத்த சிகழிகைச் செவ்வுளை,
நீல மணிக்கடிகை வல்லிகை, யாப்பின்கீழ்
ஞால் இயல் மென்காதின் புல்லிகைச் சாமரை,

மத்திகைக் கண்ணுறையாகக் கவின்பெற்ற
உத்தி ஒருகாழ், நூல் உத்தரியத் திண்பிடி,
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்,
தார்மணி பூண்ட தமனிய மேகலை,

நூபுரப் புட்டில், அடியொடு அமைத்து யாத்த
வார் பொலம் கிண்கிணி ஆர்ப்ப, இயற்றி, நீ
காதலித்து ஊர்ந்த நின் காமக்குதிரையை
ஆய்சுதை மாடத்து, அணிநிலா முற்றத்துள்,
ஆதிக் கொளீஇய அகையினை ; ஆடுவை
வாதுவள் ; வாழிய ! நீ ;

சேகா! கதிர்விரி வைகலின் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம்போல, நின் மெய்க்கண்
குதிரையோ வீறியது ?

கூர்உகிர் மாண்ட குளம்பின் அது நன்றே ;
கோரமே ! வாழி ! குதிரை.

வெதிர் உழக்கு நாழியால் சேதிகைக் குத்திக்
குதிரை உடல் அணிபோல நின் மெய்க்கண்
குதிரையோ கவ்வியது ?

சீத்தை , பயம்இன்றி ஈங்குக் கடித்தது நன்றே ;
வியமமே ; வாழி ! குதிரை.

மிகநன்று ; இனி அறிந்தேன் இன்று நீ ஊர்ந்த குதிரை,
பெருமணம் பண்ணி அறத்தினிற்கொண்ட
பருமக் குதிரையோ அன்று ; பெரும ! நின்
ஏதில் பெரும்பாணன் தூதுஆட, ஆங்கேயோர்
வாதத்தான்வந்த வளிக்குதிரை ; ஆதி
உருவழிக்கும் அக்குதிரை ஊரல் ; நீ ஊரில் பரத்தை
பரியாக, வாதுவனாய் என்றும் மற்று அச்சார்த்
திரி ; குதிரை ஏறிய செல்.''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனைத், தலைவி தாழ்த்த காரணம் என்னென, குதிரை ஊர்ந்தேன் என அவன் கூற, ''நீ ஊர்ந்த குதிரை பரத்தையே'' எனப் புலந்து கூறி, அவனை அவள் நெருக்கியது இது :

*1. எதிர்அல்ல - செயலுக்கு மாறுபட்டதன்று ; இரண்டும் ஒரு தன்மையவே ; 2. பாய்ந்தாய்ந்த தானை-*

நலங்கிய ஆடை; மைந்திணை - வலியிணை உடையை; 3. வேரை-வேர்வை உடையை; சுவல்-தோள்; கண்ணி-தலைமாலை; 8. சுவல் - பிடரி மயிர்; 9. சிகழிகை-தலையின் முடி; உணை - தலையாட்டம் எனும் குதிரைஅணி; 10. வல்லிகை - குதிரையின் கழுத்தாரம்; 11. ஞால்இயல்-தொங்கும் இயல்புடைய; புல்லிகை - மகளிர்அணியும் ஒரு காதணி; சாமரை - கன்னசாமரை எனும் குதிரை அணி; 13. உத்தி - சுட்டிஎனும் மகளிர்அணி; மத்திகை-குதிரைச் சாட்டை; உத்தரியம் - மேலாடை; பிடி - கடிவாளம்; 14. முக்காழ் - முக்கண்டன் எனும் கழுத்து மாலை; கண்டிகை - குதிரையின் கழுத்துமாலை; 15. தமனியம் - பொன்; 16. நூபுரம் - சிலம்பு; புட்டில்-கெச்சை; 19. சுசை - சுண்ணும்பு; 20. ஆதி-ஆதிஎனும் ஒருவகை வேகம்; 21. வாதுவன் - குதிரைச் சேவகன்; 22. சேகா - சேவகா என்பதன் குறை; கைவாரூஉக் கொண்ட - கையால் பெருக்கி எடுத்த; 23. முற்றம் - தெருவு; 24. வீறியது - கீறியது; 26. கோரம் - கொடியது; 27. வெதிர் - மூங்கிலால் பண்ணிய; சேதிகை - உழக்காலும், நாழியாலும் வண்ணம் தீட்டும் தொழில்; 30. சீத்தை - சீ! கெட்டது! எனும்பொருள்தரும் குறிப்புச் சொல்: 31. வியமம் - விஷம்; பருமம் - மேகலை யணிந்த; சேணம் இடாத; 36. வாதத்தால்-மாறுபாட்டால்; வளிக்குதிரை - காற்றெனக் கடுகிவரும் குதிரை; ஆதிஉரு - பண்டைய வடிவம்; 37. ஊரல் - ஊராதே; ஊரின் - ஊர்ந்தால்; 38. பரி - குதிரை;

# 32

# வேழம் வனப்புடைத்து

ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் ஒன்றுபட்ட உயர்ந்த அன்புடையராய் இன்புற்று வாழ்ந்திருந்தனர்; ஒருநாள் ஊர்க்காவல் குறித்தோ, பொருள் ஈட்டல் கருதியோ மனைவியை வீட்டில் விட்டுப்போன இளைஞன், போனஇடத்தில் பரத்தையர் உறவுகொண்டு, மனைவியை மறந்து வாழ்ந்திருந்தான்; அவன் மனைவி, கணவன், காவல் முதலாம் கடமை மேற்கொண்டு சென்றிருப்ப தாகவே கருதியிருந்தாள்;

ஒருநாள், உண்மை வெளிப்பட்டுவிட்டது; பரத் தையர் உறவுகொண்ட அவன், ஆங்குத், தன் உள்ளம் விரும்பும் ஒருத்தியோடு மட்டும் உறவு கொண்டா னல்லன்; பரத்தையர் பலரோடும் தொடர்புகொண்டு வாழ்ந்தான்; ஒருநாள், அவன், 'நான் இன்ன இடத்தில் இருப்பேன்; ஆங்கு வருக' என ஒருத்திக்கு இடம் குறித்து அனுப்பியிருந்தான்; அவளும் அவ்வாறே ஆங்குச் சென்றாள்; ஆனால், அங்கு அவனைக் கண்டிலள்;

தன்னை ஆங்குவரப் பணித்து, அவன் அவன் வீட்டிற்குச் சென்றிருப்பன் எனக் கருதினாள்; கடுஞ்சினம்கொண்டாள்; பொழுது புலர்க என வீடடைந்தாள்; பொழுதும் புலர்ந்தது; புறப்பட்டு அவன் வீட்டிற்குச் சென்றாள். தெருவில் இருந்தவாறே வன்சொல் பலவழங்கிப் பழித்து மீண்டாள்; அவள் செயல், அவன் சென்று வாழும் இடம் இது; அவன் மேற்கொண்டிருக்கும் ஒழுக்கம் இத்தகைத்து என்பதை அவன் மனைவிக்கு உணர்த்தி விட்டது; அதனால், அவள் வருந்திக் கிடந்தாள்.

அந்நிலையில் அவனும் வந்து சேர்ந்தான்; வந்து ஏதும் அறியாதான்போல் நடந்துகொள்ளும் கணவனைக் கண்கலங்க நின்று வரவேற்று, "அன்ப! என்னையும், பரத்தையையும் ஒன்றாக மதிக்கும் உன்செயல் கண்டு வருந்துகிறேன்; அவ்வாறு இழிநிலையுற்றும் உயிர் வாழும் இவ்வாழ்வை வெறுக்கிறது என் தூயஉள்ளம்; இன்று மட்டுமன்று; என்றுமே, நீ இழிசெயல் உடையையாதல் உணர்ந்து உறுதுயர் கொள்கிறது என் உள்ளம்" என்று கூறி வருந்தினாள்.

மனைவியின் அத்துயர் நிலையிலும், அவள் முத்துப் பல் காட்டும் முறுவலையும், முழுமதிக்கு ஒத்த முகத்தையும் கண்டு மகிழ்ந்த இளைஞன், அவற்றைப் பாராட்டி விட்டு, அவளை நோக்கி, "பெண்ணே! என்வலையுள் இன்று, அறிவு நிறைந்த ஒரு யானை வந்தகப்பட்டது; அதைக் கண்டு மகிழும் நினைவால் உன்னை மறந்து விட்டேன்; ஆதலின், என்னைச் சினவாது ஏற்றுக் கொள்க" என்று இரங்கிக்கூறி வேண்டிக்கொண்டான்;

"யானை ஒன்று கிடைத்தது; அதைக் கண்டு நின்றதால் காலம் கடந்துவிட்டது" என்று கணவன் கூறக் கேட்ட அவள், "அன்ப! உன் வலையுள் வீழ்ந்த அந்த வேழம், நெற்றியில் அணிந்த திலகமாகிய பட்டத்

தினையும், தொய்யில் வரைந்து வனப்புற்றுத் தோன்றும் கொங்கைகளாகிய கோடுகளையும், தொய்யகம் என்ற பெயருடைய தலையணியாகிய அங்குசத்தையும், காதில் கிடந்து தொங்கும் மகரக் குழைகளாகிய மணிகளையும், திருமகள் உருவம் பொறித்த தலைக்கோலமாகிய கழுத்து மெத்தையினையும் கொண்டு, அவ்வகையால் அது வனப்பு வாய்ந்து தோன்றும் எனக் கூறக்கேட்டுளேன்; அந்த யானை, நல்ல மணம் வீசும் சுண்ணப் பொடியாகிய நீறு பூசி, நறுமணம் நாறும் நல்ல மதுவாகிய நீர்குடித்து, மனைவாயிலை அடைந்து, கதவாகிய கட்டுத்தறியைச் சார்ந்து, அக்கதவோடு, சங்கிலியால் சேரப்பிணித்தாற் போல், தழுவிநின்று, தெரு வழியே போவார் எவரும், தன் அழகைக் கண்டு, ஆசைகொண்டு மயங்கி அறிவிழக்குமாறு தன் அழகைக் காட்டி, அவர் அப்பால் செல்லாவாறு அவர்கால்களைத் தடுத்து வீழ்க்கும் எனவும், கண்டார்க்குத் துயர்விளைக்கும் பேரழகு வாய்ந்த மெல்லிய தோளாகிய பெரிய கையால், தன்னைக் காண்பார்பால் உள்ள நல்ல பண்புகளையெல்லாம் கவளம் கவளமாக உண்டு பாழாக்கும் எனவும் கூறக் கேட்டுளேன்; அன்ப! அத்தகைய வேழத்தை, இன்றுதான் கண்டதுபோல் கூறி ஏன் பொய்யன் ஆகின்றாய்? அன்ப! அவ்வேழத்தின் தொடியணிந்த தோளாகிய மருமத்தைத் தழுவிப், பின்னர் அதன்மீது தத்தி ஏறி உலாவரும் வழக்கம் உடையவன் நீ; உன்பால் காதல் கொண்டு, உன்னைக் கூடி, மேலும் அக்கூட்டமே விரும்பி, உன் வரவை எதிர்நோக்கிக் கிடக்கும் பரத்தை மகளிரின் வீடுகளின் வழியாக, அவர்கள் பார்த்து வருந்த, இளையாளாகிய அப்புதிய வேழத்தின்மீது ஏறித்திரியும் இயல்புடையவன் நீ; அன்ப! உன் ஆணைக்கு மீறி விடாது, ஓர் அளவில் நிற்பதற்குத் தேவையான மதம்பட, அவ்வியானையை, இடையே சிறிதுபொழுது

நீர்க்குவிட்டு, மீண்டும் ஏறித்திரியும் இயல்புடையவன் நீ; உன்பால் பேரின்பம் நுகரமாட்டாது, சிறிதே நுகர்ந்தாள் ஓர் இளம்பரத்தையை, அவள் கண்மை கரையக் கண்ணீர் சொரிந்து அழியுமாறு சிலநாள் கைவிட்டுப் பின்னர்க் கூடி மகிழ்பவன் நீ; அத்தகைய நீ, இன்று என் மனை வந்தடைந்தாய்; இவ்வருகையும் என்பால் அன்புகொண்டு வந்த வருகையன்று; உன்பால் உறவுகொண்ட இவ்வூர்வாழ் பரத்தையர், நீ, புதியாளொருத்தியின்பின் திரியக்கண்டு சினப்பதைத் தவிர்த்தற்பொருட்டே, நீ இன்று, இங்கு வந்து நிற்கின்றாய்; நீ வேறு ஒருத்தியின் பின் சென்றிலை; உன் மனைக்கே சென்றுளாய் எனக் கருதி அவர்கள் ஏமாறுக என எண்ணியே நீ, இங்கு வந்துளாய்; பழகிய பரத்தையர்க்கு அஞ்சி, நீ ஈங்கு வந்துளாய்; அதை, அப்புதியாள் அறியின், பாகன் ஏறி ஊராவாறு மதம்பட்டுத் திரியும் யானைபோல், அவள் உன் ஆணைக்கு அடங்காது கடுஞ்சினம் கொள்வள்; அவ்வாறு சினம்கொண்டு செல்வாளை அடக்கி ஆளுதற்காம் வழிவகை யாது என ஆராய்ந்து கொள்ள ஆங்குச் செல்க! ஈண்டு நில்லற்க" எனப் புலந்து கூறினாள்.

" அன்னை ; கடுஞ்சொல் அறியாதாய் போல நீ
என்னைப் புலப்பது ஒறுக்குவேன் மன்யான் ;
சிறுகாலை இற்கடை வந்து, ' குறிசெய்த
அவ்வழி என்றும் யான் காணேன் திரிதர,
எவ்வழிப்பட்டாய் ' சமனாக, இவ்வெள்ளல் ;
முத்தேர் முறுவலாய் ! நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான் யான் தங்கினேன்.

ஒக்கும் ;
அவ்வியானை, வனப்புடைத் தாகலும் கேட்டேன் ;
அவ்வியானைதான் சுண்ண நீறுஆடி, நறுநரு நீர் உண்டு,
ஒண்ணுதல் யாத்த திலக அவிர் ஓடைத்,

தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்,
தொய்யகத் தோட்டிக், குழை தாழ்வடிமணி,
உத்தி பொறித்த புனைபூண் பருமத்து,
முத்து ஏய்க்கும் வெண்பல் நகைதிறந்து,
நன்னகர் வாயில் கதவவெளில் சார்ந்து,
தன் நலம்காட்டித், தகையினால் கால்தட்டி வீழ்க்கும் ;
தொடர் தொடராக வலந்து படர்செய்யும் ;
மென்தோள் தடக்கையின் வாங்கித் தற்கண்டார்
நலம் கவளம் கொள்ளும் ; நகைமுக வேழத்தை
இன்று கணடாய்போல் எவன் எம்மைப் பொய்ப்பது நீ ?
எல்லா ! கெழீஇத், தொடிசெறித்த தோளிணை தத்தித்
தழீஇக் கொண்டு ஊர்ந்தாயும் நீ ;

குழீஇ, அவாவினால் தேம்புவார் இற்கடை ஆறா
உவா அணி ஊர்ந்தாயும் நீ !
மிகாஅது, சீர்ப்படஉண்ட சிறுகளி ஏர்உண்கண்
நீர்க்குவிட்டு ஊர்ந்தாயும் நீ ;

சார்ச் சார் நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம்
சிறுபாகராகச் சிரற்றாது மெல்ல
விடாஅது நீ எம் இல்வந்தாய் ; அவ்வியானை
கடாம்அம் படும் இடத்து ஓம்பு. ''

**பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனைத், தலைவி தாழ்த்த காரணம் என்என, யானை ஊர்ந்தேன் என அவன் கூற, “நீ ஊர்ந்த யானை பரத்தையே” எனப் புலந்துகூறி, அவனை அவள் நெருக்கியது இது.**

*1. அன்னை - அத்தகையை ; 2. ஒறுக்குவேன் - வருந்துவேன் ; 3. சிறுகாலை - விடியற்காலம் ; 5. சமனாக - இருவரையும் ஒன்றாக மதிக்கும் ; 10. நீறு - பொடி ; ஆடி - பூசி ; நறா - கள் ; 11. அவிர் - ஒளிவீசும் ; ஓடை - நெற்றிப்பட்டம் ; 12. கோடு - தந்தம் ; 13. தோட்டி - அங்குசம் ; குழை - மகரக்குழை ; 14. உத்தி - திருமகள் உருவம் பொறித்த தலையணி ; பருமம் - கழுத்*

தில் இடும் மெத்தை; 15. ஏய்க்கும் - ஒக்கும்; 16. நகர் - வீடு; வெளில் - யானை கட்டும் இடம்; 17. தகை - அழகு; தட்டி - தடுத்து; 18. தொடர் - சங்கிலி; வலந்து - கட்டுண்டு; படர்செய்யும் - துன்பம்தரும்; 20. நலம் - நல்ல பண்புகளை; கவளம்கொள்ளும் - கவளமாக உண்ணும்; 22. கெழீஇ - சேர்ந்து; 24. தேம்புவார் - வருந்துவார்; ஆறு - வழியாகக்கொண்டு; 25. உவா - யானை, இளைய மகளிர் எனும் இருபொருள் உடைத்து; 26. சிறுக்ளி - சிறியமதம்; ஏர்உண்கண் - அழகிய மை தீட்டிய கண்; நீர்க்குவிட்டு - யானைக்கு ஆம் கால் நீராடவிட்டு; மகளிர்க்கு ஆம் கால், அவள் கண் நீர் சிந்தவிட்டு; 28; பெண்டிர் - பரத்தையர்; 29. சிறுபாகராக - பாகர் ஏற மாட்டாது தொழில் குறையுடையராம்படி மதம்பட. சிரற்றது - சினங்கொள்ளாவாறு.

# 33

# நீ ஆடியது குமரிப் புதுப்புனல்

வையை ஆற்றின் வளம் மிகுந்த மதுரைமா நகரில் இளங்காதலர் இருவர், இல்லற வாழ்க்கை மேற்கொண்டு இன்புற்று வாழ்ந்திருந்தனர்; ஆற்றில் புதுவெள்ளம் வரக்கண்டு, ஊரார் புனல் விழாக் கொண்டாடும் காலம் வந்தது. அந்நிலையில், நாள்தோறும் பாற்சோறே உண்டு வந்தான் ஒருவன், அதில் சிறிது வெறுப்புத் தட்டவே, இடையே சிலநாள் புளிச்சோறு உண்பது போல், மனைவி தரும் பேரின்பவாழ்வைப் பெருகச் சுவைத்தமையால் சிறிதே வெறுத்த இளைஞன், இடையே சிலநாள், ஒருசில பரத்தையரோடு உறவு கொண்டு, அவர் சேரிசென்று வாழ்ந்திருந்தான். அவன் ஒழுக்கக்கேடறிந்து வருந்தினாள் அவன் மனைவி.

புதிய புதிய மலர்களாகத் தேடிச்சென்று, அவற்றில் உள்ள தேனைக் குடித்துத் திரியும் தேனீக்கள் போல், நாள்தோறும் புதிய புதிய பரத்தையரைத் தேடிப் பெற்று இன்பம் நுகர விரும்பும் அவன் ஆசை அறிந்த

தேர்ப்பாகன், தன் தலைவன் விரும்பும் பரத்தையரைத் தேடிப்பிடித்து அவன் விரும்பும் காலத்தில், அவ்ன் இருக்கும் இடத்திற்கு அழைத்துவரும் விரைவு கருதித் தேரைப் பூட்டுவிடாதே நிறுத்திவைத்திருப்பதையும், அத்தேர் இரவுபகல் ஓயாது, ஊரைச் சுற்றிச் சுற்றி வருவதையும் கண்ட அவ்வூரார் ஒவ்வொருவர் வாயிலும், அவன் பரத்தையர் ஒழுக்கம் பற்றிய பேச்சே எழுந்தது; ஆற்றின் கரையிலும், உண்ணுநீர்த்துறையிலும், ஊர் மன்றிலும், அங்காடித் தெருவிலும் எங்கும் அப்பேச்சே பேசப்பட்டது; அவன் ஒழுக்கக்கேடு அறிந்த ஊரார் ஒவ்வொருவரும், அதை அவன் மனைவி பால் சென்று அறிவிக்க அறிவிக்க அவள் துயர் மிகுந்தது. அதனால், அவன்மீது கடுஞ்சினம்கொண்டு வாழ்ந்திருந்தாள்.

அந்நிலையில் புனல்விழாவும் முடிவுற்றது; இளைஞனும் வீட்டிற்கு வந்தான். ஆனால், வந்தானுக்கு வழிவிட மறுத்தாள் அவன் மனைவி; வருக என அவனை வரவேற்காது, வழிமறித்து நின்றவாறே, "ஐய! ஈண்டு வந்து, என் மனைக்குள்புகும் நீ யார்? இங்குவர உனக்கு என்ன உரிமை? உன் ஒழுக்கக்கேட்டை ஊரார் உரைக்க முன்னரே அறிவேன்; பரத்தையர் பின் திரியும் நீ, நாள் தோறும், உன்னை எவ்வாறு ஒப்பனை செய்துகொண்டு அவர்முன் சென்று நிற்பாய் என்பதை, இப்போது, ஈங்குவந்து என்முன் நிற்கும் உன் கோலத்தால் அறிந்து உன் களவொழுக்கத்தைக் கண்ணெதிரில் கண்டும் கொண்டேன்; நீ என்னோடு உறவுடையன் அல்லை; உன் வருகை எனக்கு மன நிறைவைத் தாராது; மனைபுகாது இதுகாறும் சென்றிருந்த இடத்திற்கே மீண்டு செல்க" எனக் கூறி வழியடைத்தாள்.

மனைவியின் சினம்கண்ட இளைஞன் சிறிதும் மருளாதே, "ஆராய்ந்தெடுத்த மலர்கொண்டு தொடுத்த மாலையணிந்து அழகின் வடிவாய் என்முன் வந்து நிற்கும் மங்கை நல்லாய்!" எனப்பாராட்டி, அப்பாராட்டைக் கேட்டு, அவள் மனம் சிறிதே நெகிழ்ந்து நிற்கும் நிலைநோக்கி, "பெண்ணே! நான் செய்யாத எதை யெதையோ கூறி என்னைச் சினப்பது ஏனோ? உதிர்ந்து, படிந்த மலர்கள் தன்னை முழுதும் மறைத்துக்கொள்ள இரு கரைகளையும் அழித்துப் பாய்ந்துவரும் வையை யாற்றில், புதுவெள்ளம் பெருக்கெடுத்தோடக் கண்டேன்; அதில் ஆடிமகிழ ஆசைகொண்டது என் உள்ளம்; அவ்வாசைதீர அதில் ஆடி மகிழ்ந்தேன்; அதனால் என் வருகை தடைப்பட்டது. அதுவல்லது வேறு எதையும் அறியேன்; நான் கூறுவது உண்மை; இதை உன் உள்ளம் ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும்" என்று கூறினான்.

"புனலாடிவந்தேன்" எனக் கணவன் கூறக்கேட்ட அவள் "ஓ! அப்படியா!" எனத் தலையாட்டி வியப்பாள் போல் வினவி, "அன்ப! போன இடத்தில் நீ புனலாடினாய் என ஊரார் சிலர் வந்து உரைத்ததை நானும் கேட்டேன்; ஆங்கு நீ ஆடிய புனல் எது என்பதையும் நான் அறிவேன். அடர்ந்தும், நீண்டும் அலை அலையாய்த் தொங்கும் அழகிய கூந்தலை, அறல் ஒழுகும் மணலாகவும், காண்பார் மனத்தை மருட்டும் மாட்சிமைமிக்க, மை தீட்டிய கண்களை, நீரில் நீந்தி விளையாடும் மீன்களாகவும் கொண்டு; மலர்ந்த மலர்கள் உதிர்ந்து படிந்து மணம் வீசும் மலர்ச் சோலையில், மகளிரின் மானத்தைக்காக்கும் நாண் எனும் நல்ல வேலியை அழித்து நண்பகற்காலத்திலேயே பெருக்கெடுத்தோடிவந்த அப் புதுவெள்ளத்தில், நீவிரும்பும் பரத்தையரைத் தேடிப்பிடித்துவந்து

தந்து மகிழ்விக்கும் பாணனாகிய தெப்பம் துணையாக ஆடி மகிழ்ந்தாய் என ஊரார் உரைக்க அறிந்தேன்.

"மேலும், அப்புனலாட்டத்தில், உன் ஆசை குறையாமையால், மேலும் மேலும் ஆர்வம் மிகுமாறு ஆடும் உன் ஆட்டத்தைக் காண்பவர், ஊருள்புகுந்து உரைக்கும் அலரை நான் அறிந்து கொள்வனோ எனும் அச்சம் உன் உள்ளத்தை அலைக்கழித்தமையால், உன் புனலாட்டத்தை, அவ்வூரார் அறிந்துகொள்ளாவாறு, சிறிதே நீ மறைந்து நிற்க, அதுகண்டு பொறாத அப்பரத்தைப்புனல், உன்மீது சினம்கொண்டு, அச் சினத்தால் வளைந்த புருவமாகிய அலையைவீசி, காற்சிலம்பினின்றும் எழும் ஆரவாரத்தால் உன்னை அச்சுறுத்தி, உன் உள்ளுணர்வு உணர்த்த, நீ மேற் கொள்ள விரும்பும் நல்லொழுக்கத்தைத் தடைசெய்து தளைத்து நிற்க, அந்நிலையில் சினந்து மேல்வந்த பிறிதொரு புதுவெள்ளம், உன்னை அடித்துக்கொண்டே அணைத்துச்சென்றது. அக்காட்சியைக் கண்டுவந்து கூறினாரும் உளர்; அங்ஙனம் அடித்துச் சென்ற அப் புதுவெள்ளம், நல்லொழுக்கவுணர்வுமிக்க உன் நல்ல வுள்ளத்தைத் தன்வயமாக்கிக் கொண்டமையால், நீ, அப்புதுவெள்ளத்தினின்றும், வெளியேறிக் கரைகாணும் கருத்திழந்து கலங்குகின்றாய்" என, அவன் ஆடிய புனலாட்ட நிலையினைக் கூறுவாள்போல், "அன்ப! பாணன் துணையாக, ஒரு பரத்தையைப் பெற்றுப் பேரின்பம் நுகர்ந்தாய்; பின்னர், அப்பரத்தையர் ஒழுக் கத்தின் பழியுணர்ந்து, அதனின்றும் மீளக் கருதியிருக்கு மளவில், பேரழகுமிக்க புதிய பரத்தையொருத்தி தோன்றித், தன் பேரழகால் உன்னைத் தன் வயமாக்கிக் கொண்டாள்; பரத்தையர் ஒழுக்கம் பழிஉடைத்து என உணரும் உன் உள்ளமும் அவள் அழகிற்கு அடிமைப்பட்டுவிட்டது; நீ, அவளை விட மறந்து

வாழ்கின்றாய்" என அவன் மேற்கொண்ட பரத்தையரொழுக்கத்தினை எடுத்துக்காட்டி இடித்துக்கூறிக் கண்டித்தாள்.

"புனலாடினேன்" எனக் கூறவும், அதை ஏற்றுக் கொள்ளாது, தன்மீது பரத்தையர் ஒழுக்கம் எனும் பழி சூட்டும் மனைவி கருத்தைத் தன் வாய்ச்சொல் மாற்றாது; அவள், தன் 'வெறும்' சொல்கேட்டு மனம் இரங்காள் என அறிந்த இளைஞன், "பெண்ணே! வையையாற்று வெள்ளத்தில் ஆடி மகிழவே, நான் அங்குத் தங்கினேன்; அதுவே உண்மை என்பதை, வேண்டுமானால், தெய்வத்தின்மீது ஆணையிட்டும் கூறுவேன்; உண்மை அதுவாகவும், நான் செய்யாத ஒரு குற்றத்தை என்மீது ஏற்றிச் சினவாதே; அவ்வாறு வீண்பழி கூறுவதால் உனக்கு உண்டாம் பயன் யாது?" என்று கூறிப் பணிந்து நின்றான்.

கணவன், "கடவுளைக் காட்டிச் சூள் உரைப்பேன்" எனக்கூறியும், அவள் அவன் சொல்லை ஏற்றுக்கொள்ள மறுத்தாள்; "அன்ப! நீ ஆடிய அவ்வையையாறு, தன் புறத்தை மலர்கள் மறைக்க, காண்பார் கண்ணிற்கு மகிழ்ச்சி தருமேனும், அதன்கீழ், தன்னை அடைந்தாரின் கால்களை ஈர்த்துக்கொள்ளும் கொடிய புனல் உண்டு என்பதை மறவாதே; தன் கொடுமை மறைத்து வந்து பாயும் அவ்வெள்ளத்தில், புகுந்துஆட, உன் ஆசை அடங்கவில்லையாயின், மீண்டும் ஆண்டே செல்க; ஆனால் ஒன்று; சென்று ஆடுங்கால், ஆங்குள்ள இளமணலுள் உன்கால்கள் சிக்கிக்கொள்ளுதலும் உண்டாம்; அவ்வாறு சிக்குண்ட உன்னை, எவரும் கரைசேர்க்க மாட்டார்; சேற்றில் சிக்கிச் சீரழியும் உன்னைக் காண்பவர், எள்ளி நகைப்பர்; ஆகவே, புனலாடுங்கால், சிறிது விழிப்போடிருப்பாயாக" என்று கூறுவாள்போல்,

“அன்ப! பரத்தையர் இன்பம் நுகரத், தேர் ஏறி அவர் சேரிக்குச் செல்க; செல்லும்நீ, ஆங்கே, உன்னைத் தம் வயப்படுத்தி, மீண்டு வாராவாறு தடுத்து நிறுத்தவல்ல பேரழகு மிக்க இளம்பரத்தையர் பலர் உளர்; அவர் வலையுள் அகப்பட்டு விடுவையேல், பின்னர், அவரை விடுத்து வருதல் உன்னால் இயலாது; பரத்தையர் ஒழுக்கத்திற்கு மீளா அடிமையாகும் உன்னை ஊரார் கைக் கொட்டிச் சிரிப்பர்; ஆகவே, விழிப்பாயிருப்பாயாக” என அவன் ஒழுக்கக்கேட்டை உணர்த்தி வாயில் மறுத்தாள்.

“யாரை நீ? எம்இல் புகுதர்வாய்! ஓரும்,
புதுவ மலர்தேரும் வண்டேபோல், யாழ,
வதுவை விழவணி வைகலும் காட்டினையாய்;
மாட்டு மாட்டுஓடி மகளிர்த் தரத்தரப்
பூட்டுமான் திண்தேர் புடைத்த மறுகு எல்லாம்
பாட்டாதல் சான்ற நின்மாயப் பரத்தைமை
காட்டிய வந்தமை கைப்படுத்தேன்; பண்டெலாம்
கேட்டும் அறிவேன் மன் யான்,'

தெரிகோதை அந்நல்லாய்! தேறீயல் வேண்டும்;
பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுனல் ஆடத் தவிர்ந்தேன்; பெரிது என்னைச்
செய்யா மொழிவது எவன்?

ஓஒ! புனலாடினாய் எனவும் கேட்டேன்; புனல், ஆங்கே,
நீள்நீர் நெறி கதுப்பு, வாரும் அறலாக,
மாண் எழில் உண்கண், பிறழும் கயலாகக்,
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக,
நாணுச் சிறை அழித்து, நன்பகல் வந்த அவ்
வியாணர்ப் புதுப்புனல் ஆடினாய், முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு;

ஆனது, அளித்து அமர்காதலோடு அப்புனல் ஆடி
வெளிப்படு கவ்வையை யான் அறிதல் அஞ்சிக்,
குளித்து ஒழுகினாய் எனவும் கேட்டேன், குளித்து ஆங்கே.

போர்த்த சினத்தால் புருவத் திரையிடா
ஆர்க்கும் ஞெகிழத்தால் நன்னீர் நடை தட்பச்
சீர்த்தக வந்த புதுப்புனல் நின்னைக் கொண்டு
ஈர்த்துய்ப்பக் கண்டார் உளர்;

ஈர்த்தது, உரைசால் சிறப்பின்நின் நீருள்ளம் வாங்கப்
புரைநீர் புதுப்புனல் வெள்ளத்தின் இன்னும்
கரை கண்டதூஉம் இலை ;

நிரைதொடீஇ ! பொய்யா வாள்தானைப் புனைகழற்கால்
வையைப் புதுப்புனல் ஆடத் தவிர்ந்ததைத் [தென்னவன்
தெய்வத்தின் தேற்றித் தெளிப்பேன் ; பெரிது என்னைச்
செய்யா மொழிவது எவன் ?

மெய்யதை ; மல்கு மலர் வேய்ந்த மாயப் புதுப்புனல்,
பல்காலும் ஆடிய செல்வுழி ஒல்கிக்
களைஞரும் இல்வழிக் கால் ஆழ்ந்து, தேரோடு
இளமணலுள்படல் ஓம்பு ; முனைநேர்
முறுவலார்க்கு ஓர் நகை செய்து.''

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனைத், தலைவி, தாழ்ந்த காரணம் என் எனப் புனலாடினேன் என்று அவன் கூற, '' நீ ஆடியது பரத்தைப் புனலை'' எனக் கூறி, அவள் அவனை நெருக்கியது இது.

*1. ஓரும் - அசை; 2. யாழ - அசை; 3. வதுவை விழவு - திருமணவிழா; 4. மாட்டுமாட்டு - இடந்தோறும் இடந்தோறும்; 5. பூட்டுமான் - பூட்டிக்கிடக்கும் குதிரைகளைக்கொண்ட; 5. புடைத்த - ஆரவாரித்த; மறுகு - தெருவு; 6. பாட்டாதல் சான்ற - பெரும் அளவில் பேசப்பட்டது; 7. காட்டிய - காட்ட; 9. தேறியல் வேண்டும் - தெளியவேண்டும்; 10. பொருகரை - அழியும்கரை; 12. செய்யா மொழிவது-செய்யாத தப்பிற்குக் கண்டித்தல்; 14. கதுப்பு - கூந்தல்; வாரும் - நீர்ஒழுகும்; 16. பரப்பாக - பரப்பின்கண்; 17. சிறை - அணை; 18. யாணர் - புதுவருவாய்; 20. ஆறுது - ஆசை அடங்*

காது ; *11.* கவ்வை - அலர் ; *22.* குளித்து - மறைத்து ; *24.* ஞெகிழ் - சிலம்பு ; நடை - நல்லொழுக்கத்தை ; தப்ப- தடுக்க ; *27.* நீருள்ளம் - நல்லொழுக்கம் மிக்க உள்ளம்; வாங்க - தன் வயமாக்கிக் கொள்ள ; *31.* தவிர்ந்ததை - தங்கியதை ; *34.* மல்பு - பெருகிய ; *34.* ஆடிய - ஆட ; ஒல்கி - தளர்ந்து ; *37.* ஓம்பு - காத்துக் கொள் ;

## 34

# மனைவி துயர் காணமையும் மன்னர்க்கு ஏற்றதோ ?

அரசியல் நெறி அறிந்து ஆளும் நல்லரசன் அவன் ; அமரர்க்கும், அரக்கர்க்கும் ஆசிரியராய் அமர்ந்து அரசியல் வழி காட்டிய வியாழனும், வெள்ளியும் ஆக்கி அளித்த இருபெரும் அரசியல் நூல்களையும், ஐயம் திரிபு அறக்கற்று, அவைகூறும் நெறிநின்று நாடாண்டிருந் தான் ; குழந்தையைப் பார்த்து இன்புறும் தாய், அக் குழந்தை விரும்பும் பாலை, அது விரும்பும் காலம் அறிந்து, சுரந்து அளித்து வளர்த்தல்போல், மழை, தன் நாட்டு மக்கள் விரும்பும் காலத்தில், அவர் விரும்பும் அளவு அறிந்து, தப்பாது பெய்து காக்கும் நல்லாட்சி, தன் நாட்டில் வாழ்வார் அனைவர்க்கும் வாய்க்குமாறு, நடுவு நிலைமை முதலாம் நல்லியல்புகளின் நிலைக்களமாய் நின்று நாடாண்டிருந்தான் ; நெடிய பல தேர்களையும், நிறைந்த யானைகளையும் கொண்டிருந்தது, அவன் நாற்படை.

நல்லரசன் என நாடு போற்றும் அவனிடத்தும், பரத்தையர் உறவு எனும் பொல்லாவொழுக்கம் புகுந்து விட்டது; தன் மனேவியை மறந்து, பரத்தையர் மனே புகுந்து வாழத்தொடங்கினன். அவன் ஒழுக்கக்கேடு கண்டு, உள்ளம் நொந்தாள் அவன் மனேவி; பிறைத் திங்கள்போல் பேரழகுடைய அவள் நெற்றி பசலே படர்ந்து ஒளி இழந்துபோகப் பெரிதும் நடுக்கம் கொண்டாள். தன்னைப்பற்றி வருத்தும் காமநோயின் கொடுமை தாங்கமாட்டாத அவள், அந்நோயோடு வாழ்தலே, கணவனைப் பிரிந்து காதல்நோய் வருத்த வாழும்நாளை வெறுத்தாள்; உள்ளக்கவலையால் அவள் உடல் நலம்இழந்தது; மூங்கில்போலும் அழகுடைய வளாய் விளங்கிய அவள் தோள்கள் தளர்ந்து தம் வனப் பிழந்தன; இவ்வாறு வருந்திக்கிடந்தாள் அவள்.

அவள் துயர்க்கொடுமையைக் கண்டாள் அவள் தோழி; அரசன், இன்னும் சிலநாள், இவ்வாறே பிரிந்து வாழின், இவள் வாழாள் என அறிந்தாள்; அதனல் அரசன்பால் சென்று, அவனுக்கு இவள் நிலையைக் கூறி அழைத்து வருதல் வேண்டும் எனத் துணிந்தாள்; உடனே அவனிருக்கும் இடம்சென்று அவனைக் கண்டாள்; அரசியல் நூல்கள் பலகற்று, அவை கூறும் அறநெறி பிறழாது ஆளும் அவன் ஆட்சிச்சிறப்பைப் பாராட்டி வணங்கியபின்னர், "அரசே! நீ 'என் ஆட்சிக்கீழ் வாழ்வார் அனைவர்க்கும் அறமே வழங்கு வேன்; என் குடைநிழல், அனைவர்க்கும் அறமே வழங்கும்; ஆகவே, உலகீர்! என் குடைக்கீழ், எல்லோரும் வந்தடைக' என விளங்கக் கூறி, வெண்கொற்றக் குடையினை விரித்து நிற்கின்றனை; உன் வரவேற்பை ஏற்று வந்தடைந்த உலக மக்கள் அனைவரும், அக்குடை நிழற்கீழ் இருந்து இன்புற்றுவாழ, இவள் ஒருத்தி

மட்டும், அக்குடையின் அறநிழற்கீழ் அகப்படாது, புறத்தே நின்றுவிட்டனளோ? இவள், புறத்தே நின்றவள் அல்லள்; இவளும் உன் குடைநிழற்கீழ் வாழ்பவளே; உன் குடைநிழற்கீழ் வாழ்வாளொருத்தி, இவ்வாறு, நெற்றி பசலைபாய ஒளிகெட்டு உளம்குன்றி வாடுவதை நீ கண்டிலையோ? இதுகாறும் கண்டிலையாயின், இப்போதாயினும் கண்டு, இவள் துயர் துடைப்பாயாக!

"ஐய! நடுவு நிலைமை பிறழாத உன் செங்கோல் சிறப்பை, உலகம் பாராட்டிப் புகழ்கிறது; அச்செங்கோலாட்சியாலாம் சிறந்த பயனை, உன் நாட்டில் உள்ளார் அனைவரும் அனுபவித்து அகம் மகிழ்கின்றனர்; இவ்வாறு உன் ஆட்சியில் வாழ்வார் அனைவரும், உன் ஆட்சியின் நலங்களை நுகர்ந்து நன்கு வாழ, இவள் ஒருத்திமட்டும், அவ்வாட்சி நலங்களுக்கு அப்பாற்பட்ட கொடுமைகளை அனுபவிக்கப் பிறந்தவளாவளோ? கொடுமை அனுபவிக்க வந்தவள் இவள் என என் உள்ளம் கொள்ளவில்லை; உன் நல்லாட்சியின் நற்பயனை அனுபவிக்க வந்தவளே இவளும்; அவ்வாறாகவும், உன் ஆட்சிக்குட்பட்டாளொருத்திமட்டும், இவ்வாறு காதல் நோயால் கலங்கி, வாழ்வை வெறுத்து வருந்திக்கிடப்பதை நீ கண்டிலையோ? இதுகாறும் கண்டிலையாயின் இனியேனும் கண்டு, இவள் துயர் போக்குவாயாக!

"ஐய! 'எங்கள் வேந்தன் ஆட்சிக்கீழ் வாழ்வார் எவரும் எத்தகைய இடையூறும் இல்லாமல் வாழ்வர்; அவரை அவ்வாறு நின்று காப்பன் எங்கள் அரசன்' என உரைப்பதுபோல் ஒலிக்கிறது உன் முரசு; அம்முரசொலி கேட்கும் மக்களும், 'இம்முரசொலி முழங்கும் நாடு, நமக்கு நல்ல புகலிடமாம்' என எண்ணி, உன்னை வந்து அடைகின்றனர்; இவ்வாறு உலக

மெல்லாம், உன் முரசொலி கேட்டு, அதைத் தம்மைக் காக்கும் காவல் முரசு எனக்கொண்டு கவலையற்று வாழ, இவள் ஒருத்திக்குமட்டும், அது, காவலாய் அமையாது கழிந்ததோ? அம்முரசொலியைத், தன்னைக் காக்கும் ஒலியாகக் கருத, இவள் தவறி விட்டனளோ? இவள் அவ்வாறு தவறவிட்டவளல்லள். இவளுக்குக் காவலாய் அமையும் கடப்பாட்டில், உன் முரசு தவறியதாக நான் கருதவில்லை. உன் முரசொலி, உலகோர் அனைவர்க்கும், துயர்ஒழித்து உய்விக்கும் உறுதுணையாக, இவள் ஒருத்தி மட்டும் அதன் ஒலிகேட்டு வருந்தி, தன் தோள்கள் வனப்பிழக்க வாடிக்கிடத்தலை நீ கண்டிலையோ? இது காறும் கண்டிலையாயின், இனியேனும் கண்டு, இவள் துயர் ஒழிப்பாயாக!

"ஐய! கண், நெடுந்தொலைவில் உள்ள பொருள் களையும் காணவல்லதே எனினும், அது, தான் உற்ற வடுவைப் பிறர் எடுத்துக்காட்டிய விடத்தும் காண அறியாது; அதுபோல், உலகில் வாழ்வார் அனைவர் துயரையும் அறிந்து போக்கும் ஆற்றல்வாய்ந்த நீ, உன் மனைவியாய், உன்னிற்பாதியாய் வாழ்வாள் துயரை மட்டும் அறிந்திலை; அவள் தோள்வளை கழன்று ஓடு மாறு தளர்ந்து கலங்கவும், அக்கொடுமையை நீ கண்டிலை; நின்செயல் எனக்குப் பெரிதும் வியப்பாகிறது. ஐய! அரசர்கள் காணக்கூடாதன, அறியக்கூடாதன, செய்யக்கூடாதன என ஆன்றோர் விலக்கிய அறமல்லாக் கொடுமைகளுள், உன் காதலி கண்கலங்கி வாடவும், அக்கொடுமையைக் காணாதிருத்தலும் ஒன்றோ?" என்று வினவி இடித்துக் கூறினாள்.

"நறவினை வரைந்தார்க்கும், வரையார்க்கும் அவைஎடுத்து
அறவினை இன்புறூஉம் அந்தணர் இருவரும்
திறம்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது,

குழவியைப் பார்த்து உறூஉம் தாய்போல் உலகத்து
மழை சுரந்து அளித்து ஓம்பும் நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதல்நின் செம்மையில் தரவாய்ந்த
இழைஅணி கொடித்திண்தேர் இனமணி யானையாய் !

அறன் நிழல்எனக் கொண்டாய் ஆய்குடை : அக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ இவள் ? இவள் காண்டிகா,
பிறைநுதல் பசப்பு ஊரப் பெருவிதுப்பு உற்றாளை.

பொய்யாமை நுவலும் நின்செங்கோல் , அச்செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ இவள் ? இவள் காண்டிகா,
காமநோய் கடைக்கூட்ட வாழும்நாள் முனிந்தாளை.

ஏமம் என்று இரங்கும் நின் எறிமுரசம் : அம்முரசின்
ஏமத்து இகழ்தாளோ இவள் ? இவள் காண்டிகா,
வேய்நலம் இழந்ததோள் கவின்வாட உழப்பாளை ;

ஆங்கு,
நெடிது சேண் இகந்தவை காணினும், தான் உற்ற
வடுக் காட்டக், கண் காணாதற்றாக, என் தோழி
தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிது என உணராமை கடிந்ததோ நினக்கே ?'

தலைவன் பரத்தையிற் பிரிய, வருந்திய தலைவியின் துயர்நிலை கண்ட தோழி, தலைவனை அடுத்து அறிவுரைத்தது இது.

*1. நறவு - கள் ; வரைந்தார் - வெறுத்த தேவர் ; வரையார் - விரும்பிய அரக்கர் ; 2. அந்தணர் இருவர் - அமரர்க்கும், அரக்கர்க்கும், முறையே ஆசிரியர்களாய் வாழ்ந்த, வியாழனும், வெள்ளியும் ; 5. நல்லூழி - நல்ல முறைமை ; 6. செம்மையில் - நடுவு நிலைமை முதலாம் நல்ல குணங்களால் ; 8. அறன் நிழல் - அறத்தைச் செய்யும் நிழல் ; ஆய்குடை - அழகிய குடை ; 9. காண்டிகா - காண்பாயாக ; 10. ஊர - பரவ ; விதுப்பு - மன நடுக்கம் ; 12. செங்கோலின் செய்தொழிற் கீழாவது; அச்செங்கோலுக்குப் புறம்பான கொடுங்கோலின் செய*

லாகிய கொடுமை; *13.* கடைக்கூட்ட - இறுதிநாளைக் கொண்டுவந்து தர; *14.* ஏமம் - பாதுகாவல்; இரங்கும் - ஒலிக்கும்; *15.* இகந்தாள் - கடந்து அப்பாற்பட்டாள்; *16.* உழப்பாள் - துன்புறுவாள்; *18.* இகந்தவை - கடந்த பொருள்களை; *19.* காணாதற்று - காணாத தன்மைத்துபோல்; *20.* கொட்ப - கழன்றுஓட; *21.* கடிது - கொடியசெயல்; கடிந்தது - அரசர்க்கு ஆகாதன என அறநூல்களால் விலக்கப்பட்டது.

## 35

# உன்னைக் கூறுதல் வேண்டுமோ?

அரசர் குடியில் வந்தவன் அவன்; பணியாத பகைவர்களைப் பாழ் செய்யவல்ல பேராற்றலும், தன்னை அடைந்து, தன் ஆட்சிக் கீழ் வாழ்வார்களைப் பேணிக் காக்கும் பேருளும் ஒருங்கே உடையவன்; அவன் பகைவர், ஞாயிற்றின் ஒளிகண்டு ஓடிமறையும் இருளே போல், அவனை எதிர்த்து வாழமாட்டாது இறந்து மறைவர். அவன் குடைநிழல் வாழ்வார், முழுமதி கண்டு மகிழ்ச்சிக் கடலுள் மூழ்குவார்போல், அவன் அருளால், அன்பால் அகம் மகிழ்ந்து வாழ்வர்.

அடங்காதாரை அழிக்கும் ஆற்றலும், அடைந்தாரை ஆட்கொள்ளும் அருளும்கொண்டு ஆட்சி புரிந்து வந்த அவன், உலகத்து உயர்ந்தோர் அனைவரும் ஒருங்கே புகழ்தற்கேற்ற, வேறு பல பண்புகளுக்கும் நிலைக்களமாய் விளங்கினன்; அவன் வாய்மையில் வழுவான்; ஆலின்கீழ் அமர்ந்து, தன்பால் அறம் கேட்டு நிற்பார்க்கு, உண்மைப் பொருளல்லது பொய்ப் பொருளைக் கூறி அறியாச் சிவ பரம்பொருள்போல்,

அவன் எவரிடத்தும், எக்காலத்தும், மெய்யே பேசுவன்; பொய்பேசி அறியான், இவ்வியல் புண்மையை ஐயமற உணர்ந்த உலகப் பெரியார்கள், அவனைப் போற்றிப் புகழ்ந்தனர்; வரையாது வழங்கும் வள்ளன்மைக் குணம் வாய்க்கப் பெற்றவன் அவன்; கடல்நீர் உண்டு கருத்து, உண்ட அந்நீரைத் தப்பாதுபெய்து உலகத்து உயிர்களை உய்விக்கும் மேகம்போல், தன்னைச் சுற்றி வாழ்ந்து தன் அருள் வேண்டி நிற்பார்க்கு இல்லை எனக் கூறியறியாது, தான் ஈட்டிய பெரும் பொருளை, அவர் அனைவர்க்கும் வாரி வாரி வழங்கும் அவனை, உலகம் வாயார வாழ்த்திற்று. செங்கோல் நெறி நிற்கும் செம்மையுள்ளம் அவன் உள்ளம். 'இவர் வேண்டாதார்; ஆகவே, இவரை, இவர் வாழ்நாள் முடியா முன்பே, அழித்துக் கொணர்க; இவர் வேண்டியவர்; ஆகவே, இவர் வாழ் நாள் முடியினும், மேலும் சிலநாள் வாழவிடுக' என்று கருதாது, விருப்பு வெறுப்பு அற்று, அவரவர்க்கு வகுத்த வாழ்நாளிற் கேற்ப, அவர் உயிரைக் கைப் பற்றிக் கடமைநெறி நிற்கும் காலக் கடவுள்போல் தன் ஆட்சிக் கீழ் வாழ்வார் அனைவரையும் ஒப்ப மதித்து, அவரவர் தம் குற்றம் குணங்களுக்கு ஏற்ப, அவர்களை ஒறுத்தும், ஒறுக்காது விடுத்தும் நல்லாட்சி மேற் கொண்ட அவனை, உலகம் நாவார வாழ்த்திற்று.

புல்லிதழ் பூவிற்கும் உண்டு; ஆண்மை, அருள் வாய்மை, வள்ளன்மை, நடுவு நிலைமை முதலாம் நல்ல இயல்புகளின் நிலைக்களமாய் நின்று நாடாண்டிருந்த அவனும், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு இழுக்கினான். அவன் ஆட்சி நலத்தால், அவன் நாட்டு மக்கள் மகிழ்ந்தனரேனும், அவன் ஒழுக்கக் கேட்டால், அவன் மனைவி வருந்தினாள்; அவன் வாய்மை வழுவாதவன் என உலகம் புகழ்வதைக் கேட்டவள் அவள்; அதனால்,

'உன்னைப் பிரியேன்' என உரைத்த அவன் சொல்லை நம்பி, அவனை மணந்தாள்; இன்று, அவன் பரத்தையர் ஒழுக்கத்தால் தன்னைப் பிரிந்து, தான் உரைத்த உறுதி மொழியை அழித்துவிட்டது காண அவள் வருத்தம் மிகுந்தது. மலர் போன்ற அவள் கண்கள், மழைபோல் நீர் சொரியக் கலங்கினள். 'அவன் ஒரு கொடையாளன்; தன்னை வந்தடைந்தாரை வாழ்விக்கும் வள்ளல்' என உலகோர் அவனைப் புகழ்வதைக் கேட்டவள் அவள்; அதனால், அவன் மார்பு தனக்குப் பேரின்பம் நல்கும் என எதிர்நோக்கி அவனை மணந்தாள்; இன்று, அவன் பரத்தையர் தொடர்பு கொண்டுவிட்டமையால், அம்மார்பு, தனக்கு இன்பம் அளிக்க மறுப்பது காண, அவள் மனக்கலக்கம் பெரிதாயிற்று, மனக்கவலை அவள் உடல் நலத்தைக் கெடுத்தது; கைவளைகள் தாமே கழன்றோடுமளவு, அவள் தோள்கள் தளர்ந்தன. 'தம் உரிமை பறிபோகக் கண்டு, வருந்தி வந்து குறை கூறி நிற்பார்க்கு, முறை வழங்கும் செங்கோலன்' எனச் சிறந்த பெரியோர்கள் பலரும், அவனைப் புகழ்ந்துரைத்தல் கேட்டு அவனைக் காதலித்தாள்; இன்று, அவன், அவன் பிரிவால் வருந்தும் தன் துயரைப் போக்காமையோடு, அவ்வருத்தத்திற்கு அவனே காரணமாதலும் கண்டு கலங்கினள்; கலங்கிக் கண்ணீர் விட்டு அழுது அழுது, அவள் முகம் ஒளி இழந்துகெட்டது.

அரசன் ஆட்சி நலத்தையும், அவன்பால் இன்று காணலாம் ஒழுக்கக் கேட்டையும், அதனால் அவன் மனைவி அடையும் மனக்கலக்கத்தையும், அவன் நாட்டில் வாழும் நல்லார் ஒருவர் கண்டார்; அவன் நல்லாட்சியால் அவனுக்குண்டாம் புகழினும், அவன் ஒழுக்கக் கேட்டால் அவனுக்குண்டாம் பழி பெரிதாமே என வருந்தினர்; அரசனுக்கு அறிவுரை கூறவேண்டுவது தம்

போலும் ஆன்றோர் கடமையாம் என உணர்ந்தார்; உடனே, பரத்தையர் சேரிசென்று அரசனைக் கண்டார்; அவன் ஆண்மைச் சிறப்பை, அருள் திறத்தைப் புகழ்ந்தார்; வாய்மை, வள்ளன்மை, வழுவாநெறிமுறை இவற்றால் அவனுக்குண்டாம் புகழின் பெருமையை நினைவூட்டினார்; பின்னர், அவன் சொல்லை நம்பி, அவன்பால் பெறலாம் இன்பத்தை எதிர்நோக்கி, அவன் அருளை வேண்டி அவனை மணந்த அவன் மனைவியின் துயர்க்கொடுமைகளை எடுத்துக் கூறினார்.

இறுதியாக, "ஐய! உன் சொல்லை நம்பி உன்னை மணந்த இவள், நீ அவ்வுரை மறந்து பிரிந்து வாழ்வதால் வருந்துவதை உலகோர் காணுவரேல், 'வாய்மை வழுவாதவன்' எனப் பெற்ற உன்புகழ் கெட்டுவிடுமே! உன்பால் இடையறு இன்பம் பெறலாம் என நம்பி, உன்னை மணந்த இவள், உன்னால் துன்புறுவதை உலகோர் காணுவரேல், 'வந்தோரை வாழ்விக்கும் வள்ளல்' எனப் பெற்ற உன்புகழ் கெட்டுவிடுமே! உன் அருள் ஒன்றையே எதிர்நோக்கி உன்னை மணந்த இவள், நீ இவள் துயர் அறிந்து போக்கக் கருதாது, அத்துயர்க்கும் நீயே காரணமாதலை உலகோர் அறியின், 'முறைபிறழா மன்னவன்' எனப் பெற்ற உன் புகழ் பாழாமே!" என அவன் மேற்கொண்ட பரத்தையர் தொடர்பு, அவன் புகழ்க் கேட்டிற்குக் காரணமாதலை எடுத்துக் காட்டினார்; காட்டிய பின்னர், "ஐய! நீயோ, உலகில் வாழ்வார் எவரே ஆயினும், எத்தகைய கொடியரே ஆயினும், அவர் துயர் துடைத்து வாழ்வளிக்கும் விழுமியோனுகுவை; அத்தகைய உன்னை, 'நீயே துணை' என உன்னை வந்தடைந்த உன் மனைவி, தன் இயற்கை அழகும் இழந்து அழிகிறாள்; அவள் அவ்வாறு வருந்த, நீ ஈங்கு வந்து வாழ்கின்றாய்; இது நனி மிகக் கொடிது' எனக் கூறிக் கண்டித்தல்

தகுமோ? அவ்வாறு நான் கடிந்து கூறித் திருத்துமாறு பிழைநெறியுடையையாதல் உனக்குப் பொருந்தாது" என்று கூறிக் கண்டித்தார்.

"ஈண்டு, நீர்மிசைத் தோன்றி இருள்சீக்கும் சுடரேபோல்,
வேண்டாதார் நெஞ்சுஉட்க வெருவந்த கொடுமையும்
நீண்டு தோன்று உயர்குடை நிழல்எனச், சேர்ந்தார்க்குக்
காண்தகு மதிஎன்னக் கதிர்விடு தண்மையும்,
மாண்டநின் ஒழுக்கத்தால் மறுவின்றி வியன் ஞாலத்து
யாண்டோரும் தொழுதேத்தும் இரங்குஇசை முரசினாய்!

ஐயம்தீர்ந்து 'யார்கண்ணும், அருந்தவமுதல்வன்போல்
பொய்கூறாய்' என நின்னைப் புகழ்வது கெடாதோதான்,
நல்கி நீ தெளித்தசொல் நசைஎனத் தேறியாள்
பல் இதழ் மலர் உண்கண் பனிமல்கக் காணுங்கால்?

'சுரந்தவான் பொழிந்தன்றாச் சூழநின்று யாவர்க்கும்
இரந்தது நசைவாட்டாய்' என்பது கெடாதோதான்,
கலங்கு அஞர்உற்று நின்கமழ்மார்பு நசைஇயாள்
இலங்கு கோல் அவிர்தொடி இறைஊரக் காணுங்கால்?

'உறைவரை நிறுத்தகோல் உயிர்திறம் பெயர்ப்பான்போல்
முறைசெய்தி' என நின்னை மொழிவது கெடாதோதான்,
அழிபடர் வருத்த நின் அளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு வாள்முகம் பசப்புஊரக் காணுங்கால்?

ஆங்கு,
தொன்னலம் இழந்தோள், நீ துணைஎனப் புணர்ந்தவள்
இன்னுறல் வியன்மார்ப! இனையையால் கொடிது என
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
என்னோர்கள் இடும்பையும் களைந்தீவாய் நினக்கே?

**தலைவன் பரத்தையிற் பிரியத், தலைவி வருத்தம் கண்ட சான்றோர் தலைவனை அடுத்து, அவன் பரத்தையர் ஒழுக்கம் நீங்கக் கூறியது இது.**

1. ஈண்டு - இவ்வுலகில்; நீர்மிசை - கடல்மேல்; சீக்கும் - அழிக்கும்; 2. வேண்டாதார் - பகைவர்; உட்க- நடுங்க; வெருவந்த - அச்சம் தரும்; 4. தண்மையும் - அருளும்; 5 மாண்ட - மாட்சிமைப்பட்ட; 6. யாண்டோரும் - உலகில் உள்ள அனைவரும்; இரங்கு-ஒலிக்கும்; 7. அருந்தவ முதல்வன் - ஆலின்கீழ் இருந்து அறம் உரைக்கும் தட்சிணாமூர்த்தி; 9. நல்கி - அன்புகாட்டி; தெளித்த - உறுதி கூறிய; நசை-பற்றுக்கோடு; 10. பனி- நீர்; 11. வான் - மேகம்; பொழிந்தற்று - பெய்தது போல; 12. நசைவாட்டாய் - வேண்டியதைக்கொடாமல்; அவர் ஆசையை அழிக்கமாட்டாய்; 13. அனர்-துன்பம்; 14. கோல் - வேலைப்பாடுமிக்க; இறை - முன்கை; ஊர - கழல; 15. உயிர்திறம்பெயர்ப்பான் - உயிரைக்கவரும் காலன்; 17. அழிபடர் - மிக்க துன்பம்; 18. தபு-நீங்கிய; 21. இன்உறல்வியன்மார்பு - மணந்த-மகளிர்க்கு இன்பம் தரும் அகன்ற மார்பு; இனையை - இத்தன்மையனாயினாய்; 23. என்னோர்கள் - எத்தகையோர்; இடும்பை துன்பத்தை; களைந்தீவாய் - போக்குகின்ற.

★

# எங்கள் வெளியீடுகள்.

## புலவர் கா. கோவிந்தன் நூல்கள்

### பாலைச்செல்வி

பாலைக்கலியின் சுவையை நன்கு உணர்வதற்கு ஏற்ற விளக்கம். 3 0

### குறிஞ்சிக்குமரி

குறிஞ்சிக்கலியின் நயத்தை நன்கு அறிந்து பயன்பெற உதவும் இனிய விளக்கம். 3 0

### மருதநில மங்கை

மருதத் துறையிற் காதலர் வாழ்வின் அக நிகழ்ச்சிகளை விளக்கும் சிறந்த நூல். 3 0

### நெய்தற் கன்னி

கடல் சார்ந்த நிலத்துக் காதலியரின் கவினுறு வாழ்க்கை விளக்கம். 3 0

### முல்லைக்கொடி

முல்லை நிலத்து ஆய மடமகளிர் வாழ்வின் படப் பிடிப்பு இந்நூல். குழலினிமையின் தமிழினிமை சிறந்து விளங்குவது. 3 0

### கூத்தன் தமிழ்

செங்குந்த மரபினரிடைத் தோன்றிய செந்தமிழ் வல்ல நாவலர் ஒட்டக்கூத்தர். சோழ மன்னர்களால் பெரிதும் கௌரவிக்கப் பட்ட புலவர் பெருமான். அவரது தமிழ் இனிமையும் திட்பமும் செறிந்தது. 2 0

### தமிழர் வாழ்வு

குறிஞ்சி நிலத்திலே தம் வாழ்வினைத் தொடங்கிய தமிழர்கள் மருதநிலப் பேரூர்களிலே வாழ்ந்து நகரங்கள் அமைத்து நாகரிக வாழ்வினராக வாழ்வைத் தொடங்கிய வரலாற்றின் கட்டுக்கோப்பான விளக்கம். 2 8

## புரட்சிக் கவிஞர் நூல்கள்

### தேனருவி

கவிஞரவர்களின் புதிய பாடல்கள்
கண்கவர் பதிப்பு. 2 4

## புலவர் சீனிவாசன்

### நல்ல தமிழ் எழுத!

நல்ல தமிழ் எழுதத் தமிழ் மொழியின் அமைப்பும் வழக்கும் அறிந்திருக்க வேண்டும். அதனைச் சுவைபட மூன்று பகுதிகளாக வகுத்துக்கொண்டு எழுதுகின்றார் புலவர். தமிழ் நன்றாக எழுதுகிறேன் என்று பெருமையோடு கூற இந்நூல் அனைவரிடமும் இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| முதற் புத்தம் | 2 4 |
| இரண்டாம் புத்தகம் | 2 4 |
| மூன்றும் புத்தகம் | 2 4 |

## அறிஞர் டால்ஸ்டாய்

### அமைதிக்கு அப்பால்

ரஷிய ஞானி டால்ஸ்டாய் எழுதிய அற்புதமான நாவல் சிறந்த தமிழாக்கம். 1 12

வெளியீடு:
தேனருவிப் பதிப்பகம்,
தியாகராயநகரம், சென்னை-17.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.